பக்கங்கள் 32

யாழ். - 20/=
வன்னி - 20/=

# உதயன்

சுடர்: 29 கதிர்: 351 வள்ளுவர் ஆண்டு: 2045 ஐப்பசி 26, புதன் 12.11.2014

stay connected with: uthayan.print uthayanprint Uthayan - A lively National Tamil Daily


## தெளிவான வானிலை

நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் சீரான காலநிலைக்கான சாத்தியம் நிலவுகின்றது என்று வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது. குறிப்பாக அனைத்து பிரதேசங்களிலும் மாலையிலும் இரவிலும் சீரான அத்துடன் குளிரான காலநிலைக்கு காணப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாண மாவட்டத்தில் ஆகக்கூடியது 31 செல்சியஸ் பாகையாகவும் ஆகக் குறைவான வெப்பநிலை 23 செல்சியஸ் பாகையாகவும் காணப்படும். அதே வேளை யாழ்ப்பாணம், மன்னார் ஆகிய பிரதேசங்களிலும் மிதமான காலநிலை காணப்படும்.

# நீங்கியது தடை

# ஜனவரியில் தேர்தல்

## மஹிந்த மூன்றாவது முறையாகவும் போட்டியிட முடியும்

யாழ்ப்பாணம், நவம்பர் 12

மூன்றாவது முறையாகவும் ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக் ஷ போட்டியிட முடியும் என்று உயர் நீதிமன்றம் தெரிவித்துள்ளது. இது தொடர்பான அறிவிப்பு நேற்று நாடாளுமன்றத்தில் வெளியிடப்பட்டது. இதனை அடுத்து எதிர்வரும் ஜனவரி மாதத்தில் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படுவது உறுதியாகி உள்ளது. தேர்தலுக்குரிய ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு ஒவ்வொரு மாவட்ட தேர்தல்கள் உதவி ஆணையாளர்களுக்கும் தேர்தல் திணைக்களத்தினால் நேற்று அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

❖22 ஆம் பக்கம் பார்க்க



## ராஜீவ் காந்தி கொலையில் புலிகளுக்கு நேரடித் தொடர்பில்லை!

"இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை, இலங்கை அரசுக்கும், இந்தியாவிலுள்ள சில அரசியல்வாதிகளுக்கும் நன்மை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக மேற்கொள்ளப்பட்டது. இதில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் வேபிரபாகரன் நேரடியாகத் தொடர்புபடவில்லை." என்றும், "ராஜீவ் காந்தியைக் கொல்வதற்கு விடுதலைப் புலிகள் அல்லாத தரப்பினரால் மூன்று முறை முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டது"-என்றும் கூறியுள்ளார் இந்திய மத்திய புலனாய்வுப் பிரிவு முன்னாள் அதிகாரியான கே.ரகோத்தமன்.

விரிவான தகவல்கள் 2 ஆம் பக்கத்தில்

## யாழ்.— கொழும்புக்கு புதிய ரயில் சேவை



யாழ்ப்பாணம், நவ.12

யாழ்-கொழும்புக்கிடையிலான புதிய ரயில் சேவையொன்று நாளை மறுதினம் வியாழக்கிழமை தொடக்கம் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளது.

யாழ்பாணம் – கொழும்புக்கு இடையே ஏற்கனவே ஒரு வாரத்தில் 5 ரயில் சேவைகள் நடைபெற்று வரும் நிலையில், பொதுமக்கள் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக அது 6 சேவைகயாக அதிகரிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. கொழும்பில் இருந்து திங்கட்கிழமை, புதன்கிழமை, வெள்ளிக்கிழமை ஆகிய நாள்களில் 3 சேவைகள் இரவு 10 மணிக்கு புறப்படும் ரயில் சேவை காலை 6.55 மணிக்கு யாழ்ப்பாணம் ரயில் நிலையத்தை வந்தடையும்.

❖19 ஆம் பக்கம் பார்க்க

## இலவசக் கார்களால் இரகசியக் கடிதங்கள்

கொழும்பு, நவ. 12

வடக்கு மாகாணசபை உறுப்பினர்களுக்கு இந்திய அரசு வழங்கத் தீர்மானித்துள்ள கார்களை, அனைவருக்கும் ஒரே தடவையில் ஒரே மாதிரியில் வழங்க வேண்டும் என்று இந்திய அரசிடம் கோர வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்ட அநாமதேய கடிதம், வடக்கு மாகாண சபையின் சகல உறுப்பினர்களுக்கும் அனுப்பி வைக்கப் பட்டுள்ளது.


அத்துடன், இந்தியத் தூதரகத்துக்கு அனுப்பி வைப்பதற்குரிய பதில் கடிதமும் இணைக்கப்பட்டு அது அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

"இந்தியத் துணைத் தூதரகத்தால் வழங்கப்படும் 7 வாகனங்களை மட்டும் பெற்றுக் கொள்வதற்கும், அதனை பாகுபாடான முறையில் உறுப்பினர்களுக்கு இனாமாக வழங்குவதற்கும், பிரித்தாளும் தந்திரத்தை மீளவும் மேற்கொள்ள வடக்கு மாகாண சபையின் உயர் பீடம் தீர்மானித்துள்ளது. இந்தப் பிரித்தாளும் தந்திரத்தில் சிக்கிவிட வேண்டாம்.

அனைத்து உறுப்பினர்களுக்கும் ஒரே மாதிரியான வாகனங்களை, ஒரே தடவையில் இந்திய அரசு இனாமாக வழங்க வேண்டும். அனைத்து உறுப்பினர்களின் விருப்பங்களையும் அறிந்து கொண்டு அவர்கள் விரும்பின் வரி விலக்கு அடிப்படையில் அனைத்து உறுப்பினர்களுக்கும் ஒரே தடவையில் ஒரே மாதிரியான இந்திய வாகனங்களை வழங்க வேண்டும்.

இரண்டு சரிவராத இடத்து, ஒதுக்கப்பட்ட பணமான 250 மில்லியன் ரூபாவையும், போரால் பாதிக்கப்பட்ட உறவுகளை இழந்த குடும்பங்களுக்கு வழங்குதல் அல்லது புள்ளித் திட்டம் பாதிக்கப்பட்டு வீடுத் திட்டம் வழங்கப்படாது தனித்து

❖19 ஆம் பக்கம் பார்க்க




மேலும் தகவல்கள் 2 ஆம் பக்கத்தில்

## ஹுசைனின் கண்டிப்பை வரவேற்கின்றார் மூன்

### ஒத்துழைத்துச் செயற்படுங்கள் என்றும் இலங்கைக்கு அறிவுரை



யாழ்ப்பாணம், நவ. 12

சாட்சியமளிப்பவர்களை அச்சுறுத்தும் இலங்கையின் செயற்பாட்டை, ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் கண்டித்துள்ளமையை, ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ-மூன் வரவேற்றுள்ளார்.

"ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் சயிட் அல் ஹுசைனின் கருத்துக்களை ஐ.நா. பொதுச் செயலர் ஆதரிக்கிறார்"- என்று பொதுச் செயலாளர் பான் கீ-மூனின் பிரதிப் பேச்சாளர் பர்ஹான் ஹக் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் விசாரணைக்கு ஒத்துழைப்பு போரை இலங்கை அரசு அச்சுறுத்தி, விசாரணையை அச் சுலைக்க முயல்கின்றது என்று, ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சயிட் அல் ஹுசைன் கடந்த வாரம் குற்றம் சுமத்தியிருந்தார். இது தொடர்பில் ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ-மூனின் நிலைப்பாடு என்ன? என்று, நியூயோர்க்கில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்குப் பதிலளித்த அவர், "ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் சயிட் அல் ஹுசை

❖19 ஆம் பக்கம் பார்க்க

## சுன்னாகத்து நிலத்தடி நீர் மாசடைந்தது பேரிடர்

### பிரகடனப்படுத்துவதற்கு நடவடிக்கை; ஆராய வருகின்றது குழு

யாழ்ப்பாணம், நவ. 12

சுன்னாகம் பிரதேசத்தில் நிலத்தடி நீரில் கழிவு ஒயில் கலந்தமை இடராக பிரகடனப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அத்துடன் இது தொடர்பில் ஆராய்வதற்காக நாளைய தினம் அமைச்சுக் களின் சிரேஷ்ட செயலாளர் களை உள்ளடக்கிய 8 பேரைக் கொண்ட குழுவினர் யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

❖22 ஆம் பக்கம் பார்க்க



SDB உபஹார
வாழ்வாதாரமளிக்கும் - உற்சாகமூட்டும் - நிம்மதியான வாழ்க்கை
ரூபா ஒரு மில்லியன் வரையிலான கடனுதவி.*
உத்தரவாதமளிப்பவர்கள் தேவையில்லை.
ஆக்க்குறைந்த வட்டி
ஓய்வுபெற்றவர்களான உங்களது விருத்திக்காக வேண்டி ஆகக்குறைந்த வட்டி வீதத்துடன் உங்களுக்கு பெற்றுத்தரப்படும் மாபெரும் வெகுமதி.
மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்
0112 832577
Sri Lanka Pensions
SDBL
Reg. No: PB 62PQ Fitch rating BB+(lka)

"உலகம் நாளை துண்டுகளாக உடைந்து அழியப்போவதாக நான் அறிந்தாலும் இன்றும் ஒரு மரத்தை நடுவேன்".

-மார்ட்டின் லூதர் (ஜேர்மனிய கத்தோலிக்க மதகுரு)

# ராஜீவ் கொலைக்கும் புலிகளுக்கும் நேரடித் தொடர்பு எதுவும் இல்லை

## சிரேஷ்ட ஊடகவியலாளர் பராஸ் அகமது தெரிவிப்பு

சென்னை, நவ. 12

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை, இலங்கை அரசுக்கும், இந்தியாவிலுள்ள சில அரசியல்வாதிகளுக்கும் நன்மை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக மேற்கொள்ளப்பட்டது. இதில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் வே.பிரபாகரன் நேரடியாகத் தொடர்புபடவில்லை. -இவ்வாறு 'ராஜீவ் காந்தி கொலை: உட்புறத்து வேலை' என்ற தலைப்பில் புத்தகத்தை எழுதிய சிரேஷ்ட ஊடகவியலாளர் பராஸ் அகமது தெரிவித்தார்.

'ராஜீவ் காந்தியைக் கொல்வதற்கு விடுதலைப் புலிகள் அல்லாத தரப்பினரால் மூன்று முறை முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டது' என்று இந்த நிகழ்வில் கலந்து கொண்ட மத்திய புலனாய்வுப் பிரிவு முன்னாள் அதிகாரியான கே.ரகோத்தமன் தெரிவித்துள்ளார்.

கடந்த ஓகஸ்டில் புதுடில்லியில் வெளியிடப்பட்ட, முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கு தொடர்பாக மூத்த ஊடகவியலாளர் பராஸ் அகமது எழுதிய 'ராஜீவ் காந்தி கொலை: உட்புறத்து வேலை' என்ற ஆங்கில நூலை தமிழகத்தில் அறிமுகப்படுத்தும் நிகழ்ச்சி, சென்னையில் நேற்று முன்தினம் நடந்தது.

'ராஜீவ் காந்தி கொலை வழக்கு விசாரணையின் போது எனக்கு முழு ஒத்துழைப்பு கிடைக்கவில்லை. ராஜீவ் காந்தி கொலையை சிவராசன் நடத்தியிருந்தாலும், அவர் யார் என்று சித்தரித்த விதம் யூகத்தின் அடிப்படையிலேயே அமைந்தது. ராஜீவை கொல்வதற்கு 3 முயற்சிகள் நடந்தன. அந்த 3 முயற்சிகளும் விடுதலைப் புலிகளுக்கு தொடர்புடையவை அல்ல. ஆனால், ஸ்ரீபெரும்புதூரில் நடந்த சம்பவம் புலிகளுடன் தொடர்புடையதாகக் கருதப்பட்டது' என்று மத்திய புலனாய்வுப் பிரிவு முன்னாள் அதிகாரி ரகோத்தமன் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இந்தச் சம்பவம் தொடர்பாக பேட்டியளித்த சுப்பிரமணியன் சுவாமி, கொலையை செய்தது விடு தலைப் புலிகள் தான் என்று முதல் நபராக கூறினார். அவ ரைத் தான் நான் முதலில் விசாரித்திருக்க வேண்டும் என்று சிலர் கூறுகின்றனர். ஒரு விசாரணை அதிகாரியாக, களத்திலிருந்து தான் விசாரணையை ஆரம்பிக்க வேண்டும். தனிப்பட்ட நபரை விசா ரிக்க முடியாது.

ராஜீவ் பாதுகாப்பு அதிகாரியாக இருந்த ஆர்.கே.ராகவன், குண்டுவெடிப்பு நடந்து 12 மணி நேரத்துக்கு பிறகும், இது சம்பந்தமாக தனக்கு எதுவும் தெரியவில்லை என்றார். குண்டுவெடிப்பு நடந்த இடத்தில் கிடந்த ஒளிப்படக் கருவியில் இருந்த முக்கிய சாட்சியங்களை பொலிஸைச் சேர்ந்த ஒளிப்படக்காரர் எடுத்துச் சென்றார்.

அதை நாங்கள் போராடியே பெற்றோம். இதுபோன்ற நிறைய சிக்கல்கள் விசாரணையின் போது ஏற்பட்டன. ராஜீவ் கொலை வழக்கு பற்றி நான் புத்தகம் எழுதியிருந்தேன். இப்போது பராஸ் அகமதும் எழுதியுள்ளார். இதில் நிறைய கேள்விகள் எழுப்பட்டுள்ளன, என்று ரகோத்தமன் தெரிவித்தார்.

நூலாசிரியர் பராஸ் அகமது, 'சிவராசன் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இருந்தாலும், இந்தக் கொலைக்காக அவரை இயக்கியதில் பிரபாகரனுக்கு எந்த தொடர்பும் இருந்திருக்க வாய்ப்பில்லை. இந்தக் கொலை, இலங்கை அரசுக்கும் இந்தியாவில் உள்ள சில அரசியல்வாதிகளுக்கும் நன்மை ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கில் நடத்தப்பட் டுள்ளது. இதனை எனது புத்தகம் கேள்விகள் மற்றும் ஆதாரங்களுடன் விளக்கும்" என்றார். (ற-5)



நுவரெலியாவிலிருந்து ஹற்றன் நோக்கி சென்ற டிப்பர் ரக வாகனம் ஒன்றும், தலவாக்கலையிலிருந்து நானுஓயா வரை நோக்கி சென்ற டிப்பர் ரக வாகனம் ஒன்றும் நானுஓயா ரதல்ல குறுக்கு வீதியில் நேருக்கு நேர் மோதியதில் சாரதியும் நடத்துனரும் காயமடைந்தனர். இந்தச் சம்பவம் நேற்று நண்பகல் நடந்துள்ளது. டிப்பர் ஒன்றின் பிரேக் கட்டுப்பாட்டை இழந்ததால் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. (ற)

# நாடாளுமன்றில் வாய்த் தர்க்கம்

## அமைச்சர்கள் மில்ரோய், ராஜித இடையே

கொழும்பு, நவ.12

2015 வரவு-செலவுத்திட்டத்தின் மீதான நேற்றைய 7ஆவது நாள் விவாதத்தின்போது ஆளும் தரப்பு அமைச்சர்களான மில்ரோய் பெர்னாண்டோவுக்கும், ராஜித சேனாரத்னவுக்கும் இடையில் கடும் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது.

கடல் மற்றும் நீரியல் வளத் துறை அமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட நிதி தொடர்பிலேயே நேற்று விவாதம் மேற்கொள்ளப்பட்டிருந்த வேளை, குறித்த அமைச்சுக்கு முன்பு அண்மையில் மீனவர்கள் தாக்கப்பட்ட விவகாரம் தொடர்பில் சிரேஷ்ட அமைச்சர் மில்ரோய், அமைச்சர் ராஜிதவைக் குற்றஞ்சாட்டியதோடு மேற்படி இருவருக்கும் இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது.

இருவரும் கடும் தொனியில் ஒருவரையொருவர் வசை பாடியதோடு, ஈற்றில் அமைச்சர் ராஜித சேனாரத்ன நாடாளுமன்றை விட்டு வெளியேறியிருக்கிறார், அமைச்சர் மில்ரோய் ஆளுந்தரப்பின் நிகழ்ச்சி நிரலுக்கு அமைவாக திட்டமிட்டே ராஜிதவுக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை முன்வைத்திருப்பதாக அவதானிகள் தெரிவித்துள்ளனர். (ற)

# ரத்ன தேரரின் பேஸ்புக் முடக்கம்

கொழும்பு, நவ.12

ஜாதிக ஹெல உறுமய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும், தூய்மையான நாளை அமைப்பின் தலைவருமான அதுரலிய ரத்ன தேரரின் பேஸ்புக் கணக்கு முடக்கப்பட்டுள்ளது.

தமக்கு பேஸ் புக் கணக்கும், மின்னஞ்சல் கணக்கும் முடக்கப்பட்டுள்ளன என்று அதுரலிய ரத்ன தெரிவித்துள்ளார். மின்னஞ்சல் நிறுவனமோ அல்லது பேஸ்புக் நிறுவனமோ தமது கணக்கை முடக்கவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையைச் சேர்ந்த சில தனிப்பட்ட நபர்களே இவ்வாறு தமது கணக்கை முடக்கியுள்ளனர் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற)

# தூக்கு விதிக்கப்பட்ட இந்திய மீனவர் மேன்முறையீட்டு மனுக்கள் தாக்கல்

கொழும்பு, நவ.12

கொழும்பு உயர் நீதிமன்றத்தால் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்கள் ஐந்து பேரும், தங்களுக்கெதிரான தீர்ப்பை எதிர்த்து மேன்முறையீட்டு மனுக் களை தாக்கல் செய்துள் ளனர்.

மேன்முறையீட்டு மனுக்களை கொழும்பு உயர் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்று அந்த மீனவர்களை பிரதிநிதித்துவம் செய்யும் சட்டத்தரணி அனில் சில்வா தெரிவித்துள்ளார். இந்த மனுக்கள் சில மாதங்களுக்குள் மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு அனுப்பி வைக்கப்படுமென்றும் அதன் பின்னர் அவற்றின் விசாரணைத் திகதிகள் தீர்மானிக்கப்படும் என்றும் அவர் கூறினார்.



இலங்கை கடற்பரப்பில் ஹெரொயின் போதைப்பொருளை கடத்தினர் எனக் குற்றஞ்சாட்டப்பட்ட ஐந்து இந்திய மீனவர்கள் மற்றும் மூன்று இலங்கையர்களுக்கு கொழும்பு உயர் நீதிமன்றம் கடந்த 30 ஆம் திகதி தூக்குத் தண்டனை விதித்திருந்தது. கைது செய்யப்படும்போது தாம் இலங்கை கடற்பரப்பினுள் இருக்கவில்லை என்று வாதிடும் இந்திய மீனவர்கள், இந்தக் குற்றச்சாட்டிலிருந்து தம்மை விடுதலை செய்யுமாறு மேன் முறையீட்டில் கோரியுள்ளனர். (ற)

# தலைமைத்துவ பயிற்சியில் மாணவி ஒருவர் காயம்


கொழும்பு, நவ.12

அநுராதபுரம், கவரக்குளம் இராணுவ முகாமில் இடம்பெற்று வரும் பல்கலைக்கழக மாணவர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சியின் போது, மாணவியொருவர் படுகாயமடைந்த நிலையில் அநுராதபுரம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

7 அடி உயரமான சுவரொன்றிலிருந்து குதிப்பதான பயிற்சியில் ஈடுபட்டிருந்த இந்த மாணவி, தவறி விழுந்து காயங்களுக்கு உள்ளாகியுள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

தம்புள்ளயைச் சேர்ந்த வி.கே.டீ.ஆர்.கௌசல்யா விஜிதலால் என்ற 21 வயது மாணவியே இவ்வாறு காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். இந்த சம்பவம், கடந்த 8ஆம் திகதி சனிக்கிழமை இடம்பெற்றுள்ளது. இதன்போது, மேற்படி மாணவியின் முதுகெலும்பு வெடிப்புக்குள்ளாகி உள்ளதாகவும் இவர், சிகிச்சைகளின் பின்னர் நேற்றுமுன்தினம் வீடு திரும்பியுள்ளார் என்றும் வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன. (ற)

# கடந்த தேர்தல்கள் ஒரு பார்வை...



# உதயன்

விலை ரூபா 20/-

கிளாசிக்

சுடர் : 29 வள்ளுவர் ஆண்டு: 2045 ஐப்பசி 26 புதன் (12.11.2014) UTHAYAN - A lively National Tamil Daily கதிர் 351


# சுத்திகரித்த குடிதண்ணீரையே பருகுங்கள்

## சுகாதாரப் பணிப்பாளர் அவசர அறிவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 12

யாழ். மாவட்டத்தில் குடிதண்ணீருக்காகப் பயன்படுத்தப்படும் நீரை ஏதோ ஒரு முறையில் சுத்திகரித்த பின்னரே அனைவரும் குடிப்பதற்குப் பயன்படுத்தவேண்டும். கொதித்து ஆற வைப்பதன் மூலம், கிணறுகளுக்குக் கிரமமாகக் குளோரின் இடுவதன் மூலம், நீர் வடிகட்டிகளைப் பாவிப்பதன் மூலம், சூரிய ஒளியின் மூலம் சுத்திகரிப்பதன் மூலம் குடிதண்ணீரைச் சுத்திகரித்துப் பாவிக்கலாம் என்று யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

யாழ். மாவட்டத்தில் உள்ள ஐஸ்கிறீம், யூஸ் உற்பத்தி நிலையங்களின் சுகாதார நிலையை மேம்படுத்தச் சுகாதாரத் திணைக்களத்தால் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகள் சம்பந்தமாக பல தரப்பட்ட கருத்துப் பரிமாற்றல்களும், விமர்சனங்களும், வியாக்கியானங்களும் நிலவுகின்றன. இந்த விடயம் சம்பந்தமாகச் சுகாதாரத் திணைக்களத்தின் நிலைப்பாட்டைப் பொது மக்களுக்கும் சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினர்களுக்கும் தெளிவுபடுத்த வேண்டியுள்ளது.

யாழ். மாவட்டத்தில் நிலத்தடியில் உள்ள சுண்ணாம்புப் பாறையில் உள்ள வெடிப்புக்கள் காரணமாக பெரும்பாலான கிணறுகள் மாசுபட்ட நிலையிலே உள்ளன. இதனால் யாழ். மாவட்டத்தில் நீர், உணவு மூலம் பரவும் நோய்களான வயிற்றோட்டம், வயிற்றுளைவு, நெருப்புக் காய்ச்சல் போன்ற நோய்களின் பரம்பல் கடந்த பல வருடங்களாக அதிகமாகக் காணப்படுகின்றது. நெருப்புக் காய்ச்சலினால் பாதிக்கப்பட்ட நோயாளர்களின் எண்ணிக்கை 2010 இல் 651 பேர், 2011 இல் 382 பேர், 2012 இல் 435 பேர், 2013 இல் 350 பேர் ஆகவும் காணப்பட்டது. 25 மாவட்டங்களுடனும் ஒப்பிடும்போது யாழ். மாவட்டத்திலேயே அதிகளவில் நெருப்புக் காய்ச்சல் நோயாளர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

வயிற்றுளைவு நோயாளர்

(22ஆம் பக்கம் பார்க்க)

# மஹிந்தவை ஆதரிக்க கூட்டமைப்பு நிபந்தனை

## தமிழர்களுக்கான நிரந்தரத் தீர்வு தேர்தல் விஞ்ஞாபனத்தில் வேண்டும்

கொழும்பு, நவம்பர் 12

**ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஜனாதிபதித் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு முன்வைக்கப்பட்டால் அதனை ஏற்கத் தாம் தயாராகவுள்ளோம் என நேற்று நாடாளுமன்றில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்தது.**

நாடாளுமன்றில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற தண்ணீர் மற்றும் நீர்ப்பாசன அமைச்சுகள் மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றியபோது கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் பொன். செல்வராசா இதனைத் தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அபிவிருத்திக்குத் தடையல்ல. கூட்டமைப்பு அபிவிருத்தியை வரவேற்கிறது. ஆனால், அபிவிருத்தியை இலக்காகக் கொண்டு இனப்பிரச்சினையைத் தீர்க்கலாம் என்று அரசு முடிவெடுத்தால் அது நடக்காததொன்றாகும். சுதந்திரத்தின் பின்னர் பல அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால், அவை நிரந்தர இடத்தைப் பெறவில்லை.



தமிழருக்குரிய இடம் வழங்கப்படவில்லை. அபிலாசைகள்

(22ஆம் பக்கம் பார்க்க)

## ராஜிதவைப் போல செயற்பட்டால் வடக்கில் பிரச்சினைகளுக்கு தீர்வு

### கூட்டமைப்பு எம்.பி. தெரிவிப்பு

மீன்பிடித்துறை அமைச்சர் ராஜித சேனாரட்னவைப்போல ஏனைய அமைச்சர்களும் வடமாகாணசபையுடன் இணைந்து செயற்பட்டால் ஏனைய பிரச்சினைகளுக்கும் தீர்வு காணமுடியும் என்று தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நேற்று சபையில் தெரிவித்தது.

நாடாளுமன்றில் நேற்று செவ்வாய்க்கிழமை காலை இடம்பெற்ற கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அமைச்சு மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றியபோது மேற் கண்டவாறு தெரிவித்த கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம் மேலும் தெரிவித்தவை

(22ஆம் பக்கம் பார்க்க)

## இராச வீதி ஊடாக இன்று முதல் பஸ்

அச்சுவேலி, நவ.12

அச்சுவேலி பஸ் நிலையத்தில் இருந்து இராச வீதி ஊடாக யாழ்ப்பாணம் வரையான புதிய சேவையை இன்று புதன் கிழமை தொடக்கம் அச்சுவேலி

(22ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைப் படையினருக்கு 80 வீத பயிற்சி இந்தியாவில்

### இராணுவத் தளபதி ரத்னாயக்க தெரிவிப்பு

கொழும்பு, நவ.12

இலங்கையின் ஆயுதப் படையினருக்கான 80 வீதத்துக்கும் அதிகமான பயிற்சிகளை இந்திய இராணுவமே வழங்குவதாக இலங்கை இராணுவத் தளபதி தயா ரத்னாயக்க தெரிவித்துள்ளார்.

இதற்காக தாம் நன்றியுடையவர்களாக இருப்பதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இன்னமும் 1000 பேர் வரையான இராணுவ அதிகாரிகள் இந்தியாவில் பயற்சிகளைப் பெறாமல் உள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ள இந்திய இராணுவத் தூதுக்குழுவினருடன் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சந்திப்பின்போது இராணுவத் தளபதி இந்தக் கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

இலங்கையின் கள நிலை

(22ஆம் பக்கம் பார்க்க)

## காணாமற்போன மீனவர் நேற்று சடலமாக மீட்பு

யாழ்ப்பாணம்.நவ.12

கட்டுமரத்தில் மீன் பிடிக்கச் சென்ற மீனவர் கடலில் காணாமற்போன நிலையில் நேற்று நயினாதீவுக் கடற்பரப்பில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நயினாதீவு, 8ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த கனகசிங்கம் கனேஸ்வரன் (வயது-53) என்பவர் நேற்று முன்தினம் கட்டுமரத்தில் மீன்பிடிக்கச் சென்றுள்ளார். மீன் பிடிக்கச் சென்ற

(22ஆம் பக்கம் பார்க்க)

## போலித் துப்பாக்கியைக் காட்டி கைதடியில் கொள்ளை முயற்சி

### திட்டம் பலிக்காமல் தப்பியோட்டம்

யாழ்ப்பாணம், நவ.12

கைதடியில் போலித் துப்பாக்கியைக் காட்டி அலுவலகத்தில் லட்சம் ரூபா பணத்தைக் கொள்ளையடிக்க முயன்றவர் சம்பவ இடத்தில் வைத்தே நையப்புடைக்கப்பட்டதனால் அங்கிருந்து தப்பியோடிவிட்டார்.

இந்தச் சம்பவம் கைதடி கமநல சேவைகள் திணைக்களத்தில் நேற்று முற்பகல் இடம்பெற்றது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:

சில நாள்களாகக் குறித்த அலுவலகத்தில் வைத்து விவசாயிகளுக்கு உரம் விநியோகிக்

(22ஆம் பக்கம் பார்க்க)

## 77 மீனவர் , 29 படகுகள் இன்னும் விடுவிப்பில்லை

கொழும்பு.நவ.12

இந்தியா உட்பட ஏனைய நாடுகளின் கடற்பரப்பில் எல்லை தாண்டி மீன்பிடித்தமைக்காகக் கடந்த காலங்களில் கைது செய்யப்பட்ட 77 மீனவர்களும், அவர்களது 29 படகுகளும் விடுவிக்கப்படாமல் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகக் கடற்றொழில் அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தியா, பங்களாதேஷ் மற்றும் மியான்மார் ஆகிய நாடுகளின் கடற்பரப்பில் எல்லை தாண்டி மீன் பிடித்தமைக்காக இலங்கை மீனவர்களின் படகுகள் மற்றும் மீன்பிடி உபகரணங்கள் உட்பட மீனவர்களையும் கடலோரக்காவல் படையினர் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட மீனவர்கள் நீதிமன்ற உத்தரவுக்கு அமைவாகச் சிறைச்சாலை

(22ஆம் பக்கம் பார்க்க)

## முறிகண்டி விபத்தில் பெண் சாவு

யாழ்ப்பாணம், நவ. 12

கிளிநொச்சி திருமுறிகண்டியில் நேற்று இடம்பெற்ற விபத்தில் யுவதி ஒருவர் சம்பவ இடத்திலேயே கழுத்து நெரிந்து உயிரிழந்தார். மற்றொரு பெண் படுகாயமடைந்து கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்

(22ஆம் பக்கம் பார்க்க)

## ஈழக் கனவை நனவாக்குவதற்கு தமிழகத்தை வளைக்கிறார் விக்கி

### குணதாஸ குற்றச்சாட்டு

கொழும்பு, நவ.12

தனி ஈழக் கனவை நனவாக்கிக் கொள்வதற்காக தமிழ்நாட்டு அரசை வளைத்துப் போடும் முயற்சியில் தற்போது வடமாகாணசபை முதல்வரான க.வி.விக்னேஸ்வரன் தீவிரமாக இறங்கியுள்ளதாகத் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவரான குணதாஸ அமரசேகர குற்றஞ்சாட்டினார்.

அதேநேரம், அடுத்த ஜனாதிபதித் தேர்தலின்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது பொதுவேட்பாளர் ஒருவருக்கு ஆதரவளிக்குமாயின், அது அரசுக்கு அச்சுறுத்தலாகவே அமையும் என்றும் அவர் எச்ச



(22ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## பரிசளிப்பு விழாக்கள்

ஆனைப்பந்தி மெதடிஸ்தமிஷன் வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா இன்று காலை 9 மணிக்கு பாடசாலை அதிபர் யோ.ஜெகஆனந்தம் தலைமையில் நடைபெறும். நிகழ்வுக்கு பிரதம விருந்தி னராக மருத்துவர் செ.பிரதீ பனாவும் சிறப்பு விருந்தினராக நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் அ.அகிலதாஸும் கலந்து கொள்வர். (வ-ரி)

♦♦♦

நீர்வேலி சி.சி.த.க பாடசாலையின் 135ஆவது ஆண்டு விழாவும் பரிசளிப்பு விழாவும் இன்று புதன்கிழமை காலை 9மணிக்கு பாடசாலையின் பிரதான அரங்கில் அதிபர் தி.இரவீந்திரநாதன் தலைமையில் நடைபெறும். நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ்.இந்தியத் துணைத் தூதர் எஸ்.தட்சணாமூர்த்தியும் சிறப்பு விருந்தினராக யாழ்.வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் கொ.வரதராஜமூர்த்தியும் கலந்து கொள்வர். (வ- ரி)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் **ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி**

(முன்னாள் தலைவர், கூவில் தீபஜோதி சன சமூக நிலையம்)

தோற்றம்
16.12.1942

மறைவு
24.10.2013

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து
வானுறையும் தெய்வமாகிவிட்ட
எங்கள் குடும்பத் தலைவரின்
முதலாம் ஆண்டு
நினைவையொட்டி

இன்று (12.11.2014) புதன்கிழமை எமது இல்லத்தில் இடம்பெறும் சமயக் கிரியைகளிலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து நமக்கு ஆறுதலளிக்கும் வண்ணம் உறவினர்கள், அயலவர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கூவில் வீதி,
புலோலி தென்மேற்கு,
பருத்தித்துறை.

(53900)(12.3)

**குடும்பத்தினர்.**

# ஒரு கல்லூரியின் எழுச்சியும் வீழ்ச்சியும் அதிபர்களின் அயரா சேவையிலேயே

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் கேதீஸ்வரன் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், நவ.12

ஒரு கல்லூரியின் எழுச்சியும் வீழ்ச்சியும் அதிபர்களின் அயராத சேவையிலேயே தங்கியுள்ளது. அவர்கள் அர்ப்பணிப்பாக பணியாற்றினால் அந்தக்கல்லூரி மேலும் மேலும் வளர்ச்சியுறும் என்று பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற நெல்லியடி மத்திய கல்லூரியின் அதிபர் எஸ். சேதுராஜாவின் மணி விழா நிகழ்வை தலைமை ஏற்று உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"குறித்த கல்லூரியை 13 வருடங்களாகப் பொறுப்பேற்று வழி நடத்தி ஒரு தேசிய பாடசாலையாக மாற்றிய பெருமை இந்தக் கல்லூரியின் அதிபரையே சாரும். அந்தளவுக்கு நாட்டின் குழப்பமான சூழ் நிலையில் தலைமை பொறுப்பேற்று வழி நடத்தியது இக்கல்லூரியின் வெற்றிக்கு வழி வகுத்தது. வடமராட்சி மண் கல்வி பாரம்பரியம் மிகுந்த மண். அந்த மண்ணில் பல கல்வியியலாளர்கள் தோன்றி கல்வியில் வடமராட்சி செழித் தோங்க பாடுபட்டிருக்கின்றனர். அந்த வகையில் அதிபர்களின் பங்களிப்பு அளப்பரியது. அவ்வாறு தான் இன்று மணி விழா காணும் அதிபர் எஸ். சேதுராஜா இக்கல்லூரியை வழி நடத்தினார். சிலர் தாம் வகிக்கும் பதவிகளால் பெருமை பெறுகின்றனர் சிலரால் பதவிகள் பெருமை பெறுகின்றன. அந்த வகையில் அதிபர் சேவையை அர்ப்பணிப்பாக வழங்கி பல அதிபர்கள் அந்தப்பதவிக்கு பெருமை சேர்த்து இருக்கின்றனர்" - என்றார்.

முதலில் விழா நாயகன் கல்லூரிக்கு அருகில் உள்ள காளி கோயிலில் இருந்து மங்கல வாத்தியங்கள் முழங்க அழைத்து வரப் பட்டார். தொடர்ந்து மங்கல விளக்கேற்றல் இடம் பெற்றது. விருந் தினர்களாகக் கலந்து கொண்ட வட மாகாண கல்வி அமைச்சர் குருகுல ராஜா மற்றும் வட மாகாண கல்விபண் பாட்டலுவல் கள்விளையாட்டுதுறை அமைச்சின் செயலாளர் சத்தியசீலன், வடமராட்சிகல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார், கோப்பாய் தேசியகல்வியியல் கல்லூரி பீடாதிபதி ச.அமிர்தலிங்கம், வட மாகாண கல்விப் பணிப்பாளர் ஆ.ராஜேந் திரன், கரவெட்டிபிரதேச செயலர் சிவசிறி மற்றும் வட மாகாண மீன்பிடி நீரியல் வள அமைச்சின் செயலாளர் வரதீஸ்வரன் உட்பட விருந்தினர்கள் மங்கல விளக்கை ஏற்றி வைத்தனர். தொடர்ந்துவரவேற்புரையை கல்லூரியின் தற்போதைய அதிபர் க.கிருஷ்ணகுமார்நிகழ்த்தினார். தொடர்ந்து வாழ்த்துரைகள் இடம் பெற்றன.


அதனைத் தொடர்ந்து கல்லூரியின் அதிபரின் வரலாற்றை தாங்கிய 'சேது நாதம்' நூல் வெளியிட்டு வைக் கப்பட்டது. நூலை வடமாகாண கல்வி பண்பாட்ட லுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் சத்திய சீலன் வெளியிட்டு வைக்க விழா நாயகன் பெற்றுக் கொண்டார். தொடர்ந்து மணி விழா நாயகனுக் கான கௌரவிப்புகள் இடம்பெற்றன. (வ-109)

## பஸ் சேவையை நீடிக்கக் கோரிக்கை

சாவகச்சேரியில் உள்ள அரச, வங்கி அலுவலகங்களில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களின் நலன் கருதி தினமும் காலை 7.20 மணிக்கு பருத்தித்துறை பஸ் நிலையத்திலிருந்து கொடிகாமம் வரை நடத்தப்படும் பஸ்ஸை சாவகச்சேரி வரை நீடிக்குமாறு உத்தியோகத் தர்கள் கோரியுள்ளனர்.

காலை 8 மணிக்கு பருத் தித்துறையிலிருந்து கொடி காமம் ஊடாக சாவகச்சேரிக்கு புறப்படும் பஸ் 9 மணிக்குப் பின்னர் சாவகச்சேரியை சென்றடைவதால் உத்தியோகத்தர்கள் சிரமங்களுக்கு உள்ளாவதால் காலை 7.20 மணிக்குப் புறப்படும் பஸ்ஸை சாவகச்சேரி வரை நீடிக்குமாறும் கோரியுள்ளனர்.(வ-9)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
26 . 02 . 1947

மறைவு
24 . 10 . 2013

அமரர் **கனகசபை மகாதேவன்**

(ஓய்வுபெற்ற மருந்தாளர்)

திதி: அபரபக்க சஷ்டி

அன்பு வழி நின்று அறம் பேணி
அணையாத விளக்காக ஒளி வீசி
இன்பம் எய்திட இனிதுழைத்து
எம் உயர்வுக்காய் அல்லும் பகலும் வாழ்ந்த
எம் இனிய தெய்வமே!
ஆண்டு ஒன்றென்ன ஓராயிரம் சென்றாலும்
எம் நெஞ்சை விட்டு உம் நினைவு நீங்குமா?
உங்கள் நினைவில் வாழும்.....

**மனைவி, பிள்ளைகள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்.**

(53941)(12.3)

## கண்ணீர் அஞ்சலி



**முத்தையா திருநாவுக்கரசு**

(ஓய்வுநிலை மாவட்ட நீதிபதியும், சட்டத்தரணியும், பிரசித்த நொத்தாரிசும்)

அவர்களின் மறைவுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மாசாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.


**பாக்கியநாதன் (சின்னண்ணை)**
**குடும்பத்தினர்.**
105/3, இராசாவின்தோட்டம்,
யாழ்ப்பாணம்.

(53994)
(12.3.6)

## கண்ணீர் அஞ்சலி

**முத்தையா திருநாவுக்கரசு**

(ஓய்வு நிலை மாவட்ட நீதிபதியும், சட்டத்தரணியும், பிரசித்த நொத்தாரிசும், கவிஞர் விகடகவி)



நேற்று வரை எம்மோடு இருந்து
எம்மைப் பாதியிலே விட்டுச் சென்றீரே!
உம் பிரிவுச் செய்தி கேட்டு இடியெனக்
கலங்கி நிற்கின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்

**உரிமையாளரும்,**
**ஊழியர்களும்,**
**நந்தலாலா ஹாட்வெயார்.**
29, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
021 222 6234

(53988)(4.6.3)

## ஓராண்டு நினைவஞ்சலி



கச்சாய் வடக்கு
கொடிகாமத்தைப்
பிறப்பிடமாகவும்
இங்கிலாந்தை
வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்
**சுப்பிரமணியம் சிவதாசன்**

மலர்வு
28 . 03 . 1966

உதிர்வு
24 . 10 . 2013

திதி:12.11.2014

விதியின் வலிமையால் வீழ்ந்துவிட்ட எங்கள் குடும்ப விருட்சமே!
வேரிழந்த விழுதுகளாய் விம்மி விசும்புகின்றோம்
மதிகெட்ட காலனவன் கண்ணிமைக்கும் கணத்துள்
கவர்ந்திட்ட சேதியை என்னென்று நாம் உரைப்போம்
நேசத்துடன் நீர் உரைத்த நல்லுரைகள் இன்னும் எதிரொலிக்க
அவசரமாய் எங்கு சென்றீர்
உங்கள் ஆத்மா சாந்திக்காய் நிதமும் பிரார்த்திப்போம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!! (53985)(4.6.3)

கச்சாய் வீதி.
கொடிகாமம்.

**குடும்பத்தினர்.**

# முறைசாரா பிரிவு நடத்திய ஆக்கப்பொருள் கண்காட்சி

தென்மராட்சி கல்வி வலய முறைசாராப்பிரிவால்நடத்தப்பட்ட கணினி, உடையமைத்தல், ஐசிங் கேக், மணப்பெண் அலங்காரம் ஆகிய பயிற்சி நெறிகளில் பங்குபற்றியோரின் ஆக்கப் பொருள் கண்காட்சி கடந்த சனிக்கிழமை உசன் இராம நாதன் மகாவித்தியாலய மண்டபத்தில் இடம்பெற்றது.

கொடிகாமம் அ.த.க. பாடசாலை, மீசாலை விக்னேஸ்வரா மகா வித்தியாலயம் ஆகியவற்றில் உடையமைத்தல் பயிற்சியும், மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி, உசன் இராமநாதன் ம.வி. ஆகியவற்றில் கணினிப் பயிற்சியும் வரணி மத்திய கல்லூரியில் ஐசிங் கேக், மணப்பெண் அலங்காரம் பயிற்சிநெறியும் இடம்பெற்றன.

பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்தவர்களுக்கு நிகழ்வில் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. தென்மராட்சிவலயக்கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் தலைமையில் நடைபெற்ற நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி உதவிப் பிரதேச செயலர் செல்வி ரஞ்சனா நவரத்தினமும் சிறப்பு விருந்தினராக வேள்ட் விஷன் நிறுவன திட்ட முகாமையாளர் ஏ.ஜீ.றொசைறோவும் கௌரவ விருந்தினர்களாக வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி சி.சிவநாதன், சாவகச்சேரி கோட்டக் கல்விப்பணிப்பாளர் கு.சிவானந்தம் ஆகியோரும் கலந்து கொண்டனர். கண்காட்சிக் கூடத்தை முதன்மை விருந்தினர் திறந்து வைத்தார். பயிற்சியை நிறைவு செய்த 123 பயிலுநர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. (வ-9-122)

# மாணவரின் கல்வி நடவடிக்கைகளில் நிறுவனங்களுக்கும் அக்கறை தேவை

## கைதடி விக்கினேஸ்வரா வித்தியாலய அதிபர் கருத்து

கைதடி,நவ.12

மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் பாடசாலைகள் மட்டுமல்லாது ஆலயங்கள், சனசமூக நிலையங்கள் என்பனவும் அக்கறை காட்டினால் எமது பகுதியில் கல்வித்தரம் பெரு வளர்ச்சி யடைய வாய்ப்புள்ளது."

-இவ்வாறு தெரிவித்தார் கைதடி விக்கினேஸ்வரா வித்தியாலய அதிபர் எஸ்.சிவானந்தன். .

கைதடி மத்திய வளர்மதி சனசமூக நிலையத்தாலும், வளர்மதி கல்வி நிலையத்தாலும் இணைந்து நடத்தப்பட்ட 9 ஆம் ஆண்டு மாகாண மட்டம் பரீட்சையை முன்னிட்டு முன்னோடிக் கருத்தரங்கு அண்மையில் நடைபெற்றது.

இதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்துகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். அங்கு அவர் மேலும் கூறியதாவது:

இலட்சக்கணக்கான பணத்தைச் செலவழித்து திருவிழாக்கள் செய்யும் எமது ஆலயங்கள் அவற்றில் பத்து வீதத்தை கல்விக்காக ஒதுக்கீடு செய்தால் கல்வியில் நாம் உயரலாம். அதேபோல் சனசமூக நிலையங்களும் முயலவேண்டும். இன்று இந்த வளர்மதி சனசமூக நிலையம் இன்றல்ல பல ஆண்டுகளாக மாணவர்களின் கல்வியையும் கலைகளையும் வளர்த்து வருவதை நான் நேரடியாகக் கண்டுவருகின்றேன்.

இது ஏனைய சனசமூக நிலையங்களையும் கல்வி வளர்ச்சியில் ஈடுபட ஓர் ஊக்கத்தைக்கொடுக்கும் நிகழ்வாகும்" -என்றார்.

மேற்படி முன்னோடிக் கருத்தரங்கில் விஞ்ஞான பாடத்துக்கு ஆசிரியர் எம்.பிரியந்தனும், கணித பாடத்துக்கு ஆசிரியர் என்.கஜேந்திரனும் தமிழ்மொழிப் பாடத்துக்கு ஆசிரியை திருமதி எஸ் கேதாரகௌரியும் வளவாளர்களாகக் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

இந்தநிகழ்வில் நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டமை இங்கு குறிப்பிடத்தக்கது. (வ-288)

## சர்வதேச நீரிழிவு தின நிகழ்வுகள் சாவகச்சேரியில்

தென்மராட்சி,நவ.12

சர்வதேச நீரிழிவு விழிப்புணர்வுதின நிகழ்வுகள் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை சாவகச்சேரியில் நடத்தப்படவுள்ளன.

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் நீரிழிவு சிகிச்சை நிலையத்தினரும் - சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினரும் இணைந்து இந்த நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளனர். அன்றையதினம் மு.ப. 10 மணிக்கு சாவகச்சேரி பஸ் நிலையத்திலிருந்து நீரிழிவு விழிப்புணர்வுப் பேரணி புறப்பட்டு- சாவகச்சேரி நகரசபை பொன்விழா மண்டபம் வரை சென்றடையும். மண்டபத்தில் இடம்பெறும் நிகழ்வுகளுக்கு சாவகச்சேரி ஆதார மருத்துவமனை பொது மருத்துவ நிபுணர் தி. சிறீகரன் தலைமை தாங்குவார்.

இந்த நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் வசந்தி அரசரத்தினம் யாழ். போதனா மருத்துவமனை துறைசார் மருத்துவ நிபுணர்கள் உரையாற்றவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-9)

## சிறுவர், முதியோர் தின விழா

வேலணை பிரதேச செயலக சிறுவர், முதியோர் தின விழா நாளை வியாழக்கிழமை வேலணை பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி சதீசன் தலை மையில் வேலணை பிரதேச செயலக மண்டபத்தில் நடை பெறும். சிறுவர் தினத்தை முன்னிட்டு மாணவர்களிடையே நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு மற்றும் வேலணை பிரதேசத்தைச் சேர்ந்த கிராம அலுவலர் பிரிவுகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட முதியவர்களும் அன்றையதினம் பரிசில்கள் வழங்கப்பட்டு கௌரவிக் கப்படவுள்ளனர். (வ-7)


## மரண அறிவித்தல்

### திருமதி நாகம்மா (பொன்னம்மா) இராசநாயகம்



மட்டுவில் வடக்கு சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகம்மா இராசநாயகம் கடந்த (09.11.2014) ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மட்டு வில் இளையதம்பி-தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வறுத்தலைவிளான் சின்னையா சுந்தரம்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற வறுத்தலைவிளான் சின்னையா இராசநாயகத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான பாறுபதி, மகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், விஜயா (ஆசிரியை, தி/கும்புறு பிட்டி மெதடிஸ் மிஷன் தமிழ் கலவன் பாடசாலை), விஜிதா (சுவிஸ்லாந்து), நிமலன், தயாளன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற மனோகரன் மற்றும் பகீரதன் (சுவிஸ்),சுதர்சன் (சுவிஸ்), ஆகியோரின் பாசமிகு சிறிய தாயாரும், தவராசா, கருணானந்தன், மங்களேஸ்வரி, மல்லிகாதேவி, இளவரசி, மனோரதி, மனோரஞ்சி ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை, பதஞ்சலி நாதன், சிவலிங்கம் மற்றும் சிவபாதசிங்கம், (ஆஸ்திரேலியா), சிவபாக்கியம் (கனடா), மயில்வாகனம், செல்வநாயகி (கனடா), காலஞ்சென்ற துரைராஜசிங்கம் மற்றும் றூத்சிவ நேசமலர், விமலாதேவி(கனடா) ஆகியோரின் மைத்துனியும்,ரவிவர்மன், ரவிசங்கர், வனுசாந்தி, அபிமன்யு, ஆதித்யா, உமாஜினி, தர்ஷிகா, நிதர்ஷன், அகர்ஷன், மதுஷன், ஹரிஷனன் சிவாங்கி, பவித்திரா,ரம்யா, சர்ஷஷினி, ஹரிகரன், ஹரிசரண், வைணவன், அங்கவி, கேஷிகா, அபிசேத்திரி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் மட்டுவில் வடக்கிலுள்ள அவரது இல்லத்தில் இன்று(12.11.2014)புதன்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் வண்ணாத்தியான் பால இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி.
71 08630631 (விஜயா), 0777 906780 (நிமலன்),
0771471179, 0766 461 557 (தயாளன்)

தகவல்:
குடும்பத்தினர்.
(47332)(5.3)

## மரண அறிவித்தல்

### வேலுப்பிள்ளை தாமோதரம்பிள்ளை

(ஒய்வுபெற்ற தபால் உத்தியோகத்தர்)



பொன்னாலையைப் பிறப்பிடமாகவும், மூளாயை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை சிதம்பரம் தம்பதியரின் செல்வப் புதல்வன் தாமோதரம்பிள்ளை (ஓய்வுபெற்ற தபால் உத்தியோகத்தர்) 09.11.2014 ஞாயிற்றுக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் வள்ளியம்மையின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - சிதம்பரம் தம்பதியரின் அன்பு மகனும், மகாலட்சுமி, காலஞ்சென்றவர்களான பாலசுப்பிரமணியம், நாகமுத்து, சின்னமணி மற்றும் ஈஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான சரவணமுத்து, சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம், சீதாலட்சுமி, பொன்னம்மா, அன்னமுத்து ஆகியோரின் மைத்துனரும், பிருந்தாதேவி, வசந்தா, மதிவண்ணன் (கனடா), காலஞ்சென்ற ஜெயந்தினி மற்றும் றஞ்சினி (கனடா), அருள்வண்ணன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், செல்லத்துரை, தவபாலன், ஜெயராசா (கனடா), வத்சலா (கனடா), கேமளதா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனும், ஜனிதா, ஜெகந்தன், முகுந்தன் (தனியார் சிற்றூர்தி - காரைநகர்), அஜந்தா, அனுஷன், பிரபாகரன் (கனடா), சுபோதவஜன், கிருஷாந், பிரினா (கனடா), விதுஷன் (கனடா), றஜிஷன் (கனடா), பாருஷன் (கனடா), லக்ஷனா (கனடா), லெரன்யா (லண்டன்), குருசியா (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனும், கபிர்னா (கனடா), கோபிஷன் (கனடா) ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.11.2014) வியாழக்கிழமை பி.ப.12.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் பொன்னாலை இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பிள்ளையார் கோயிலடி,
மூளாய்.
(53993)
(12.3.6)
தகவல்: குடும்பத்தினர்.
TP:021 205 1855,077 430 4927,077 084 1908

## மரண அறிவித்தல்

### சாமுவேல் அரியரட்ணம்

(முன்னாள் ஓய்வுபெற்ற மாவட்ட முகாமையாளர், இலங்கை வங்கி-யாழ்ப்பாணம்.)

நவாலியைப் பிறப்பிடமாகவும், வதிரி, கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட சாமுவேல் அரியரட்ணம் 11.11.2014 செவ்வாய்க்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தேவமலர் அரியரட்ணம் (முன்னாள் அதிபர், பருத்தித்துறை மெதடிஸ்த மகளிர் கல்லூரி) அவர்களின் அன்புக் கணவரும், கிறிஸ்டினா மலரினியின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற ஜோய் மற்றும் டிக்ஷன்(கனடா) ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற ஜோர்ச் மற்றும் நவமலர்(கனடா), காலஞ்சென்றவர்களான ஜேசுதாசன், குமாரதாஸ், பரமதாஸ், சத்தியதாஸ் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் மகிந்த மலர்ச்சாலையில் (கல்கிசை) அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, இன்று (12.11.2014) புதன்கிழமை மாலை 4 மணிக்கு நல்லடக்க ஆராதனையின் பின்னர் நல்லடக்கத்திற்காக தெஹிவளை கல்கிசை சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: அலன் சத்தியதாஸ் 0777 598 061
(53986)(5.3)

## மரண அறிவித்தல்

### திருமதி சிவகாமிப்பிள்ளை மாசிலாமணி



மட்டுவிலைப் பிறப்பிடமாகவும் கந்தர்மடம், யாழ்ப்பாணத்தையும் சிட்னி ஆஸ்திரேலியாவையும், வசிப்பிடமாகக் கொண்ட திருமதி சிவகாமிப்பிள்ளை மாசிலாமணி 09.11.2014 ஞாயிற்றுக்கிழமை இறைவனடிசேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைரமுத்து - கற்பகம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற இளைப்பாறிய ஆசிரியர் சின்னத்தம்பி மாசிலாமணி அவர்களின் ஆருயிர் மனைவியும், காலஞ்சென்ற பண்டிதமணி சி.கணபதிபிள்ளை அவர்களின் பெறாமகளும், காலஞ் சென்றவர்களான தில்லைபிள்ளை, கனகசபை, வைத்திலிங்கம், சதாசிவம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், பாலசௌந்தரி, பாலகுமாரன், நந்தகுமாரன், நந்தினி, தர்மினி, நிர்த்தனகுமாரன், மகிந்தன் ஆகியோரின் பாசமிக்க தாயும், நடராஜமூர்த்தி, ராஜினி, ஸ்ரீதரன், கேதீஸ்வரராஜா, ராஜ்ஈஸ்வரி, சிவகாமவல்லி ஆகியோரின் அன்புமிக்க மாமியும், ஷங்கர், Tracey, கௌரி, ராகவன், நிமலன், செந்தூரன், Bavia, பிரதீபன், அனுஷா, வினோத், சஞ்சீவ், ஹரி, பிரசன்னா , Cecilia, ராம், தினேஷ், லக்ஷ்மன், தேவராஜன், துர்கா, பிருந்தா, வருண் ஆகியோரின் அன்பான பேர்த்தியும் Lachlan, Kaitlyn lauran. Owen, Shakshini, Kethana, லாரண்யா, நீலன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.11.2014) வியாழக்கிழமை முற்பகல் 10 -12 வரையில் இலக்கம் 4 Wainwright mews, bellavista இல் நடைபெற்று பின்னர் தகனக்கிரியைகள் மதியம் 1-2 மணிவரையில் Camellia Chapel, Delhi Road Macquarie Park இல் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

மேலதிக தகவல்களுக்கு: தர்மினி - 0411354797, மகிந்தன் - 0427800292 (53989)(45.6.3)

## மரண அறிவித்தல்

### திருமதி குணமணி செல்லத்துரை (கோப்பாய்)



கோப்பாய் தெற்கு, பழைய வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி குணமணி செல்லத்துரை 10.11.2014 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரையின் (முன்னாள் சிறைச்சாலை உத்தியோகத்தர்) மனைவியும், தர்மராஜன் (ஓய்வுநிலை ஆசிரியர், யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்), சிறீதரன்(ஜேர்மனி)ஆகியோரின் தாயாரும், சாந்தினிமாலா(ஆசிரிய ஆலோசகர் யாழ். வலயம்), ரேவதி (ஜேர்மனி) ஆகியோரின் மாமியாரும், சீர்மாறன் (ஹற்றன் நஷனல் வங்கி-வவுனியா), மதுரா (றுகுணு பல்கலைக் கழகம்), கீர்த்திகன், அபிநயன்(யா/சென். ஜோன்ஸ் கல்லூரி), ஜேர்மனியில் வசிக்கும் துஷாந், துக்ஷா, துவிஷா ஆகியோரின் அப்பம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.11.2014) புதன்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக நண்பகல் 12 மணிக்கு கோப்பாய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பழைய வீதி,
கோப்பாய் தெற்கு,கோப்பாய்.
(53990)(5.3)
தகவல்: குடும்பத்தினர்.

## யாழ். மாநகரில் கழிவகற்றலுக்கு ஜனவரி முதல் புதிய நடைமுறை

யாழ்.மாநகரப் பிரதேசத்தில் உள்ள மக்களின் குடிமனைப் பகுதிகளில் உள்ள கழிவுகள் ஜனவரி தொடக்கம் புதிய திட்டத்தின் கீழ் அகற்றப்படவுள்ளன.

சகல மக்களுக்கும் இது தொடர்பான படிவங்கள் வழங்கப்பட்டுப் பின்னர் விசேட அட்டை ஒன்று வழங்கப்படும். இந்த அட்டையைப் பயன்படுத்தி மாதத்தில் நான்கு தடவைகள் மட்டும் மக்களின் சமையலறை கழிவுகள் மட்டுமே அகற்றப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனை விட குடியிருப்புக் கழிவுகள் மேலதிகமாக அகற்றப்பட இருந்தால் குறித்த அட்டை மூலம் அதற்குக் கட்டணம் அறவிடப்படும். இந்தக் கழிவுகள் மாநகர சுகாதார மேற்பார்வை உத்தியோகத்தரின் மேற்பார்வையிலேயே அகற்றப்படும்.

இந்தப் புதிய திட்டத்தை ஜனவரி மாதம் தொடக்கம் நடைமுறைப்படுத்திக் கழிவுகளைச் சிரமம் இன்றி அகற்றுவதற்கு ஏற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மாநகர கழிவகற்றும் பிரிவின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

மாநகரப் பகுதியில் வீட்டுக் கழிவுகளை அகற்றுவதால் வீதிகளில் தேங்கி கிடக்கும் கழிவுகளை அகற்றுவதற்குத் தாமதம் ஏற்படுகின்றது. மாநகரப் பகுதியில் சமையலறைக் கழிவுகளை மட்டுமே அகற்றுவதற்கு முன்னுரிமை வழங்கப்பட்டது. ஆனால் மக்கள் குடியிருப்புப் பகுதிகளில் உள்ள சகல கழிவுகளையும் வாகனங்களில் ஏற்றி விடுவதால் வீதிக் கழிவுகளை ஏற்ற முடியாத நிலைக்கு மாநகராட்சி மன்றம் சிரமத்தை எதிர்நோக்கியுள்ளது. இதனால் ஜனவரி தொடக்கம் குடியிருப்புக் கழிவுகள் அகற்றுவதற்குப் புதிய நடைமுறை ஒன்றை மாநகராட்சி மன்றம் பின்பற்றுவதற்குத் திட்டமிட்டுள்ள து- என்றார். (த-17)

# வடக்கில் 55 பஸ் தரிப்பிடங்கள் அமைக்க மாகாண சபையின் நிதி

யாழ்ப்பாணம், நவ.12

வடக்கு மாகாண மீன்பிடி, போக்குவரத்து, கிராம அபிவிருத்தி மற்றும் வர்த்தக வாணிப அமைச்சினால் வடக்கு மாகாணத்தில் 55 பஸ் தரிப்பிடங்கள் நிர்மாணிக்க 2014 ஆம் ஆண்டுக்கான மாகாண குறித்தொதுக்கப்பட்ட திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த நிதியில் யாழ். மாவட்டத்தில் 16 பஸ் தரிப்பிடங்கள் யாழ். மாநகர சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நான்கும், ஏனையவை நகரசபை, பிரதேச சபைகளின் எல்லைக்குள்ளும் நிர்மாணிக்கப்படவுள்ளன.

இந்த வேலைத்திட்டங்கள் உரிய உள்ளூராட்சி மன்றங்களின் அனுமதியுடன் மாகாணக் கட்டடங்கள் திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

இந்த பஸ் தரிப்பிடங்கள் மிக அவசியமாகத் தேவைப்படுகின்ற இடங்களை உள்ளூராட்சி மன்றங்களிடமிருந்து பெற்று முன்னுரிமைப் பட்டியலை அனுப்பி வைக்குமாறு கடந்த ஏப்ரல் 8 ஆம் திகதி சகல பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளர்களிடம் கோரப்பட்டு யாழ்.மாவட்டம் தவிர்ந்த ஏனைய நான்கு மாவட்டங்களினதும் முன்னுரிமைப் பட்டியல்கள் கிடைக்கப்பெற்று வேலைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

எனினும் பலமுறை கடிதங்கள் எழுதப்பட்டும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டும் யாழ்.மாவட்டத்துக்குரிய முன்னுரிமைப்பட்டியல்களை இன்று வரை பெற்றுக் கொள்ள முடியாமல் இருப்பது மிகவும் வருத்தமளிப்பதாக உள்ளது என்று அமைச்சர் பா.டெனீஸ்வரன் கூறியுள்ளார்.

இந்த நிதியாண்டு முடிவதற்குள் சகல வேலைத்திட்டங்களும் பூரணப்படுத்த வேண்டிய கட்டாயத்தில் இருப்பதனால் தங்கள் உள்ளூராட்சி மன்ற எல்லைக்குள் மிக அவசியமாக தேவைப்படும் இடமாகக் கருதப்படும் ஒன்று அல்லது இரண்டு இடங்களை முன்னுரிமைப்படுத்தி நேரடியாக இந்த அமைச்சுக்கு தபால் மூலம் அல்லது தொலைநகல் மூலம் அனுப்பி வைக்குமாறும், கட்டடத்திணைக்களம் இடங்களைப் பார்வையிட வரும்போது பூரண ஒத்துழைப்பு வழங்கி வேலைகளைத் தாமதமின்றி ஆரம்பிக்க உதவுமாறும், மாகாண மீன்பிடி, போக்குவரத்து கிராம அபிவிருத்தி மற்றும் வர்த்தக வாணிப அமைச்சர் பா.டெனீஸ்வரன் சகல உள்ளூராட்சி மன்றத் தலைவர்களுக்கும் அறிவித்துள்ளார். (த-9)

## மாநகரப் பகுதியில் நேற்று கழிவகற்றும் பணி துரிதம்

யாழ்ப்பாணம், நவ.12

யாழ்.மாநகரப் பகுதியில் தேங்கிக் கிடக்கும் கழிவுகளை அகற்றும் பணிகள் நேற்று முழுவீச்சில் இடம்பெற்றன. இந்தக் கழிவகற்றும் பணியில் 17 உழவு இயந்திரங்கள் பயன் படுத்தப்பட்டன இந்தக் கழிவகற்றும் பணிக் கெனச் சுகாதாரத் தொழிலாளர்கள் மேலதிகமாகவும் கடமைக்கு அமர்த்தப்பட்டனர். சில நாள்களாகக் கழிவகற்றும் பணிகள் உரிய பொறிமுறையின் கீழ் மேற்கொள்ளப்படாத மையால் வீதிகள் எங்கும் குப்பைகள் தேங்கியதால் சுகாதாரச் சீர்கேடு ஏற்பட்டது.

இதனால் நேற்று கழிவகற்றும் பணியைத் துரிதமாக மேற்கொள்வதற்கு மேலதிக வாகன வசதிகள் பயன்படுத்தப்பட்டன. இதனைவிட உணவு கையாளும் நிலையங்கள், தேனீர்க் கடைகள் போன்றவற்றில் உள்ள கழிவுகளும் நேற்று அகற்றப்பட்டன.

தேவையற்ற விதத்தில் கழிவுப் பொருள்களை வீதியோரம் கொட்ட வேண்டாம் என்று கழிவகற்றும் பிரிவினர் மக்களைக் கேட்டுள்ளனர்.

கழிவுகளை மக்கள் உரப்பை மற்றும் பொலித்தீன்களில் பொதியாக்கி வீதியோரம் வைக்க வேண்டும். வீதியோரம் கொட்டப்படும் கழிவுகளைப் பறவைகள் மற்றும் விலங்குகள் இழுத்துச் செல்வதால் சுகாதாரச் சீர்கேடு ஏற்படுகின்றது என்றும் தெரிவிக்கப்பட்டது. (த-17)

## ஓய்வூதியம் வழங்கும் திகதிகள்

2015ஆம் ஆண்டுக்கான ஓய்வூதியம் வழங்கும் திகதிகள் பற்றிய விவரம் ஓய்வூதியத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் ஜனவரி 9, பெப்ரவரி 10, மார்ச் 10, ஏப்ரவரி 8, மே 8, ஜூன் 10, ஜூலை 10, ஒகஸ்ட் 10, செப்ரெம்பர் 10, ஒக்டோபர் 7, நவம்பர் 9, டிசெம்பர் 10 ஆகிய திகதிகளில் ஓய்வூதியம் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (த-9)


**இடமாற்றம்**

**டயானா பிளாஸ்ரிக்**

108, பலாலி வீதி (இலுப்பையடிச் சந்தி)

* உடைந்த வாகன பிளாஸ்ரிக் ஒட்டுதல்.
* பழைய பிளாஸ்ரிக் வாங்குதல்.
* புதிய பிளாஸ்ரிக் தயாரித்தல்

(C/17542) (7.8.3)

தொடர்பு : 077 592 5088/021 222 8680

**சிறுநீரகம் தேவை**

45 வயதுடைய A⁺ குருதி வகையுடைய ஒருவருக்கு சிறுநீரகம் மாற்றவேண்டிய தேவையுள்ளதால் அதே குருதி வகையைச் சேர்ந்த நபரின் சிறுநீரகம் உடனடியாகத் தேவை. (இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்) சன்மானம் வழங்கப்படும்.

(53991) (12.3.6) தொடர்பு: 077 843 5528

**பணிப்பெண் தேவை**

வீட்டில் தங்கி நின்று வீட்டு வேலைகள் செய்வதற்கு (30 - 50 வயதுக்குட்பட்ட). பணிப்பெண் தேவை.

(சி17617) (12.3.6) தொடர்பு: 077 125 1155

**பணியாளர்கள் தேவை**

யாழ்.நகரில் இயங்கும் பிரபல புடைவை விற்பனை நிலையத்துக்கு அனுபவமுள்ள/ பழக விரும்பும் பணியாளர்கள் (ஆண்/பெண்) உடன் தேவை.

(சி17618) (12.3.6) தொடர்பு: 077 125 1155

**வாடகைக்கு**

இல.531, பலாலி வீதி, திருநெல்வேலியில் அலுவலக இடமும் களஞ்சியசாலையும் வாடகைக்குண்டு. கீழ் தளத்தில் LAVA பல் வைத்தியசாலை இயங்குமிடம். Nov .13,14 ஆம் திகதிகளில் பார்வையிட முடியும்.

தொடர்பு: 077 776 9260 (53978) (45.8.3)

**பணிப்பெண் தேவை**

இரு சிறார்களை வீட்டில் தங்கியிருந்து பராமரிப்பதற்கு பணிப்பெண் தேவை.

தொடர்பு: 077 617 8521 (51999) (45.8.3)

**IELTS** A1 B1 B2

MBA(London) Qualified Trainer Call: 0213208342

Visit: http://edu.kugroup.info/ielts

0777302882 IELTS Centre@KU

தனிப்பட்ட முறையில், உங்கள் நேர வசதிக்கேற்ப கற்கக்கூடிய, அதிக அளவிலான சிறந்த பெறுபேறுகளை யாழ்மாவட்டத்தில் வழங்கிவரும் 16 வருட அனுபவமுள்ள ஒரே கல்வி நிறுவனம்.

K.U Education, No 626 1/1, K.K.S Rd, Jaffna

**Computer Program (VB 6 + Access + Crystal Reports) தயாரிப்பதற்கான - Guide**

இது கணினித்துறையில் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வேலைவாய்ப்பை எதிர்பார்ப்பவர்களுக்கு மிகவும் பிரயோசனமானதும் உதவியானதுமான ஒரு சிறந்த வழிகாட்டியாகும். (25 வருட அனுபவமான A.S.Uthayashankar அவர்களால் வடிவமைக்கப்பட்டதாகும்.

(சி.17404) (45.8.3)

தொடர்பு: 072 966 4616, 076 620 9177

**கிளை விரிவாக்கல் திட்டம்**

**ஏசியன் கொம்பியூட்டருடன் இணைந்து Franchise (தனியுரிமை) கிளைகளை**

சுன்னாகம், மானிப்பாய், சாவகச்சேரி, நெல்லியடி, மன்னார் பிரதேசங்களில் கொம்பியூட்டர் மற்றும் உயர் கல்வி பயிற்சி மையங்களை தொடங்க விரும்புவோர் மின்னஞ்சல் அல்லது தொலைபேசி மூலமாக தொடர்புகொள்ளவும். தற்பொழுது இயங்கிக்கொண்டிருக்கும் கல்வி நிலையங்களும் தமது கல்விச்சேவையை மேலும் மேம்படுத்த எம்முடன் இணையலாம்.

தொடர்புகளுக்கு
Mr.Ravi
பொது முகாமையாளர்
M - 077 7613876
L - 011 5838724

CSC-ASIAN COMPUTER EDUCATION
AN ISO 9001 : 2008 CERTIFIED TRAINING INSTITUTION
#60, Kotahena Street, Colombo-13
e-mail : asianedu@dialogsl.net

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



நேற்று (11.11.2014) செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் கலைமாணி (B.A) பட்டம் பெற்ற செல்வன்

**துரைராஜா நித்தியானந்தன்**

அவர்களை மேலும் உயர் கல்விகள் கற்று பட்டங்கள் பல பெற்று பல்லாண்டு காலம் வாழ்க என வாழ்த்துகிறோம்.

வாழ்த்துவோர்:
மலர்அன்ரி, பிள்ளைகள், மனோகரன் (ஆசை அண்ணா) குடும்பத்தினர்.
ஆனந்தா வீதி, மானிப்பாய்.

(53992)(10.6.3)

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



திருமதி
**லக்சலா தர்சன்** (B.F.A)

அவர்கள் 10.11.2014 அன்று யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் நுண்கலைமாணி (B.F.A) பட்டத்தினைப் பெற்றதையிட்டு மனமாரப் பாராட்டுவதுடன், மேலும் பல பட்டங்களைப் பெற இறைவனை வேண்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
அப்பா, கணவர், சதா அத்தான், சிந்து அக்கா தங்கா மற்றும் கவிதா அன்ரி குடும்பத்தினர்.
பழைய வீதி, கோப்பாய் தெற்கு.

**சைவவித்தியா விருத்திச் சங்கம்**

**பதவி வெற்றிடம்**

**உபவிடுதிக்காப்பாளர் - ஆண், பெண்**

தகைமைகள்:

* க.பொ.த.சாதாரண தரத்திற்கு குறையாத கல்வித்தகைமை
* வயதெல்லை : 30 - 65
* விடுதியில் தங்கியிருப்பது கட்டாயம், உணவு தங்குமிடவசதி இலவசம்
* விண்ணப்பதாரர் தேகாரோக்கியம் உடையவராகவும், இல்லப் பிள்ளைகளைப் பரிவோடு கவனிப்பதிலும், சைவாசாரம் பேணுவதிலும், வழிகாட்டுவதிலும் அர்ப்பணிப்போடு ஈடுபடுபவராகவும் இருத்தல் வேண்டும். ஓய்வு பெற்ற அதிபர்/ ஆசிரியர் (அல்லது தம்பதியர்) முன்னுரிமை பெறுவர்.

ஊதியத் திட்டம்: ரூபா 8400 - 6 X 225 + 15 X 255 - 13575

அண்மையில் பெறப்பட்ட இரு நற்சான்றிதழ்ப் பிரதிகளோடு விண்ணப்பங்கள் கிடைக்கவேண்டிய இறுதிநாள்: 20.11.2014

சைவவித்தியா விருத்திச் சங்கம்,
கலாசாலை வீதி, திருநெல்வேலி.

தி.செல்வமனோகரன்
செயலாளர்

(சி.17614) (45.6.3)

# பயிரழிவுக்கு நிவாரணம் உடன் வழங்கவேண்டும்

## அச்சுவேலி மேற்கு மகளிர் விவகாரக் குழு கோரிக்கை

அச்சுவேலி, நவ. 12

தொடர்மழையினால் விளைபயிர்கள் அழுகி சேதமடைந்திருந்தமை மற்றும் நோய் தாக்கத்தினால் பயிர்ச்செய்கையில் ஏற்பட்ட பாதிப்புக்களுக்கு உரிய நிவாரணம் விவசாயிகளுக்கு வழங்கப்படவேண்டும் என அச்சுவேலி மேற்கு மகளிர் விவகாரக் குழு மனு மூலம் கோரிக்கை விடுத்துள்ளது.

அச்சுவேலி மேற்கு மகளிர் விவாகரக் குழுவால் விவசாயிகளுக்கு தொடர் மழையினால் ஏற்பட்ட பாதிப்புக்கள் என்ற தலைப்புடன் கூடிய விரிவான மனு ஒன்று வலி. கிழக்குப் பிரதேச செயலர் மற்றும் உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அந்த மனுவில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அண்மையில் பெய்துள்ள தொடர் மழையினாலும், பங்கஸ், வைரஸ் நோய்த் தாக்கத்தினாலும் கரட், வெங்காயம், தக்காளி, மிளகாய், முந்திரிகை போன்ற விளைபயிர்கள் அறுவடை நிலையில் அழுகிச் சேதமடைந்துள்ளன. எஞ்சி இருப்பவையும் காலநிலை சீர்கேட்டினால் பங்கஸ், வைரஸ் நோய்த் தாக்கத்துக்கு உள்ளாகியுள்ளன.

பயிர்களுக்கு ஏற்பட்ட அழிவு மற்றும் சேதத்தினால் விவசாயிகள் பொருளாதார இழப்புக்கு உள்ளாகியுள்ளனர். இதனால் வங்கிகளில் பெற்றுக்கொண்ட பயிர்ச்செய்கைக்கான பருவகாலக் கடனை திருப்பிச் செலுத்தமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

விவசாயிகளுக்கு ஏற்பட்ட பயிர்ச்செய்கை அழிவு மற்றும் பயிர்களுக்கு ஏற்பட்ட நோய்த் தாக்கம் தொடர்பாகச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்துக் குக் கொண்டு வந்தபோதிலும், பொருத்தமான நடவடிக்கை உரிய வேளையில் மேற்கொள்ளப்படவில்லை என விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

எனவே விவசாயிகளுக்கு ஏற்பட்ட பயிர் அழிவு மற்றும் சேதத்துக்கு உரிய இழப்பீடு மற்றும் நிவாரணம்வழங்கப்படவேண்டும்எனக்கோரப்பட்டுள்ளது. (கு-11)

## ஊர்காவற்றுறை துறைமுகம் ஊடான சேவையில் சிக்கல்கள்

யாழ்ப்பாணம்,நவ.12

அனலைதீவு, எழுவைதீவு பகுதிகளுக்கானபடகுச்சேவையை மீண்டும் ஊர்காவற்றுறை துறைமுகத்தினூடாக ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப் படவிருந்த நிலையில் அதற்கு எதிர்ப்பும் ஆதரவுமாக அபிப்பிராயங்கள் எழத் தொடங்கியுள்ளதால் குறிப்பிட்ட போக்குவரத்துச் சேவை தொடர்ந்தும் மெலிஞ்சிமுனை கண்ணகி அம்மன் கோவில் துறைமுகத்தினூடாகவே இடம் பெறும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

எழுவைதீவைச் சேர்ந்த படகோட்டிகளும் பொதுமக்களும் ஊர்காவற்றுறைத் துறைமுகத்தினூடாக மீண்டும் படகுச் சேவையை ஆரம்பிக்க ஆதரவு தெரிவிக்கும் நிலையில், அனலைதீவுப் படகோட்டிகள் கடல் தூரம் அதிகரிக்கும் என்பதால் ஊர்காவற்றுறை துறைமுகத்தில் இருந்து சேவையைத் தொடர ஆர்வம் காட்டவில்லை எனவும் கூறப்படுகின்றது.

போருக்கு முன்னர் எழுவைதீவு, அனலைதீவுப் பகுதிகளுக்கான கடற்போக்குவரத்து ஊர்காவற்றுறை துறைமுகம் ஊடாகவே நடைபெற்றுவந்தது. போரை அடுத்து துறைமுகத்தில் கடற்படையினர் முகாமிட்டதுடன் போக்குவரத்துக்கு அனுமதியளிக்கவும் முன்வரவில்லை. தற்சமயம் காரைநகருக்கும் - ஊர்காவற்றுறை துறைமுகத்துக்குமிடையில் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கடற்பாதை மட்டுமே சேவையில் உள்ளது.

மீண்டும் இந்தத் துறைமுகத்தின் ஊடாக எழுவைதீவு, அனலைதீவு போக்குவரத்தை மேற்கொள்ளும் பொருட்டுத் துறைமுகப் பாலத்தில் சேதமடைந்து கிடந்த படகுகள், அவற்றின் இயந்திரங்கள் என்பவற்றை அண்மையில் அப்புறப்படுத்தும் நடவடிக்கைகளும் இடம்பெற்றிருந்தன. எனினும் மீண்டும் படகுச்சேவையை ஊர்காவற்றுறைத் துறைமுகத்தில் இருந்து ஆரம்பிப்பதில் தடங்கல்கள் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கின்றது. (கு-7)



சர்வதேச முதியோர் தினத்தை முன்னிட்டு 100 வயதைப் பூர்த்தி செய்த சுழிபுரம் மேற்கைச் சேர்ந்த திருமதி ஞானப்பிரகாசம் சரஸ்வதி என்ற மூதாட்டி பாராட்டிக் கௌரவிக்கப்பட்டார். சுழிபுரம் மேற்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினால் நடத்தப்பட்ட இந்த முதியோர் கௌரவிப்பின்போது மூதாட்டிக்கு பொன்னாடை போர்த்தி பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டது. சங்கத்தின் தலைவி திருமதி சி. புனிதவதி தலைமையில் இடம்பெற்ற இந்தக் கௌரவிப்பு விழாவில் சங்கத்தின் செயலாளர் திருமதி ப. கிருஷ்ணவேணி, பொருளாளர் திருமதி கை. விஜயலட்சுமி ஆகியோர் கலந்து கொண்டனர். (கு-17)

## 656 பேருக்கு வாழ்வாதார உதவிகள்

யாழ்ப்பாணம்,நவ.12

ஊர்காவற்றுறைப் பிரதேச செயலர் பிரிவில் வடக்கின் வசந்தம் திட்டத்தில் இந்த ஆண்டுக்கான வாழ்வாதார அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு 656 பயனாளிகளுக்கு வாழ்வாதார உதவிகளை வழங்கவுள்ளது.

நீரிறைக்கும் இயந்திரம், தூறல் நீர்ப்பாசனக் கருவி வழங்கல், பனம்பொருள்கள் உற்பத்திகள், கட்டடப் வேலைகளுக்கான உபகரணங்கள், வாகனத்துக்கான கருவிகள் வழங்கல் என 24 திட்டங்கள் முன்மொழியப்பட்டுள்ளன. இதற்கென 86 லட்சத்து 8 ஆயிரம் ரூபா நிதி வழங்கப்பட்டுள்ளது. (கு-7)

## இரத்த தானத்தின் உயர் நிலையை மாணவருக்கு விளக்கவேண்டும்

### ஆசிரியர்களிடம் கோரிக்கை

அச்சுவேலி, நவ.12

தானங்களில் மேலான தானம் இரத்த தானம். இரத்ததானம் தொடர்பான அவசியமும் விழிப்புணர்வும் ஆசிரியர் பயிற்சி மாணவரிடம் தன்னுணர்வாக ஏற்பட்டிருப்பது எதிர்காலத்தில் பாடசாலை மாணவர்களையும் இந்தச் செயற்பாட்டில் ஈடுபடச் செய்யும்.

-இவ்வாறு கூறினார் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் ஓய்வுபெற்ற அதிபர் கா. கணபதிப்பிள்ளை.

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் ஆசிரியர் தினத்தை முன்னிட்டு இரத்த தானம் செய்த 99 மாணவர்களையும், புதிய இணைப்பு நிலை விரிவுரை பயிலுநர்களையும் கௌரவிக்கும் நிகழ்வு கடந்த புதன்கிழமை நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு ஓய்வு நிலை அதிபர் தொடர்ந்து உரையாற்றும்போது-

உறவினர்களுக்கே இரத்தம் வழங்குவதற்குச் சிலர் தயங்குகின்றனர். ஆனால் ஆசிரிய மாணவர்கள் 99 பேர் தன்னார்வ நிலையில் தாங்களாகவே முன்வந்து இரத்த தானம் செய்துள்ளனர். இது பாராட்டப்படவேண்டிய நிகழ்வு. ஆசிரியர் கலாசாலை மாணவர் மத்தியில் ஏற்பட்டுள்ள இரத்த தானம் தொடர்பான விழிப்புணர்வு எதிர்காலத்தில் மாணவர்கள் மத்தியில் பிரதிபலிக்கும். இரத்தானம் மேலான சேவை. உயிர்காக்கும் சேவை. இதன் உயர்நிலையை ஆசிரியர் சமூகம் மாணவர்களுக்கு விளக்கவேண்டும்.

எமது உடலில் காலத்துக்குக் காலம் நியமப்படுத்தப்பட்ட ஒழுங்கில் பாவனையில் உள்ள இரத்தம் அழிக்கப்படுகின்றது. அதில் ஒரு பகுதியைச் சுகதேகிகள், இளைய தலைமுறையினர் எமது உறவுகளின் உயிர் காப்பதற்கு வழங்குவது மேலான சேவையாகும். தானங்களில் மேலானது இரத்த தானம். இரத்ததானம் தொடர்பான உண்மை நிலையும் விழிப்புணர்வும் ஆசிரியர் சமூகத்தால் ஏற்பட்டிருப்பது எதிர்காலத்தில் மாணவர் சமூகத்தை இரத்த தானத்தில் ஈடுபடச் செய்யும்-என்றார். (கு-11)

## அட்டவணைப்படுத்தப்படாத பதவிகளுக்கு உயர்ந்தோருக்கு உரிய கொடுப்பனவு

யாழ்ப்பாணம், நவ.12

வடமாகாண உள்ளூராட்சிச் சபைகளில் அட்டவணைப் படுத்தப்படாத பதவிகளுக்குப் பதவியுயர்வு பெற்ற ஊழியர்கள் முன்னர் பெற்ற சம்பள அளவுத்திட்டத்தை வழங்க மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ம. ஜெகூ மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளருக்குப் பரிந்துரை செய்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றங்களில் அட்டவணைப்படுத்தப்படாத பதவி ஆளணி வெற்றிடம் நிரப்பப்படும்போது உள்ளூராட்சி மன்றங்களில் ஏற்கனவே நிரந்தர அடிப்படையில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் சிலர் விண்ணப்பித்து நேர்முகப் பரீட்சைகளில் சித்தியடைந்துள்ளனர்.

இவர்கள் புதிய பதவிக்கு நியமனம் செய்யப்படும்போது புதிய நியமனத்துக்குரிய சம்பள அளவுத்திட்டத்தின் ஆரம்பப் படிநிலையில் வைக்கப்படுவதால் முன்னைய பதவியில் பெற்ற சம்பளத்தைவிடக் குறைவான சம்பளம் கிடைப்பதாகவும் முறையிட்டுள்ளனர். இவர்கள் தாம் முன்னயை பதவியில் பெற்ற சம்பளப்படி நிலையில் வைத்து தமக்கு சம்பளத்தை வழங்குமாறும் கோரியுள்ளனர்.

தாபன விதிக்கோவை அத்தியாயம் 7 உப பிரிவு 9/4 இன்படி இவர்களுக்கு முன்னைய பதவியில் பெற்ற சம்பளப்படி நிலையில் வைத்துச் சம்பளத்தை வழங்குவதற்குப் பரிந்துரை செய்து தங்கள் அனுமதிக்காக மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளருக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் அறிவித்துள்ளார்.

புதிய நியமனம் வழங்கப்பட்ட ஊழியர்களுக்குப் பதவியுயர்வல்ல பதவி மாற்றம் செய்யப்பட்டதாகச் சம்பள அளவுத் திட்டத்தின் ஆரம்ப நிலையில் வைத்துச் சம்பளம் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (கு-9)

## வேலித் தகராறு கத்தி வெட்டில் முடிந்தது



யாழ்ப்பாணம், நவ.12

வேலிக்குக் கதியால் வெட்டியவர் தகராறு ஏற்பட்டதில் கையில் வைத்திருந்த கத்தியை வீசி எறிந்தார். அந்தக் கத்தி பெண் ஒருவரின் முதுகைப் பதம் பார்த்தது.

இந்தச் சம்பவம் கடந்த 9ஆம் திகதி மட்டுவில் வடக்கில் இடம்பெற்றது.

காயத்துக்கு இலக்கான இதே இடத்தைச் சேர்ந்த சிவபாலன் கமலாதேவி (வயது-53) என்பவர் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

எல்லைவேலியில் காணப்பட்ட மரங்களில் கதியால் வெட்டிய போது ஏற்பட்ட தகராறு காரணமாக இந்தச் சம்பவம் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது. (கு-9)

## தேவரதம் திருத்தம்

யாழ்ப்பாணம்,நவ.12

ஊர்காவற்றுறை பிரதேச சபையின் மோட்டார் படகு தேவரதம் தற்சமயம் திருத்தியமைக்கப்பட்டுள்ளது. இந்தப் படகுச் சேவையை விரைவில் ஆரம்பிக்கவுள்ளதாகவும் ஊர்காவற்றுறை பிரதேச சபையினர் தெரிவித்தனர்.

ஊர்காவற்றுறை-நயினாதீவுக்கான சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ள இதற்கான ஒப்பந்தம் செய்யப்படாதவிடத்து பிரதேச சபையே தேவரதம் படகுச் சேவையை நடத்தும் எனவும் அறியவருகின்றது. (கு-7)

## மண்டைதீவு பிரதான வீதி மோசமான நிலையில்

யாழ்ப்பாணம்,நவ.12

மண்டைதீவு பிரதான வீதியின் மாதலம் சந்தியில் இருந்து மின் பிறப்பாக்கி வரையான வீதி புனரமைப்புச் செய்யப் படாமல் மிகவும் மோசமான நிலையில் காணப்படுகின்றது. இந்தப் பகுதியில் மழை காலங்களில் வெள்ளம் தேங்கி நிற்பதாகவும், மிகவும் கூடுதலான குடியிருப்பாளர்களைக் கொண்ட இந்த வீதியாலேயே பஸ் சேவை இடம்பெறுவதாகவும் கூறப்படுகின்றது.



எனவே, புனரமைப்புச் செய்யப்படாத பகுதியை விரைவில் புனரமைக்கச் சம்பந்தப்பட்டவர்கள் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அங்குள்ள மக்கள் கோரியுள்ளனர். (கு-7)

# மன்னார் மருத்துவமனையில் “குருந்தகம்” மருத்துவ சேவை

## ஆராய சாவகச்சேரி வந்தது மருத்துவக் குழு

மன்னார்,நவ.12
மதுபோதைக்கு அடிமையாகி மீள முடியாமல் தவிக்கும் மன்னார் மாவட்ட மக்களின் நலன் கருதி மன்னார் மாவட்ட மருத்துவமனையில் "குருந்தகம்" மருத்துவ சேவை ஆரம்பிக்கப் பட்டுள்ளது.
"குருந்தகம்" நிலையத்தினை ஆரம்பிப்பதற்கு மன்னார் மருத்துவமனையின் மருத்துவக் குழுவினர் நேற்றுமுன்தினம் சாவகச்சேரியில் இயங்கும் "குருந்தகம்" சிகிச்சைப் பிரிவினைப் பார்வையிட வருகை தந்திருந்தனர். நிலையத்தின் செயற்பாடுகள் தொடர்பாகப் பிரிவு பொறுப்பதிகாரி, நிலையத்தில் தங்கியிருப் போர் ஆகியோரிடம் விவரங்களைக் கேட்டறிந்தனர்.
"குருந்தகம்" சிகிச்சைப் பிரிவு மருத்துவமனை வளாகத்தில் அமைக்க வேண்டுமென நிலையத்தில் தங்கியிருப்போர் கருத்துக்களைத் தெரிவித்தனர்.
நிலையத்தில் தமக்கு ஆற்றுப்படுத்துகை நடவடிக்கையுடன் பொது மருத்துவ சத்திரசிகிச்சைப் பிரிவு, உளநலப் பிரிவு, பல், ஆய்வுகூட வசதி போன்றவற்றில் சிகிச்சை பெறவேண்டிய தேவைகள் இருப்பதால் நிலையம் மருத்துவமனை வளாகத்தில் அமைவது அவசியமெனவும் மருத்துவமனையில் தங்கியுள்ள பல்வேறு நோயாளர்கள், பார்வையாளர்கள் ஆகியோருடன் பழகும் வாய்ப்பு இருப்பதால் தமது மனதில் உள்ள குற்ற உணர்வு இல்லாமல் போவதாகவும் கருத்துத் தெரிவித்தனர்.
கிளிநொச்சி மருத்துவமனையின் "குருந்தகம்" பிரிவு தர்மபுரத்தில் செயற்படுவது எம்மை சிறைக் கைதிகள்போல் தனிமைப் படுத்தும் செயலாக உள்ளது எனவும் தெரிவித்தனர். (த-9)

## முல்லைத்தீவு–கொக்காவில்–துணுக்காய் ஊடான போக்குவரத்தில் பெரும் சிரமம்

முல்லைத்தீவு, நவ 12
முல்லைத்தீவு - கொக்காவில் - துணுக்காய் வீதியூடான போக்குவரத்து இன்மையால் சுமார் ஆயிரத்து நூறுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் அன்றாட போக்குவரத்துக்களில் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்து வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.
முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் - தேறாங்கண்டல் ஊடாகக் கொக்காவில் சந்தி வரைக்குமான ஏ-9 வீதியையும், வெள்ளாங்குளம் - மாங்குளம் வீதியையும் இணைக்கும் குறித்த வீதியினூடான போக்குவரத்துக்கள் எவையும் இது வரை இடம்பெறவில்லை.
இதனால் புத்துவெட்டுவான், மருதன்குளம், பழையமுறிகண்டி, ஐயன்கன்குளம், தேறாங்கண்டல் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் போக்குவரத்தில் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.
சுமார் 20 கிலோ மீற்றர் நீளமான குறித்த வீதியில் 10 கிலோ மீற்றர் வீதி மாத்திரமே புனரமைக்கப்பட்டுள்ளபோதும் எஞ்சியுள்ள 10 கிலோ மீற்றர் வீதி புனரமைக்கப்படாமல் குன்றும் குழியுமாக காணப்படுகிறது. அத்துடன் போக்குவரத்து வசதிகள் இன்மையாலும் புத்துவெட்டுவான் கிராமத்தில் 120 குடும்பங்களைச் சேர்ந்த 253 பேரும், தேறாங்கண்டல் கிராமத்தில் 449 குடும்பங்களும், ஐயன்கன்குளத்தில் 361 குடும்பங்களைச் சேர்ந்த 718 பேரும் ஏனைய பகுதிகளைச் சேர்ந்த 300 இற்கும் மேற்பட்ட குடும்பங்களும் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (த-55)

## நல்லூர் பிரதேசத்தில் 1,200 வீதி விளக்குகள்

யாழ்ப்பாணம், நவ.12
நல்லூர் பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதியில் இதுவரை ஆயிரத்து 200 இற்கும் மேற்பட்ட வீதி விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன. சபையின் எல்லைக்கு உட்பட்ட மக்களின் பங்களிப்புடன் இந்த வீதி விளக்குகள் பொருத்தப்பட்டதாகச் சபையின் தலைவர் ப.வசந்தகுமார் தெரிவித்தார்.
தற்போது தொடர்ந்தும் இந்த வீதி விளக்குகள் பொருத்தும் பணி மக்களின் உதவியுடன் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. சில வீதிகள் இரவில் இருளில் மூழ்கி காணப்படுகின்றன. அந்த வீதிகளுக்கும் மக்களின் பங்களிப்புடன் இந்த வீதி விளக்குகள் அமைக்கப்படும். இதனால் இரவில் மக்கள் சிரமம் இன்றிப் பயணிக்க முடியும் -என்றார். (த-17)

## கொஸ்லந்த மக்களுக்கு உலர் உணவுப் பொருள்கள்

வவுனியா, நவ. 12
வவுனியா பஸ்நிலைய வர்த்தகர்கள் நலன்புரிச் சங்கத்தால் சேரிக்கப்பட்ட உலர் உணவுப் பொருள்களைக் கொஸ்லந்த மக்களிடம் கையளித்துள்ளதாக நலன்புரி சங்கத்தின் தலைவர் கு.சஜிஸ்குமார் தெரிவித்தார்.
மண் சரிவால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் நோக்கில் கடந்த 31 ஆம் திகதி வவுனியா பஸ்நிலைய வர்த்தகர்களிடம் சேகரிக்கப்பட்ட உலர் உணவுப்பொருள்கள் சங்கத்தின் செயலாளர் ஆ.சந்திரன் தலைமையிலான குழுவினரால் இடம்பெயர்ந்து புனாகலை மகா வித்தியாலயத்தில் தங்கியுள்ள 90 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டதாக கு.சஜிஸ்குமார் மேலும்தெரிவித்தார். (த-402)

# வவுனியா அரச ஊழியருக்கும் மோட்டார் சைக்கிள் கையளிப்பு



வவுனியா, நவ. 12
வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த அரச உத்தியோகத்தர்களுக்கு மோட்டார் சைக்கிள் வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் வவுனியா நகரசபை மைதானத்தில் இடம் பெற்றுள்ளது. முதல் கட்டமாக ஜனாதிபதியால் யாழ்ப்பாணத்தில் வைத்து வழங்கப்பட்டதைத் தொடர்ந்து இரண்டாம் கட்டமாக நேற்றுமுன்தினம் வவுனியாவில் வைத்து அமைச்சர் ரிசாத் பதியுதீனால் வழங்கப்பட்டுள்ளது. வவுனியா மாவட்ட அரச அதிபர் பந்துலா ஹரிச்சந்திர தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதேச சபை உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர் .
இந்த மோட்டார் சைக்கிள் வழங்கும் நிகழ்வில் ஆண் உத்தியோகத்தர்கள் எல்லோருக்கும் மோட்டார் சைக்கிள் வழங்கப்பட்டபோதும், பெண் உத்தியோகத்தர்கள் 70 பேருக்கு மாத்திரம் மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்பட்டுள்ளன. பெண்களுக்கான மோட்டார் சைக்கிள்கள் குறைவாக வந்துள்ளதாகவும் ஏனையவர்களுக்கு 4 நாள்களின் பின்னர் வழங்கப்படும் எனவும் நிகழ்வு ஒழுங்கமைப்பாளர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-421)

## அதி நவீன வசதி கொண்ட மீன் சந்தை சங்கானையில்

யாழ்ப்பாணம்.நவ.12
நெல்சிப் திட்டத்தின் கீழ் வலி.மேற்குப் பிரதேச சபையால் சங்கானைப் பகுதியில் அதி நவீன வசதிகள் கொண்ட மீன் சந்தை ஒன்று அமைக்கப்படவுள்ளது.
வலி.மேற்குப் பிரதேச சபையினால் முன்னெடுக்கப்பட்டு வரும் பிரதேச அபிவிருத்தி வேலைத் திட்டங்களில் ஒன்றாக நெல்சிப் திட்டத்தில் 27 மில்லியன் ரூபா நிதியில் சந்தைக் கட்டடத்துக்கான பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன.
திறந்த வெளியரங்கு போல் இல்லாமல் நவீன வசதிகள் கொண்டதாக இந்தக் கட்டடம் அமைக்கப்படவுள்ளது. தற்போது ஒப்பந்தகாரர்களிடம் பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ளதால் இன்னும் 8 மாத கால நிறைவில் புதிய கட்டடம் அமைக்கப்படும். இந்தத் திட்டத்துக்கு 35 மில்லியன் ரூபா நிதி தேவைப்படும் எனத் திட்டமிடப்பட்டுள்ள நிலையில் ஒப்பந்தக் கோரலில் 27 மில்லியன் ரூபாவில் இதனை அமைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (த-14)

# ஆற்றுப்படுக்கையில் தினமும் மணல் களவு

## தடுக்க நடவடிக்கை ஏதுமில்லை என பன்னங்கண்டி மக்கள் விசனம்

கிளிநொச்சி, நவ 12
கிளிநொச்சி பன்னங்கண்டிக் கிராமத்தின் எல்லையிலுள்ள கனகராயன் ஆற்றுப்படுக்கையில் சட்டவிரோத மணல் அகழ்வு தற்போதும் தொடர்வதாகவும், இதனைத் தடுத்து நிறுத்த பொறுப்பு வாய்ந்த எவருமே முன்வரவில்லை எனப் பன்னங்கண்டிக் கிராம மக்களும் கிராம அபிவிருத்திச் சங்கத்தினரும் கவலையும் விசனமும் தெரிவித்துள்ளனர்.
பன்னங்கண்டிக் கிராமத்தின் கனகராயன் ஆற்றுப்படுக்கையில் இடம்பெறும் தொடர்ச்சியான சட்டவிரோத மணல் அகழ்வைத் தடுத்து நிறுத்த வடக்கு மாகாண சபையின் உரிய பொறுப்பு வாய்ந்த அமைச்சர் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் பன்னங்கண்டிக் கிராம மக்கள் கோரியுள்ளனர்.
பன்னங்கண்டிக் கிராமத்தின் எல்லையிலுள்ள கனகராயன் ஆற்றுப்படுக்கையில் தினமும்



சட்டவிரோதமாக மணல் கள்வாக அகழ்ந்தெடுக்கப்பட்டு உழவு இயந்திரங்கள் மூலம் ஏற்றிச் செல்லப்படுவதாகவும், இதனால் மக்கள் வசிப்பிடம், வயல் நிலங்களுக்குப் பாதிப்புக்கள் ஏற்படுகின்றது எனவும், அப்பகுதியிலுள்ள பயன்தரு மரங்கள் சரிந்து விழுந்து வீணாகப் போவதாகவும், இதனால் சுற்றுச்சூழல் பெரிதும் பாதிக்கப்படுவதாகவும் மக்களாலும் கிராம அபிவிருத்திச் சங்கத்தினராலும் கவலையும் விசனமும் வெளியிடப்பட்டுள்ளது.
இவ்விடயம் தொடர்பில் பன்னங்கண்டிக் கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் சுற்றுச் சூழலுடன் தொடர்புடைய பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளுக்கு அறிவித்தபோதிலும் இதுவரை பொறுப்பான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை எனவும் கூறப்பட்டது. இவ்விடயத்துடன் தொடர்புடைய வடமாகாண அமைச்சர் உடனடியாகக் கவனம் செலுத்தி உரிய நடவடிக்கை எடுத்து உதவ வேண்டும் என பன்னங் கண்டிக் கிராம மக்கள் கோரியுள்ளனர். (த-426)

## அனுமதியின்றி அரச சாராயம் விற்றவருக்கு தண்டம்

கிளிநொச்சி, நவ. 12
அரச சாராயம் 180 மில்லி லீற்றரை பொலிஸ் உத்தியோகத்தருக்கு விற்பனை செய்த நபரொருவருக்குக் கிளிநொச்சி நீதிமன்றம் 30 ஆயிரம் ரூபா தண்டம் விதித்துள்ளது. கடந்த 5ஆம் திகதி கிளிநொச்சி நகரில் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட மேற்படி நபர் கிளிநொச்சி நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தப்பட்டபோது தனது குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து 30ஆயிரம் ரூபா தண்டத்தை நீதிவான் எம்.ஐ.வகாப்தீன் விதித்துத் தீர்ப்பளித்தார். (த-18)

# புலித்தடை நீக்கம் தவறு

## ஐரோப்பிய ஒன்றியத்துக்கு கடிதம் மூலம் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது என்கிறார் ரணில் விக்கிரமசிங்க



கொழும்பு, நவ.12
தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் மீதான தடை நீக்கப்படக் கூடாது என்று தெரிவித்துள்ள ஐக்கிய தேசியக் கட்சி, தடை நீக்கம் தொடர்பில் ஐரோப்பிய நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்புக்கு எதிராகத் தாம் ஐரோப்பிய ஒன்றியத்துக்கு விளக்கமளித்துள்ளோம் என்றும் தெரிவித்துள்ளது.
அந்தக் கட்சியின் தலைமையகமான ஸ்ரீகோத்தாவில் நேற்று நடைபெற்ற கூட்டத்திலேயே கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.
தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புக்கு எதிராக விதிக்கப்பட்டிருந்த தடை தொடர்பில் ஐரோப்பிய ஒன்றியம் வழங்கியுள்ள தீர்ப்புத் தொடர்பில் அரசு எந்த வகையான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது என்றும் அவர் அங்கு கேள்வி எழுப்பினார்.
ஐரோப்பிய ஒன்றியத்தின் தடை நீக்க உத்தரவுக்கு எதிராக் மேன்முறையீடு செய்யுமாறு ஐக்கியநாடுகள் உயர் பிரதிநிதி பெட்ரிக்கா மொஹாரினிவிடம் எழுத்துமூலம் கோரப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
புலிகளின் சொத்துக்களை கைப்பற்றும் நோக்கில் அரசு, அவர்கள் மீதான தடையை நீக்குவதற்கு சாதகமாக செயற்பட்டு வருகின்றது என்று ஐக்கிய தேசியக் கட்சி தொடர்ச்சியாக குற்றஞ்சாட்டி வருகின்றது.
அதேவேளை, தமிழீழ விடுதலைப் புலிகளின் சொத்து முடக்கம் தற்காலிக அடிப்படையில் தொடர்ச்சியாக நடைமுறையில் இருக்கும் என்று ஐரோப்பிய ஒன்றியம் கூறியுள்ளது. (ற)

# அரச இல்லத்திலிருந்து புறப்படுகிறார் சம்பிக்க?




"கோரிக்கைகளுக்கு இணங்காவிடில் பொது வேட்பாளருக்கே ஆதரவு என்று ஹெல உறுமய கட்சியின் தலைவர் கூறியிருந்தார்.

கொழும்பு, நவ.12
ஜாதிக ஹெல உறுமய கட்சியின் பொதுச் செயலாளரும் விஞ்ஞானம் மற்றும் தொழிநுட்ப அமைச்சருமான சம்பிக்க ரணவக்க இந்த வாரம் தனது உத்தியோகபூர்வ இல்லத்தில் இருந்து வெளியேறவுள்ளார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.
நிறைவேற்று அதிகாரத்தை ஒழிப்பது உட்பட ஜாதிக ஹெல உறுமய முன்வைத் துள்ள யோசனைகளுக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இணக்கம் வெளியிடவில்லை என்றால் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சி வேட்பாளருக்கு ஆதரவு வழங்க நேரிடும் என அந்த கட்சியின் தலைவர் அத்துரலியே ரத்ன தேரர் கடந்த ஞாயிற்றுக்கிழமை தெரிவித்திருந்தார். இந்த கொள்கை நிலைப்பாடு தொடர்பில் கட்சிக்குள் எந்த கருத்து முரண்பாடுகளும் இல்லை எனவும் அவர் கூறியிருந்தார்.
ஜனாதிபதி தன்னிச்சையாக சட்டவிரோத ஜனாதிபதித் தேர்தல் ஒன்றை அறிவித்தால் அதற்கு எதிராக அரசின் முக்கிய அமைச்சர்கள் சிலரும் இணைந்து கொள்வர் எனவும் அத்துரலியே ரத்ன தேரர் குறிப்பிட்டிருந்தார். இவ்வாறான சூழ்நிலையில், அமைச்சர் சம்பிக்க ரணவக்க அரசு வழங்கியுள்ள உத்தியோகபூர்வ இல்லத்தில் இருந்து வெளியேற தயாராகி வருகின்றார் என்று கூறப்படுகின்றது. (ற)

# இந்திய மீனவர் தூக்கு: மஹிந்த – மோடி பேச்சு



கொழும்பு, நவ. 12
கொழும்பு மேல் நீதிமன்றத்தால் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட இந்திய மீனவர்கள் தொடர்பில், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் தொலைபேசியில் உரையாடியுள் ளார் என்று - கொழும்பு ஆங்கில ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.
தொலைபேசி உரையாடலின் போது, இரு தலைவர்களும் இரு தரப்பிலும் முக்கியத்துவம் வாய்ந்த பல்வேறு விவகாரங்கள் குறித்தும் கலந்துரையாடியுள்ளனர். முக்கியமாக, கொழும்பு மேல் நீதிமன்றத்தால் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட ஐந்து மீனவர்கள் விவகாரம் குறித்து அதிகம் விவாதிக்கப்பட்டுள்ளது. இந்தப் பேச்சு சுமுகமான வகையில் அமைந்தது என்றும் தெரிவிக்கப்படுகிறது.
இதற்கு மேலதிகமாக சார்க் மாநாடு குறித்தும், மோடியும் - மஹிந்தவும் தொலைபேசி உரையாடலில் விவாதித்துள்ளனர்.
இதேவேளை, தமிழக மீனவர்கள் ஐவருக்கு தூக்குத் தண்டனை விதித்த விவகாரத்தால், இந்திய மத்திய அரசுக்கு கடுமையான அழுத்தம் தமிழ் நாட்டில் இருந்து பிரயோகிக்கப்பட்டுவருகின்றமைகுறிப்பிடத்தக்கது. (ற-5)



மருத்துவ தாதி சேவைக்காக ஒரே தடவையில் 5ஆயிரம் பேரை பயிற்சியில் இணைத்துக் கொள்ளும் வைபவம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நேற்று முற்பகல் கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்றது. சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன, பிரதி சுகாதார அமைச்சர் லலித் திசாநாயக்க, அமைச்சின் செயலாளர் சுதர்மா கருணாரத்ன சுகாதார பணிப்பாளர் நாயகம் டாக்டர் பாலித மஹிபால ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். இவ்வாறு பெருந்தொகையானோர் மருத்துவ தாதி சேவையில் இணைக்கப்படுவது இதுவே முதற் தடவையாகும். (ற)

# சம்பிக்க, குணசேகர நாடகமாடுகின்றனர்

## சாடுகின்றார் லக்ஷ்மன் கிரியெல்ல

கொழும்பு, நவ.12
அமைச்சர் சம்பிக்க ரணவக்க மற்றும் டியூ குணசேகர போன்றவர்கள் நாடகமாடுகின்றனர். என்று சாடியுள்ளார் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல.
அமைச்சுப் பதவி மற்றும் ஏனைய வரப்பிரசாதங்களுக்காக 17ஆம் திருத்தச் சட்டத்தை ரத்து செய்யவும் 18ஆம் திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்தவும்நாடாளுமன்றில்கைகளை உயர்த்தி ஆதரவு தெரிவித்த தரப்பினர் இன்று போலியாக நாடகமாடி வருகின்றனர் என்றும் அவர் கூறியுள்ளார்.
"17ஆம் திருத்தச் சட்டத்தை ரத்து செய்யவும் 18ஆம் திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்தவும் ஆதரவு தெரிவித்த இவர்கள் இன்று மக்கள் முன்னிலையில் பொய்யாக கோசமெழுப்புகின்றனர். எனினும் காலம் தாமதித்தேனும் அத்துரலிய ரத்தன தேரர் உண்மை நிலைமையை உணர்ந்து கொண்டுள்ளார். குடும்பவாத எதேச்சாதிகார ஆட்சியால் நாடு எதிர்நோக்கக்கூடிய பாதக விளைவுகளைபுரிந்துகொண்டமைக்காக அவருக்குநன்றி கூறுகின்றோம். ஆளும் கட்சிக்குள் இன்று பெரும் பிளவு ஏற்பட்டுள்ளது. ஜாதிக ஹெல உறுமய, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், சமசமாஜ கட்சி போன்றன ஆளும் கூட்டணியுடன் முரண்பாடுகளை ஏற்படுத்திக் கொண்டுள்ளன"- என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற)

# கட்சி தாவ தயாராகும் பொன்சேகா கட்சியினர்?

கொழும்பு, நவ.12
சரத் பொன்சேகாவின் ஜனநாயகக் கட்சி உறுப்பினர்கள் சிலர் ஆளுந்தரப்புடன் இணையவுள்ளனர் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.
அந்தக் கட்சியைச் சேர்ந்த தென், வடமேல், மேல் மாகாண சபையின் உறுப்பினர்கள் மூவரும், கட்சியின் பிக்கு சம்மேளன செயலாளரான தேரர் ஒருவருமே ஆளும் ஐக்கிய முன்னணியுடன் இணையவுள்ளனர் என்று கூறப்படுகின்றது.
இது தொடர்பில் சரத் பொன்சேகா தரப்பில் இருந்து எந்தக் கருத்துகளும் வெளியாகவில்லை. (ற)

# பின்னோக்கி செல்கின்றது ஆசியாவின் அதிசயம்!

கொ ழும்பு, நவ. 12
உலகில் செழுமையான நாடுகளின் பட்டியலில் இலங்கை கடந்த இரண்டு ஆண்டுகளாக தொடர்ச்சியாகப் பின்தள்ளப்பட்டுள்ளது. 2012 ஆம் ஆண்டு 58 ஆவது இடத்திலிருந்த இலங்கை, கடந்த ஆண்டு 60 ஆவது இடத்துக்கும் இந்த ஆண்டு 62 ஆவது இடத்துக்கும் பின்தள்ளப்பட்டுள்ளது.
லெஜிர்ரம் என்ற அமைப்பால், வருடந்தோறும் இந்தப் பட்டியல் வெளியிடப்பட்டு வருகின்றது. 2014 ஆம் ஆண்டுக்குரிய பட்டியல், நேற்று முன்தினம் வெளியிடப்பட்டது. அதில், 142 நாடுகளின் பொருளாதார நிலை மற்றும் மக்களின் வாழ்க்கைத் தரம் ஆகியவை மதிப்பீடு செய்யப்பட்டு, உலகளவில் செழுமைமிக்க நாடுகளின் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. இந்தப் பட்டியலில், இலங்கை இந்த ஆண்டு 62 ஆவது இடத்துக்குப் பின்தள்ளப்பட்டுள்ளது. 2012 ஆம் ஆண்டில், 58 ஆவது இடத்திலும், 2013 ஆம் ஆண்டில் 60 ஆவது இடத்திலும் இலங்கை இடம்பிடித்திருந்தது. இந்தப் பட்டியலில் முதல் பத்து இடங்களை, சுவிற்ஸர்லாந்து, நியூஸிலாந்து, டென்மார்க், கனடா, சுவீடன், ஆஸ்திரேலியா, பின்லாந்து, நெதர்லாந்து, அமெரிக்கா ஆகிய நாடுகள் பிடித்துள்ளன. கடைசி பத்து இடங்களை, மத்திய ஆபிரிக்க குடியரசு, சாட், கொங்கோ, புருண்டி, யேமென், ஆப்கானிஸ்தான், டோகோ, ஹெய்டி, சியராலியோன், கினியா ஆகிய நாடுகள் பிடித்துள்ளன. (ற-5)

# மண்சரிவால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வீடுகள் அமைக்கும் பணிகள் ஆரம்பம்



கொழும்பு, நவ.12
கொஸ்லந்தை மீரியபெத்த மண்சரிவில் வீடுகளை இழந்தவர்களுக்கு புதிய வீடுகளை நிர்மாணிக்கும் பணிகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.
லயன் அறைகளுக்கு பதிலாக, வசதிகள் கொண்ட தனி வீடுகள் நிர்மாணிக்கப்படவுள்ளன என்று மத்திய பாதுகாப்பு படையணியின் கட்டளை தளபதி மேஜர் ஜெனரல் மனோ பெரேரா குறிப்பிட்டுள்ளார்.
அதேவேளை மீரியபெத்த தோட்ட மக்களுக்கு வீடுகள் அமைப்பதற்கு தெரிவு செய்யப்பட்டுள்ள இடம் தேசிய கட்டட ஆய்வு நிலையத்தால் மண்சரிவு அபாயம் அற்ற பகுதி என பரிந்துரைக்கப்பட்ட பாதுகாப்பான இடம் எனவும் மத்திய பாதுகாப்பு படையணியின் கட்டளைதளபதி சுட்டிக்காட்டியுள்ளார்.
அம்பிடிகந்த தோட்டத்தின் லெவர்ன் என்ற இடத்தில், அதாவது அவர்கள் இதற்கு முன்னர் வாழ்ந்த இடத்திலிருந்து இரண்டு கிலோமீற்றர் தொலைவிலேயே இவர்களுக்கான வீடுகள் நிர்மாணிக்கப்படுகின்றன.
இந்த இடம் தேசிய கட்டட ஆய்வுநிலையத்தினால் மண்சரிவு அபாயம் நீக்கப்பட்ட பிரதேசம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

# சாதனை படைக்கும்



சூப்பர் ஸ்ரார் ரஜினிகாந் நடித்த 'லிங்கா' படத்தை, கே.எஸ்.ரவிக்குமார் இயக்கியுள்ளார். இந்தப் படம் தமிழ் சினிமா வரலாற்றில் விற்பனையில் சாதனை படைத்து வருகின்றது.

படத்தின் தியேட்டர் உரிமையை இந்திய மதிப்பில் 125 கோடிக்கு ஈரோஸ் நிறுவனம் வாங்கி யுள்ளது. அதே போன்று வெளி நாடுகளில் திரையிடும் உரிமை இந்திய மதிப்பில் 20 கோடிக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

இதுதான் தமிழ் சினிமாவில் அதிஉயர் விற்பனை என்று தெரிவிக்கப்படுகின்றது. தமிழ், ஹிந்தி, தெலுங்கு என்று மூன்று மொழிகளில் 'லிங்கா' படம் உருவாக்கப்பட்டுள்ளது.

தமிழ் மற்றும் தெலுங்கு திரைப்படப் பாடல் வெளியீட்டு விழா எதிர்வரும் 16 ஆம் திகதி நடக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. ஆனால் ஹிந்திப் பாடல் வெளியீடு எப்போது என்பது உறுதியாகவில்லை.

ஆனாலும் ரஜினியின் பிறந்தநாளான டிசெம்பர் 12 ஆம் திகதி 'லிங்கா' திரைக்கு வரும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இங்கிலாந்து நாடாளுமன்றத்தில் காந்தி



தென்னாபிரிக்காவில் இருந்து காந்தி நாடு திரும்பியதன் 150 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இங்கிலாந்து நாடாளுமன்ற வளாகத்தில், 10 கோடி ரூபா செலவில் காந்தி சிலை அமைக் கப்படுகின்றது.

இந்தச் சிலையின் வடிவம் பொது மக்கள் பார்வைக்காக கடந்த ஞாயிற்றுக்கிழமை திறக்கப்பட்டதுடன் தற்போது களிமண்ணால் உருவாக்கப்பட்டுள்ள இந்த சிலை வெண் கலத்தில் வார்க்கப்படுகிறது.

இந்தச் சிலை இந்திய மதிப்பில் 10 கோடி செலவில் வடிவமைக்கப்படுவதுடன் இதற்கான ஏற்பாடுகளை லண்டன் வாழ் இந்தியர்கள் மேற்கொண்டுள்ளனர்.

வழமையான தடி ஊன்றிய காந்தி சிலை போல் அல்லாமல், 1931 ஆம் ஆண்டு காந்தி லண்டனுக்கு வந்த போது, பிரத மர் அலுவலகம் முன்பு எடுக்கப்பட்ட நிழல்படத்தில் இடம்பெற் றுள்ள அவரது முழு உருவத்தோற்றம் கொண்டதாக இந்த சிலை வடிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ரிலாக்ஸா வாசியுங்க



பாடசாலை ஆசிரியர் ஒருவர் மாணவர்களிடையே எதிர்காலத்தில் நீங்கள் என்னவாக வரப் போகிறீர்கள் என்று கேள்வி கேட்டார்.

ஒரு மாணவன் தான் மருத்துவராக வேண்டும் என்றான், இன்னொரு மாணவர் சட்டத்தரணியாக வேண்டும் என்றான். இப்படி ஒவ்வொரு மாணவரும் தன்னுடைய ஆசைகளைக் சொல்லி வந்தனர்.

ஒரு மாணவன் மட்டும் நான் ஒரு குதிரை வண்டிக்காரனாக வேண்டும் என்றான். இதனைக் கேட்ட ஆசிரியருக்கோ அதிர்ச்சி. என்ன உளறுகிறாய் என்று கேட்டுப் பேசினார். பாடசாலை முடிந்ததும் அந்த மாணவனின் தாயார் அவனை அழைத்துச் செல்ல வந்தார். ஆசிரியர் நடந்த வற்றை மாணவனின் தாயாரிடம் கூறினார். அவன் தாயாரோ அதைக்கேட்டுவிட்டு அமைதியாக இருந்தார்.

வீட்டுக்கு செல்லும் வழியில் அந்த மகனிடம் எதனால் நீ குதிரை வண்டிக்காரனாக வேண்டும் என்று சொன்னாய் எனக் கேட்டார். அந்த மகனோ குதிரைவண்டி செலுத்தும்போது நல்லா வேகமாக வண்டி போகும். வண்டி போகும் போது தடியை சக்கரத்தில் விட்டால் நல்ல சத்தம் வரும் என்றான். தாய் அதை கேட்டுவிட்டு அமைதியாக இருந்தார்.

பிறகு மகனுக்கு உணவு கொடுத்துவிட்டு மறுபடியும் கேட்டார். நீ குதிரை வண்டிக்காரனாகத் தான் ஆகப்போகிறாயா? மகன் 'ஆம்' என்று பதில் சொன்னான்.

தாய் நேராக சுவாமி அறைக்கு அழைத்து சென்று அங்கு மகாபாரதத்தில் கிருஷ்ணன் தேரோட்டியாக இருந்த காட்சியைக் காட்டி, மகனே கிருஷ்ணன் குதிரை வண்டிக்காரராக மாறியதால் ஒரு போரே முடிவுக்கு வந்தது. ஆகவே இவரைப் போல ஒரு குதிரை வண்டிக்காரனாக நீ வர வேண்டும், என்றார். அதற்கு அந்த மகனும் சரி, என்று சொல்லி தாயிடம் ஆசிர்வாதம் வாங்கிக் கொண்டான். அந்தக் குதிரை வண்டிக்காரனாக ஆசைப்பட்ட சிறுவன் வேறு யாரும் அல்ல.

அவர் தான் பின்னாளில் சுவாமி விவேகானந்தர் என்று அழைக்கப்பட்ட நரேந்திரர்.

# வீதியில் இறங்கிய விமானம்



ஆஸ்திரேலியாவில் ஒருவர் மதுபானக் கடையில், பியர் குடிக்கக் குட்டி விமானத்தில் சென்று அதை வீதியில் நிறுத்தியது தொடர்பில் பொலிஸார் விசாரணை நடத்தி வருகிறார்கள். ஆஸ்திரேலியாவின் நியூமேன் பகுதியில் இருக்கும் சுரங்க நகரமான பில் பாராவில் உள்ள பொது மதுபானக் கடைக்கு ஒருவர் பியர் குடிக்க வந்தார். அவர் இறக்கையில்லா குட்டி விமானத்தில் வந்து அதை வெளியே நிறுத்திவிட்டு உள்ளே சென்றார். ஒரு போத்தல் பியர் குடிக்க விமானத்தில் வந்தது பற்றிய செய்தி அந்த நகரில் தீயாகப் பரவியது. இது குறித்து பொலிஸ் அதிகாரி மார்க் மெக்கென்சி கூறுகையில், இது முட்டாள்தனமான காரியம். குழந்தைகள் பள்ளியில் இருந்து வீட்டுக்கு சென்று கொண்டிருந்தனர். விமானத்தில் இறக்கை ஏன் இல்லை என தெரியவில்லை. இறக்கை இல்லாததால் காற்று பலமாக வீசினால் விமானம் சாயக் கூடும். மக்களுக்கு அது வியப்பாக உள்ளது. ஆனால் உண் மையில் இது அபாயகர மானது, என்றார். விமானத் தில் வந்த நபர் குடிபோதை யில் இருந்தாரா என்று பொலிஸார் சோதனை நடத் தினர்.

ஆனால் அவர் குடிபோதை யில் இல்லை என்பது தெரிய வந்தது. அந்த விமானத்தில் விபத்து எதுவும் ஏற்பட வில்லை என்றாலும் அது குறித்து பொலிஸார் விசா ரணை நடத்தி வருகின்றனர்.



## இன்றைய பேஸ்புக் தத்துவம்

பலமுறை வென்றவன்
ஒருமுறை தோற்றால்

பலமுறை தோற்றவன்
ஒருமுறை வென்றால்



## மன்னார் நகர சபை
# 2015ஆம் ஆண்டிற்கான சேவைக்குரிய கேள்வி அறிவித்தல்

மன்னார் நகரசபையின் அதிகாரப் பரப்பெல்லைக்குள் வழங்கப்படவிருக்கும் கீழ்க்குறிப்பிடப்படும் சேவைகளுக்கு மன்னார் நகரசபையால் கேள்வி கோரப்படுகின்றன. கேள்விப் பத்திரங்களை 12.11.2014ஆம் திகதி தொடக்கம் 25.11.2014ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிவரை அட்டவணையில் காட்டப்பட்டுள்ள உரிய கட்டணங்களை மன்னார் நகரசபையில் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். 27.11.2014 அன்று நண்பகல் 12.00 மணிவரை கேள்விப்பத்திரங்கள் சபையால் ஏற்றுக் கொள்ளப்படும்.

| இல | சேவைகளின் விவரம் | மீளளிக்கக் கூடிய கேள்வி வைப்பு | மீளளிக்கப்படாத பத்திரக் கட்டணம் | சபையின் குறைந்த கேள்வித் தொகை |
|---|---|---|---|---|
| 01 | பட்டின மாட்டிறைச்சிக்கடை | 20,000/= | 2,000/= | 1,320,000/= |
| 02 | பட்டின ஆட்டிறைச்சிக்கடை | 10,000/= | 2,000/= | 300,000/= |
| 03 | பள்ளிமுனை மாட்டிறைச்சிக்கடை | 10,000/= | 2,000/= | 285,000/= |
| 04 | மூர்வீதி மாட்டிறைச்சிக்கடை | 10,000/= | 2,000/= | 350,000/= |
| 05 | பெரியகமம் மாட்டிறைச்சிக்கடை | 10,000/= | 2,000/= | 285,000/= |
| 06 | சாந்திபுரம் மாட்டிறைச்சிக்கடை | 10,000/= | 2,000/= | 150,000/= |
| 07 | பட்டின மீன் சந்தை | 10,000/= | 2,000/= | 600,000/= |

கேள்விப் பத்திரங்கள் இணைப் பிரதிகளில் **தலைவர், மன்னார் நகர சபை** என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் 27.11.2014 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன் கிடைக்க கூடியவாறு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அல்லது சபையில் வைக்கப்பட்ட கேள்விப் பெட்டியில் இடல் வேண்டும். கேள்விப் படிவங்கள் அடங்கிய கடித உறையின் இடது மேல் மூலையில் கேள்வி கோரும் சேவையின் பெயர் குறிப்பிடல் வேண்டும்.

- ✓ 27.11.2014ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்குப் பின்னர் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும்.
- ✓ கேள்விகள் 27.11.2014ஆம் திகதி பி.ப.3.00 மணிக்குத் திறக்கப்படும்.
- ✓ கேள்விகளை ஏற்கும் அல்லது நிராகரிக்கப்படும் உரிமை கேள்விச் சபைக்குரியதாகும்.
- ✓ மன்னார் நகரசபையில் குத்தகை நிலுவைகளைக் கொண்டிருப்போர் மற்றும் கறுப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்டோர் கேள்வி கோர அனுமதிக்கப்படமாட்டார்கள்.
- ✓ கேள்வி கோரப்படும் சேவைகளுக்கான குத்தகைக்காலம் 01.01.2015 தொடக்கம் 31.12.2015 வரையாகும்.
- ✓ கேள்வி கோருபவர்கள் சபை நிர்வாக எல்லைக்குள் குறைந்தது 03 வருடங்கள் தொடராக வசிப்பவராக இருப்பதுடன் தேவைப்படின் தனது வதிவிட விபரத்தை கிராம சேவகர் மூலமாக உறுதிப்படுத்தி வழங்க வேண்டும்.
- ✓ சித்தி பெறும் கேள்விதாரர் குத்தகைப்பணத்தின் 1/3 பகுதியை முற்பணமாக வைப்பிட்டு ஒப்பந்தம் செய்து கொள்ளுதல் வேண்டும்.
- ✓ வெளியிடங்களிலிருந்து சட்ட ஏற்பாடுகளுக்கமைய மாடு கொண்டு வருவது குத்தகையாளரது பொறுப்பேயாகும். இதற்கு சபை எவ்விதத்திலும் பொறுப்பேற்காது.
- ✓ இறைச்சிகள் தனி இறைச்சி 1Kg 400.00, முள்ளுடன் இறைச்சி 1Kg 380.00. ஈரல் 1Kg 600.00 என்ற விலைகளிலேயே விற்கப்படல் வேண்டும்.
- ✓ சபைக்குரிய கடைகளிற்கு குத்தகைக்கு மேலதிகமாக மாதாந்த வாடகை கட்டணம் அறவிடப்படும்.
- ✓ சகல குத்தகைதாரர்களும் குத்தகையின் பேரில் வியாபார உரிமம் பெறுதல் கட்டாயமாகும்.

இக்கேள்விகள் சம்மந்தமாக மேலதிக விபரங்கள் தேவையாயின் மன்னார் நகரசபை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

திகதி : 12.11.2014

தலைவர்
மன்னார் நகரசபை

## மன்னார் நகரசபை
# 2015ஆம் ஆண்டிற்கான கேள்வி அறிவித்தல்

மன்னார் நகரசபையின் அதிகாரப் பரப்பெல்லைக்குள் வழங்கப்படவிருக்கும் கீழ்க்குறிப்பிடப்படும் சேவைக்கு மன்னார் நகரசபையால் மீள்கேள்வி கோரப்படுகின்றன. கேள்விப் பத்திரங்களை 12.11.2014ஆம் திகதி தொடக்கம் 25.11.2014ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிவரை அட்டவணையில் காட்டப்பட்டுள்ள உரிய கட்டணங்களை மன்னார் நகரசபையில் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். 27.11.2014ஆம் திகதியன்று நண்பகல் 12.00 மணி வரை கேள்விப்பத்திரங்கள் சபையால் ஏற்றுக் கொள்ளப்படும்.

| இல | சேவைகளின் விவரம் | மீளளிக்கக் கூடிய கேள்வி வைப்பு | மீளளிக்கப்படாத பத்திரக் கட்டணம் | சபையின் குறைந்த கேள்வித் தொகை |
|---|---|---|---|---|
| 01 | தனியார் பேருந்து நிலையத்தினுள் அமைந்துள்ள குளியலறையுடன் சேர்ந்த பொது கழிப்பறையும் அரச பேருந்து நிலைய கழிப்பறையும் | ரூ.10,000.00 | ரூ. 2,000.00 | ரூ 300,000.00 |
| 02 | தனியார் வாகன தரிப்பிட கட்டண அறவீடு | ரூ.10,000.00 | ரூ. 2,000.00 | ரூ 400,000.00 |

கேள்விப் பத்திரங்கள் இணைப்பிரதிகளில் தலைவர். மன்னார் நகரசபை என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் 27.11.2014ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன் கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அல்லது சபையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் இடப்படல் வேண்டும். கேள்விப்படிவங்கள் அடங்கிய கடித உறையின் இடது மேல் மூலையில் கேள்விகோரும் சேவையின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும்.

- ✓ 27.11.2014ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்குப் பின்னர் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும்.
- ✓ கேள்விக்ள் 27.11.2014ஆம் திகதி பி.ப.3.00 மணிக்குத் திறக்கப்படும்.
- ✓ கேள்விகளை ஏற்கும் அல்லது நிராகரிக்கப்படும் உரிமை கேள்விச் சபைக்குரியதாகும்.
- ✓ மன்னார் நகரசபையில் குத்தகை நிலுவைகளைக் கொண்டிருப்போர் மற்றும் கறுப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்டோர் கேள்வி கோர அனுமதிக்கப்படமாட்டார்கள்.
- ✓ கேள்விகோரப்படும் சேவைகளுக்கான குத்தகைக்காலம் 01.01.2015 தொடக்கம் 31.12.2015 வரையாகும்.
- ✓ கேள்வி கோருபவர்கள் சபை நிர்வாக எல்லைக்குள் குறைந்தது 03 வருடங்கள் தொடராக வசிப்பவராக இருப்பதுடன் தேவைப்படின் தனது வதிவிட விபரத்தை கிராம சேவகர் மூலமாக உறுதிப்படுத்தி வழங்க வேண்டும்.
- ✓ கேள்வியில் சித்தியடையும் விண்ணப்பதாரர் சபையால் குறிப்பிடப்படும் அவகாசத்திற்குள் தனது கேள்வித் தொகையின் 1/3 பகுதியை செலுத்தி ஒப்பந்தம் செய்து கொள்ளுதல் வேண்டும்.
- ✓ குளிப்பதற்கு 50/=வும், மலகூடப் பாவனைக்கு ரூ.10/= வும், சிறுநீர் கழிப்பதற்கு 10/=வும் என்ற கட்டணங்களே அறவிடப்படல் வேண்டும்.
- ✓ வாகன தரிப்பிட அறவீடுகள் என்பது தனியார் பேருந்துகள், தனியார் வாடகை வாகனங்கள், முச்சக்கர வண்டிகள், இரு சில்லு உழவு இயந்திரங்கள் மற்றும் நகரத்தின் உள்நுழையும் தனியார் வாகனங்கள் ஆகியவற்றுக்கான தரிப்பிட கட்டணம் அறவீடுகளுக்கானதாகும்.
- ✓ தனியார் பேருந்து ஒன்றிற்கு ரூ 40/=வும், தனியார் வாடகை வாகனம் ஒன்றிற்கு ரூ 30/=வும் முச்சக்கர வண்டி ஒன்றிற்கு ரூ 20/= இரு சில்லு உழவு இயந்திரம் ஒன்றிற்கு ரூ 20/=ஏனைய உள்நுழையும் தனியார் வாகனங்களுக்கு ரூ 50/= என்ற அடிப்படையிலே கட்டணங்கள் அறவிடப்பட வேண்டும்

இக்கேள்விகள் சம்மந்தமாக மேலதிக விபரங்கள் தேவையாயின் மன்னார் நகரசபை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

திகதி : 12.11.2014

எஸ்.ஞானப்பிரகாசம்
தலைவர்
மன்னார் நகரசபை.

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## விற்பனைப் பிரதிநிதிகள், அலுவலக உதவியாளர்கள் தேவை

பிரபல பல்தேசிய தனியார் வலை தொடர்பாடல் நிறுவனத்துக்கு யாழ்ப்பாணத்தில் கடமையாற்றுவதற்கு விற்பனைப் பிரதிநிதிகள் தேவை. இவர்களுக்கு தினமும் 1000/= அலவன்ஸ் உடன் மேலதிகமாக கமிசனும் வழங்கப்படும். மற்றும் அலுவலகத்திற்கு பெண் ஊழியர்கள் தேவை. இதற்கு கணினி அறிவுள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு: 078 505 4068

(54001) (12.3.6)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

Best Wishes



10.11.2014 அன்று யாழ். பல்கலைக் கழகத்தின் 30ஆவது பொது பட்டமளிப்பு விழாவில் **விவசாய இளமாணி சிறப்புப்** B.Sc (Hons) பட்டத்தைப் பெற்ற

### செல்வன் ஞானச்செல்வன் கிரிதரன்
B.Sc (Hons)

அவர்களை கலைகள் பல கற்று பட்டங்கள் பல பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

**வாழ்த்துபவர்கள்:**
**புவநாதன்-ஜெயலஷ்மி**
**(அத்தான்-அக்கா)**

(52193)(10.6)

## டோஹாவில் "A" தரக் கம்பனியில் உடனடி வேலை வாய்ப்பு

Dealers of Automotive & Heavy Equipment of Brand "TOYOTA" and "LEXUS" and also Services, Parts etc.,

| தொழில் | எண் | சம்பளம் |
|---|---|---|
| ஓட்டோ தொழில்நுட்பவியலாளர் AUTO TECHNICIAN | 19 | 2000 QR (72,000.00) |

ஓட்டோ மொபைல் எந்திரவியல் அல்லது டிப்ளோமா தகைமையுடன் டீசல் இயந்திரத்தில் வேலை செய்யக்கூடியதாக இருக்க வேண்டும். பகுதிகளை அறியக் கூடியதாகவும் நீரியல், மின்னியியல் முறைகளில் அனுபவமுள்ளவராகவும் கருவிகள் உபகரணங்களில் பழுதுகளை அறியக் கூடியவராகவும், வளைகுடா பகுதியில் அனுபவமுள்ளவராகவும் இருப்பது மேலதிக நன்மையபக்கும்.

| தொழில் | எண் | சம்பளம் |
|---|---|---|
| (AUTO DENTER) ஓட்டோ டிங்கர் வேலை செய்பவர் | 10 | 2000 QR (72,000.00) |
| ஓட்டோ பெயின்ரர் (பெயின்ற் வேலை செய்பவர்) | 10 | 2000 QR (72,000.00) |
| இலகுரக வாகன சாரதி (செல்லுபடியாகும் சாரதி அனுமதி பத்திரம் அவசியம்) | 50 | 1600 QR (57,000.00) 1 QR = Rs. 35.88 |


இறுதி நேர்முகத்தேர்வு இம்மாதம் 16,17,18ஆம் திகதிகளில் வெளிநாட்டு அதிபர்களால் குருநாகலில் உள்ள புரடென்ஷல் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அலுவலகத்தில் நடைபெறும்.

**நிபந்தனைகள்**
- ★ இரண்டு வருடகால ஒப்பந்தத்தை கொண்டது
- ★ இலவச வைத்தியம் மற்றும் தங்குமிட வசதி
- ★ வாரத்தில் 8 மணித்தியாலப் படி 6 நாள்கள் வேலை
- ★ இரண்டு வருடங்களைப் பூர்த்தி செய்பவர்களுக்கு டோஹா-கொழும்பு இலவச விமான டிக்கட்
- ★ மற்றையவை எல்லாம் டோஹா கட்டார் நாட்டின் தொழிலாளர் சட்டத்திற்கு அமையும்

(இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தால் அனுமதிக்கப்பட்ட கட்டணம் மட்டுமே அறவிடப்படும்)

**உங்கள் CV'யை - prudential@sltnet.lk**
**(Subject எனும் பகுதியில் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிடவும்)**
**Visit our website - www.prudentialagency.lk**
**Prudential Forign Employment Agency (Pvt)Ltd,**
**No 108, Colombo Road, Kurunegala.**
**Tel: 077 9200500, 077 45 74 555 / 037 494 5555.**
**(Add app no: AL/2769/Advt38/14)**

## கண்ணீர் அஞ்சலி



முன்னாள் மாவட்ட நீதிபதியும் பிரபல சமூக சேவையாளரும் சட்டத்தரணியுமான

### மு. திருநாவுக்கரசு

அவர்கள் நேற்றுவரை சிரித்த முகத்துடன் அகடவிகடம் கூறி அனைவரையும் சிரிக்க வைத்து மை போட்டுப் பேசி எமது எதிர் காலத்தைக் கூறிய நீங்கள் திடீரென காலன் கையில் அடைக்கலம் கொண்டீர்களே.

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத்தெரிவிக்கும்.

**மாவட்ட/ நீதிவான் நீதிமன்றம்**
**ஆரம்ப நீதிமன்றம்,**
**ஊர்காவற்றுறை.**

**மாவட்ட நீதிபதி,**
**பதிவாளர், அலுவலர்கள்,**
**ஊழியர்கள்.**

(சி.17624) (45.3.6)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## மஹிந்தவின் வெற்றியை தடுக்க எதிரணியிடம் வியூகம் இல்லை

தற்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மூன்றாவது தடவையாகவும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதில் எந்தத் தடையும் இல்லை என்று உயர் நீதிமன்றம் தெரிவித்து விட்டது. எனவே, எதிர்வரும் ஜனவரி மாதத்தில் ஜனாதிபதித் தேர்தல் நடப்பது அநேகமாக உறுதியாகிவிட்டது. அதற்கான ஆயத்தங்களில் ஈடுபடும்படியான உத்தரவும் அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டுவிட்டது.

உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பும் ஜனவரியில் தேர்தல் நடக்கும் என்பதும் எதிர்பார்க்கப்பட்ட ஒன்றுதான். ஒருவேளை மூன்றாவது தடவை யாக மஹிந்த போட்டியிட முடியாது என்று உயர் நீதிமன்றம் கூறியிருந்தால், அது நிச்சயம் வியப்புக்குரியதாக இருந்திருக்கும். ஆனால் அதற்கு வாய்ப்புகள் மிக மிக அரிது என்பது எல்லோருக்குமே தெரியும்.

நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை வைத்திருக்கும் இந்த அரசும் நிறைவேற்று அதிகாரங்கள் அனைத்தையும் தன் வசம் வைத்திருக்கும் மஹிந்தவும் தாம் நினைத்த அனைத்தையும் நடத்தி முடிக்க முடியும் என்பது மீண்டும் ஒரு தடவை இதன் மூலம் தெளிவாகியிருக்கிறது.

6 வருடங்களைக் கொண்ட ஜனாதிபதிப் பதவியை மஹிந்த ராஜபக்ஷ கடந்த இரு தடவைகளிலும் முழுமையாகப் பூர்த்தி செய்யவில்லை. பொதுமக்களின் ஆதரவை இழந்துவிடுவோம் என்கிற அச்சம் எழுந்தபோதெல்லாம் சுமார் இரு வருடங்கள் முன்னதாகவே தேர்தலை நடத்தினார் மஹிந்த. இப்போதும் நிலைமை அப்படியானதே. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினதும் மஹிந்த ராஜபக்ஷவினதும் செல்வாக்குச் சரிந்து வருகிறது என்று எதிர்வுகூறப்படுகின்றது. எனவேதான் ஜனாதிபதித் தேர்தலை நடத்தி சரிந்துவரும் செல்வாக்கைத் தூக்கி நிறுத்திவிட மஹிந்த முயல்கிறார். எஞ்சியிருக்கும் இரண்டு வருட ஆட்சிக் காலத்திற்கு ஆசைப்பட்டு பதவியை இழப்பதைவிட முன்கூட்டியே தேர்தலை நடத்தி மற்றொரு 6 வருட பதவிக் காலத் தைப் பெற்றுவிடுவதற்கு மீண்டும் ஒரு தடவை அவர் முயன்றிருக்கிறார். அதில் அவர் வெற்றியும் பெற்றுவிடுவார் போலவே தோன்றுகின்றது.

மஹிந்தவை எதிர்த்துப் போட்டியிடுவதற்கு எதிரணி வரிசையில் பலம்மிக்க போட்டியாளர் ஒருவரை இதுவரை கண்டுபிடிக்க முடியாமல் உள்ள நிலைமையை நோக்கினால், மஹிந்தவின் வெற்றியைக் கேள்விக்குட்படுத்தும் திறன் எதிர்க்கட்சிகள் வரிசையில் இல்லை என்றே தோன்றுகின்றது.

1994இல் சந்திரிகா குமாரதுங்க திடீரென அரசியலில் நுழைந்து அசுர வேகத்தில் முன்னேறி ஜனாதிபதிக் கதிரையைப் பிடித்தது போன்று, எதிர்க்கட்சிகள் சார்பில் புதிய முகம் ஒன்று களமிறக்கப்பட்டு, அந்த முகம் மக்களுக்கும் பிடித்துப்போனால் மட்டுமே மஹிந்தவின் வெற்றிக்கு எதிர்க்கட்சிகளால் சவால் விடுக்க முடியும்.

இப்போதைக்கு எதிர்க்கட்சிகள் வரிசையில் உள்ள முகங்களில் சோபித தேரர் தவிர மற்றையவர்களும் தமிழர்களுக்கு எதிராக, மஹிந்த அளவுக்கு இல்லாவிட்டாலும் கொடூரமான போரை நடத்தியவர்களே. பொருத்தமான போட்டியாளர் ஒருவரை தெரிவதற்கான வாய்ப்புகள் பெருமளவில் இருப்பதாகத் தெரியவில்லை. எதிரணியின் இந்தக் குழப்ப நிலை மஹிந்தவின் வெற்றியை உறுதிப்படுத்துவதாகவே இருக்கும். அந்த முறியடிக்க எதிர்க்கட்சிகளிடம் வியூகங்கள் இருப்பதாகவும் தெரியவில்லை. அது மட்டுமல்ல நான்காவது தடவையாக மஹிந்த போட்டியிடுவதைத் தடுக்கவும் எதிர்க்கட்சிகளால் முடியும்போல் தோன்றவில்லை.

# சமரவீரவை தம்பக்கம் இழுத்து ஐ.தே.கவை பலவீனமாக்க முயற்சி

## ஜனாதிபதித் தேர்தலை ஒட்டி கட்சிகளின் தீவிர செயற்பாடு

சண்டே ரைம்ஸ் கட்டுரையிலிருந்து
கோகுலன்

ஜனாதிபதி தேர்தலுக்கான திகதி இப்பொழுது ஜனவரி 8 ஆம் திகதிக்குப் பதிலாக ஜனவரி 2 ஆம் திகதிக்கு முன்னகர்த்தப்பட்டிருக்கின்றது. பாப்பரசர் பிரான்சிஸின் மூன்று நாள் பிரயாணமாக இலங்கை வருவதற்கான ஏற்பாடுகளுக்கு வசதியாக இவ்வாறு செய்யப்பட்டுள்ளது. ஜனவரி 13 ஆம் திகதி பாப்பரசர் இலங்கை வருவதாகத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்தப் புதிய திகதி வத்திக்கானுக்கு திருப்தியளிப்பதாக இருக்குமென்று இலங்கை அரசு கருதுகிறது.

ஐ.தே.கட்சியின் உபதலைவராக இப்போது இருந்து வருபவரும் முன்னர் ராஜபக்ஷ அரசில் வெளியுறவு அமைச்சராக இருந்தவருமான மங்கள சமரவீர தொடர்ந்து ஐ.தே.கட்சியில் இருப்பதா அல்லது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசுத் தலைவரின் அழைப்பை ஏற்று மீண்டும் அங்கு செல்வதா என்பதை விரைவில் முடிவு செய்யவிருப்பதாகத் தெரிகின்றது. தனிப்பட்ட காரணங்களுக்காக அவர் இப்போது சிங்கப்பூர் சென்றுள்ளார். இருதரப்பு தலைவர்களுடனும் அவர் ஏற்கனவே ஆலோசனைகள் நடத்தியிருக்கிறார். ஐ.தே.கவை விட்டுத் தாம் விலகுவது பற்றி யோசிக்க வேண்டி ஏற்பட்டதன் பின்னணிகளை அவர் ஐ.தே.கவின் முக்கிய தலைவர்களிடம் எடுத்து விளக்கியிருக்கிறார். எந்தக் காரணம் கொண்டும் அவர் ஐக்கிய தேசியக்கட்சியிலிருந்து விலகிச் செல்வதை முக்கிய தலைவர்கள் எவரும் விரும்பவில்லை என்று தெரிகின்றது. அரசுத் தரப்புக்கு அவர் மீண்டும் வரும் பட்சத்தில் வெளியுறவு அமைச்சர் மற்றும் அரசமைப்பு சீர்திருத்த அமைச்சர் பதவி வழங்கப்படுவதோடு அமைச்சு விவகாரங் களை சுயாதீனமாகக் கையாளும் உரிமையும் வழங்கப்படும் என்று உறுதியளிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகின்றது. அதுமட்டுமன்றி கட்சியின் உபதலைவர்களில் ஒருவராக அவரை அறிவிப்பது மட்டுமன்றி கட்சியின் சிரேஷ்ட அங்கத்தவருக்குரிய அந்தஸ்தும் நிலை நிறுத்தப்படும் என்ற வாக்குறுதி அளிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகின்றது. அரசில் சில ஜனநாயக சீர்திருத்தங்கள் செய்யப் படவேண்டும் என்பது பற்றியும் சமர வீர கருத்துப் பரிமாறியிருக்கிறார். இது குறித்து அறிந்த சில சிரேஷ்ட அமைச்சர்கள் அதனை ஆதரிக்கவில்லை என்று கூறப்படுகின்றது. கொள்கை மாற்றம் பற்றி எமக்கு அவர் சொல்லிக் கொடுக்க முனைகிறார். அவர் வரலாம், ஆனால் ஏனைய விடயங்களை ஜனாதிபதி பார்த்துக்கொள்வார் என்று அமைச்சர் ஒருவர் கூறியிருக்கிறார். ஆனால் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி உயர்மட்டத் தலைவர்கள் எப்படியும் சமரவீரவை தங்கள் தரப்புக்கு இழுத்துக் கொள்ள பெரு முயற்சியில் ஈடுபட்டிருப்பதாகத் தெரிகிறது. சமரவீரவால் கடுமையாக விமர்சிக்கப்பட்டவரான பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவும் கூட அவர் அரசுபக்கம் வருவதை ஆமோதித்திருக்கிறார் என்று கூறப்படுகின்றது.

**குமாரதுங்க போட்டியிடுவதில் சட்டப் பிரச்சினையொன்று தலைதூக்கக் கூடும் என்று ஐ.தே.க. சட்டநிபுணர்கள் சிலர் கருதுகின்றார்கள். அவர் பதவியில் இருந்த காலத்தில் வோட்டர்ஸ் எஜ் வழக்கில் அவர் குற்றவாளியாகக் காணப்பட்டு 30 இலட்சம் ரூபா தண்டப் பணம் செலுத்தும்படி உயர்நீதிமன்றத்தினால் தீர்ப்பு வழங்கப் பட்டிருந்ததை அவர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள்.**

கடந்த செவ்வாயன்று நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் காரியாலயத்தில் ரணில் விக்கிரமசிங்கவை ஜே.வி.பி. தலைவர் அனுரகுமார திஸநாயக்க சந்தித்தபோது ஜனாதிபதித் தேர்தலில் அவர் போட்டியிடுவாரானால் தமது கட்சியும் ஒருவரைத் போட்டியில் களமிறக்கும் என்று தெரிவித்துள்ளார். அதேசமயம் தங்களால் ஏற்றுக்கொள்ளப்படக் கூடிய பொதுவேட்பாளர் ஒருவர் நிறுத்தப்படுவதானால் அவரை ஆதரிப்பது பற்றி ஜே.வி.பி. ஆலோசிக்கும் என்றும் அவர் கூறியுள்ளார்.

கொள்ளுப்பிட்டியிலுள்ள ஹோட்டல் ஒன்றில் இடம்பெற்ற மதிய போசன நிகழ்வொன்றில் கலந்து கொண்டதன் பின்னர் ஐ.தே.க. பிரமுகர்களான முன்னாள் தலைவர் சமரவிக்கிரம, ஹஸிம் ஆகியவர்கள் விக்கிரமசிங்கவைச் சந்திக்கச் சென்றார்கள். நீண்ட கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது. சமரவீர கிளப்பிய பிரச்சினைகளின் அடிப் படையில் ஒரு பொது நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக இணக்கப்பாடு ஒன்று ஏற்பட்டது. பொது வேலைத்திட்டம், பொது அரசியல் மேடை மற்றும் பொது வேட்பாளர் என்று முடிவாயிற்று. அவ்வாறு ஒருவர் தெரிவு செய்யப்படுவாரானால் அவர் குறிக்கப்பட்ட அரசமைப்பு தொடர்பான பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க வேண்டும். விக்கிரமசிங்க இந்தக் கூட்டத்தில் கருத்து வெளியிடுகையில், கரு ஜயசூரிய பொதுவேட்பாளராகத் தெரிவு செய்யப்பட்டால் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாச கோபமுறுவார். அதனால் அவரை ஆதரிக்க முடியாமல் இருக்கிறது என்றார். ரணில் விக்கிரமசிங்க போட்டியிடாவிட்டால் தாமே போட்டியில் நிற்கவேண்டும் என்று பிரேமதாச அறிவித்திருப்பதையொட்டியே இந்தக் கருத்து முன்வைக்கப்பட்டது. ஆனால் ஐ.தே.கவுக்கு வெளியில் இருந்து சந்திரிகா குமாரதுங்க போன்றஒருவர் தெரிவானால் சஜித்பிரேமதாசஎதிர்க்காமல் இருக்கக்கூடும் என்றும் ரணில் அபிப்பிராயப்பட்டார்.

இப்பொழுது குமாரதுங்கவை இணங்கவைக்கும் பொறுப்பு சமரவிக்கிரமவிடம் விடப்பட்டுள்ளது. சமரவிக்கிரமவின் கோரிக்கைக்குப் பதில் அளிக்கக் குமாரதுங்க மூன்று நாள் அவகாசம் கேட்டிருப்பதாக ஐ.தே.க. வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. குமாரதுங்க தேர்தலில் போட்டியிடுவதில்லை என்ற முடிவில் தீவிரமாக இருப்பதாகவும் அந்த வகையில் பிரிட்டனில் வசிக்கும் அவரது பிள்ளைகள் நெருக்குதல் கொடுப்பதாகவும் கூறப்படுகின்றது. அத்துடன் குமாரதுங்க போட்டியிடுவதில் சட்டப் பிரச்சினையொன்று தலைதூக்கக் கூடும் என்று ஐ.தே.க. சட்டநிபுணர்கள் சிலர் கருதுகின்றார்கள். அவர் பதவியில் இருந்த காலத்தில் வோட்டர்ஸ் எஜ் வழக்கில் அவர் குற்றவாளியாகக் காணப்பட்டு 30 இலட்சம் ரூபா தண்டப் பணம் செலுத்தும்படி உயர்நீதிமன்றத்தினால் தீர்ப்பு வழங்கப்பட்டிருந்ததை அவர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள். இந்த நிலையில் கருஜயசூரியவுக்குப் போட்டியிடும் சந்தர்ப்பம் கிடைக்கலாம் என்றாலும் பிரேமதாசவை அது கோபமுறச்செய்யுமென்பதால் ரணில் ஆதரவு வழங்குவதாக இல்லை. எனவே வேறு ஒரு பொது வேட்பாளரைத் தெரிவு செய்து ஏனைய கட்சிகளின் ஆதரவைத் திரட்டும் பொறுப்பு சமரவிக்கிரமவின் தலையில் சுமத்தப்பட் டுள்ளது. இதற்கிடை யில் ஜனாதிபதி ராஜபக்ஷ, கரு ஜயசூரியவுக்குத் தொலைபேசியில் அழைப்பு விடுத்துப் பாராட்டுத் தெரிவித்துள்ளார். ஆனால் அப்படி ஒரு தீர்மானத்தைக் கட்சி இன்னமும் எடுக்கவில்லை என்பதை ஜயசூரிய ராஜபக்ஷவுக்கு விளக்கியுள்ளார்.

அரசில் ஓர் அமைச்சராக இருந்து வரும் ஜயசூரியவின் மருமகன் நவின் திஸாநாயக்கவையும் கூட ஜயசூரியவை ஆதரிக்கும்படி கூறியிருப்பதாகவும், குடும்ப ஒற்றுமையில் தமக்குள்ள நம்பிக்கையே இதற்குக் காரணம் என்றும் ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார். அதற் குப் பதிலளித்த ஜயசூரிய தாம் குடும்ப உறுப்பினர்களுடன் அரசியல் விடயங்களை விவாதிப்பதில்லை என்றும் அந்த வகையில் முன்னாள் இந்தியப் பிரதமர் அமரர் ஜவஹர்லால் நேருவின் கொள்கையைத் தாம் பின்பற்றுவதாகவும் கூறியுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக அறிவிப்புப் பெரும்பாலும் இந்தமாதம் 19 ஆம் திகதி வெளியிடப்படக்கூடும் என்ற நிலையில் ஐ.தே.க. பிரமுகர் சமரவிக்கிரமவுக்குப் பெரிய பொறுப் பொன்று காத்திருக்கிறது. மங்கள சமரவீர சிங்கப்பூரிலிருந்து திரும்பி வருவதற்கு முன்னராக ஒரு வாரத்துக்குள் பொது அரசியல் முன்னணி ஒன்றை உருவாக்குவதுடன் பொதுவேட்பாளர் ஒருவர் தொடர் பாகவும் ஒரு முடிவு கண்டாக வேண்டும். மங்கள சமரவீர மீண்டும் அரச தரப்புக்குப் போகாமல் இருக்க வேண்டுமானால் இவை நிறைவேற்றப்பட்டாக வேண்டும் என்பது எழுத்தப்படாத ஒப்பந்தமாக இருந்து வருகின்றது.

இல்லையெனில் சமரவீர அரச பக்கம் தாவுவது தவிர்க்க முடியாத தாகிவிடும் என்பதால் ஐ.தே.கவின் முன்னாள் தலைவர் சமரவிக்கிரம மேலதிக நேரம் எடுத்து முயற்சிகளை மேற் கொண்டுள்ளார். சமரவீர அரசு பக்கம் தாவுகிறாரோ இல்லையோ ஐ.தே.கவுக்குள் ஏற்பட்டுள்ள சிக்கல் உடனடியாகத் தீரும் அறிகுறியைக் காணோம்.

முக்கியமாக ரணில் போட்டியில் இறங்காது போனால் தாம் போட்டியிட வேண்டும் என்பதில் பிரேமதாச விடாப்பிடியாக இருக்கிறார். ராஜபக்ஷவை தோற்கடிப்பதற்காகத் தமக்குக் கட்சியில் தலைவர் பதவி வழங்கப்பட வேண்டும் என்பதை வற்புறுத்தி வருகிறார்.

அரச தரப்பினர் மங்கள சமரவீரவை எப்படியும் தம் பக்கம் இழுத்துக் கொள்ள எத்தனிப்பதன் இரகசியம் என்னவென்றால் அவரது நெருங்கிய சகாவான சந்திரிகா குமாரதுங்கவிடமிருந்து அவரைப் பிரிப்பது தான். அந்த வகையில் ஐ.தே.கட்சிக்கு ஆதரவாகவுள்ள இரு பெரும் சக்திகளை திசை திருப்பிவிடுவது என்பதாகக் கருதப்படுகின்றது.

21 NOV 2014

# இயற்கை அன்னையின் கருவறையில் ஒரு விவசாயம்

தர்சனா, 4ஆம் வருடம்
விவசாயபீடம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

பண்டைய காலம் முதல் எம்மவர்களால் மேற்கொண்ட விவசாயமுறை இயற்கையை அடிப்படையாகக் கொண்டது. சுற்றாடல் மற்றும் சமூகவியல் காரணிகளை நீண்டகால நோக்கில் கருத்தில் கொண்டு பொருளியல் ரீதியில் குறைந்த உள்ளீடுகளை வினைத்திறனாகப் பயன்படுத்தி, செயற்கை இரசாயனங்களைப் பயன்படுத்தாது விவசாயத்தை மேற்கொண்டனர். அவர்கள் இயற்கையோடு இணைந்து விவசாயம் செய்தமையால்தான் எந்தவிதமான நோய்களுமின்றி ஆரோக்கியமாக வாழ்ந்தார்கள். இயற்கை முறையில் விவசாயத்தின் அடிப்படை நோக்கங்களாக மண்ணின் வளத்தையும் ஆரோக்கியத்தையும் அதிகரித்து எதிர்கால சந்ததியினரைப் பாதுகாத்தல், மண்ணிலும் பயிர்களிலும் உயிரியல் சக்கரங்களின் நிகழ்வை ஊக்குவித்தல், சூழல் மாசடைதலைக் கட்டுப்படுத்தி இயற்கை வளங்களைப் பராமரித்தல், பாவிக்கும் மீளப்புதுப்பிக்க முடியாத வளங்களை வினைத்திறனாக உயர் பாவனைக்குட்படுத்தித் தன்னிறைவான உற்பத்தியைப் பெறல் என்பவற்றைக் குறிப்பிடலாம்.

இந்தக் காலகட்டத்தில் விவசாயிகள் இயற்கை அன்னையின் சிறகை உடைத்து சிறையில் அடைத்து விட்டு அசேதனம் எனும் வாடகைத் தாயின் உதவியை நாடுகின்றனர். பெருமளவிலான செயற்கை இரசாயன உரங்கள், பீடைநாசினிகள், களைகொல்லிகளைப் பயன்படுத்துகின்றனர். ஏனெனில் இந்த முறையினால் குறித்த கால இடைவெளியில் அதிக இலாபத்தைப் பெறலாம் என்பதாலும், பயன்படுத்துவதற்கு இலகுவாகவும் குறைந்த நேரத்தில் பிரயோகிக்கக்கூடியதாக இருப்பதனாலும் ஆகும். ஆனால் அவர்கள் தொலை நோக்கில் சிந்திக்காததால் உயிர்களுக்கு நோய்கள் ஏற்படல், சூழல் மாசடைதல், இயற்கைச் சமனிலை பாதிப்படைதல், மண்ணின் வளம் குன்றி அதன் தன்மை மாறுபடுதல் போன்ற பாதகமான விளைவுகளுக்கு வித்திடுகின்றனர்.

இவ்வாறான தீமைகளிலிருந்து நம்மை விடுவிப்பதற்காக இயற்கை அன்னையின் கருவறையில் செய்யும் விவசாயம் பற்றி சற்று ஆராய்வோம். முதலில் மண்வளத்தைப் பாதுகாத்தல் மிக முக்கியமானதாகும். அதில் பங்கு வகிப்பவை இயற்கை உர பாவனை, உயிரியல் பீடைக்கட்டுப்பாடு, சேதன முறையில் களை முகாமைத்துவம் என்பவையாகும்.

இயற்கை உரங்களாக மண்புழுத்திரவ உரம், மாட்டெரு, கூட்டெரு மற்றும் பூவரசு, கிளிசிறிடியா, சணல் ஆகிய பசுந்தாள் போன்றவற்றைப் பாவிக்கலாம். இவற்றைக் குறைந்த விலையில் பெற முடிவதுடன் மண்ணில் நீர்ப்பிடிப்புத் தன்மை மற்றும் அயன் அகத்துறிஞ்சல் தன்மை அதிகரித்து விளைபொருள்களின் தரத்தை உயர்த்துவதிலும் உதவுகின்றன. மரபுமுறைப் பீடைக் கட்டுப்பாடு முறைகளாக சுழற்சிமுறைப் பயிர்ச் செய்கை, பொறிப்பயிர் வளர்த்தல், நீர் முகாமைத்துவம், ஆழமாக மண்ணை உழுதல், வேம்பு, துளசி, மஞ்சள், உள்ளி போன்றவற்றைத் தாவரப் பீடை நாசினியாகப் பயன்படுத்தல் என்பவற்றைக் குறிப்பிடலாம். அத்துடன் சுழற்சி முறைப் பயிர்ச் செய்கை, பன்முகப்படுத்தப்பட்ட பயிர்ச்செய்கை, களைகளைப் பிடுங்குதல், எரித்தல், விவசாய நிலத்தை ஆழமாக உழுதல், கொத்துதல், சூரிய ஒளி படாமல் மூடுதல், சொட்டு நீர்ப்பாசன முறையைப் பிரயோகித்தல், பத்திரக்கலவையிடுதல் போன்ற முறைகள் இயற்கையான முறையில் களைக்கட்டுப்பாட்டுக்குப் பிரயோகிக்கத்தக்கவையாகும்.

சேதனமுறையில் தானியங்கள், நார்வகைகள், மரக்கறிகள், பழங்கள், பூவினங்கள், இறைச்சி வகைகள், பால் உணவுகள் போன்ற அனைத்து வகையான உற்பத்திப் பொருள்களையும் பெற முடியும். அத்துடன் இந்தமுறையில் குறைந்த உள்ளீடுகளைப் பயன்படுத்துவதனாலும் தாவர உற்பத்திக்காக விவசாயக் கழிவுகளை மீள் சுழற்சி செய்வதாலும், கால்நடைகளின் உணவாகப் பாவிப்பதனாலும் விவசாயிகள் தன்னிறைவான இலாபத்தை ஈட்டுகின்றனர்.

கடந்த தசாப்தத்தின் சேதன உற்பத்திப் பொருள்களின் விற்பனை ஏறத்தாழ இருபது சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. இதற்கான காரணங்களாக சேதன உற்பத்திப் பொருள்களில் அதிக சதவீதத்தில் போசனையும், குறைந்த சதவீதத்தில் பீடைகொல்லி எச்சங்களும் உள்ளமையும் சந்தைகளில் சேதன உற்பத்திப் பொருள்களுக்கான தேவை அதிகரித்தமையும் ஆகும்.

தற்காலத்தில் இலங்கையில் பெரும்பாலானோர் இரசாயனங்களையே பாவித்து விவசாயத்தைத் தூக்குமேடையில் ஏற்றுகின்றனர். இதனால் மண்ணில் அமிலத் தன்மை அதிகரித்தல், மண்ணின் வளம் குன்றி அசாதாரண தன்மை உருவாதல், நிலத்தடி நீர் மாசடைதல், தாவர வளர்ச்சி பாதிப்புறல், பார உலோகங்களும், சயனைட் போன்ற அலோகங்களும் செறிவடைவதால், உயிரினங்கள் ஆபத்துக்குள்ளாதல் என்பன ஏற்படுகின்றன.

இவை மனித உடலில் ஈரல், தசை, சிறு நீரகம் போன்றவற்றில் படிவடைவதால் நோய்கள் உருவாதல், கனிப்பொருள் சக்கரத்தை ஊக்குவிக்கும் நுண்ணங்கிகள் மடிதல் மற்றும் பயிர்களுக்கு நன்மை பயக்கும் நுண்ணங்கிகள், பூச்சிகள் மற்றும் இதர அங்கிகள் அழிக்கப்படல் என்பன நிகழ்கின்றன.

இரசாயன பீடைநாசினிகளின் மிதமிஞ்சிய பாவனையால் புற்றுநோய் ஏற்படும் வாய்ப்புக்கள் அதிகரிக்கின்றது, மண்ணில் இரசாயனங்கள் சேர்வதால் விவசாயியின் நண்பர்களான நன்மை பயக்கும் மண் அங்கிகள் இறத்தல், உயிர்ப் பல்வகைமை குறைவடைதல் போன்ற பல பெரிய இன்னல்களைச் சந்திக்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உள்ளாகின்றோம். இங்கு கவனத்தில் கொள்ளவேண்டிய விடயம் என்னவென்றால் பாதிப்பென்பது இரசாயனத்தை விசிறும் அதர்மிகளையும் இயற்கை அன்னையை சேதமடையச் செய்யும் சேதன விவசாயிகளையும் முக மன் பாராது ஒட்டிக்கொள்ளும்.

இவ்வாறான இன்னல்களைத் தடுப்பதன் முதற்படியாக ஒவ்வொரு வீட்டிலுள்ள ஓர் அங்கத்தவராவது தமது வீட்டுத்தோட்டத்தில் இயற்கை அன்னையில் கருவறையில் விவசாயம் செய்யவேண்டும்.

# சச்சினின் சுயசரிதை நூல்

பூ.கொ.சரவணன்



சச்சினின் சுயசரிதையான 'பிளேயிங் இட் மை வே' நூலைப்பற்றிய அறிமுகத்தின் முதல் பகுதி இது. முதல் பாகத்தில் 1996ஆம் ஆண்டில் நடைபெற்ற உலகக் கிண்ணப் போட்டி, அடுத்ததில் 2003இல் நடந்த உலகக் கிண்ணம் வரையிலும், மூன்றாவது பாகத்தில் டெஸ்ட் போட்டிகளில் முதலிடத்தை பிடித்த கதை வரையும், மீதி இறுதிப் பாகத்திலும் இடம்பெறும்.

இந்த நூலைத் தன்னுடைய ரசிகர்களுக்கு சச்சின் சமர்ப்பணம் செய்திருக்கிறார். நூலின் மொழிநடை மிகவும் எளிமையாகவே இருக்கிறது. யாருக்காக எழுதுகிறோம் என்கிற தெளிவோடு நூலைக் கட்டமைத்து இருக்கிறார். கடந்த நவம்பர் மாதம் 16ஆம் திகதி அன்று முடிவுக்கு வந்த அவரின் கிரிக்கெட் பயணத்தின் இறுதிக்கணத்தில் "பாஜி, நீங்கள் இறுதியாக ஒரு முறை பிட்சுக்கு போக வேண்டும் என்பதை நினைவு படுத்த சொன்னீர்கள்", என்று ஹோலி சொல்வ தோடு நூல் ஆரம்பமாகின்றது.

**தந்தையின் அறிவுரை:**

மகனே வாழ்க்கை என்பது ஒரு புத்தகம். அதில் பல பாகங்களும், பாடங்களும் உள்ளன. நீ கிரிக்கெட் வீரனாக இருக்கப்போகிற காலத்தை விட, சாதாரண மனிதனாக இருக்கப்போகிற காலமே அதிகம். ஆகவே, ஒரு தந்தையாக், சச்சின் ஒரு நல்ல மனிதன் என்று பிறர் சொல்வதையே, சச்சின் ஒரு மகத்தான வீரன் என்பதைவிட நான் விரும்புவேன் என்பதாக அமைந்துள்ளது.

நான்கு குழந்தைகள் கொண்ட வீட்டில் கடைக்குட்டியான சச்சின் தன் அக்கா சவீதா, காஷ்மீர் சென்றபோது வாங்கித்தந்த கிரிக்கெட் மட்டையே தனக்கான முதல் கிரிக்கெட் பரிசு என்பதையும் அவரின் அக்காவுக்கு திருமணமானபோது அவர் எப்பொழுதும் தன்னுடனே இருக்க வேண்டும் என்று விவரம் தெரியாமல் அடம்பிடித்ததையும் பதிந்திருக்கிறார். அவர் இருந்த குடியிருப்பில் பெரிய குழிதோண்டி அதை செய்தித் தாளால் மூடி, மண்ணைப் பரப்பி, பிறர் விழுவதைக் கண்டு ரசிக்கிற கூட்டத்தில் இவர் முக்கிய நபர். பாதசாரியின் மீது நான்காம் மாடியில் இருந்து தண்ணீரை ஊற்றுவதும் இதில் அடக்கம்.

நான்கு பிள்ளைகளைக் கஷ்டப்பட்டு வளர்த்த நடுத்தரக் குடும்பத்தில் பிறந்த சச்சின், பெற்றோரின் துன்பம் புரியாமல் சைக்கிள் வேண்டும் என்று வெளியே போகாமலே சில நாள்கள் போராட்டம் செய்துகொண்டு, மொட்டை மாடியில் இருந்தபோது புழைக் கதவில் எட்டிப்பார்த்து, தலை அதில் மாட்டிக் கொள்ள, எண்ணெயைத் தடவி தலையை மீட்டுவிட்டுச் சைக்கிள் வாங்கிக் கொடுத்திருக்கிறார்கள்.

**திருட்டு மாங்காய் தந்த கிரிக்கெட் கடவுள்:**

டென்னிஸ் வீரர் மெக்கன்ரோ மீது பெரிய மோகம் கொண்டு டென்னிஸ் விளையாடிக் கொண்டும், கிரிக்கெட் பக்கமும் கொஞ்சம் கண் பதித்த சச்சின், எது தன்னுடைய இறுதித்தேர்வு என்று அல்லாடிக் கொண் டிருந்த போது தேவ் ஆனந்த் நடித்த "கைட்" படத்தை, குடியிருப்பு தொலைக்காட்சியில் ஆர்வமாகப் பார்த்துக்கொண்டிருக்க, திருட்டு மாங்காய் பறிக்கப்போய் தொப்பென்று விழுந்ததற்குத் தண்டனையாக கிரிக்கெட் பயிற்சிக்கு அச்ரேக்கரிடம் சேர்க்கப்படுவதில் முடிந்தது. 65 ரூபாய் ஆரம்பகட்ட பணம், மாதம் பத்து ரூபாய் என்று கட்டி விட்டு அச்ரேக்க ரிடம் சச்சின் சேர்ந்தார்.

ஆனால் உடனே சச்சினைச் சேர்த்துக்கொள்ளவில்லை. முதல்முறை துடுப்பாடும்போது சொதப்பியவருக்கு அவரின் அண்ணனே இன்னொரு வாய்ப்பு வாங்கித்தந்து மீண்டும் ஆடவைத்து சேர்த்து விட்டார். ஒரே ஒரு கிரிக்கெட் உடையை வைத்துக் கொண்டு ஒரே நாளில் மூன்று முறை பயிற்சிக்குப் போகவேண்டி இருந்ததால் மொட்டை மாடியில் துவைத்துக் காயப்போட்டு அணிந்து போவது சச்சினின் வழக்கம். *(தொடரும்)*

## இது மரநடுகை மாதம்

## பயன்களை அள்ளித்தரும் தென்னைகள்



ராஜராஜன்

மரங்கள் இல்லாத மண்ணுக்கு மகிமையில்லை.

மரங்களால் நிறைந்த முல்லை நிலம் எப்போதுமே செழிப்புடன் காணப்படும். ஆனால் மரங்களையே காணாத பாலைநிலம் பாழ்பட்டநிலையில் காணப்படும்.

சிலர் தம் வீடுகளில் வளர்க்கப்படும் மரங்களைத் தமது பிள்ளைகள் போன்று பேணிக் காப்பாற்றுவார்கள். தென்னை மரத்தின் கன்றுகளைத் தென்னம்பிள்ளை என்றும் இவர்கள் பாசத்துடன் குறிப்பிடுவார்கள். நன்றி மறந்த பெற்ற பிள்ளையை விட ஒரு தென்னை மரம் எவ்வளவோ உயர்வானது என்றும் கூறுவார்கள். தம்மை வளர்த்துக் காப்பாற்றிய உரிமையாளர்களுக்குத் தென்னை மரங்கள் பிரதியுபகாரமாக எவ்வளவோ கொடுக்கின்றன. ஓரறிவு படைத்தவையாக இருந்த போதிலும் தென்னை மரங்கள் ஒருபோதுமே நன்றி மறப்பதில்லை.

மேலும் மிகக் குறுகிய காலத்தில் பயன்தருவதால் தென்னை மரங்களை வளர்த்தெடுப்பதில் மக்கள் ஆர்வம் காட்டுகின்றனர். யாழ்.மாவட்டத்தைப் பொறுத்தவரையில் தென்மராட்சி பிரதேசம் தென்னை மரங்களை அதிகளவில் கொண்டுள்ளது. அங்கு வசிக்கும் மக்களில் பலர் தமது அன்றாட வீட்டுச் செலவுகளைத் தேங்காய்களை விற்பதன் மூலமாகப் பூர்த்தி செய்து வருகின்றனர்.

ஒவ்வொருவரும் தாம் வசிக்கும் காணியின் அளவுக்கு ஏற்றவாறு தென்னைகளை நடலாம். இதன் மூலமாக அவர்கள் தமக்குத் தேவையான தேங்காய்களைப் பெற்றுக் கொள்வதோடு மேலதிகமாகக் கிடைப்பவற்றை இலகுவாக விற்பனை செய்துவிடமுடியும். இதன் மூலம் வருவாயும் கிடைக்கும்.

தென்னை மரங்களிலிருந்து கிடைக்கும் இளநீர் இயற்கை அன்னை எமக்குத் தந்த அரியதொரு கொடையாகும். இளநீரில் மனித உடலுக்கு நன்மை தரக்கூடிய பல உயிர்ச்சத்துக்கள் அடங்கியுள்ளன. இதனை நாம் அருந்தும் போது எமது தாகம் தணிவதுடன் உடலும் புத்துணர்ச்சி பெறுகின்றது.

ஆகவே எமது வீடுகளில் மரங்களை நடும் போது அதில் தென்னைக்கு முக்கிய இடம் வழங்க வேண்டும்.

தென்னையை நடுவோம் – எண்ணற்ற பயன்களைப் பெறுவோம்.



# வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம்
# கேள்விஅறிவித்தல் - 2015

வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட சந்தைகள், கருவாட்டுக்கடை, இறைச்சிக் கடைகள் 2015.01.01ஆம் திகதி தொடக்கம் 2015.12.31ஆம் திகதிவரை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி :- 2014.11.12 - 2014.11.25 பி.ப 03.00 மணிவரை
கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி :- 2014.11.26 ந.ப 12.00 மணிவரை
கேள்விதிறக்கும் திகதி :- 2014.11.26 பி.ப 02.00 மணி

கேள்விப் பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை தவிசாளர், வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம் என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபாலுறையின் இடது பக்கமேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்படல் வேண்டும். இரண்டாவது பிரதியை **பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர்**, பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் **அலுவலகம், யாழ்ப்பாணம்** எனும் முகவரியிட்டு பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும்.

1. கேள்விப்பத்திரம் பெறவிரும்புவோர் விண்ணப்பங்களுடன் அடையாள அட்டையையும் அதன் நிழற்படப் பிரதியையும் கொண்டு வருவதுடன் தாம் வதியும் இடத்தின் வதிவிட சான்றிதழையும் சமர்ப்பித்தல் வேண்டும்:
2. சங்கானை மரக்கறிச் சந்தைக்கு விண்ணப்பப் பத்திரம் பெற்றுக்கொள்ள விரும்புவோர் (கூட்டுறவுச் சங்கங்கள் தவிர்ந்த தனிப்பட்டவர்கள்) ஏதாவது ஒருவங்கியில் தங்கள் பெயரில் ரூபா 200 000.00 க்கு குறையாது வைப்பில் உள்ளதற்கான ஆதாரமாக வங்கிப் புத்தகம் அல்லது வைப்புச் சான்றிதழ் சமர்ப்பித்தல் வேண்டும். சித்தியடையாத கேள்விதாரரது வங்கிப் புத்தகம் /வைப்புச் சான்றிதழ் கேள்வி திறந்த மறுநாள் மீளளிக்கப்படும். சித்தியடைந்த கேள்விதாரரது வங்கிப் புத்தகம் /வைப்புச் சான்றிதழ் கேள்வித் தொகையின் 1/3பகுதியைஅலுவலகத்தில் செலுத்திஒப்பந்தம் கைச்சாத்திட்ட பின்னர் மீளளிக்கப்படும்.
3.வட்டுக்கோட்டை மாட்டிறைச்சிக் கடையை குத்தகைக்கு எடுப்பவர்கள் இதனை நடத்துவதற்குரிய இடத்தினை தாமே தெரிவு செய்தல் வேண்டும்.
4. உள்ளூராட்சி மன்றங்களால் தவறுனராகக் கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப்பத்திரம் வழங்கப்பட மாட்டாது. எனினும் படிவம் வழங்கப்பட்டபின் கண்டுபிடிக்கப் பட்டால் அவரின் கேள்வி நிராகரிக்கப்படும்.
5. ஆகக் குறைந்த கேள்வித் தொகையிலும் குறைந்த கேள்வி கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப் படுவதுடன் கேள்வி வைப்புப் பணமும் மீளளிக்கப்பட மாட்டாது.
6. கேள்வி நிபந்தனைகள், அறிவுறுத்தல்களுக்கு அமையாத கேள்விக் கோரிக்கைகளை நிராகரிக்கவும், எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ நிராகரிக்கவோ தவிசாளருக்கு பூரண அதிகாரம் உண்டு.
7. தெரிவு செய்யப்படும் கேள்விக்காரர் கேள்வித் தொகையின் 1/3 பகுதியை 02.12.2014ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினை செய்து கொள்ளவேண்டும்.
8. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.
9. 01.01.2015முதல் சங்கானைமீன் சந்தையில் கோழி உரித்தல் முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது. மீன் வெட்டும் இடத்தின் தூய்மையை குத்தகைகாரர் பொதுசுகாதார பரிசோதகரின் அறிவுறுத்தலுக்கமைய பராமரிப்பதுடன் தொடர்ந்து இதனைக் கண்காணித்து நடைமுறைப்படுத்தல் வேண்டும். மீன் வெட்டுபவர்களிடம் பணம் அறவிடலாம்.
10. ஒப்பந்தகாரர் குத்தகை ஏற்கும் போது உள்ளகட்டடத்தின் தரம், கட்டட அமைப்புக்கள் யாவும் உரிய முறையில் பேணப்பட்டு குத்தகைக் காலம் பூர்த்தியடையும் போதுமீண்டும் அதேநிலையில் கையளித்தல் வேண்டும்.
11.சந்தைகளை குத்தகைக்கு எடுப்பவர்கள் சந்தைகளின் தூய்மைக்கு பொறுப்பாக இருப்பதுடன் கழிவுகள் சேகரிப்பதற்குள்ள கூடைகளில் கழிவுகளை இடல்வேண்டும்.
12. சந்தைகளை குத்தகைக்கு எடுப்பவர்கள் வியாபார நோக்கத்திற்காக கொண்டுவரும் பொருள்களின் விற்பனை விலை யில் 4% உம், மீன் கிலோ ஒன்றிற்கு ரூபா 5.00உம், வியாபார நோக்கத்திற்கு வரும் லொறிக்கு ரூபா 30.00உம், வியாபாரிகளின் பாவனையில் உள்ள பகுதியில் (மரக்கறிச் சந்தை, மீன் சந்தை, மீன் வெட்டும் இடம்) ஊடு ஒன்றிற்கு ரூபா 30.00உம் துவிச்சக்கரவண்டி பாதுகாப்புக் கட்டணம் ரூ 5.00. மோட்டார் சைக்கிள் பாதுகாப்பு கட்டணம் ரூபா 10.00 இனை அறவிடலாம். மேலதிகமாக எவ்வித கட்டணங்களும் அறவிடக்கூடாது.
13. துவிச்சக்கர வண்டி பாதுகாப்புடன் சந்தையை குத்தகைக்கு பெறுபவர்கள் துவிச்சக்கரவண்டி பாதுகாப்புக் கட்டணம் என்ற சிட்டையைக் கொடுத்து அதற்குரிய பணத்தை அறவிடமுடியும். சந்தைக்கு வெளியே எந்த ஒரு கட்டணத்தையும் அறவிட முடியாது.
14. சந்தைச் சுற்றாடலில் இருந்து 500m சுற்றுவட்டாரத்தில் மீன், மரக்கறி, கோழி என்பன விற்பது தடை செய்யப் பட்டுள்ளது.
15. மேலதிக விவரங்களைதலைமைஅலுவலகத்தில் அலுவலகநேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

2015 ஆம் ஆண்டு சந்தைகள், இறைச்சிக் கடைகள், கருவாட்டுக் கடைகளுக்கான குத்தகை அட்டவணை

| இல | சந்தைகள் (துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையத் துடன்) இறைச்சிக் கடைகள், கருவாட்டுக்கடைகள் | மாதவாடகை சபைக்கு செலுத்த வேண்டியது | ஆகக் குறைந்த கேள்வித் தொகை (VAT, NBTநீங்கலாக) | கேள்விப் பிணைப் பணம் மீளளிக்கக் கூடியது | மீளளிக்கப் படாத கேள்விப் படிவக் கட்டணம் (VAT, NBTநீங்கலாக) |
|---|---|---|---|---|---|
| சுழிபுரம் உபஅலுவலகம் | | | | | |
| 01 | சத்தியகாட்டுச் சந்தை | | 1,006,500.00 | 5000.00 | 1000.00 |
| 02 | தொல்புரம் மத்தியசந்தை | | 7,920.00 | 500.00 | 250.00 |
| 03 | சத்தியகாட்டு மாட்டிறைச்சிக் கடை | 100.00 | 13,795.00 | 500.00 | 250.00 |
| 04 | சத்தியகாட்டு ஆட்டிறைச்சிக்கடை | 100.00 | 3,630.00 | 500.00 | 250.00 |
| சங்கானை உப அலுவலகம் | | | | | |
| 01 | சங்கானை மரக்கறிச்சந்தை | | 5,885,000.00 | 10000.00 | 1000.00 |
| 02 | சங்கானை மீன்சந்தை | | 1,090,100.00 | 5000.00 | 1000.00 |
| 03 | சங்கானை மாட்டிறைச்சிக்கடை | 200.00 | 402,600.00 | 5000.00 | 1000.00 |
| 04 | சங்கானை ஆட்டிறைச்சிக்கடை | 150.00 | 22,000.00 | 2000.00 | 500.00 |
| 05 | சங்கானை கருவாட்டுக்கடை | 100.00 | 11,000.00 | 1000.00 | 250.00 |
| வட்டுக்கோட்டை உப அலுவலகம் | | | | | |
| 01 | வட்டுக்கோட்டை பொதுச்சந்தை | | 69,300.00 | 2000.00 | 500.00 |
| 02 | சங்கரத்தை சந்தை | | 147,070.00 | 3000.00 | 750.00 |
| 03 | வட்டுக்கோட்டை மாட்டிறைச்சிக்கடை | | 21,230.00 | 2000.00 | 500.00 |
| 04 | கோழி இறைச்சிக்கடை, சங்கரத்தை | 100.00 | 25,300.00 | 1000.00 | 500.00 |
| அராலி உப அலுவலகம் | | | | | |
| 01 | அராலிசெட்டியார் மடம் சந்தை | | 13,750.00 | 500.00 | 250.00 |

தலைமைஅலுவலகம்,
வலிகாமம் மேற்குபிரதேசசபை,
சுழிபுரம்.
11.11.2014

திருமதி.நா.ஐங்கரன்
தவிசாளர்,
வலிகாமம் மேற்கு பிரதேச சபை
சுழிபுரம்.

(சி/17620)(10.6.3)

# 28 பெண்கள் சாவு
## கருத்தடை சிகிச்சையால்

சென்னை,நவ.12

சத்தீஸ்கர் மாநிலம் பிலாஸ்பூரில் கருத்தடைச் சிகிச்சை செய்து கொண்ட 28 பெண்கள் பரிதாபமாக உயிரிழுந்தனர். மேலும் 13 பெண்கள் கவலைக்கிடமான நிலையில் தீவிர சிகிச்சை பெற்று வருகிறார்கள்.



இந்தச்சம்பவம் அங்குபெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. சத்தீஸ்கர் மாநில அரசின் சார்பில், ஆண்டு தோறும் நடைபெறும் குடும்பக் கட்டுப்பாடு சிறப்பு முகாம் நடத்தப்படுகிறது. இந்த ஆண்டு அதில் ஏராளமான பெண்கள் பங்கேற்றனர். அவர்களில் 80 பெண்களுக்கு கடந்த சனிக்கிழமை, நேமிசந்த் மருத்துவமனையில் கருத்தடை சிகிச்சை செய்யப்பட்டது. இந்த நிலையில் அறுவை சிகிச்சை செய்து கொண்ட பெண்கள் பலருக்குக் கடுமையான காய்ச்சலும், வயிற்று வலியும் ஏற்பட்டதாகக் கூறப்படு கிறது. இதன் காரணமாக மருத்து வமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கபட்ட நிலையில், சிகிச்சை பயனின்றி 28 பெண்கள் பரிதாபமாக உயிரிழந்தனர். மேலும் 13 பேர் கவலைக்கிடமாக உள்ளதாகக் கூறப்பட்டது. மருத்துவமனையில்சிகிச்சை பெற்று வந்த நிலையில் உடல் நிலை மிகவும் மோசம் அடைந்த பெண்கள் 28 பேர் உயிரிழந்தனர்.

இந்த இறப்புகள் தொடர்பாக விசாரிக்க மூன்று பேர் கொண்ட குழுவை அந்த மாநில அரசு அமைத்துள்ளது. இது தொடர்பாகக் கருத்து தெரிவித்த காங்கிரஸ் மூத்த தலைவர் திக் விஜய் சிங், சுகாதாரத்துறை அமைச்சரின் தொகுதியிலேயே கருத்தடை சிகிச்சை செய்து கொண்ட பெண்கள் உயிரிழந்துள்ளனர். உடனடியாக அவர் தனது பதவியை ராஜினாமா செய்ய வேண்டும் என்று கூறியுள்ளார். (ரி)

# ஜார்க்கண்ட் சட்டசபை தேர்தல் நவ. 25 இல்

சென்னை,நவ.12

ஜார்க்கண்ட்மாநிலசட்டப்பேரவைக்கு 5 கட்டமாக தேர்தல் நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டது. நவம்பர் 25 ஆம் திகதி 13 தொகுதிகளுக்கும் டிசம்பர் 2ஆம் திகதி 20 தொகுதிகளுக்கும் 9ஆம் திகதி 17 தொகுதிகளுக்கும் 14ஆம் திகதி 15 தொகுதிகளுக்கும் 20ஆம் திகதி 16 தொகுதிகளுக்கும் தேர்தல் நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டது. மாநிலத்தில் மொத்தம் உள்ள 81 தொகுதிகளில் பா.ஜ.க. 72 தொகுதிகளில் போட்டியிடுகிறது. கூட்டணி கட்சிகளான சுதேஷ் மகதோ தலைமையிலான அனைத்து ஜார்க்கண்ட் மாணவர் சங்கங்கள் மற்றும் ராம்விலாஸ் பாஸ்வான் தலைமையிலான லோக் ஜனசக்தி கட்சி போன்ற கட்சிகள் ஏனைய இடங்களில் போட்டியிடுகின்றன. இந்நிலையில் பா.ஜ.க தேர்தல் அறிக்கையை தேசிய தலைவர் அமித்ஷா இன்று வெளியிடுகிறார். (ரி)

# அஞ்சல் மூலம் முதல் தகவல் அறிக்கை
## வீதி விபத்து குறித்து

சென்னை,நவ 12

வீதி விபத்து குறித்த முதல் தகவல் அறிக்கையை சம்பந்தப்பட்டவர்களுக்கு அஞ்சல் மூலம் அனுப்பும் திட்டத்தை, தமிழகத்தில் முதல்முறையாக சென்னை பெருநகர காவல் துறை அறிமுகப்படுத்தியுள்ளது. சென்னைபெருநகரகாவல்துறையை நவீனமயமாக்குவதற்கும், மக்களுடன் இருக்கும் தொடர்பை மேலும் அதிகரிப்பதற்கும் பல்வேறு நடவடிக்கைகளைக் காவல்துறை உயர் அதிகாரிகள் எடுத்து வருகின்றனர். அதன் ஒரு பகுதியாக பெருநகர காவல்துறையின் கீழ் இயங்கும் போக்குவரத்துப் பிரிவின் வீதி விபத்துக்களை விசாரணை செய்யும் போக்குவரத்து புலனாய்வுப் பிரிவு புதிய திட்டத்தை நேற்று முன்தினம் அறிமுகப்படுத்தியது. அந்தத் திட்டத்தின்படி வீதி விபத்துக்களின் முறையிடுவோர், பாதிக்கப்பட்டோர் ஆகியோருக்கு முதல் தகவல் அறிக்கையை அஞ்சல் மூலம் அனுப்பும் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. வீதி விபத்து ஏற்பட்டு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட 3 நாள்களுக்குள் சம்பந்தப்பட்டவருக்கு, முதல் தகவல் அறிக்கை கிடைப்பதற்கு வழிவகை ஏற்பட்டுள்ளது. (ரி)

# கொல்கத்தாவில் குண்டுவெடிப்பு

கொல்கத்தா பர்த்வான் குண்டுவெடிப்பு தொடர்பாக விசாரணை நடத்தி வரும் தேசிய புலனாய்வு அமைப்பு அலுவலகம் அருகே நேற்று முன்தினம் இரவு சக்தி வாய்ந்த குண்டு வெடித்தது. இதில் எவருக்கு காயம் ஏற்படவில்லை.

மேற்கு வங்க மாநில தலைநகர் கொல்கத்தாவில் உள்ள சால்ட் லேக் அருகே அமைந்துள்ள சி.ஆர்.பி.எப். பொலிஸ் அலுவலகம் அருகே, சமீபத்தில் நடந்த பர்த்வான் குண்டுவெடிப்பு தொடர்பாக விசாரணை மேற்கொண்டு வரும் தேசிய புலனாய்வு அமைப்பினர் தற்காலிக அலுவலகம் ஒன்றை ஏற்படுத்தி அங்கு தங்கி உள்ளனர்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு அங்கு சக்தி வாய்ந்த குண்டு வெடித்தது. இந்த குண்டு வெடிப்பில் அங்கிருந்த பேருந்து நிலையம் தகர்க்கப்பட்டது. அதிர்ஷ்டவசமாக இந்த குண்டுவெடிப்பு சம்பவத்தில் எவருக்கும் காயம் ஏற்படவில்லை. சம்பவம் தொடர்பாக 3 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். (ரி)

# அணு ஆராய்ச்சி ஒப்பந்தம் ஈரான்–அமெரிக்கா பேச்சு

மஸ்கட், நவ.12
ஈரான் அணு ஆராய்ச்சி நிறுத்தம் தொடர்பான உடன்படிக்கை குறித்து அந்தநாட்டுக்கும் அமெரிக்காவுக்கும் இடையேயான பேச்சு ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகியது.
ஓமான் நாட்டின் தலைநகர் மஸ்கட்டில் நடைபெற்ற பேச்சில், ஈரான் வெளியுறவுத் துறை அமைச்சர் முகமது ஜாவேத் ஜரீஃப், அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் ஜோன் கெரி கலந்துகொண்டனர். ஈரானின் அணு சக்தி ஆராய்ச்சிகள் குறித்த உடன்படிக்கையை நவம்பர் மாதம் 24 ஆம் திகதிக்குள் கையெழுத்திட வேண்டும் என்று வல்லரசு நாடுகள் வலியுறுத்தி வரும் நிலையில், தங்கள் நாட்டின் மீது விதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத் தடைகளை உடனடியாக முற்றிலும் நீக்க வேண்டும் என்று ஈரான் கோரியுள்ளது.
இந்தநிலையில், இடைக்கால அளவில் ஓர் உடன்படிக்கையை ஏற்படுத்த அமெரிக்கா தீவிர முயற்சி எடுத்து வருகிறது.
ஓமானில் நடைபெறும் பேச்சின்போது, அந்தநாட்டு வெளியுறவுத்துறை அமைச்சர் யூசுப் பின் அலாவி பின் அப்துல்லா, ஐரோப்பிய யூனியனின் வெளியுறவுக் கொள்கைத் துறையின் முன்னாள் தலை வர் கேதரின் ஆஷ்டன் ஆகியோர் உடனிருந்தனர். (வ)

# கராச்சியில் கோர விபத்து பஸ்ஸில் சென்ற 56 பேர் சாவு



கராச்சி, நவ.12
பாகிஸ்தானில் கராச்சி வழியே சென்று கொண்டிருந்த பஸ், லொறி மீது மோதி விபத்துக்குள்ளானதில் 56 பேர் உயிரிழந்தனர். மேலும் 20 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.
பாகிஸ்தானின் சிந்து மாகாணத்தின் சுக்கூர் மாவட்டத்தில் பஸ் ஒன்று கராச்சி நோக்கி நேற்றுக் காலை பயணித்துக் கொண்டிருந்தது. அப்போது தூக்கக் கலக்கத்தில் பஸ்ஸை இயக்கிய சாரதி எதிர் வீதியில் வந்துகொண்டிருந்த லொறி மீது மோதினார்.
இந்தபயங்கர விபத்தில் பஸ் முற்றிலுமாக சிதைந்து போனது. விபத்துக்கு 8 பெண்கள், சிறுவர்கள் உள்ளிட்ட 56 பேர் உயிரிழந்துள்ளதாக சினுவா செய்தி நிறு வனம் தெரிவித்துள்ளது. மேலும் சுமார் 20 பேர் விபத்தில் காயமடைந்துள்ளதாகவும் கூறப்படுகிறது. சாரதியின் அலட்சியத்தாலும், பைபாஸ் சாலையில் இரு வாகனங்களும் அதிக வேகத்தில் வந்து மோதியதாலும் இந்தப் பயங்கர விபத்து ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது. (வ)



# காதலுக்கு விலையேது? நிரூபித்தார் சீனப் பெண்

பீஜிங், நவ.12
அன்பால் பெற வேண்டிய காதலைப் பணத்தால், பொருளால் வாங்க முடியாது என்பதைச் சீனாவைச் சேர்ந்த பெண் ஒருவர் நிரூபித்தார் .
சீனாவில் கணினித்துறையில் பணியாற்றும் இளைஞர் ஒருவர் இளம்பெண்ணிடம் காதலை சொல்வதற்குப் பெரும் பொருள்செலவில் வித்தியாசமான முறையைக் கையாண்டுள்ளார். இதற்காக அவர் ரூ 50 லட்சம் மதிப்புள்ள 99 ஐபோன் 6 ஸ்மார்ட் போன்களை இதயம் போன்று வடிவமைத்து வரிசைப்படுத்தினார்.
பின்னர் தனது நண்பர்கள் மற்றும் அலுவலக சகாக்கள் முன்னிலையில் அந்தப் பெண்ணை வரவழைத்து மலர் கொத்துகள் கொடுத்து தனது காதலையும் திருமணம் செய்ய விரும்புவதாகவும் அந்தப் பெண்ணிடம் தெரிவித்தார். ஆனால் குறித்த பெண் அவரின் காதலை ஏற்க மறுத்து விட்டார். சீனாவில் சமூக வலைத் தளங்களில் பெருமளவில் இதுகுறித்து பேசப்பட்டு வருகிறது. (வ)

# ஒபாமா-புடின் சந்திப்பில்லை



பீஜிங், நவ.12
ஆசிய பசுபிக் பொருளாதார ஒத்துழைப்பு மாநாட்டில் பங்கேற்றுள்ள தங்கள் நாட்டு ஜனாதிபதி விளாடிமிர் புடின் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவைச் சந்தித்துப் பேசமாட்டார் என்று ரஷ்யா அறிவித்துள்ளது.
சீன தலைநகர் பீஜிங்கில், கடந்த 7 ஆம் திகதி ஆரம்பமாகியது ஆசிய பசுபிக் பொருளாதார ஒத்துழைப்பு மாநாடு. 7.8 ஆம் திகதிகளில் நடைபெற்ற நிகழ்வுகளில் அமெரிக்கா, ஜப்பான் உள்ளிட்ட நாடுகளின் அமைச்சர்கள் பங்கேற்றனர். தொடர்ந்து நேற்று முன்தினம் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா, ரஷ்ய ஜனாதிபதி புடின் உட்பட ஜப்பான், தென் கொரியா நாடுகளின் தலைவர்கள் மாநாட்டில் பங்கேற்றனர்.
இந்த மாநாட்டில் பங்கேற்பதற்காக, அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா நேற்று முன்தினம் பீஜிங் வந்தடைந்தார். விமான நிலையத்தில் அவருக்கு இராணுவ மரியாதையுடன் கூடிய வரவேற்பு அளிக்கப்பட்டது. சீன வெளியுறவுத் துறை அமைச்சர் வாங் யி மற்றும் உயர் அதிகாரிகள் அவரை வரவேற்றனர். இச் சுற்றுப் பயணத்தின்போது சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங்கை ஒபாமா சந்திக்கவுள்ளார்.
சீன சுற்றுப்பயணத்தை முடித்துக் கொண்டு, மியன்மாரில் நடைபெறவுள்ள கிழக்காசிய மாநாட்டில் பங்கேற்ற பின், ஆஸ்திரேலியாவில் நடைபெறவுள்ள ஜி-20 மாநாட்டில் ஒபாமா பங்கேற்கவுள்ளார். இந்தப் பயணத்தின்போது, ஆஸ்திரேலிய பிரதமர் டோனி அபோட், ஜப்பான் பிரதமர் ஷின்ஷோ அபே ஆகியோரையும் சந்திக்கவுள்ளார்.
இம்மாநாட்டில் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர், புடின் பங்கேற்றுள்ளார். ஆனால், அவரும் ஒபாமாவும் சந்திப்பதற்கான வாய்ப்புகள் இல்லை என்று ரஷ்ய தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. உலக பொருளாதார வளர்ச்சியை மீட்டெடுப்பது குறித்த இம்மாநாட்டில், அமெரிக்கா, ஜப்பான், தென்கொரியா உள்ளிட்ட 21 நாடுகள் பங்கேற்றுள்ளன. இந்த நாடுகள் உலக அளவில் 44 சதவீத வர்த்தகத்தை மேற்கொண்டுள்ளன. (வ)

# ஆளில்லா விமானத்தை உருவாக்கியது ஈரான்

டெஹ்ரான், நவ.12
ஈரானில் கைப்பற்றப்பட்ட அமெரிக்க ஆளில்லா விமானத்தின் அடிப்படையில் தாங்கள் உருவாக்கிய விமானம், வெற்றிகரமாகப் பறக்கவிடப்பட்டதாக ஈரான் அறிவித்துள்ளது.
தங்கள் நாட்டு வான் எல்லைக்குள் நுழைந்த அமெரிக்காவின் ஆர்.க்யூ. 170 சென்டினல் ரக ஆளில்லா விமானம் ஒன்றைக் கைப்பற்றியிருப்பதாக ஈரான் 2011 ஆம் ஆண்டு அறிவித்தது.
அமெரிக்காவும் அதனை உறுதி செய்தது. இந்த நிலையில், பிடிபட்ட அந்த விமானத் தொழில்நுட்பங்களைப் பகுத்தாய்ந்து, அதன் அடிப்படையில் தாங்களே புதிய ஆளில்லா விமானத்தை வடிவமைத்துள்ளதாக ஈரான் தெரிவித்துள்ளது. அந்த விமானம் வெற்றிகரமாகப் பறக்க விடப்பட்டதாக ஈரான் இராணுவத்தின் விமானத் தொழில்நுட்பப் பிரிவுத் தலைவர் ஜெனரல் அமீர் அலி ஹாஜிஸாடேவை மேற்கோள் காட்டி, ஈரான் அரசுத் தொலைக்காட்சி திங்கட்கிழமை தெரிவித்தது.
அந்த விமானம் பறக்கும் காணொலிக் காட்சி விரைவில் வெளியிடப்படும் என்று அமீர் அலி ஹாஜிஸாடே கூறியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)





# அமெரிக்க நீதித் திணைக்களத்துக்கு முதலாவது ஆபிரிக்க பெண்

அமெரிக்காவின் புதிய வழக்கறிஞர்கள் ஜெனரலாக நியூயோர்க்கைச்சேர்ந்த லோரெட்டா லின்ச் (வயது-55) அந்த நாட்டு ஜனாதிபதி பராக் ஒபாமாவால் நியமிக்கப்பட்டுள்ளார்.
அவர் ஹோல்டா பதவி விலகிய வழக்கறிஞர்கள் ஜெனரலான எறிக் ஹோல்டரின் இடத்துக்கு நியமிக்கப்படவுள்ளார். அவரது நியமனத்தை அமெரிக்க செனட்சபை உறுதிப்படுத்தும் பட்சத்தில் அவர் அமெரிக்க நீதித் திணைக்களத்துக்கு தலைமை தாங்கும் முதலாவது ஆபிரிக்க அமெரிக்க பெண்ணாக விளங்குவார். 6 வாரங்களுக்கு முன்னர் சட்டத்தரணிகள் நாயக பதவியிலிருந்து ராஜினாமா செய்த ஹோல்டர் அந்த நாட்டின் முதலாவது சட்டத் தரணிகள் நாயகமாக உள்ளார். (வ)

# 2 வருடங்களின் பின் நடைபெற்ற சந்திப்பு



பீஜிங், நவ.12
தீவுப்பிரச்சினை காரணமாக முரண்பாடுகளைக் கொண்டுள்ள சீன மற்றும் ஜப்பான் அரசின் தலைவர்கள் இரு ஆண்டுகளுக்குப் பின்னர் நேரில் சந்தித்துப் பேசினர்.
பீஜிங்கில் நடைபெற்று வரும் ஆசிய பசிபிக் பிராந்திய பொருளாதாரக் கூட்டமைப்பு மாநாட்டில் கலந்து கொள்ள வந்துள்ள ஜப்பான் பிரதமர் ஷின்ஸோ அபே, சீன அதிபர் ஸீ ஜீன் பிங்குடன் நடத்திய பேச்சுக்குப் பின்னர் கூறுகையில், இரு நாடுகளுக்கும் பொதுவான விடயங்களில் ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்த நடவடிக்கைகளே பிரச்சினைகளை தீர்ப்பதற்கான முதல்படி என்று தெரிவித்தார். இந்தச் சந்திப்பின் போது அமைதியான வழியை முன்னேற்றத்துக்காக ஜப்பான் பின்பற்றும் என்று தான் நம்புவதாக ஷின்ஸோ அபே யிடம் சீன ஜனாதிபதி ஸீ ஜின்பிங் கூறியுள்ளார்.
கிழக்கு சீனக்கடல் பிராந்தியத்தில் உள்ள செங்காகூ தீவுகள் யாருக்கு சொந்தம் என்பதில் இரு நாடுகளுக்கிடையில் பிரச்சினை நீடித்து வருகிறது. (வ)

# எபோலா பாதித்த மருத்துவர் குணமடைந்தார்



நியூயோர்க், நவ.12
எபோலா நோய் தாக்குதலுக்கு ஆளான நியூயோர்க்கைச் சேர்ந்த மருத்துவர், தீவிர சிகிச்சைக்கு பின் குணமடைந்தார். அதையடுத்து அவர் இன்று வீடு திரும்புகிறார். மேற்கு ஆபிரிக்க நாடுகளில் பரவி வரும் எபோலா நோய், உலக நாடுகளுக்கு பெரும் அச்சுறுத்தலாக இருந்து வருகிறது. இந்த நோயால் இதுவரை 5,000 பேர் வரை உயிரிழந்துள்ளனர். 13,000 இற்கும் மேற் பட்டோர் இந்த நோய் தாக்குதலுக்கு ஆளாகியுள்ளனர் என்று உலக சுகாதார நிறு வனம் தெரிவித்துள்ளது. எபோலா பரவாமல் தடுக்க பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இந்த நோயைத் தடுக்க அமெரிக்கா தீவிரமாகச் செயற்பட்டு வருகிறது. ஆபிரிக்க நாடுகளில் இருந்து நியூயோர்க், நியூஜெர்ஸி முக்கிய நகரங்களுக்கு வருவோருக்கு கடும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.
எபோலா பரிசோதனைகள் செய்யப்பட்ட பின்னரே அவர்கள் அனுமதிக்கப்படுகின்றனர். சுமார் 21 நாள்கள் வரை அவர்கள் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகிறார்கள். அமெரிக்காவின் நியூஜெர்ஸியில், எபோலா நோய் பாதிப்புக்கு உள்ளான நபருக்கு சிகிச்சை அளித்த 2 தாதிமார்களுக்கு அதன் பாதிப்பு இருந்தது தெரிய வந்தது. அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இந்தநிலையில், ஆபிரிக்க நாடான கியூனாவில் பணிபுரிந்த அமெரிக்க மருத்துவர் ஸ்பென்சர்(வயது 33) என்பவருக்கு எபோலாவின் பாதிப்பு இருப்பது கடந்த மாதம் 23 ஆம் திகதி கண்டு பிடிக்கப்பட்டது. நியூயோர்க்கில் உள்ள மருத்துவமனையில் சிறப்பு சிகிச்சை பிரிவில் சேர்க்கப்பட்ட ஸ்பென்சருக்கு பல்வேறு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.
சோதனை கட்டத்தில் உள்ள புதிய மருந்துகள் கொடுக்கப்பட்டன. தீவிர சிகிச்சைக்கு பின் ஸ்பென்சர் குணமடைந்ததார். அதையடுத்து, நேற்று அவர் மருத்துவமனையில் இருந்து வீடு திரும்பினார். (வ)

# விண்வெளி வீரருடன் வெற்றிவாகை சூடும் ஜேர்மனியர்



ஜேர்மனியைச் சேர்ந்த பொறியியல் நிபுணர் ஒருவர் வெற்றிகரமாக பூமிக்குத் திரும்பியுள்ளார்.

அமெரிக்காவின் சர்வதேச விண்வெளி மையமான நாசாவில் பணிபுரியும் அலெக்சாண்டர் கிரெஸ்ட் என்ற ஜேர்மனிய பொறியியல் நிபுணர், ரஷ்யா மற்றும் அமெரிக்காவை சேர்ந்த விண்வெளி வீரர்களுடன், கடந்த மே 28 ஆம் திகதி பூமியின் சுற்றுபாதையில் பயணம் மேற்கொண்டார்.

சுமார் 6 மாத காலம் பயணம் மேற்கொண்ட இவர் தற்போது தனது சகவீரர்களுடன் கசகஸ்தான் நாட்டில் பரசூட்டின் மூலம் தரையிறங்கியுள்ளார்.

இது குறித்து அவர் கூறுகையில், இந்த பயணம் எனக்கு கடினமாக இருந்தாலும், வித்தியாசமான அனுபவத்தை தந்தது என்று கூறியுள்ளார்.

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



## உலகத்தில் சிறந்தவர்

ஒவ்வொருவரிடமும் பலவகையான கருத்துக்கள் உண்டு. அதில் ஒன்று மிக மோசமான கருத்தான நாம் ஒருவர் தான் உலகத்திலேயே சிறந்தவர் என்பதாகும். அதாவது நமக்கு தான் எல்லாம் தெரியும். நாம் இல்லாவிடின் எதுவும் நடக்காது என்று தமக்கு தாமே புகழ் பாடுவது ஆகும். ஒவ்வொருவரும் பிறரிடமிருந்து கற்க வேண்டிய விடயங்கள் நிறைய உண்டு. நாம் எப்பொழுதும் பிறரிடம் நல்ல விடயங்களை அறிந்து கொள்வதற்கு தயாராக இருக்கவேண்டும். பிறருக்கு நீங்கள் ஒன்றை கொடுக்கும் போது நீங்கள் பிறரிடம் ஒன்றை கொடுப்பதற்கான விலையை உங்களையறியாமலே பெற்றுக் கொள்கிறீர்கள். வானத்திலிருந்து விழுகின்ற மென்மையான பனித்துளி அழகான ரோஜா மலர்களை மலர வைப்பது போல மனிதனுடைய சிந்தனைகளே உலகத்தை மலர வைக்கின்றன. மனிதன் எதை விரும்பினாலும் அந்தக் கடவுள் கொடுக்கிறார். அவன் அதிகாரத்தை விரும்புகிறான், கௌரவத்தை விரும்புகிறான், தேவர்கள் அனுபவிப்பது போன்ற இன்பங்களை விரும்புகிறான், அவை நிறைவேறவும் செய்கின்றன. ஆனால் எந்தச் செயலானாலும் அதன் பலன் நிரந்தரமானதல்ல. ஒரு குறிப்பிட்ட காலத்துக்குள் அந்தப் பலன் தீர்ந்துவிடும். தீர்வதற்குப் பல யுகங்கள் ஆகலாம். ஆனால் அது தீரவே செய்யும். அப்போது தேவர்கள் மறுபடியும் பூமியில் மனிதர்களாகப் பிறந்து, முக்திக்கு வழி தேட மறுபடியும் ஒரு வாய்ப்பினைப் பெறுகிறார்கள். தாழ்ந்த மிருகங்கள் உயர்ந்து, மனிதர்களாகின்றன. பிறகு தேவர்கள் ஆகின்றன. ஒருவேளை மறுபடியும் மனிதர்களாகலாம் அல்லது மிருக்ங்களாகலாம். இதை உணர்ந்து கொண்ட ஒவ்வொரு மனிதரும் என் சொத்துக்களெல்லாம் எனக்குச் சொந்தம் அல்ல, கடவுளுக்கே சொந்தம் என்று அவன் சொல்வான். எல்லாவற்றையுமே கடவுளுக்குச் சொந்தமானதாகத்தான் கருத வேண்டும்.

## சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 3 | | 4 | | | 2 | 7 | |
| | | 6 | 3 | 5 | | | | |
| 8 | | 5 | | | | | 6 | |
| | 1 | | 2 | 4 | | 6 | 9 | 8 |
| | | 8 | | | | 4 | | |
| 4 | 6 | 9 | | 8 | 7 | | 2 | |
| | 8 | | | | | 7 | | 9 |
| | | | | 7 | 4 | 1 | | |
| | 9 | 4 | | | 1 | | 3 | 6 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார் கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண் டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப் பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப் படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 4 | 5 | 6 | 8 | 3 | 2 | 1 | 9 |
| 8 | 3 | 2 | 9 | 1 | 4 | 5 | 7 | 6 |
| 9 | 1 | 6 | 5 | 2 | 7 | 3 | 8 | 4 |
| 3 | 9 | 7 | 2 | 4 | 8 | 6 | 5 | 1 |
| 1 | 6 | 4 | 7 | 3 | 5 | 8 | 9 | 2 |
| 2 | 5 | 8 | 1 | 9 | 6 | 4 | 3 | 7 |
| 6 | 8 | 9 | 4 | 5 | 1 | 7 | 2 | 3 |
| 4 | 2 | 3 | 8 | 7 | 9 | 1 | 6 | 5 |
| 5 | 7 | 1 | 3 | 6 | 2 | 9 | 4 | 8 |

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



தருபவர்: வித்யா



**மேடம்**: இறையருளும் தெய்வ நம்பிக்கையும் கூடும். உங்கள் திறமையில் இருந்து வந்த பின் தங்கிய நிலை இனி மாறும். வெப்பம் சம்பந்தப்பட்ட உடல் உபாதைகள் குறையும். தாயாருடன் இருந்து வந்த கசப்புகள் மறையும்.



**இடபம்**: தாய்வழி உறவினர்களுடன் இருந்து வந்த பிணக்கு நிலை மறைந்து உறவு பிரகாசிக்கும். எனினும் மனைவி வழியில் உள்ள உறவினர்களுடன் கருத்துப் பரிமாற்றங்கள் செய்யும் போது மிகுந்த எச்சரிக்கை தேவை.



**மிதுனம்**: எடுத்த காரியம் கைகூடும். தேவைக்ள் பூர்த்தியாகும். மதிப்பும் மரியாதையும் சிறப்பாக இருக்கும். உங்கள் மீதான அவப்பெயர் மறைந்து செல்வாக்கு மேம்படும். உங்கள் சொல்லுக்குப் பிறர் மரியாதை கொடுப்பர்.



**கடகம்**: கூட்டாளிகளிடையே ஒற்றுமை பலம் ஏற்படும். புதிய ஒப்பந்தங்கள் சற்று தாமதமாக வந்தாலும் முயற்சிகள் எடுக்க வேண்டியிருக்கும். உடன் இருப்போரால் அனுகூலம் ஏற்படும். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டவும்.



**சிங்கம்**: எதிர்பாராத அதிர்ஷ்டம் கிடைக்கும். உத்தியோகம் பார்ப்பவர்கள் முன்னேற்றம் காண்பார்கள். உங்களுடைய கோரிக்கைகளை மேலதிகாரிகள் ஏற்று நடப்பார்கள். விரும்பிய இடத்திற்கு பணி இட மாறுதல் கிடைக்கும்.



**கன்னி**: சில புதிய வியாபார யுக்திகளை நீங்கள் ப்யன்படுத்த வேண்டி வரும். தீவிர முயற்சிகளினாலேயே அரசு சார்ந்த காரியங்கள் நடைபெறும். உறவினர்களுடன் கருத்து பரிமாற்றங்கள் செய்ய வேண்டாம். அது வீண் விவாதங்களில் முடியும்.



**துலாம்**: மதிப்பு மரியாதை கூடி செல்வாக்கு அதிகரிக்கும். சிறுசிறு தடைகள் வரலாம். உங்களைப் பற்றி உங்கள் குடும்பத்தார் புரிந்து கொண்டு அனுசரணையாக நடந்து கொள்வர். குடும்பத்தில் நன்மைகள் வரும்.



**விருச்சிகம்**: ஏதேனும் ஒரு காரணத்தால் குடும்பத்தைவிட்டு பிரிந்து சென்றவர்கள் ஒன்று சேருவார்கள். குடும்பத்தில் அன்பும் பாசமும் அதிகரிக்கும். திருமணம் போன்ற சுபநிகழ்ச்சிகள் இனிதே நடக்கும்.



**தனுசு**: சளி மற்றும் மார்புத்தொல்லை வரலாம். கவனம் தேவை. உத்தியோகம் பார்ப்பவர்களுக்கு முன்னேற்றம் ஏற்படும். கோரிக்கைகள், ஒப்பந்தங்கள் நிறைவேறும். சிலருக்கு பதவி உயர்வு கிடைக்கும்.



**மகரம்**: சக ஊழியர்கள் உதவிகரமாக இருப்பார்கள். வேலை இல்லாமல் தவித்தவர்களுக்கு தகுந்த சம்பளத்துடன் சிறந்த வேலை கிடைக்கும். தொழில் செய்வோருக்கு கடந்த காலத்தை விட வளர்ச்சி வீதம் அதிகரிக்கும்.



**கும்பம்**: எதிரிகளால் இருந்து வந்த தொந்தரவு நீங்கும். தீவிர முயற்சியின் பேரிலேயே அரசிடம் இருந்துதான் கோரிக்கைகள் நிறைவேறும். எதிர்பார்த்திருந்த வெற்றி வாய்ப்புக் கிடைக்கும். பாராட்டுகளும் கிடைக்கும்.



**மீனம்**: வாழ்வில் முன்னேற சீரான வாய்ப்புகள் வந்தாலும் அவ்வப்போது குழப்பமான மன நிலையும் இருக்கும். முன்யோசனையுடன் திட்டமிடல் அவசியம். புதிய தொழிலால் அனுகூலம் ஏற்படும். பயணங்களின்போது கவனமாக இருக்கவும்.

**நாளை**

**ஐப்பசி-27 வியாழக்கிழமை | 13.11.2014**

திதி: ஷஷ்டி கா.06.48 வரை
நட்சத்திரம்: பூசம்
ஶ்ரீ.இ.11.24 வரை

சுபநேரம்:07.37-09.07 வரை
இராகுகாலம்: 01.37-03.07 வரை

# யூனியன் சென்.மேரிஸ், சென் அன்ரனிஸ் மைலோ ஆட்டங்களில் நேற்று வெற்றி

யாழ்ப்பாணம், நவ. 12

நேற்று நடைபெற்ற மைலோ கிண்ண யாழ். லீக் ஆட்டங்களில் ஆனைக்கோட்டை யூனியன், நாவாந்துறை சென். மேரிஸ், பாசையூர் சென். அன்ரனிஸ் ஆகிய அணிகள் வெற்றி பெற்றன.

மைலோ கிண்ண உதைபந்தாட்டத் தொடரின் யாழ். லீக் ஆட்டங்கள் குருநகர் பாடும் மீன் விளையாட்டுக்கழக மைதானத்தில் நேற்று ஆரம்பமாகின. ஆனைக்கோட்டை யூனியன் அணிக்கும் கலை ஒளி அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் யூனியன் வெற்றிபெற்றது.

ஆட்டத்தின் 25 ஆவது நிமிடத்தில் யூனியன் வீரன் நிரேசன் தனக்கு கிடைந்த பந்தை இலாவகமாக கோலாக மாற்றினார். இடைவேளை வரை வேறு கோல்கள் எதுவும் அடிக்கப்படவில்லை.

இடைவேளையின் பின்னர் வேகமாக ஆடிய கலைஒளி 33ஆவது நிமிடத்தில் ஒரு கோல் அடித்து ஆட்டத்தை சமப்படுத்தியது. மயூரன் அந்த கோலை அடித்தார். ஆட்டம் சூடுபிடித்தது. 55ஆவது நிமிடத்தில் யூனியன் மற்றொரு கோலை அடித்தது. திலீபனின் அந்த கோலுடன் அணி முன்னிலை பெற்றது. தொடர்ந்து வந்த நிமிடங்களில் அணிகள் மேலதிக கோல் எதனையும் அடிக்காமல் போகவே யூனியன் வெற்றி பெற்றது.




மற்றொரு ஆட்டத்தில் நாவாந்துறை சென். நீக்கிலஸ் அணியும் பாசையூர் சென். அன்ரனிஸ் அணியும் மோதின. சென். அன்ரனிஸ் வெற்றி பெற் றது. இரு தரப்பினரும் உக்கிரமாக மோதிக் கொண்டாலும் கோல் எதனையும் அடிக்கவில்லை. இறுதியில் சமநிலைதகர்ப்பு உதைகள்வழங்கப்பட்டன. இதில் பாசையூர் சென்.அன்ரனிஸ் 5:4 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

நாவாந்துறை சென். மேரிஸ் அணிக்கும் மயிலங்காடு ஞானமுருகன் அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் சென். மேரிஸ் வெற்றி பெற்றது. இரு அணிகளும் சமபலத்துடன் மோதின. கோல் அடிப்பதற்கு இரு தரப்புகளும் மேற்கொண்ட முயற்சிகள் எதுவும் பயனளிக்கவில்லை. வெற்றி தோல்விக்காக சமநிலை தகர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன. நாவாந்துறை சென். மேரிஸ் 5:4 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

முன்னதாக, மைலோ கிண்ண யாழ். லீக் ஆட்டங்கள் நேற்றுக் காலை சம்பிரதாய்பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டன. முதலில் விளையாட்டு மைதானத்தின் நுழைவாயிலிலிருந்து விருந்தினர்கள் அழைத்து வரப்பட்டனர். தொடர்ந்து விருந்தினர்களுக்கு வீரர்கள் அறிமுகம் செய்து வைக்கப்பட்டனர். பிரதம விருந்தினராக யாழ். உதைபந்தாட்ட லீக்கின் தலைவர் எஸ்.அன்ரனிப்பிள்ளையும் குருநகர் யாகப்பர் ஆலயத்தின் உதவி பங்குத் தந்தை பத்[illegible]நாதனும் நெஸ்லே லங்[illegible] நிறுவனத்தின் விற்பனை[illegible] மேம்பாட்டு அனுசரனை[illegible] உதவி முகாமையாளர் கு[illegible] அகமத்தும் யாழ். மாவ[illegible] விளையாட்டுத்துறை அ[illegible]ரி எம். ஆர். மோகனதா[illegible] யாழ். பொலிஸ் நிலைய[illegible]லை மைப்பீட பிரதம [illegible]லிஸ் அதிகாரி பாலசூரியவும் கலந்துகொண்டனர். (உ-23)

## பலாலி விண்மீன் வி.க. 5 கோல்களால் வெற்றி



யாழ்ப்பாணம், நவ. 12

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையில் நடத்தும் ஆளுநர் கிண்ண உதைபந்தாட்டத் தொடரில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் பலாலி விண்மீன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கம்பர்மலை கழுகுகள் விளையாட்டுக்கழக அணி மோதியது. இதில் பலாலி விண்மீன் விளையாட்டுக்கழக அணி 5:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

இன்று புதன் கிழமை மாலை 3 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கலைமகள் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து பருத்தித்துறை ஐக்கியம் விளையாட்டுக்கழக் அணி மோதவுள்ளது. மாலை 4 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் உதயதாரகை விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நெடியகாடு விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

(உ-23)

# வடமாகாண வர்ண இரவு நிகழ்வுகள் டிசெம்பரில்

வடமாகாண விளையாட்டுத் திணைக்களம் நடத்தும் வர்ண இரவு டிசெம்பர் மாதத்தில் நடைபெறவுள்ளது. விளையாட்டுத் துறையில் சிறப்பாகச் செயற்பட்ட மாகாண வீரர்கள் இந்த நிகழ்வில் கௌரவிக்கப்படுவார்கள்.

விருதுகளை வெல்வதற்குத் தகுதிவாய்ந்த விளையாட்டு வீர, வீராங்கனைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப் படுவதாக விளையாட்டுத் திணைக்களம் அறிவித்துள் ளது.

இலங்கை தேசிய அணியினை பிரதிநிதித்துவப்படுத்தி இலங்கையில் நடைபெறும் அல்லது இலங்கைக்கு வெளியே நடைபெறும் சர்வதேச போட்டியொன்றில் பங்கேற்ற வடமாகாண வீரர்கள், இலங் கைக்கு வெளியே நடை பெறும் சர்வதேசப் போட்டி யொன்றில் அல்லது இலங்கையில்நடைபெறும் சர்வதேச போட்டி யோன்றில் பங்கேற்றுப் பதக்கம் பெற்ற வடமாகாண வீரர்கள், தேசியப் போட்டியில் பங்கேற்று பதக்கம் வென்ற வீரர்கள் ஆகியோர் விண் ணப்பிக்கத் தகுதியுடையவர்கள்.

கடந்த வர்ண இரவு நிகழ்வு நடைபெற்ற திகதிக்கு பின் நடைபெற்ற போட்டிகளில் சிறப்பாகச் செயற்பட்டவர்களுக்கே இந்த ஆண்டு விருதுகள் வழங்கப்படவுள்ளன.

தகுதியானவர்கள் பாடசாலை மாணவர்கள் ஆயின் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப் பத்தை உரிய சான்றிதழின் பிரதியுடன்; பாடசாலை அதி பர், பிரதிக் கல்விப் பணிப் பாளர், மாகாணக் கல்வித் திணைக்களம் ஊடாக பணிப்பாளர், விளையாட்டுத்திணைக் களம், வடமாகாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும் எனக்கேட்கப் பட்டுள்ளனர். மாணவர்கள் அல்லாதோர் மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் ஊடாக பணிப்பாளர், விளையாட்டுத் திணைக்களம், வடமாகாணம், 25, செம்மணி வீதி, நாயன்மார்கட்டு என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும். (உ-23)

# ஹொக்கிப் போட்டி நாளை



தேசிய மட்ட ஹொக்கி அணிகளுக்கு இடையிலான சுற்றுப் போட்டி நாளை வியாழக்கிமை 13ஆம் திகதி தொடக்கம் 16ஆம் திகதி வரை கொழும்பு டொறிங்டன் விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள் ளது மேற்படி போட்டியில் பங்கு கொள்ளவதற்றகாக யாழ். மாவட்ட ஹொக்கி அணி இன்று ரயிலில் கொழும்பு பயணமாகின்றது. (உ-23)



நுவரெலியாவில் இடம்பெற்ற ஆசிரியர்களுக்கான தேசிய மட்ட ஆண்கள் கரப்பந்தாட்டப் போட்டியில் மூன்றாம் இடத்தைப் பெற்ற கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அணியினர். (த-23)

## தாச்சிப் போட்டி வார இறுதியில்

யாழ்;ப்பாணம் நவ 12

வடமாகாண விளையாட் டுத் திணைக்களத்தின் அனுமதியுடன் யாழ்.மாவட்ட தாச்சிச் விளையாட்டுச் சங்கம் நடத்ததும் தாச்சி சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங் கள் எதிர் வரும் சனி,ஞாயிற் றுக்கிழமைகளில் உடுவில் சபாபதிப் பிள்ளை விளை யாட்டு மைதானத்தில் இடம் பெறவுள் ளது.

மேற்படி போட்டியில் 24 விளையாட்டுக்கழகங்கள் பங்குபற்றுகின்றது என போட்டி ஏற்பட்டளர்கள் தெரிவித்துள்ளனர். (த-23)

## தந்தையாகிறார் டோனி



இந்திய கிரிக்கெட் அணியின் தலைவராக உள்ள டோனி விரைவில் தந்தையாகப் போகிறார்.

டோனிக்கும், சாக்ஷிக்கும் 2010, ஜூலை 4ஆம் திகதி திருமணம் நடைபெற்றது. இதனையடுத்து நேரம் கிடைக்கும் போது எல்லாம் சாக்ஷி கர்ப்பமாக இருக்கிறார் என ரசிகர்கள் எதையாவது அவிழ்த்து விடுவார்கள்.

அப்படி நல்ல விடயம் நடந்தால் நானே சொல்கிறேன் என்று சாகஷியும் அடிக்கடி தெரிவிப்பார். இந்நிலையில் டோனி குடும்பத்தில் குவா... குவா சத்தம் விரைவில் கேட்கப் போகிறது என வட இந்திய ஊடகங்கள் சில செய்தி வெளியிட்டுள்ளன.

ஏற்கனவே, டோனி இலங்கைக்கு எதிரான நடப்பு ஒருநாள் போட்டிகளில் விளையாடாமல் ஓய்வெடுத்து வருகிறார். மகிழ்ச்சிச் செய்தி தந்த மனைவியுடன், பொழுதை கழிக்கவே டோனி கிரிக்கெட்டில் தொடரில் இருந்து ஒதிங்கி விட்டதாகவும் கூறப்படுகீறது. (த)

# சுப்பர் ஓவர் முறை இல்லை பரிசுத் தொகை ரூ.180 கோடி

உலகக்கிண்ணக் கிரிக்கெட் போட்டி அடுத்த ஆண்டு பெப்ரவரி 14 ஆம் திகதி முதல் மார்ச் 29 ஆம் திகதி வரை ஆஸ்திரேலியா, நியூசிலாந்தில் நடக்கிறது.

இந்தப் போட்டி குறித்து சர்வதேச கிரிக்கெட் சபை நேற்று ஆலோசனை செய்தது. இதன்படி உலக கிண்ணத்தில், நொக்அவுட்' சுற்றில் சுப்பர் ஓவரை நீக்குவது என்று முடிவு செய்யப்பட்டது.

காலிறுதியிலோ அல்லது அரை இறுதியிலோ ஆட்டம் சமநிலையில் முடிந்தால் சுப்பர் ஓவர் முறை பின்பற்றப்படமாட்டாது. குரூப் ஆட்டத்தில் அதிக புள்ளிகள் பெற்றதன் அடிப்படையில் முடிவு செய்யப்படும்.

இதேபோல இறுதி ஆட்டம் சமநிலையில் முடிந்தாலோ அல்லது மழையால் பாதிக்கப்பட்டு நடைபெற முடியாமல் போனாலோ இரு அணிகளுக்கும் இணைத்து கூட்டாக கிண்ணம் அளிக்கப்படும்.

உலகக் கிண்ணத்தில் நடைபெறும் 49 ஆட்டமும் நடுவரின் முடிவை மறுபரிசீலனை செய்யும் டி.ஆர்.எஸ். முறை பின்பற்றப்படும். இந்தப்போட்டியின் மொத்த பரிசு தொகை ரூபா 180 கோடியாகும். 2011ஆம் ஆண்டு உலக கிண்ணத்தை விட இது 20 சதவீதம் கூடுதலாகும். இந்தியா, இலங்கை, பங்களாதேஷ் ஆகிய 3 நாடுகள் இணைந்து நடத்திய 2011ஆம் ஆண்டு உலக கிண்ணத்தில் மொத்தம் ரூபா 134 கோடி பரிசு தொகை தான் வழங்கப்பட்டது. 2015 ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தில் சம்பியன் பட்டம் பெறும் அணிக்கு ரூபா 7 கோடி பரிசாக வழங்கப்படும். அதே நேரத்தில் தோல்வி எதையும் சந்திக்காமல் கிண்ணத்தை வென்றால் ரூபா 72 கோடி வழங்கப்படும். 2ஆவது இடத்தைப் பிடிக்கும் அணிக்கு ரூபா 31 கோடியும், அரை இறுதியில் தோற்கும் அணிகளுக்கு தலா 10 கோடியும், கால் இறுதியில் தோற்கும் 4 அணிகளுக்கு தலா ரூபா 5 கோடியும் வழங்கப்படும். (து)




# பாவம் பிஸ்டோரியஸ்



தனது காதலியை துப்பாக்கியால் சுட்டுக்கொன்றமை தொடர்பாக 5 வருட கால சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ள தென்னாபிரிக்க பராலிம்பிக் நட்சத்திரமான ஒஸ்கார் பிஸ்டோரியஸ், எதிர்பார்க்கப்பட்டதைப் போல் 10 மாத காலத்தின் பின் பிணையில் விடுவிக்கப்படுவது சந்தேகம் எனத் தெரிவிக் கப்படுகிறது.

ஒஸ்கார் பிஸ்டோரியஸின் சிறு வயதிலேயே நோயொன்றின் காரணமாக அவரின் இரு கால்களும் முழங்காலுக்குக் கீழ் துண்டிக்கப்பட்டன. இதனால் அவருக்கு கணுக்கால் கிடையாது. இந்நிலையில், சிறையிலிருந்து பிணையில் விடுவிக்கப்பட்டால் அவரை கண்காணிப்பதற்காக கணுக்காலில் கண்காணிப்புச் சாதனங்களை பொருத்த முடியாது. இதனால் அவர் தொடர்ந்தும் சிறையிலேயே இருக்க நேரிடும் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனராம்.


கடந்த வருடம் காதலர் தினத்தன்று அதிகாலை தனது காதலியான மொடல் அழகி ரீவா பிஸ்டோரிஸை ஒஸ்கார் பிஸ்டோரியஸ் சுட்டுக்கொன்றார். ரீவாவை வேண்டுமென்றே ஒஸ்கார் பிஸ்டோரியஸ் கொல்லவில்லை என ஒஸ்கார் பிஸ்டோரியஸ் கூறியதை நீதிமன்றம் ஏற்றுக்கொண்டது. எனினும் கைமோசக் கொலை வழக்கில் அவர் குற்றவாளியாக காணப்பட்டு 5 வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

அதையடுத்து ஒஸ்கார் பிஸ்டோரியஸ் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டுள்ளார். நன்னடத்தை அடிப்படையில் 10 மாத காலத்தின் பின் அவர் சிறையிலிருந்து விடுவிக்கப்படலாம் எனக் கருதப்பட்டது. பொதுவாக இவ்வாறு விடுவிக்கப்படும் கைதிகளின் நடமாட்டத்தைக் கண்காணிப்பதற்காக அக்கைதிகளின் கணுக்காலில் கழற்ற முடியாத கண்காணிப்புச் சாதனங்கள் பொருத்தப்படும். ஆனால், ஒஸ்கார் பிஸ்டோரியஸுக்கு கணுக்கால் இல்லாததால் அவருக்கு மேற்படி சாதனத்தை பொருத்த முடியாது எனவும் செயற்கைக் காலில் பொருத்தப்பட்டால் அவரை முறையாக கண்காணிக்க முடியாது எனவும் அதிகாரிகள் கூறியுள்ளனர். கண்காணிப்புக் கருவி பொருத்தப்பட்ட செயற்கைக் காலைக் கழற்றி வைத்துவிட்டு வேறு செயற்கைக் காலுடன் ஒஸ்கார் பிஸ்டோரியஸ் நடமாட முடியும் என்பதே இதற்குக் காரணம்.

எனவே ஒஸ்கார் பிஸ்டோரியஸுக்குப் பொருத்தமான கண்காணிப்பு முறைமைகள் தம்மிடம் இல்லாததால் 5 வருடகாலத்தையும் சிறையிலேயே ஒஸ்கார் பிஸ்டோரியஸ் கழிக்க வேண்டியிருக்கும் என சிறைச்சாலை அதிகாரிகள் தெரிவித்துள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

அவரின் தண்டனைக்கு எதிரான மேன்முறையீட்டு வழக்கு விசாரணை டிசெம்பர் 9 ஆம் திகதி ஆரம்பமாகும் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் மேற்படி தகவல் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (கு)

# உத்தப்பா, சர்மா மீண்டும் அணியில்



இந்தியாவுக்கு சுற்றுலா மேற்கொண்டுள்ள இலங்கை கிரிக்கெட் அணி 5 போட்டிகளைக் கொண்ட ஒருநாள் போட்டி தொடரில் விளையாடி வருகிறது.

இதில் முதல் 3 போட்டியில் வெற்றி கண்ட இந்திய அணி 3-0 என்ற கணக்கில் தொடரை வென்றுள்ளது.

இந்த நிலையில் இலங்கைக்கு எதிரான எஞ்சிய நான்காவது ஒருநாள் போட்டி கொல்கத்தாவில் நாளை 13ஆம் திகதியும், ஐந்தாவது மற்றும் கடைசி ஒருநாள் போட்டி ராஞ்சி யில் வருகிற 16ஆம் திகதியும் நடைபெறவுள்ளது.

இந்த இரண்டு போட்டிகளுக்கான இந்திய அணி மும்பையில் நேற்று நடந்தது.

வலது கைவிரலில் ஏற்பட்ட காயம் காரணமாக முதல் 3 போட்டிகளிலும் விளையாடாத அணித்தலைவர் டோனி எஞ்சிய இரண்டு போட்டியிலும் விளையாட மாட்டார். இதனால் விராட் கோஹ்லி அணித்தலைவராக தொடருவார்.

ஷிகர் தவான், ரவீந்திர ஜடேஜா ஆகியோருக்கு ஓய்வு கொடுக்கப்பட்டுள்ளது. விக்கெட் கீப்பர் விருத்திமான் சஹா, காயம் அடைந்த வேகப்பந்து வீச்சாளர் இஷாந்த் ஷர்மா, சகலதுறை வீரர் ரவீந்திர ஜடேஜா, அமித்மிஸ்ரா, எம்.விஜய் ஆகியோர் அணியில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

ரொபின் உத்தப்பா இலக்குக் காப்பாளராக அணியில் இடம் பிடித்துள்ளார். காயத்தில் இருந்து மீண்ட ரோஹித் சர்மா 2 மாதத்துக்கு பிறகு அணியில் இடம் பெற்றுள்ளார். வேகப்பந்து வீச்சாளர் வினய்குமார், சுழற்பந்து வீச்சாளர் கரண்ஷர்மா, கேதர் ஜாதவ் ஆகியோர் அணியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அணியில் இருந்து நீக்கப்பட்டாலும் இஷாந்த் ஷர்மா அணியினருடன் பயணிப்பார். அவரது காயத்தை அணியின் பிசியோதெரபிஸ்ட், டிரெய்னர் ஆகியோர் கவனிப்பார்கள் என்று இந்திய கிரிக்கெட் சபைச் செயலாளர் சஞ்சய் பட்டேல் தெரிவித்துள்ளார். (கு)

# கடும் கோபத்தில் மத்தியூஸ்

இந்திய அணியுடனான ஒருநாள் தொடரை இழந்ததற்குத் துடுப்பாட்டக்காரர்களின் மோசமான ஆட்டம்தான் காரணம் என இலங்கை அணித் தலைவர் மத்தியூஸ் குற்றம் சாட்டியுள்ளார்.

இலங்கை அணி இந்தியாவுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டு ஒருநாள் தொடரில் விளையாடி வருகிறது. முதல் மற்றும் 2ஆவது ஒருநாள் போட்டிகளில் வெற்றி யடைந்திருந்த இந்திய அணி, 3ஆவது ஒருநாள் போட் டியிலும் வெற்றி பெற்று தொடரைக் கைப்பற்றியது. இந்தத் தோல்வி பற்றி இலங்கை அணித் தலைவர் மத்தியூஸ் கூறுகையில், டில்ஷான், ஜெயவர்த்தன தவிர மற்றத் துடுப்பாட்டக்காரர்கள் மோசமான ஆட்டத்தையே வெளிப்படுத்தினர்.

வெற்றி பெற வேண்டும் என்ற எண்ணம் யாருக்கும் இருந்தவாறாகத் தெரியவில்லை. ஆனால் இந்த போட்டி வீரர்களின் நடவடிக்கையைத் தெரிந்து கொள்ள ஒரு நல்ல பயிற்சிப் போட்டியாக அமைந்தது. 240 ஓட்டங்களை வைத்து இந்திய அணிக்குப் பந்து வீசுவது என்பது பந்து வீச்சாளர்களுக்குச் சவாலான ஒரு விடயம். நாங்கள் ஒரே தவறைத் தான் மீண்டும் செய்துள்ளோம். 300க்கும் மேல் ஓட்டங்கள் எடுத்தால் தான் இந்திய அணிக்கு நெருக்கடியை ஏற்படுத்த முடியும்.

ஆனால் 3 போட்டிகளிலும் நாங்கள் சரியாக விளையாடவில்லை. சரியாகத் துடுப்பெடுத்தாடவில்லை. மீதமுள்ள 2 போட்டிகளுக்கு இலங்கை அணியில் சில மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

சங்கக்கார, தம்மிக பிரசாத், சுராஜ் ரந்தீவ், உப்புல் தரங்க ஆகியவர்களுக்கு பதிலாக திரிமன்னே, சந்திமால், ஷமிந்த ஏராங்க, அஜந்த மெண்டீஸ் ஆகியோர் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று தெரிவித்துள்ளார். (கு)



## தொடர்ச்சிகள்

### இலவசக்

விடப்பட்ட வயோதிபர்களுக்கு 50 ஆயிரம் ரூபா வீதம் 5 ஆயிரம் பயனாளிகளுக்கு வடக்கு மாகாணசபை வழங்க முன்வர வேண்டும்.

தற்போதைய அநீதியான திட்டத்தை ரத்துச் செய்து, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கட்சித் தலைவர்கள் கூடிப் பேசி ஆரோக்கியமான முடிவுகளை மேற்கொள்ள வேண்டும்" என்று குறித்த கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் கீழ் நீதியை எதிர்பார்க்கும் உறுப்பினர்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த கடிதத்துடன், இந்தியத் துணைத்தூதரகத்துக்கு திருப்பி பதில் அனுப்பும் கடிதமும் இணைத்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. வடக்கு மாகாணசபையின் 38 உறுப்பினர்களுக்கும் இந்தக் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (ற-5)

### ஹுசைனின்

னின் கருத்துக்களை ஐ.நா பொதுச் செயலர் ஆதரிக்கிறார். இலங்கை அரசு ஒத்துழைக்க வேண்டும் என்ற சயிட் அல் ஹுசைனின், நிலைப்பாட்டை அவர் ஏற்றுக் கொள்கிறார். அவர்களை ஒத்துழைக்குமாறு நாம் தொடர்ந்து வலியுறுத்துவோம்"- என்று தெரிவித்துள்ளார். (ற-5)

### யாழ்.

யாழ்ப்பாணத்திலிருந்து செவ்வாய்க்கிழமை, வியாழக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை ஆகிய நாள்களில் 3 சேவைகள் இரவு 8.40 மணிக்கு புறப்படும் ரயில் சேவை அதிகாலை 5.30 மணிக்கு கோட்டை ரயில் நிலையத்தை சென்றடையும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-14)

# கோஹ்லிக்கு நல்லதொரு வாய்ப்பு




ஆஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் அணித் தலைவராக களமிறங்கவுள்ள கோஹ்லிக்கு நல்ல ஒரு வாய்ப்பு அமைந்துள்ளது என டிராவிட் தெரிவித்துள்ளார்.

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான தொடரின் முதல் போட்டியில் அணித் தலைவர் டோனி இல்லாததால் கோஹ்லி தலைமையில் இந்திய அணி களமிறங்குகிறது.

இந்நிலையில் டோனியை விட தான் வேறுபட்டவர் என்பதை காட்ட கோஹ்லிக்கு சிறந்த வாய்ப்பு கிடைத்திருப்பதாக முன்னாள் அணித்தலைவர் டிராவிட் கூறியுள்ளார்.

இதுபற்றி ஆங்கில இணையதளம் ஒன்றிற்கு பேட்டியளித்த டிராவிட், டெஸ்ட் போட்டியில் அணியை வழி நடத்த கோஹ்லிக்கு நல்ல வாய்ப்பு கிடைத்துள்ளது. விராட் கோஹ்லி நிச்சயம் இந்த பொறுப்பை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்வார். ஒருநாள் கிரிக்கெட் மற்றும் ஐபிஎல் கிரிக்கெட்டில் அவரை சற்றுக் குறைவான சந்தர்ப்பங்களில் பார்த்தாலும், அவருக்கு நல்ல கிரிக்கெட் அறிவு இருக்கிறது.

அவர் களத்தில் சில விடயங்கள் நடக்க வேண்டும் என்று விரும்புபவர். அதை அவர் டோனியிடமிருந்தும் கற்றுக் கொண்டிருப்பார். டெஸ்ட் போட்டிகளில் அவர் துடுப்பாட்டம் மட்டும் சீரான முறையில் சிறப்பாக அமைந்து விட்டால், டோனிக்குப் பிறகு இந்திய அணியின் அணித்தலைவர் பொறுப்பிற்கு கோஹ்லி மிகத் தகுதியானவர் என்றே நான் கருதுகிறேன்.

மேலும், தனது இன்னிங்ஸ், துடுப்பாட்டம் பற்றியே யோசித்துக் கொண்டிருக்காமல் அணித்தலைவர் பதவி பற்றியும் அவர் யோசிப்பது அவருக்கு நன்மை செய்யும். ஏற்கெனவே ஆஸ்திரேலியாவில் அவர் சதம் எடுத்துள்ளார். கண்டிப்பாக இந்த அனுபவம் அவருக்கு கைகொடுக்கும் என்று தெரிவித்துள்ளார். (த)


## ஒத்துமாறல்

கிளிநொச்சி மாவட்டத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றுபவர் கொழும்பு மாவட்டத்தில் உள்ள ஒருவருடன் ஒத்துமாற விரும்புகிறார்.

(54007) (12.6) தொடர்பு: 077 857 2110

## விற்பனை பிரதிநிதிகள் தேவை

எமது நிறுவனத்திற்கு கீழ் காணும் தகைமையுடைய விற்பனைப் பிரதிநிதிகள் தேவை. கல்வித்தகைமை O/L போதுமானது. இடங்கள் சுன்னாகம் மற்றும் நெல்லியடி. மோட்டார் சைக்கிள் அனுமதிப்பத்திரம் இருப்பின் விரும்பத்தக்கது. தகுந்த சம்பளம் மற்றும் ஊக்குவிப்புத் தொகை வழங்கப்படும்.

(54006) (12.3.6) தொடர்பு: 077 386 7696/021 224 0514

## புதிய வகுப்புகள் ஆரம்பம்

தரம் 06 முதல் O/L வரையான கணித, விஞ்ஞான பாடங்களும்,
தரம் 10 மற்றும் 11 இற்கான ICT (Tamil, English medium) வகுப்புகளும்
December 01 முதல் ஆரம்பம்

**Rapid IT Solution** 29, இராமநாதன் வீதி, நாச்சிமார் கோவிலடி, (ராஜா கிறீம் ஹவுஸ் அருகில்)
T.P- 0779185724

## விற்பனைக்கு

ஒரு மாதம் நிரம்பிய ஜேர்மன் செப்பர்ட் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு.

(54008) (12.6) தொடர்புகளுக்கு: 077 867 0780


## கண்ணீர் அஞ்சலி

யாழ். மாவட்டச் செயலக நலன்புரிக் கழகத்தின் உறுப்பினரும், மாவட்டச் செயலக, யாழ். மாவட்ட தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அலுவலகத்தின் நேரக் கணிப்பாளராகக் கடமையாற்றும் சு.சஞ்சீவ்குமார் அவர்களின் தந்தை

### அமரர் சின்னையா சுந்தரலிங்கம்

அவர்கள் 11.11.2014 ஆம் திகதி இறைபதம் அடைந்ததையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியினைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது குடும்பத்தினருக்கு மாவட்டச் செயலகத்தின் சார்பில் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**யாழ். மாவட்ட செயலக நலன்புரிக் கழகம்.**

## மரண அறிவித்தல்



### திருமதி மகேஸ்வரி சின்னையா

சுழிபுரம் பத்திரகாளி கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மகேஸ்வரி சின்னையா நேற்று (11.11.2014) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையாவின் மனைவியும், அப்புத்துரை (உடுப்பிட்டி), கனகாம்பிகை, ஞானாம்பிகை (ஆசிரியை, சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி), பாலச்சந்திரன் ஆகியோரின் அன்புத் தாயும், தர்மலிங்கம் (ஐயா அண்ணை), இராஜேஸ்வரி, மகேஸ்வரன் (முன்னாள் காங்கேசன் சிமெந்து கூட்டுத்தாபன தொழில்நுட்பவியலாளர்) ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.11.2014) புதன்கிழமை பி.ப 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக திருவடி நிலை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்

பத்திரகாளி கோயிலடி சுழிபுரம்.

## மரண அறிவித்தல்

### திருமதி சுபாசினி தயாளன்

பலாலியைப் பிறப்பிடமாகவும், இராமநாத புரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுபாசினி தயாளன் நேற்று (11.11.2014) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் செல்லத்துரை நாகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகளும், நடராஜா தயாளனின் அன்பு மனைவியும், தனுசிகாவின் அன்புத் தாயாரும், நிமலன், கவிதா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.11.2014) புதன்கிழமைபி.ப 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இராமநாதபுரம் பொது இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

**வட்டக்கச்சி, இராமநாதபுரம்.** 0774138978

## மரண அறிவித்தல்



### கந்தையா பாலச்சந்திரன்

கொக்குவில் குளப்பிட்டியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கந் தையா பாலச்சந்திரன் நேற்று (11.11.2014) காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - அழகம்மா தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்றவர்களான சந்திரசதாசிவம், பரமேஸ்வரி ஆகி யோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் - செல்லம்மா தம்பதியரின் மருமகனும் இராசலட்சுமியின் அன்புக் கணவரும், தர் சினி (ஜேர்மனி), தனஞ்செயன் (லண்டன்), குமுதினி (கனடா), சுபாசினி ஆகி யோரின் பாசமிகு தந்தையும் சந்திரகுமார், சந்திரசேகரம், சந்திரலீலா (சுவிஸ்) ஆகியோரின் சிறிய தந்தையும் அரியதாஸ், வசந்த குமாரி, ரஞ்சினி, மீனா, முரளிதாஸ், ராஜசூரியர் (ஜேர்மனி), மதனராஜி (லண்டன்), ரகுதரன்(கனடா) ஆகியோரின் அன்பு மாமா வும் விஜயலக்சுமி, சண்முகராஜா, நாகராஜா ஆகியோரின் மைத்து னரும் குருபரன், சுபாங்கன், அக்ச யன், துஷாந், கஜானன், கம்சியன், சானுஜா, யனுகியா, மது சன், ராகவி ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: தனஞ்சயன் (மகன்)
முரளிதாஸ் (மருமகன்)

## மரண அறிவித்தல்



### செல்லத்தம்பி தியாகராசா

மண்டைதீவு (8)ஐப் பிறப்பிடமாகவும், ஸ்கந்தபுரம் கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்தம்பி தியாகராசா நேற்று (11.11.2014) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்தம்பி - விசாலாட்சி தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - நாகமுத்து தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற சின்னம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற வர்களான குமாரசாமி, நாகராசா, அருமைநாயகம், மற்றும் அரியமணி ஆகியோரின் சகோதரரும், சச்சிதானந்தம், சந்தானலட்சுமி (பிரான்ஸ்), ராஜேஸ்வரன் (வடமாகாண விளையாட்டுத் திணைக்களம்), வர்ணலிங்கம், வர்ணலட்சுமி, ஜெயமாலினி, காலஞ்சென்ற ஜெயதேவி ஆகியோரின் பாசமிகு தந்தையும், புஸ்பராணி, காலஞ்சென்ற செல்வநாயகம் மற்றும் சியாமளா, சந்திரகலா, வரதராசா, விநாயகமூர்த்தி ஆகியோரின் மாமனும், சுதன் - மனோரஞ்சினி (லண்டன்), தயாளினி ஜெயக்குமார், மதன் சாந்தினி, கஜன், லதா புவனேஸ்வரன் (சுவிஸ்), கௌரி - கோபு, காலஞ்சென்ற தவநேசன் மற்றும் பாலன் - தர்சி (பிரான்ஸ்), சியாம்ராஜ் (லண்டன்), நிருபராஜ் (யாழ். பல்கலை), சுகராஜ், கபில்ராஜ், வினுராஜ், சாந்தன் - சுதா, சாந்தி - குமார், காலஞ்சென்ற யுவா மற்றும் ஜீவன், ரிசாயினி, தீபா - சிவகுமார்(லண்டன்), சசிகாந், காலஞ்சென்ற சுரேஸ் மற்றும் சர்மி, காலஞ்சென்ற அசோ, மற்றும் கிஸ்னா, சுபா, கபில்காந் ஆகியோரின் பேரனும், சுரோ, பிரவீன், பிரதீஸ் (லண்டன்), மதுஷா, மதுஷன், வனுஷன், அபிகேசன், அகிம்சன், பிரவீனா, நிதர்சனா (சுவிஸ்), கானகன், நிதுர்சிகா, டிலஞ்சிதா, இனியா (பிரான்ஸ்), சீனு, அனு, சீனுசன், றுட்சகுமார், தேனிகா, கர்னிகா, சஸ்சின் (லண்டன்), நிசாந் ஆகியோரின் பூட்டனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.11.2014) புதன்கிழமை பி.ப 2 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அக்கராயன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சச்சிதானந்தமூர்த்தி (மகன்)
பிள்ளைகள்.

299, ஸ்கந்தபுரம், கிளிநொச்சி.

## மரண அறிவித்தல்



### மாணிக்கம் கர்ணசாமி

சங்கானை தொட்டிலடியைப் பிறப்பிடமாகவும், மூளாய் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கம் கர்ணசாமி கடந்த (10.11.2014) திங்கட்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கம் - சின்னத் தங்கம் தம்பதியரின் அருமை மகனும் காலஞ்சென்ற வர்களான பொன்னம்பலம் - மீனாட்சி தம்பதியரின் அன்பு மரு மகனும் காலஞ்சென்ற உமாதேவியின் அன்புக் கணவரும் புஸ்பராஜா,. லோகாஞ்சனா, கிருஷ்ணவேணி, குணா ஆகியோரின் பாசமிகு தந்தையும், விஜயராணி, அருந்தவ நாதன், கமலநாதன், ரஜி, ஆகியோரின் அன்பு மாமனும் காலஞ் சென்றவர்களான இளையதம்பி, பொன்னம்மா, சங்கரப் பிள்ளை, ஆறுமுகம், கனகம்மா, ஆகியோரின் அன்புச் சகோதரனும் துளசிதாசன், அரவிந்தை, அலர்விழி, லவன், லக்மி, அனுசாந், கீர்த்தனா, உஷானி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.11.2014) புதன்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மூளாய் பித்தனை மயானத்துக்கு எடுத்துச் செல்லப் படும் இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**மூளாய் மேற்கு,
சுழிபுரம்.**

**தகவல்:
குடும்பத்தினர்**

# கண்ணீர் கவிதாஞ்சலி

## முத்தையா திருநாவுக்கரசு

(முன்னாள் நீதிவான், மாவட்ட நீதிபதி- சிரேஷ்ட சட்டத்தரணி, தலைவர்-யாழ்ப்பாண மேல்நீதிமன்ற சட்டத்தரணிகள் சங்கம்)



நேர்மையும் நெஞ்சுரமும், வஞ்சமிலாப் பெருமனமும்
செந்தமிழில் சொல்வளமும், ஆற்றுநடை ஆங்கிலமும்
கைவந்த கவிதையுடன் வலம் வந்த நகைச்சுவையும்
சட்ட அறிவோடு சமூகச் சிந்தனையும்
நீதிவானாக நிமிர்ந்த நேர்வாழ்வும்
வயோதிபத்தின் வாசலிலும் வனப்பான வசீகரமும்....
அத்தனையும் ஓர் கவிதை ! அழகான தமிழ்க் கவிதை !!
நாவுக்கு அரசானாய்! நம் மண்ணின் "திரு" மகனே !!
நனையும் விழிகளுடன் நமது அஞ்சலிகள்!!! (54005) (10.6.3)

**யாழ்ப்பாண மேல்நீதிமன்ற சட்டத்தரணிகள்.**

# துயர் பகிர்கின்றோம்

Dr. திருநாவுக்கரசு குமணன்
(வைத்திய நிபுணர்)
அவர்களின் அன்புத் தந்தை

## முத்தையா திருநாவுக்கரசு

(J.P.U.M ஓய்வுநிலை மாவட்ட நீதிபதி, பிரபல சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிஸ், கவிஞர் (விகடகவி))



அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் எமது வைத்திய நிபுணர் திருநாவுக்கரசு குமணன் அவர்களுக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அவரின் ஆத்மா சாந்தியுற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

**வைத்தியர்கள்,**
**தாதிய உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள்.**
**விடுதி இல.01, 07 (prof unit)**
**போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.** (53996) (10.6.3)

## சிறுவர் உரிமை குழுக்களுக்கான செயலமர்வு

காத்தான்குடி, நவ.12

காத்தான்குடி பிரதேச செயலகப் பிரிவில் சிறுவர் உரிமை கண்காணிப்புக் குழுக்களின் செயற்பாடுகளை வினைத்திறன் மிக்கதாக்கும் பொருட்டு சிறுவர் உரிமை கண்காணிப்புக் குழுக்களுக்கான செயலமர்வு புதிய காத்தான்குடி தெற்கு பலநோக்கு மண்டபத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இது தொடர்பில் காத்தான்குடி பிரதேச செயலகப் பிரிவின் சிறுவர் மேம்பாட்டு உத்தியோகத்தர் கே.சக்திநாயகம் கூறுகையில்:-

கிராம ரீதியாக அமைக்கப்பட்டுள்ள சிறுவர் உரிமை கண்காணிப்புக் குழுக்களின் செயற்பாடுகளை வினைத்திறன் மிக்கதாக்குவதுடன் சிறுவர்களின் பிரச்சினைகளை இந்தக் குழு அடையாளப்படுத்தி அவர்களின் தேவைகளைக் கண்டறிவது தொடர்பில் விழிப்புணர்வூட்டும் நடவடிக்கையாக இந்தச் செயலமர்வு நடத்தப்படுகின்றது எனத் தெரிவித்தார். (ஓ-10)

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

# கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரி ஆசிரியர்
வ. முத்துக்குமாரு அவர்களின்
அன்புத் தந்தை

## முருகர் வல்லிபுரம்

அவர்கள் காலமான செய்திகேட்டுத் துயர் கொள்கின்றோம். அன்னாரின் உறவுகளுடன் துயரினை பகிர்ந்து அவர்தம் ஆத்மசாந்திக்காக இறைவனை வேண்டுகின்றோம். (47333) (10.6)

**கல்லூரிச் சமூகம்,**
**யா/கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி.**

# மரண அறிவித்தல்

## செல்லையா கணேசபிள்ளை

(ஓய்வுபெற்ற கன்னாகம் ப.நோ.கூ.ச. முகாமையாளர்)



இணுவில் மேற்கு (வட்டுவினி)யைப் பிறப்பிடமாகவும், ஸ்ரீபரராஜசேகரப்பிள்ளையார் கோயிலடி, இணுவில் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா கணேசபிள்ளை நேற்று (11.11.2014) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சாரதாதேவியின் அன்புக் கணவரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறியத்தரப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஸ்ரீபரராஜசேகரப்பிள்ளையார் கோயிலடி,
இணுவில் தெற்கு. (54000)(12.3.6)

தகவல்: மைத்துனர்கள்,
க.பாலச்சந்திரன் (கனடா),
க.இளமுருகன் (மலி.இந்தியா).

# மரண அறிவித்தல்

## செல்வராஜா பாஸ்கரன்

நல்லூர் முத்திரைச் சந்தையைப் பிறப்பிடமாகவும், ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வராஜா பாஸ்கரன் 07.11.2014 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செல்வராஜா மற்றும் நாகேஸ்வரியின் புதல்வனும், சிவரஞ்சினியின் (ஜேர்மனி) அன்புக் கணவரும், காலஞ்சென்ற சிவாஜினி மற்றும் மீனலோஜினி (ஜேர்மனி), சிறிதரன் (அமெரிக்கா), முரளிதரன் (சவுதி அரேபியா), ராஜினி (ஜேர்மனி), பகீரதன் (ஜேர்மனி), குமுதினி (கனடா), நாகலோஜினி ஆகியோரின் சகோதரனும், குகமூர்த்தி, குனேந்திரன், வாசுதேவன், முத்தழகன், யோகேந்திரன், விஜயா, வானி,கஜி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஜேர்மனியில் 18.11.2014 செவ்வாய்க்கிழமை நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் தெரியப்படுத்துகின்றோம்.

தகவல்: செ.நாகேஸ்வரி (தாயார்),
(பரி) யோ.நாகலோஜினி (சகோதரி).
077 673 6886
(53998) (12.3.6)

# விந்தைத் தமிழ் பொழிந்த "விகடகவி" போனாரோ....?

## "விகடகவி" மு.திருநாவுக்கரசு

(ஓய்வுநிலை மாவட்ட நீதிபதியும், சட்டத்தரணியும், பிரசித்த நொத்தாரிசும்)



தரும தேவதையின் தலைமகனார் போனாரோ?
தங்கத் தமிழ் பொழிந்த தமிழரசர் மறைந்தாரோ?
பெருமை தமிழ் "விகட கவியார்" இன்றிங்கு
பேச்சற்று ஓய்ந்தாரோ? பேரிருளிற் தவித்தோமே!
அருளும் அன்பும் அறமுந்தன் மூச்சாகி,
அகிலம் அளந்துயர்ந்த அறிவாளர் என்னானார்?
இருளில் இடருற்றோம்! இறைதாளில் எம்மண்ணில்
இனிமைப் பேறடைய இதயத்தால் அஞ்சலித்தோம்!
ஓம் சாந்தி

மனமுருகி அஞ்சலிப்போர்:
றூபா பல்பொருள் வாணிபம் - யாழ்ப்பாணம், சிறிவிக்னேஸ்வரா - சாவகச்சேரி
அம்பிகா டிஸ்பென்சரி - சாவகச்சேரி, குகன் ஸ்ருடியோ - சாவகச்சேரி
(சி17622) (12.3.6)

## நினைவுக் கண்ணீர்க் காணிக்கை

### "விகடகவி" முத்தையா திருநாவுக்கரசு

(ஓய்வுபெற்ற நீதிபதி)



அன்பின் ஊற்றாய் அமைதியின் பிறப்பிடமாய்
விகடமொழி பேசி சிரிக்க வைப்பீரே!
இன்ப வாழ்வில் எமக்கு நல்வழி காட்டினீர்!
ஈகையின் பெறுமதி மொழிந்த கவிஞரே!
நீதியும் நிம்மதியும் நிறைந்த வாழ்வில்
எம்முடன் பழகிய நாள்கள் எத்தனை?
சோதி மயமான இறைவனுடன் இணைந்து
ஒளி வீசப் பிரார்த்திக்கின்றோம்.

எமது நிறுவன வளர்ச்சிக்கு வழிகாட்டியாயிருந்த அவரது ஆத்மா எல்லாம்வல்ல கைலாசபிள்ளையாரின் திருவடி நிழலில் அமைதிபெறப் பிரார்த்திப்பதோடு, அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**தியாகி அறக்கொடை நிறுவனம்,**
**527, நாவலர் வீதி,**
**நல்லூர், யாழ்ப்பாணம்.**

(C/17623)
(10.6.3)

**ஸ்தாபகர்,**
**பணிப்பாளர்,**
**பணியாளர்கள்.**

## ஓராண்டு நினைவலைகள்

தாயின் மடியில்
23 . 09 . 1977



நோயின் பிடியில்
25 . 10 . 2013

### அமரர் கணேசன் சிறிதரன்

புங்கையிலே பிறப்பெடுத்தாய்
புன்னகையால் எமையணைத்தாய்
எங்களது உயர்வுக்காய்
ஏகினாய் கனடாவுக்கு
இங்குவந்து மணமுடித்து
இருவருடம் ஆவதற்குள்
எங்கையா சென்றுவிட்டாய்
எம்மையிங்கே ஏங்கவிட்டு!

பற்றுப் பாசமுடன்
பாரினிலே உனைவளர்த்த
பெற்றவர்கள் பேதலிக்க
பிஞ்சு நீ எமைவிட்டு
பற்றற்றான் கழலிணைக்கே
பாதியிலே சென்றுவிட்டாய்!
சுற்றமெல்லாம் அழுகிறது
சுவர்க்கத்தில் நீ வாழ்வாய்!

ஆறாறு வயதினிலே
அவனியிலே வாழ்விழந்து
நீறாகிப் போய்விட்டாய்
நெஞ்சம் பதைக்கிறதே!
ஓராண்டு சென்றதையா
உனையிங்கு நாமிழந்து
நூறாண்டு சென்றாலும்
நூராது உன் நினைவு!

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

**முதலாம் வட்டாரம்,**
**புங்குடுதீவு.**

**பிரிவால் துயருறும்**
**குடும்பத்தினர்.**

## வலிகாமம் தெற்கு பிரதேச சபை

VALIKAMAM SOUTH PRADESHIYA SABHA
CHUNNAKAM

My No :Np/14/41(15)/01/Tender/2015 Date: 11.11.2014.

### வலிகாமம் தெற்கு பிரதேசசபை சுன்னாகம்
### 2015ம் ஆண்டுக்கான மீள் கேள்வி அறிவித்தல்

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட மரக்கறிச் சந்தைகள், மீன் சந்தைகள், கருவாட்டுக் கடைகள், என்பவற்றை 01.01.2015 தொடக்கம் 31.12.2015ஆம் திகதி வரை குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்விகள் கோரப்படுகின்றன.

| தொ இ | விவரம் | மீளளிக்கப் படாத கேள்விப் பத்திரப் பணம் | கேள்வி வைப்பு | ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை (வற் வரி தவிர) | மாத வாடகை (வற் வரி தவிர) |
|---|---|---|---|---|---|
| | சுன்னாகம் உப அலுவலகம் | | | | |
| 1 | சுன்னாகம் பொதுச் சந்தை. (மீன் வெட்டுமிடம், மீன் சந்தை வாகன தரிப்பிடம் உட்பட) | 2000.00 | 30000.00 | 85690000.00 | |
| 2 | உடுவில் கீளிச் சந்தை | 1000.00 | 10000.00 | 189525.00 | |
| 3 | சுன்னாகம் மாட்டிறைச்சிக் கடை :01 | 1000.00 | 10000.00 | 1800700.00 | 250.00 |
| 4 | சுன்னாகம் ஆட்டிறைச்சிக் கடை - 02 | 750.00 | 7500.00 | 245000.00 | 250.00 |
| 5 | கருவாட்டுக் கடை இல 03 | 750.00 | 7500.00 | 41500.00 | 250.00 |
| 6 | முட்டைக் கடை இல 04 | 750.00 | 7500.00 | 57500.00 | 250.00 |
| 7 | கோழிக்கடை இல 06 | 750.00 | 7500.00 | 240500.00 | 250.00 |
| 8 | கோழிக்கடை இல 07 | 750.00 | 7500.00 | 242000.00 | 250.00 |
| 9 | கோழி உரித்தல் | 750.00 | 7500.00 | 63800.00 | 250.00 |
| 10 | பொது மலசலகூடம் | 750.00 | 7500.00 | 39000.00 | 250.00 |
| | உடுவில் உப அலுவலகம் | | | | |
| 1 | மருதனார்மடம் சந்தை (வாகன தரிப்பிடம் உட்பட) | 2000.00 | 30000.00 | 15312000.00 | |
| 2 | இணுவில் சந்தை ஆட்டிறைச்சிக் கடை (கொத்தியாலடி கொல்களத்தில் ஆடுகள் வெட்டப்படுதல் வேண்டும்) | 500.00 | 5000.00 | 77900.00 | 250.00 |
| 3 | மல்வம் சந்தை | 500.00 | 1000.00 | 19250.00 | |
| 4 | மல்வம் மாட்டிறைச்சிக் கடை (கொத்தியாலடி கொல்களத்தில் மாடுகள் வெட்டப்படுதல் வேண்டும்) | 1000.00 | 10000.00 | 184800.00 | |
| 5 | மருதனார்மடம் சந்தை பொது மலசலகூடம் | 500.00 | 5000.00 | 50000.00 | |
| | ஏழாலை உப அலுவலகம் | | | | |
| 1 | ஏழாலை மயிலங்காடு மாட்டிறைச்சிக் கடை | 500.00 | 5000.00 | 169400.00 | |

1. கேள்விப் பத்திரம் வழங்கும் காலம் - 12.11.2014 – 25.11.2014 பி.ப 2.00 மணி வரை
2. கேள்விப் பத்திரம் ஏற்றுக் கொள்ளுதல் - 26.11.2014 நண்பகல் 12.00 மணி வரை
3. கேள்விப் பத்திரம் திறக்கப்படுதல் - 26.11.2014 பி.ப 2.00 மணிக்கு

கேள்வி சம்பந்தமான மேலதிக விவரங்களை 2014.10.28ம் திகதிய உதயன் தினக்குரல் வலம்புரிப் பத்திரிகைகளிலும் எமது அலுவலகத்தில் அலுவலக நேரத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

தி.பிரகாஷ், தவிசாளர்.
வலிகாமம் தெற்கு பிரதேசசபை,
சுன்னாகம்.

(C/17627)(10.6)

## கண்ணீர்க் காணிக்கை



### ஸ்ரீமதி தங்கம் இரத்தினம்

(கைதடி தெற்கு, நாவற்குழி)

எமது கல்வியியற் கல்லூரியின் 'நாடகமும் அரங்கியலும்' கற்கை நெறியின் முதுநிலை விரிவுரையாளர் க.இ. கமலநாதன் அவர்களின் பாசமிகு தாயார் **ஸ்ரீமதி தங்கம் இரத்தினம்** அவர்கள் 11.11.2014 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்ததையிட்டு எமது கண்ணீர் அஞ்சலிகளைச் செலுத்துவதுடன், அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவரின் ஆத்மா சாந்தியடைய எங்கள் வித்தக விநாயகப் பெருமானின் திருவருளை வேண்டி நிற்கின்றோம்.


**கல்வியியற் கல்லூரிச் சமூகம்,**
**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி,**
**கோப்பாய்.**

(64014)
(10.6)

## கண்ணீர் அஞ்சலி

### முத்தையா திருநாவுக்கரசு

(ஓய்வுநிலை மாவட்ட நீதிபதி,
சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிஸ்)



அளவெட்டி தந்த அருந்தவ திருவே
அளவற்ற தமிழ்திறன் உம்மிடம்
கண்டோம்!
நீதி துறையின் செம்மலே
நிமிர்ந்த நோக்குடன் வாழ்வாங்கு
வாழ்ந்த நீர்
எழுபத்தைந்து ஆண்டுகள் வாழ்ந்த உம்
வழுவற்ற வாழ்க்கைப் பெட்டகம்
இருப்போருக்கு நல்ல வழிகாட்டும்
தேடலே!
ஆடி அடங்கும் வாழ்க்கையில்
அடங்காத புதிர்களை விட்டு செல்கின்றீர்!
அந்தணன் மெய்யவன் உம்மை அண்மித்து
ஆண்டு கொண்டு சொந்தம் கொண்டாடிட
நாமோ,
சொந்தம் கொள்ள முடியாத
நிர்க்கதியாய் நின்று
பரிதவிக்கின்றோம்! பரிதவிக்கின்றோம்!

**உங்கள் பிரிவால் துயருறும்**
**சன்றைஸ் உரிமையாளர்கள்,**
**ஊழியர்கள், யாழ்ப்பாணம்.**

(64010)
(10.6)

## தொடர்ச்சிகள்

### 77 மீனவர்

களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இந்தியாவில் 40 மீனவர்களும் 22 படகுகளும், பங்களாதேஷில் 20 மீனவர்களும் 4 படகுகளும், மியான்மாரில் 17 மீனவர்களும், 3 படகுகளும் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(த-14)

### இலங்கைப்

மைகளை ஆராயும் பயணமொன்றை மேற்கொண்டு இந்தியாவின் இராணுவ போர்க் கல்லூரியைச் சேர்ந்த 20 பேர் கொண்ட இராணுவத் தூதுக் குழு பயணமொன்றை மேற் கொண்டுள்ளதாக இலங்கை இராணுவம் தெரிவித்துள்ளது.

இந்தியாவின் இராணுவ போர்க் கல்லூரியை நெறிப்படுத்தல் உத்தியோகத்தர்களில் ஒருவரான பிரிகேடியர் ஜே. எஸ். சந்து தலைமையிலான இந்தத் தூதுக்குழுவில் நான்கு சிரேஷ்ட அதிகாரிகளும் இடம்பெற்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை இராணுவத் தளபதியுடனான சந்திப்பின்போது கருத்துவெளியிட்ட பிரிகேடியர் சந்து, இலங்கை இராணுவத்தின் தராதரத்தைப் பாராட்டியதுடன் இந்திய இராணுவமானது இலங்கையின் போர்முனை அனுபவங்களை அதன் பயிற்சிப் பாடவிதானங்களிலும் ஏனைய நிகழ்ச்சிகளிலும் பயன்படுத்தி வருவதாகக் குறிப்பிட்டதாக பிஸினஸ் ஸ்டான்டட் நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

இருதரப்பினருக்கும் இடையில் மேலும் சிறந்த உறவைக் கட்டியெழுப்புவதற்கு இந்திய இராணுவம் அதனால் இயன்ற அனைத்தையும் மேற்கொள்ளும் எனவும் பிரிகேடியர் சந்து உறுதியளித்ததாக அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### முறிகண்டி

பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பஸ்ஸில் பயணித்த அவர்கள் திருமுறிகண்டியை அண்மித்து பஸ்ஸிலிருந்து இறங்கி பஸ்ஸின் பின்புறமாக வீதியைக் கடக்க முற்பட்டதாகவும், இதன்போது பஸ்ஸின் எதிர்ப்புறமாக வந்த டிப்பர் அவர்களை மோதியுள்ளதாகவும் ஆரம்ப விசாரணையில் தெரியவந்துள்ள்தாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் 24 வயதுடைய யுவதியை மோதி விழுத்தி அவரது கழுத்தில் டிப்பர் சில்லு ஏறி அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். அவரது கழுத்தில் டிப்பர் சில் ஏறியதும் சாரதி பயம் காரணமாக டிப்பரை பின்நகர்த்தாமல் இறங்கி ஓடிவிட்டார். அதனால் சில்லு கழுத்தை நெரித்த படியே நின்றது.

அங்கு சென்ற கிளிநொச்சிப் பொலிஸார் காயப்பட்டவரை வைத்தியசாலையில் சேர்த்தனர். சாரதியைக் கிளிநொச்சிப் பொலிஸார் கைது செய்து மாங்குளம் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். சடலம் தற்போது கிளிநொச்சி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (த-4)

### ராஜிதவைப்

வருமாறு:-

அரசுக்குள் இருந்துகொண்டு அமைச்சர் ராஜித சேனாரட்ன அரசியல் தீர்வு விடயம் தொடர்பில் துணிச்சலாகக் குரல் கொடுத்து வருகின்றார். இதை நாம் பாராட்டவேண்டும். இனப் பிரச்சினைத் தீர்வு விவகாரத்தில் அமைச்சர் ராஜித தமிழ் மக்களுக்கு ஆதரவாகக் குரல் கொடுப்ப தால், வடக்கு, கிழக்கிலுள்ள தமிழ் பேசும் மக்களுக்கு இல்லாத ஆதரவு, அமைச்சர் ராஜிதவுக்கு அங்கு வழங்கப்படுகிறது. இனப்பிரச்சினைத் தொடர்பில் அவர் தொடர்ந்தும் குரல் கொடுக்கவேண்டும்.

மேலும், வடமாகாண மீன்பிடித் துறை அமைச்சருடன் மிகவும் நெருக்கமாக உறவைப் பேணி இணைந்து செயற்படுகின்றார். அங்குள்ள பிரச்சினைகளை வடமாகாண மீன்பிடித்துறை அமைச்சருடன் பேசித் தீர்க்க முயற்சிக்கின்றார். இது பாராட்டத்தக்கது. வடமாகாணக் கல்வி அமைச்சு தம்முடன் இணைந்து செயற்படவில்லை என்று கல்வி அமைச்சு தெரிவித்திருந்தது.

அமைச்சர் ராஜித சேனாரட்ன வைப்போல ஏனைய அமைச்சர்களும் வடமாகாண சபையுடன் இணைந்து செயற்பட்டால் ஏனைய பிரச்சினைகளுக்கும் தீர்வு காண முடியும் - என்றார். (த)

### காணாமற்போன

வர் கரை திரும்பாத நிலையில் நேற்று மனைவியால் நயினாதீவு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள் ளது.

இந்த நிலையில் நேற்றுக் காலை நயினாதீவுக் கடற்கரையில் சடலம் ஒன்று கரையொதுங்கியதை அடுத்து அது காணாமற்போன மீனவரின் சடலம் என்று அடையாளம் காணப்பட்டுள்ளது. குறித்த மீனவரின் சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (த-14-4)

### மஹிந்தவை

தீர்க்கப்படவில்லை. தமிழரின் அபிலாஷைகள் நிறைவேற்றப்பட்டிருந்தால் அபிவிருத்திகள் நிரந்தரமானதாகியிருக்கும்.

சில அமைச்சர்கள் நாட்டில் இனப்பிரச்சினை இல்லை என்கின்றனர். பல அமைச்சர்கள் இனப்பிரச் சினை இருக்கின்றது என்கின்றனர். இனப்பிரச்சினைத் தீர்வை அபிவிருத்தியூடாக அரசு நசுக்க முடியாது. அபி விருத்தி என்பது தமது பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வல்ல என்று வரலாற்றுக் காலம் முதல் தமிழர்கள் இதை உணர்த்தியுள்ளனர்.

கடந்த வடக்கு மாகாணத் தேர்தல் உள்ளிட்ட பல தேர்தல்களிலும் தமிழ் மக்கள் இதை நிரூபித்துள்ளனர். இவ்வாறான நிலையில், அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வை முன்வைத்தால் அதனைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏற்கத் தயாராகவுள்ளது - என்றார்.

### போலித்

கப்பட்டு வருகிறது. அதன் மூலமாகக் கிடைத்த பணத்தையே குறித்த கொள்ளையன் அபகரிக்க முயன்றுள்ளான். அந்தப் பணத்தைக் கணக்காளர் தனது பையில் வைத்திருந்தவாறு மற்றொரு அறைக்குச் சென்று உணவருந்தியுள்ளார். அதில் சுமார் 7 லட்சம் ரூபாவுக்கும் மேற்பட்ட தொகை இருந்துள்ளது. வெளியே நின்று நோட்டம் விட்ட குறித்த கொள்ளையன் அதிரடியாக உள்ளே சென்று துப்பாக்கியைக் காட்டி பணத்தைப் பறிக்கும் முயற்சியில் ஈடுபட்டான்.

அதற்காக அதிகாரியின் கையிலிருந்த பணப் பையைப் பறிக்க முற்பட்டான். அதனால் இருவருக்கும் இடையே கடும் கைகலப்பு ஏற்பட்டது. கொள்ளையன் வைத்திருந்தது போலித் துப்பாக்கி என்பதைக் கண்டு கொண்ட அதிகாரி அவனை மேலும் தாக்கியுள்ளார். பின்னர் தனது கைப்பையிலிருந்த சிறு கத்தியை இலாவகமாக எடுத்ததும் தான் தப்பினால் போதும் என்று அங்கிருந்து கொள்ளையன் தப்பி ஓடிவிட்டான்.

அதன்பின்னர் அவர் தனது அலுவலகத்தினுள் நுழைந்த போதே சம்பவம் ஏனையவர்களுக்குத் தெரியவந்தது. அது தொடர்பில் சாவகச்சேரிப் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து அங்கு சென்ற பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர். அவனுடன் வேறு சிலரும் அங்கு வேவு பார்க்க வந்திருந்தனர் என்று அங்கு நின்றவர்கள் பின்னர் தெரிவித்தனர். (த-4-288)

### ஈழக்

ரிக்கை விடுத்தார்.

மேலும், "போரால் பாதிக்கப்பட்ட பிரதேசத்தில் வாழுகின்ற மக்களுக்கு, நாட்டிலுள்ள ஏனைய மக்களைப் போல சாதாரணமாக வாழ்வதற்கான உரிமை இல்லாது போயுள்ளமை, வாழ்வாதாரப் பிரச்சினைகள் ஆகியன இருக்கின்ற இந்நிலையில், அரசு வெறு மனே நாட்டின் அபிவிருத்தியை மட்டும் குறியாகக் கொண்டு செயற்பட்டு வருகின்றது. இந்தச் செயற்பாடானது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரிவினைவாதக் கொள்கைக்கு வழியமைத்து விடும்" என்றும் "அரசு, தமிழர்கள் விடயத்தில் கூடிய அக்கறை செலுத்த வேண்டும்" என்றும் அவர் வலியுறுத்தியமை குறிப்பிடத்தக்கது.

சமகால அரசியல் மற்றும் அடுத்த ஜனாதிபதித் தேர்தல் குறித்து 'உதயனு'க்கு அவர் வழங்கிய நேர்காணலின் போதே இதனை அவர் மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார். இதன் முழுவிவரத்தையும் 16.11.2014 ஆம் திகதி வெளியாகும் 'உதயன்' ஞாயிறு வெளியீட்டில் எதிர்பாருங்கள். (த)

### இராச வீதி

சிற்றூர்திச் சேவைச் சங்கம் ஆரம்பிக்கின்றது.

அச்சுவேலி - யாழ்ப்பாணம் இராச வீதி வழியான சிற்றூர்திச் சேவை இன்று காலை 7 மணிக்கு ஆரம்பமாகின்றது. யாழ்ப்பாணத்தில் இருந்து அச்சுவேலி நோக்கிய சேவை மாலை 5 மணிக்கு ஆரம்பமாகும். குறிப்பிட்ட நேர இடைவெளியில் தினசரி சேவைகள் நடைபெறவுள்ளன.

இராச வீதியைப் பயன்படுத்தும் மக்களின் வசதியைக் கருத்தில் கொண்டு இந்தப் புதிய சேவையை அச்சுவேலி சிற்றூர்திச் சங்கம் ஆரம்பித்துள்ளது. சேவையில் அளவு எதிர்காலத்தில் மேலும் அதிகரிக்கப்படும் என்று சங்கத் தலைவர் எஸ்.ஆனந்தகுமார் தெரிவித்தார். (த-11)

### சுத்திகரித்த

களை 2010 இல் 314 பேர், 2011 இல் 451 பேர், 2012 இல் 266 பேர், 2013 இல் 489 பேர் ஆகவும் காணப்படுகிறது. இந்த எண்ணிக்கை வைத்தியசாலைகளில் தங்கியிருந்து சிகிச்சை பெற்றவர்களின் எண்ணிக்கை மட்டுமே. வெளிநோயாளர் பிரிவில், தனியார் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்றவர்களின் எண்ணிக்கையும் இதில் உள்ளடக்கப்படவில்லை. உண்மையில் இத்தகைய நோய்களால் யாழ். மாவட்டத்தில் பாதிக்கப்பட்டவர்களின் தொகை மேலே குறிப்பிட்ட எண்ணிக்கையை விடப் பல மடங்காகும்.

யாழ்.மாவட்டத்தில் மலக் குழிகளில் இருந்து சுண்ணாம்புப் பாறைகளில் உள்ள வெடிப்புக்களின் ஊடாக கிணறுகள் மாசடைவதைக் கருத்தில் கொண்டு எதிர்காலத்தில் மலசல கூடங்களை அமைக்கும்போது உறிஞ்சு குழியுடன் சகல பக்கங்களும் சீல் செய்யப்பட்டு உடன் அமைக்கப்பட வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது. அவ்வாறே உள்ளூராட்சி மன்றங்களால் தற்போது இவ்வாறு அமைக்கப்படும் மலசல கூடங்களுக்கே அனுமதி வழங்கப்படுகின்றது.

யாழ்.மாவட்டத்தில் உணவு, நீர் மூலமாகத் தொற்றும் நோய்களைக் கண்காணித்துக் கட்டுப்படுத்தும் நோக்குடன் நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக அவற்றின் மாதிரிகளைப் பரிசோதனைக்கு அனுப்புமாறு மத்திய சுகாதார அமைச்சின் உணவுக் கட்டுப்பாட்டுப் பிரிவினால் பணிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் அனுப்பப்பட்ட 09 ஐஸ்கிறீம் உற்பத்தி நிலையங்களிலும் கிருமித் தொற்று இருந்ததாகவும், அவை மனித பாவனைக்கு உகந்ததல்ல என்றும் கூறப்பட்டது. அவற்றில் காணப்பட்ட கிருமிகள் சில நீரிலிருந்தும் சில அவற்றை உற்பத்தி செய்யும் போது கையாண்ட மனிதர்களில் இருந்தும் தொற்றுக்குள்ளாகி இருந்தன.

கிருமித் தொற்றானது ஐஸ் கிறீம். யூஸ் என்பனவற்றின் மூலமாக இலகுவாகப் பாதிப்பை ஏற்படுத்தக்கூடியன. ஐஸ்கிறீமில் உள்ள சீனி. பால். தண்ணீர் என்பன மூலமாக கிருமிகள் விரைவாகப் பெருகுகின்றன. ஐஸ்கிறீமில் ஒரு சிறிய கிருமித் தொற்று ஏற்பட்டாலும் சில நாள்களில் அது பல்கிப் பெருகி லட்சக்கணக்கான கிருமிகளை உருவாக்கும். இதனால் அதனை உண்பவர்களுக்கு பல நோய்களை ஏற்படுத்தும்.

யாழ். மாவட்டத்தில் 32 ஐஸ் கிறீம், யூஸ் உற்பத்தி நிலையங்கள் சுட்டிக்காட்டப்பட்டு அடிப்படையான சுகாதாரத் திருத்த வேலைகளை மேற்கொண்ட பின்னர் அவர்கள் மீள இயங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில்,

யாழ்ப்பாணத்திலுள்ள நியூ ராஜா நிலையத்துக்கும், உரும்பிராயிலுள்ள சுஜானாஸ், கோப்பாயிலுள்ள றியோ ஐஸ் கிறீம் ஆகியவற்றுக்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

நாம் 32 நிலையங்களை மீள இயங்குவதற்கு அனுமதி வழங்கியது உண்மையல்ல எனச் சிலர் ஊடகங்களில் தெரிவித்துள்ளனர். இந்த நிலையங்கள் உண்மையில் இயங்கி வருகின்றனவா? அல்லது மூடப்பட்டுள்ளனவா? என்பதைப் பொதுமக்களே நேரில் பார்த்து அறிந்து கொள்ளலாம்.

இந் நிலையில் ஒரு சில ஐஸ் கிறீம், யூஸ் உற்பத்தியாளர்கள் எந்தவித அடிப்படையான திருத்த வேலைகளும் செய்யாது மீள இயங்குவதற்கு அனுமதிவழங்கப்படல் வேண்டும் என ஆர்ப்பாட்டம் செய்வதுடன் ஊடகங்களி லும் பல்வேறு கருத்துக்க ளைத் தெரிவித்து வருகின்றனர். அடிப்படையான சுகாதாரத் திருத்தங்களை மேற்கொள்ளாது எந்தவொரு நிறுவனத்துக்கும் மீள இயங்குவதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது என்று அவர் மேலும் தெரிவித்தார். (த-4)

### நீங்கியது தடை

அனேகமாக ஜனவரி மாதத் ததின் முதல் வாரத்தில் - பாப்பரசரின் இலங்கை வருகைக்கு முன்பாக - தேர்தல் இடம்பெறலாம் என்று தெரிகிறது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, ஜனாதிபதித் தேர்தலில் மூன்றாவது தடவையாகப் போட்டியிட முடியுமா? இல்லையா? என்பது தொடர்பில் உயர் நீதிமன்றம் தனது விளக்கத்தை நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்திருந்தது.

அதில், மூன்றாவது தடவையாக மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு எந்தத் தடையும் இல்லை என்று உயர் நீதிமன்றம் கருத்துத் தெரிவித்திருந்ததாக சபை முதல்வரும் அமைச்சருமான நிமால் சிறிபால டி சில்வா நேற்று நாடாளுமன்றத்தில் அறிவித்தார். நீர்ப்பாசன அமைச்சு மீதான விவாதம் இடம்பெற்றுக் கொண்டிருக்கையில் அவர் இதனை அறிவித்தார்.

உயர் நீதிமன்றத்தின் இந்தக் கருத்துடன் தேர்தலுக்கான பணிகள் அனைத்தும் உடனடியாகவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஜனாதிபதி செயலகத்திலிருந்து கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைய தேர்தல்கள் திணைக்களம் முன்னாயத்த நடவடிக்கைகளில் நேற்று உடனடியாகவே குதித்தது. இது தொடர்பான அறிவித்தல் ஒவ்வொரு மாவட்ட தேர்தல் திணைக்களத்தினதும் உதவித் தேர்தல் ஆணையாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

தேர்தல்கள் திணைக்களத்தின் வாகனப் பாவனைக்கான கட்டுப்பாடு நீக்கப்படுதல், ஊழியர்களின் விடுமுறைகள் ரத்துச் செய்யப்படுதல் போன்ற உத்தரவுகள் தேர்தல் முன்னறிவிப்பாக விடுக்கப்பட்டுள்ளன.

மேலும் தபால்மூல வாக்களிப்புக்கான தயார்படுத்தல்களை மேற்கொள்ளுமாறும், தேர்தல் அறிவிப்பு வெளியாகிய தினத்திலிருந்து 10 நாள்களுக்குள் அந்த நடவடிக்கையைப் பூர்த்தி செய்யத் தயாராக இருக்குமாறும் தேர்தல்கள் திணைக்களம் தனது மாவட்ட அதிகாரிகளைக் கேட்டுக் கொண்டுள்ளது.

எதிர்வரும் 20 ஆம் திகதி தேர்தலுக்கான அறிவிப்பு வர்த்தமானி பிரசுரம் ஊடாக வெளியிடப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதிலிருந்து 54 நாள்களுக்குப் பின்னர், அதாவது ஜனவரி முதல் வாரத்தில் ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (உ-5)

### சுன்னாகத்து

கப்படுகின்றது.

சுன்னாகம் பிரதேசத்தில் மின் உற்பத்தி நிலையத்திலிருந்து வெளியேற்றப்பட்ட கழிவு ஒயில் பாதுகாப்பற்ற முறையில் மண்ணில் ஊறப்பட்டது. இது நாளடைவில் நிலக்கீழ் குடிதண்ணீர் படுக்கையுடன் கலந்துள்ளது. இதனால் மின் உற்பத்தி நிலையத்துக்கு அருகிலுள்ள பிரதேசங்கள் மாத்திரம் அல்லாமல் 5 கிலோமீற்றர் சுற்று வட்டாரத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

அத்துடன் குறித்த கழிவு ஒயில் கலந்த குடிதண்ணீர்படுக்கை, காங்கேசன்துறையை நோக்கி கே.கே.எஸ். வீதிக்கு சமாந்தரமாகச் செல்வதும் அவதானிக்கப்பட்டுள்ளது. அதனால் தற்போது மல்லாகம் வரையிலான பிரதேசங்கள் பாதிப்பை எதிர்கொண்டுள்ளன.

இது தொடர்பில் அமைச்சரவைப் பத்திரம் கடந்த மாதம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதற்கமைய தற்போது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. யாழ். மாவட்டச் செயலகத்தில் அரச அதிபர் சுந்தரம் அருமை நாயகம் தலைமையில் நேற்று மாலை விசேட கூட்டம் நடத்தப்பட்டுள்ளது.

இதன் போது கழிவு ஒயிலால் பாதிக்கப்பட்ட குடிதண்ணீரின் மாதிரிகள் மீளப் பெறப்படுவது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது. அத்துடன் பாதிப்புக்குள்ளான மக்களுக்கு குடிதண்ணீரை பிரதேச சபை தடையின்றி வழங்க நடவடிக்கை மேற்கொள்வது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலும் இது தொடர்பில் அடுத்த கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக, 8 அமைச்சுக்களின் சிரேஷ்ட செயலாளர்களை உள்ளடக்கிய நிபுணர் குழுவினர் யாழ்ப்பாணத்துக்கு நாளை வரவுள்ளனர். ஆயினும் அவர்கள் நாளைய தினமே குறித்த பகுதிகளைப் பார்வையிடவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ற-5)

## குற்றங்களும் கைதுகளும்

கொழும்பு

### ஒன்றரை கிலோ தங்கத்தை கடத்திய இருவர் மாட்டினர்

சட்டவிரோதமாக ஒன்றரை கிலோகிராம் தங்கத்தை நாட்டுக்கு கொண்டு வந்த இருவர் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.
சந்தேகநபர்களிடமிருந்து 7.5 மில்லியன் ரூபா பெறுமதியான தங்கம் கைப்பற்றப்பட்டுள்ளதாக சுங்க ஊடகப்பேச்சாளர் சட்டப்பிரிவுப் பணிப்பாளர் லெஸ்லி காமினி தெரிவித்துள்ளார்.
சிங்கப்பூரிலிருந்து வருகை தந்த இலங்கையர் இருவரே கைது செய்யப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.
வத்தளை மற்றும் கொழும்பு 12 ஆகிய பகுதிகளைச் சேர்ந்த இருவரே கைது செய்யப்பட்டுள்ளதாகவும் லெஸ்லி காமினி கூறியுள்ளார்.
வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 85 கோடி ரூபா பெறுமதியான சட்டவிரோத தங்கம் அரசுடைமையாக்கப்பட்டுள்ளதாக சுங்கப்பேச்சாளர் சுட்டிக்காட்டினார். (வ)

### ஆவணங்களுக்கு தீ வைத்த பொலிஸ் கான்ஸ்டபிள்கள் இருவர்

பொலிஸ் அதிகாரிகள் இருவரிடமிருந்த ஆவணங்கள் குறித்த பொலிஸ் கான்ஸ்டபிள்களால் தீ வைக்கப்பட்டதாக சந்தேகிக்கப்படுவது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவினர் சந்தேகநபர்களைக் கைது செய்ததாக பதில் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார் .
இவ்வாறு கைது செய்யப்பட்ட மட்டக்குளி பொலிஸ் நிலையத்தின் 2 கான்ஸ்டபிள்களும் எதிர்வரும் 24ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.
சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட பொலிஸ் கான்ஸ்டபிள்கள் இருவரும் நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தப்பட்டதைத் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப் பட்டதாக பதில் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் உதவி பொலிஸ் அத்தியட்சகர் ருவன் குணசேகர தெரிவித்துள்ளார். (வ)

# மீனவர்களின் தூக்கை உடன் நிறுத்த வேண்டும்

## பேரறிவாளனின் தாயார் வலியுறுத்து

சென்னை, நவ.12
மத்திய, மாநில அரசுகள் தலையிட்டு உடனடியாக ஐந்து மீனவர்களின் தூக்குத் தண்டனையை நிறுத்த நடவடிக்கை எடுத்து அவர்களை மீட்க வேண்டும்.
இவ்வாறு தெரிவித்தார் முன்னாள் பிரதமர் ராஜிவ் காந்தி கொலை வழக்கில் தண்டனை விதிக்கப்பட்ட பேரறிவாளனின் தாய் அற்புதம்மாள்.



இலங்கையில் தங்கச்சிமடம் மீனவர்கள் 5 பேருக்கு விதிக்கப்பட்ட தூக்குத் தண்டனையை நிறுத்தி, அவர்களை உடனே விடுதலை செய்ய வேண்டும் என்று மீனவர்களும், அரசியல் கட்சிபிரமுகர்களும்தொடர்ந்து ஆர்ப்பாட்டம், போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.
மண்டபம் யூனியன் மீனவர் கூட்டமைப்பு சார்பில் தலைவர் பூரணி தலைமையில் தங்கச்சிமடம் தேவாலயப் பகுதியில் இருந்து நேற்று முன்தினம் ஊர்வலமாகப் புறப்பட்டு வலசை வீதி ஓட்டோ நிறுத்தத்தில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.
ஆர்ப்பாட்டத்துக்கு ஒன்றிய மகளிர் மீனவர் கூட்டமைப்பு தலைவர் இருதயமேரி, ராஜேஷ் மேரி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.
ஆர்ப்பாட்டத்தில் தங்கச்சிமடம் ஊராட்சி தலைவர் ஞானசீலன், பாம்பன் ஊராட்சி தலைவர் பற்றிக், மீனவ சங்க தலைவர் சேசு, எமரிட், போஸ், சகாயம் உள்பட 100க்கும் மேற்பட்ட மீனவர்களும், மீனவர்களின் குடும்பத்தினரும் கலந்து கொண்டனர். இதில் 5 மீனவர் களை உடனே விடுதலை செய்ய வலியுறுத்தப்பட்டது.
இந்த ஆர்ப்பாட்டத்தில் முன்னாள் பிரதமர் ராஜிவ்காந்தி கொலை வழக்கில் தண்டனை விதிக்கப்பட்ட பேரறிவாளன் தாய் அற்புதம்மாள் கலந்து கொண்டார்.
அப்போது அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:
"உலகம் முழுவதுமே தமிழர்கள் ஆங்காங்கே நசுக்கப்பட்டு வருகின்றனர். அப்பாவி மீனவர்கள் மீது பொய் வழக்குப் போட்டுத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டிருப்பது கண்டனத்துக்கு உரியது.
எனது மகனுக்கு விதிக்கப்பட்ட தூக்குத் தண்டனையில் இருந்து விடுவிக்க ஒரு குழுவாக ஒன்று சேர்ந்து எதிர்த்துப் போராடி வருகிறோம். அப்பாவித் தமிழர் கள் தான் இதுபோன்ற தண்டனைக்கு ஆளாகிறார்கள்.
எனவே மத்திய, மாநில அரசுகள் தலையிட்டு உடனடியாக 5 மீனவர்களின் தூக்குத் தண்டனையை நிறுத்த நடவடிக்கை எடுத்து அவர்களை மீட்க வேண்டும்."
இவ்வாறு கூறனார். (வ)



இதுவரை காலமும் அபிவிருத்திக்கு தடையாக வீதிகளில் வீணடிக்கப்பட்ட எங்களது பொன்னான காலம் இனி மேல் நாட்டின் பாரிய அபிவிருத்திக்கு அர்ப்பணிக்க முடியும். இது மஹிந்த சிந்தனையில் நிஜமாகும் ஓர் உன்னதமான பிரார்த்தனையாகும். வீதிகளில் அதிக நேரத்தை செலவிடாமல் வாழ்க்கைக்கு அதிகமான நேரத்தை ஒதுக்குவோம்.
வீதி அபிவிருத்தி அதிகாரசபை

## குருக்களின் 80 ஆவது அகவை இன்று

யாழ்ப்பாணம், நவ.12

சர்வதேச இந்து மத குருபீடாதிபதி யும் சுதுமலை ஸ்ரீ புவனேஸ் வரி அம்பாள் ஆலய பிரதம குரு வுமாகிய சிவஸ்ரீ ச.மஹேஸ் வரக் குருக்களின் எண்பதா வது அகவை இன்று புதன் கிழமை சுதுமலை ஸ்ரீ புவ னேஸ்வரி அம்பாள் ஆலய கல்யாண மண்டபத்தில் நடை பெறவுள்ளது.

இவரின் பிறந்த தினத்தை முன்னிட்டு தம்பதியினருக்கு ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆல யத்தில் மாங்கல்ய தாரண வைபவம் இடம்பெற்று அதைத் தொடர்ந்து மேற்படி ஆலய கல்யாண மண் டபத்தில் சீதா மகேஸ் வரம் சதாபிஷேக சிறப்பு மலரும் வெளி யிடப்படும்.

(ஓ-115)

## கஞ்சா வைத்திருந்த வழக்கில் 3 பேருக்கு நேற்றுப் பிணை

கஞ்சா வைத்திருந்தமை மற்றும் விற்பனை செய்த குற்றச்சாட்டில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 3 பேர் யாழ். மேல் நீதிமன்றினால் பிணையில் விடுவிக்கப்பட்டனர். யாழ்.மேல் நீதிமன்றில் நீதிபதி அ.பிரேமசங்கர் முன்னிலையில் அந்தப் பிணை விண்ணப் பங்கள் பரிசீலிக்கப்பட்டு நேற்றுப் பிணை வழங்கப்பட்டது.

உடுத்துறை வடக்கு, தாளையடியைச் சேர்ந்த ந.மகேந்திரராஜா உள்ளிட்ட இருவர் சுமார் 40 கிராம் கஞ்சாவைத் தம்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டனர். அவர்களில் ஒருவர் ஏற் கனவே பிணையில் விடுவிக்கப்பட்டார். விளக் கமறிய லில் இருந்த மகேந்திரராஜா விளக்க மறியலில் இருந்து நேற்றுப் பிணையில் விடுவிக்கப்பட்டார். அதன்படி 25 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான இரண்டு ஆள் பிணையிலும் விடுவிக்கப் பட்டார்.

கஞ்சா போன்ற போதைப் பொருளுடன் எதுவித தொடர்புகளையும், ஈடுபாடுகளையும், நடவடிக் கைகளையும் கொண்டிருக்காது சட்டபூர்வமாக நடந்து கொள்ள வேண்டும் என்று மன்று அவருக்கு அறிவுரை வழங்கிய தோடு மறுஅறிவித்தல் வரை ஒவ்வொரு நாளும் பருத்தித்துறை நீதிமன்றில் ஒப்பமிடவேண்டும் என்றும் நிபந்தனை விதித்தது.

கிளிநொச்சி, உதய நகர் மேற்கைச் சேர்ந்த செ.மதியழகன் என்பவர் சுமார் 20 கிலோ கிராம் கேரள கஞ்சாவைத் தன் வசம் வைத்திருந்த குற்றச்சாட்டில் கடந்த வருடம் நவம்பர் மாதத்திலிருந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார். அவர் சார்பாகப் பிணை விண்ணப்பம் தாக்கல் செய்யப்பட்டுப் பரிசீலிக்கப்பட்டுப் பிணை அனுமதி வழங்கப்பட்டது. அவர் 50 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும் தலா 2 லட்சம் ரூபா பெறுமதியான இரண்டு ஆள் பிணைகளிலும் விடுவிக்கப்பட்டார். ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் கிளிநொச்சி நீதிமன்றில் ஒப்பமிட வேண்டும் என்றும் மன்று நிபந்தனை விதித்தது.

கனகாம்பிகைக்குளம், கிளிநொச்சியைச் சேர்ந்த த.செல்வரஞ்சன் சுமார் 4 கிராம் கஞ்சா போதைப் பொருளைத் தன்வசம் வைத்திருந்த குற்றச் சாட்டில் விளக்கமறியலில் இருந்து நேற்றுப் பிணையில் விடுவிக் கப்பட்டார். அதன்படி 10 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான தலா 2 ஆள் பிணையிலும் விடுவிக்கப்பட்டார். (த-4)


இன்று முதல் மீண்டும் சிவப்பிரகாசம் வீதியில்

நத்தார் பண்டிகையை முன்னிட்டு

மாபெரும் சிறப்பு தள்ளுபடி

வீட்டு, அலுவலக தளபாடங்களை மிகக் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.



அலுமாரி (வீட்டுபாவனைக்குரியது) ~~14500/=~~ 8990/=

மரக்கட்டில் ~~8730/=~~ 6100/=

பிளாஸ்டிக் கதிரை ~~900/=~~ 625/=



Sofa ~~45500/=~~ 32900/=

மெத்தை ~~4116/=~~ 2320/=

15, சிவப்பிரகாசம் வீதி, (தட்டாதெரு சந்தி)

(C/17628)(10) 077 180 7672, 077 831 4201



SPOKEN ENGLISH

WITH DIPLOMA CERTIFICATE

இம்முறை A/L எழுதிய மாணவர்கள், தொழில் புரிவோருக்கான 3 மாத வார, வார இறுதிநாள் SPOKEN ENGLISH பயிற்சிநெறி ஆரம்பம்.

ஆங்கிலத்தில் ஒரெழுத்து தெரியாதவர்களும் கூட மூன்றே மாதங்களில் தமிழ்போல சரளமாக ஆங்கிலம் பேசமுடியும்.

சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் - 15.11.2014 சனி

பிரிவு 1. காலை 10.00-12.00 பிரிவு 2.மாலை 3.00-05.00

செவ்வாய், வியாழன் பிரிவுகள் ஆரம்பம் - 18.11.2014

1.காலை 08.00-10.00 2.காலை 10.00-12.00

முன்பதிவு செய்தல் அவசியமானதாகும்! ஒவ்வொரு பிரிவிலும் 22 மாணவர்கள் மட்டும்

SAAMSON Experts in English Training

279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்

077 621 4567 021 320 3313


## மரண அறிவித்தல்



### திருமதி பாக்கியம் கந்தசாமி

அல்வாய் வடக்கு, மகாத்மா வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாக்கியம் கந்தசாமி நேற்று (11.11.2014) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பு கந்தசாமியின் அன்பு மனைவியும், ஸ்ரீவனசா வரதராசா, வரமதேவன் (யாழ். போதனா வைத்தியசாலை), விஜய லட்சுமி தயாபரன், பாமினி, வாகீசன், கலையரசி, கந்தசபேசன் (லண்டன்), பாக்கியநாதன் (யாழ். போதனா வைத்தியசாலை) ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்ற கணேசலிங்கம் ஜராங்கனி ஞானசோதி நடராசா, சிவராசா, சுரேஸ்குமார், சுகிர்தா, அநுப்பிரியா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.11.2014) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 11 மணியளவில் சுப்பர்மடம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள் ளவும்.

மகாத்மா வீதி, அல்வாய் வடக்கு, (53423) (10.6)

தகவல்: குடும்பத்தினர்,


O/L - 2014 மாணவர்களே

முற்றிலும் எதிர்பார்க்கை கணித மாதிரி வினாத்தாள் விடைத்தொகுப்பு விற்பனையாகிறது.

வெளியீடு: R.K

கிடைக்குமிடம்: பூபாலசிங்கம் புத்தகசாலை


## மரண அறிவித்தல்



### திருமதி யோகம்மா இரத்தினசபாபதி

இணுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் இணுவில் மேற்கை வதிவிடமாகவும் கொண்ட திருமதி யோகம்மா இரத்தினசபாபதி 10.11.2014 மாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இரத்தினசபாபதியின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை-முத்துப்பிள்ளை தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான சுப்பையா-அபிராமிப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை, செல்லத்துரை, இராசம்மா, செல்லம்மா, இராசலிங்கம் ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்றவர்களான தெய்வானைப்பிள்ளை திருநாவுக்கரசு ஆகியோரின் மைத்துனியும், கணேசதாஸ், கணேஸ்வரி (லண்டன்), தபோதரன் (கனடா), இரத்தினேஸ்வரி (சுமதி,கனடா), செந்தூரன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயும், பாலசுப்பிரமணியம் (லண்டன்), தயாளினி, தர்மலஷ்சுமி (கனடா), கந்தவேள் (கனடா), யானு (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும், சுசர்மன் (லண்டன்), விகர்ணன் (லண்டன்), காலஞ்சென்ற துருபதன், Dr. நங்கா நிரஞ்சன் (லண்டன்), கஸ்தூரி-காண்டீபன் (L.L.B,லண்டன்), கௌதமி (லண்டன்), தாரணி (கனடா), துவாரகன் (கனடா), ஹரிகரன் (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், சிவஸ்ரா (லண்டன்), தருண் (லண்டன்) ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

திருவேரகம், இணுவில் மேற்கு, இணுவில்.

078 914 9154, 021 320 7379

தகவல்: குடும்பத்தினர். (50421)(10.6)


குறுகிய நேரத்திலும் குறைந்த செலவிலும் நிர்மாண வேலைகளை செய்து கொள்ள...



கட்டடங்கள் கட்டுவதற்கு அத்திபாரம் தோண்டுதல், காணி துப்புர வாக்குதல், கட்டடம் உடைத்தல், கிணறு, மலசல குழி, குளங்கள் தோண்டுதல், அண்டக் கிறவுண்ட் பிறேக்கர் மூலமாகவும் அனைத்து விதமான வேலைகளும் செய்து கொடுக்கப்படும். மணல், கல், புயனீ கிறவல் மணல் என்பனவும் வழங்கப்படும். JCB, Excavator, Roller, Wacker, Hilti, Concrete Mixer என்பனவும் மணித்தியால அடிப்படையிலும் வாடகைக்கு கொடுக்கப்படும்.

Smart Kings (Pvt) Ltd.

ஸ்மார்ட் கிங்ஸ் (பிறைவேற்) லிமிட்

Hotline 077 375 4040

Head Office: 684A, Colombo Road, Kurana/Negombo

148, Station Road, Jaffna.(Railway Station அருகாமை)

Tel : 021 730 6099 Fax : 021 454 6699

Email : kuhan79@live.com


## மரண அறிவித்தல்



### திருமதி நாகம்மா சுப்பர்

கைதடி மத்தி, குமரநகரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகம்மா சுப்பர் 09.11.2014 ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பரின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சுப்பர்-குஞ்சிப்பெட்டை தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான கந்தர்-பாறிதம்பதியரின் அருமை மருமகளும், மயில்வாகனம் (சுவிஸ்), நடராசா (இத்தாலி), தவபுத்திரி (கைதடி), சிவஞானம் (ஜேர்மனி), பரமேஸ்வரி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயும், சரஸ்வதி (சுவிஸ்), யோகேஸ்வரி (இத்தாலி), கணேஸ் (கைதடி), தவமணி (ஜேர்மனி), தேவலோகநாதன் (சுவிஸ்) ஆகியோரின் அருமை மாமியும், பிரதீபன், பிரணித்தா, நிவேதா, நிவேதன், ஆதி, தினேஸ்ரூபன், தயாரூபன், பிரியாரூபன், பிரவின், பிரணவி, பிருந்தன், பிரணுசா, பிரியா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், கந்தசாமி, தெய்வி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.11.2014) புதன்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கைதடி ஊற்றல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கைதடி மத்தி, குமரநகர். (C/17632)(10.6)

தகவல்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### திருமதி மகேஸ்வரி தர்மலிங்கம்

(ஓய்வுபெற்ற நெசவு ஆசிரியை)

அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மகேஸ்வரி தர்மலிங்கம் நேற்றுமுன்தினம் (10.11.2014) திங்கட்கிழமை இறைவனடிசேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஓய்வுபெற்ற தபால் ஊழியர் முருகேசு தர்மலிங்கத்தின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்ற தம்பிஐயா - இராசம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற முருகேசு - மாணிக்கம் தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற குணவதி, லீலாவதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், கிருஷ்ணகுமார், கிருஷ்ணவேணி, சுரேஸ்குமார், ஜெய்ந்தி, சிவகுமார், செந்தில்குமார், செல்வகுமார் ஆகியோரின் பாசமிகு தாயும், பவானந்தனின் அன்புப் பெரியம்மாவும், பிரபாகரன், விஜிதா, நடனவடிவேல், நளினி, திருப்பிரியா, ஜெய லக்ஷ்மி, ஜெயப்பிரதா ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ்சென்றவர்களான பாம்தேவன், வேதநாயகம், மகாலிங்கம், சிவலிங்கம் மற்றும் பஞ்சலிங்கம், அஞ்சலிங்கம், அஞ்சனாதேவி ஆகியோரின் அன்பு மைத்துனியும், கிரிசாந், பிரவின், சவ்றோன், ஸ்ரெபாணி, நிலவன், கிஷோக், கீர்த்தி, தருண், ரோஷன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இல.12, புறாடி ஒழுங்கை, அரியாலையில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நாளை (13.11.2014) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.12, புறாடி ஒழுங்கை, அரியாலை, யாழ்ப்பாணம். (45.3)

தகவல்: குடும்பத்தினர். 071 428 8445

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 12.11.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

21 NOV 2014

புதன் பொய்கை

உதயன்

12 நவம்பர் 2014 புதன்கிழமை

நான் என்ற சொல்லை ஒருமுறை சொன்னால் நீங்கள் என்ற சொல்லை இருபது முறை சொல்லுங்கள். ஞானியாகி விடுவீர்கள்.
*- ஜான் ஹே.*

# இளைஞர் சமுதாயத்துக்கு நல்வழி காட்டுவோம்

■.ராஜராஜன்

பல்வேறு கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடைய பலரைத் தாம் கைது செய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். பொலிஸாரால் கைது செய்யப்பட்டவர்கள் வடபகுதியின் பல பகுதிகளிலும் தமது கைவரிசையைக் காட்டியுள்ளமை தெரியவந்துள்ளது. ஆனால் கைது செய்யப்பட்டவர்களில் பலர் இருபது வயதைக் கூடத் தாண்டாத பதின்மவயதினர் என்பதுதான் அதிர்ச்சி தரக்கூடிய செய்தியாக அமைந்துவிட்டது. ஏற்கனவே இளம் பராயத்தினர் சிலர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ள நிலையில் தற்போது இந்தக் கைதுகள் இடம்பெற்றுள்ளன.

நீண்ட காலமாக இடம்பெற்ற போர் ஓய்ந்து சமாதானம் நிலவுவதாகக் கூறப்படும் நிலையில் விவரம் புரியாத இளம் பராயத்தினரின் இத்தகைய கட்டுமீறிய செயல்கள் புதிய கவலைகளைத் தோற்றுவித்துள்ளன.

பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்கள் கூடத் தமது பெற்றோருக்கும் ஆசிரியர்களுக்கும் பணியாத நிலையில் சீர்கேடான முறையில் நடந்து கொள்வதை அவதானிக்க முடிகின்றது. முன்னரெல்லாம் பெண்கள் மீதான துஷ்பிரயோகம், திருட்டு, களவு, கொலை, மோதல்கள் ஆகியவற்றில் வளர்ந்த ஆண்கள் ஈடுபடுவதே வழமையான இருந்து வந்துள்ளது. பதின்ம வயதினர் இவற்றில் ஈடுபடுவது மிகக் குறைவாகவே காணப்பட்டது. ஆனால் இன்றோ நிலைமை தலைகீழாக மாறிவிட்டது. வன்முறைகளையும் குற்றச்செயல்களையும் இளம் பராயத்தினர் தமது கைகளில் எடுத்துக் கொண்டுவிட்டனர்.

போர் ஓய்ந்ததற்கு முன்னரான காலப்பகுதியில் இளம்வயதினர் யாராவது தொடர்ந்து தவறுகளைச் செய்து கொண்டிருந்தால் அவர்களைப் பிடித்து வெளிநாடுகளுக்கு அனுப்பி வைக்குமாறு சம்பந்தப்பட்டவர்களுக்கு மற்றவர்கள் ஆலோசனை வழங்குவார்கள். அப்போது இருந்த சூழ்நிலையில் அது சாத்தியமாகவும் காணப்பட்டது. வெளிநாடுகளும் அவர்களை ஏற்றுக் கொண்டன. அங்கு இவர்களால் தொல்லைகள் ஏற்பட்டமை வேறு விடயம். ஆனால் இன்றுள்ள சூழ்நிலையில் கட்டுங்கடங்காத நிலையில் நடந்து கொள்ளும் இளைஞர்கள் இங்கேயே தங்கியிருக்க நேர்ந்துள்ளது. தொல்லைகளும் பெருக ஆரம்பித்துவிட்டன.

சில தினங்களுக்கு முன்னர் யாழ். நகரிலுள்ள பிரபலமான மிகப்பெரிய தனியார் கல்வி நிலையமொன்றில் கல்விகற்பிக்கும் ஆசிரியர் ஒருவர் அங்கு கல்வி கற்பிக்கும் மாணவன் ஒருவரால் கடுமையாகத் தாக்கப்பட்டதாக அறிய முடிந்தது. குறித்த ஆசிரியருக்கும் மாணவனுக்கும் இடையேயான சிறு வாய்த்தர்க்கம் கைகலப்பில் முடிந்துள்ளது. இந்தச் சம்பவத்தில் எவர் பக்கம் தவறென்பது ஒரு புறமிருக்க, ஆசிரியரை மாணவன் தாக்கிய விடயந்தான் முன்னிலை பெறுகின்றது. தாய்க்கும் தந்தைக்கும் அடுத்த படியில் வைத்துப் போற்றப்படும் குருவுக்கு - ஆசிரியருக்கு கௌரவம் வழங்கவேண்டியது எமது அனைவரதும் கடமையாகும். அதிலும் மாணவர்களுக்கு இதில் முக்கிய பங்குண்டு.

அழியாத செல்வமாகிய கல்விச் செல்வத்தை எமக்கு அள்ளிக் கொடுப்பவர்கள் ஆசிரியர்களே என்பதை இளம் பராயத்தினரான மாணவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

சில பொறுப்பில்லாத பெற்றோர்கள் தமது பிள்ளைகள் தவறான வழிகளில் செல்வதற்கு உடந்தையாக இருக்கிறார்கள் என்பதை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். இவர்கள் தமது பிள்ளைகளின் செயல்களைக் கண்காணித்துக் கொள்வதில்லை என்பதோடு அவர்கள் புரியும் தவறுகளை நியாயப்படுத்தவும் முயல்கின்றனர். இதைவிடுத்து தமது பிள்ளைகள் எதைக் கேட்டாலும் அதை நிறைவேற்றி வைப்பதில் கண்ணும் கருத்துமாக இருப்பார்கள். தமது மகன் தெருவிலும், ஒழுங்கை முகப்பிலும், பொது இடங்களிலும் முகம் அறியாத வேறு ஆள்களுடன் வீணாகப் பொழுதைக் கழிப்பதற்கு முற்படுகிறான் என்றாலே அவன் தவறான வழியில் செல்கின்றான் என்பதைப் பெற்றோர் உணர்ந்துகொள்ளவேண்டும். தமது பிள்ளையின் தவறான நடத்தை தொடர்பாக உறவினர்களோ அல்லது நலன் விரும்பிகளோ தெரிவித்தால் அதை அலட்சியம் செய்யாது உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டியது பெற்றோரின் முக்கிய கடமையாகும். அதைவிடுத்துத் தமது பிள்ளைகளின் தவறான செயல்களை நியாயப்படுத்துவதும், தகவல் தந்தவர்களுடன் குரோதத்தை வளர்ப்பதும் எதிர்மாறான பாதகத்தை ஏற்படுத்திவிடும். இத்தகைய நடவடிக்கைகளால் தமது பிள்ளைகளின் எதிர்காலம் பாதிக்கப்பட்டுவிடும் என்பதைப் பெற்றோர்கள் உணர்ந்துகொள்ள வேண்டும்.



இவ்வாறான பெற்றோரின் பிள்ளைகள் தமது பணத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு ஆரம்பத்தில் சிறு திருட்டுக்களில் ஈடுபடுவார்கள். காலப் போக்கில் இவர்கள் வாள்களைக் கையில் ஏந்தியவாறு பெரிய திருடர்களாகவும், கொள்ளையராகவும் மாறிவிடுவார்கள். மற்றவர்கள் அறியாதவாறு அவர்களின் பொருள்களைத் திருடுவது திருட்டு எனவும், மிரட்டியும், ஆயுதங்களால் தாக்கிவிட்டு ஒருவர் பார்த்துக்கொண்டிருக்க அவரது உடைமைகளை அபகரிப்பது கொள்ளை எனவும் பொருள்படும். ஆகவேதான் திருட்டும், கொள்ளையும் இரு வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

போர் ஓய்ந்த பின்னர் திட்டமிடப்பட்ட வகையில் தமிழ் இளைஞர்களைச் சீரழிக்கும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. கலாசாரப் பிறழ்வான விடயங்களை இளைஞர்கள் மத்தியில் புகுத்துவதும், போதைப் பொருள்களுக்கு அவர்களை அடிமைகளாக்குவதும் தாராளமாக இடம்பெறுவதால் இளைஞர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகிவிட்டது. ஓர் இனத்தின் இளம் சந்ததியைப் பாழாக்கிவிட்டால் அந்த இனத்தையே தலை நிமிரவிடாது செய்துவிடலாம் என்பதை உணர்ந்த எதிரிகள் அதைச் சரியாகக் கடைப்பிடித்தும் வருகின்றனர். இந்தச் சதிகாரர்களின் எண்ணம் ஓரளவு நிறைவேறி வருவதையும் காணமுடிகின்றது. ஏதோவொரு இலட்சியத்துடன் செயற்பட்ட அன்றைய இளைஞர்களுடன் இன்றுள்ளவர்களை ஒப்பிடும்போது அருவருப்புத்தான் ஏற்படுகின்றது. அதைவிடப் பல இலட்சக்கணக்கான லீற்றர் மதுபானங்களைக் குடாநாட்டில் உள்ள மதுப்பிரியர்கள் குடித்துத் தீர்த்துள்ளதாக அதிர்ச்சித் தகவலொன்று அண்மையில் பத்திரிகைகளில் வெளிவந்து குடாநாட்டின் உண்மை நிலையை உணர்த்தியுள்ளது. அதிலும் இளம்வயதினர் மதுபாவனையில் அதிகளவு ஆர்வம் காட்டுவதாகவும் தெரியவந்துள்ளது. இந்த நிலை நீடிக்குமாயின் குடாநாட்டின் எதிர்காலமே படுகுழிக்குள் தள்ளப்பட்டுவிடும்.

இளம் சந்ததியினர் மேலும் மேலும் கெட்டு அழியாத வகையில் அணை போடவேண்டிய தேவையொன்று தற்போது உருவாகியுள்ளது. இதற்குப் பெற்றோர்கள் மட்டுமல்ல ஒட்டுமொத்தச் சமுதாயமும் ஒன்றுபட்டு முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும். இதில் ஆசிரியர்களின் பங்கு முக்கியமானது. அனைவரும் ஒன்று சேர்ந்து முயற்சிகளை மேற்கொள்ளும்போது நல்லதொரு இளம் சமூகத்தை உருவாக்கிக்காட்ட முடியும்.

> “தமது மகன் தெருவிலும், ஒழுங்கை முகப்பிலும், பொது இடங்களிலும் முகம் அறியாத வேறு ஆள்களுடன் வீணாகப் பொழுதைக் கழிப்பதற்கு முற்படுகிறான் என்றாலே அவன் தவறான வழியில் செல்கின்றான் என்பதைப் பெற்றோர் உணர்ந்துகொள்ள வேண்டும். தமது பிள்ளையின் தவறான நடத்தை தொடர்பாக உறவினர்களோ அல்லது நலன் விரும்பிகளோ தெரிவித்தால் அதை அலட்சியம் செய்யாது உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டியது பெற்றோரின் முக்கிய கடமையாகும்.”

# ஆடல் கலை



## ஒரு சிறுகுறிப்பு

■ வேல் ஆனந்தன்

இங்கு தரப்பட்ட விடயத்தலைப்பு சுட்டிநிற்கும் "நிலைமாறு காலம்" என்ற கால எல்லையை, 2009க்குப் பிற்பட்ட இன்றையநாள் வரை, என்று நாம் கணக்கில் எடுத்தால், இந்தக் குறிப்பிட்ட கால எல்லைக்குள், மக்கள் மயப்பட்டதான...? ஆடல் கலை சார்ந்த நகர்வுகளுக்கு மூலவிசையாக, குறிப்பிட்ட காலங்களுக்கு முன்பிருந்த ஆடல் கலை சார்ந்த நகர்வுகள் பற்றியும், மேலெழுந்த வாரியாகச் சிறிய அவதானிப்புத் தேவையாகிறது.

ஆடலியலில் பொதுமை:-

நாட்டியவியலின் (நாடகவியல்) தளத்திலிருந்தே ஆடலியல் முகிழ்நிலை பெறுகிறது என்பதை ஆடல்வகைகளின் தோற்றுவாய் காலத்திலிருந்தே, அவற்றுக்குரித்தான வரலாறுகள் தெரிவிக்கின்றன. ஆடலியலின் ஒவ்வொரு அலகுகளாக அமைவதே "ஆடல் வகைகளாகும்" கீழைத்தேய ஆடல்வகைகள் (ORIENTAL DANCES) என்றால் அது இந்தியத் துணைக்கண்டத்து ஆடல் வகைகளையே சுட்டிநிற்கிறது.

நாடகவியலுக்கு அடிமூல இலக்கணமாக அமைவது பரதமஹ ரிஷி ஆக்கிய "பரதநாட்டிய வேதம்" என்றும், அதன் பின்னால் அந்த நாட்டிய வேதத்தை ஒட்டியதான பல நூல்கள் உயிர்ப்புப் பெற்றுள்ளன என்பதும், பாரதத்தின் அந்தந்தப் பிரதேசங்களுக்குரிய "ஆடல் வகைகளுக்கு" இவை ஆதாரமாக உள்ளதாகவும் அறிகிறோம். ஆக "நாட்டியவியல்" என்ற மூலத்திலிருந்து முகிழ்ந்தெழுந்த "ஆடலியல்" என்ற பொதுமையிலிருந்தே, ஏனைய ஆடல் வடிவங்கள் உயிர்ப்புப் பெற்றன என்பதுதான் வரலாறாகிறது. மேலும் ஆடலியல் கீழைத்தேய (பாரதம்) ஆடல்வடிவங்களுக்குப் பொதுவானதாக இருந்தாலும் இந்தியத் துணைக் கண்டத்துக்கான இனக்குழுமங்கள், தத்தமது பண்பாட்டு விழுமியங்கள், மரபுவழி அடையாளங்கள், வாழ்விடக்குறியீடுகள், சமயப் பண்புகள் என்ற உயரிய பெறுமானங்களைத் துல்லியப்படுத்தக் கூடியதான ஆடல் வகைகளைத் தம்மகத்தே கொண்டுள்ளன. அது மட்டுமன்றி ஒவ்வொரு ஆடல்வகைகளும் ஒன்றுக்கு மேற்பட்ட "ஆற்றுகை முறைகளையும்" (பாணி) கொண்டுள்ளன. இவையெல்லாம் செவ்வியல் (சாஸ்திரியம்) ஆடல்வகைகள் என்றே அங்கீகரிக்கப்பட்டுள்ளன. அதுமட்டுமன்றி குறிப்பிட்ட ஆடல் வடிவம், குறிப்பிட்ட இனக்குழுமத்துக்கு உரித்தானது என்ற வரலாற்றுடனிணைந்த முத்திரையும் பதிக்கப்பட்டுள்ளது. நாம் இலங்கையர், இலங்கைத் தமிழர் என்ற வரலாற்றுப் பாரம்பரியத்துக்குரிய இனக்குழுமம், அதுமட்டுமன்றி, கீழைத்தேயத்தவர்கள் என்ற எல்லைக்குள் நாமும் அடங்குகின்றோம். 'ஆடலியல்', அதாவது கீழைத்தேய ஆடலியல் பொதுவானது, அந்தப் பொதுமையிலிருந்து உருவான ஆடல்வகைதான் உரிய இனக்குழுமங்களை அடையாளப்படுத்துவன என்பதும் ஏற்றுக் கொள்ளப்பட்டதே. இலங்கைத் தமிழர் ஆகிய நாம் கீழைத்தேயத்தவர்கள் என்ற எல்லைக்குள் அடங்கியிருந்தாலும், "கீழைத்தேய ஆடலியல்" என்ற பொதுப் பரப்பிலிருந்து ஈழத்தமிழர் அடையாளம் சார்ந்த ஓர் ஆடல்வகைபற்றி இன்று வரை நாம் சிந்தனைக்கு எடுத்ததில்லை. அது மட்டுமன்றி நம்மிடையே பல தசாப்தகாலமாக பயில்நிலையில் உள்ள ஆடல்வடிவத்திலாவது ஈழத்தமிழர் சார்பு ஓர் ஆற்றுகை முறையை (ஈழத்துப் பாணி) உருவாக்குவது பற்றித் தன்னும் அக்கறைப்பட்டதில்லை.

பாடசாலைகள் மட்டத்திலிருந்து பல்கலைக் கழகம் வரையிலான இது சார்ந்த முன்னெடுப்பில் மேற்கூறிய ஆற்றுகை முறை பற்றிய "எண்ணக்கரு" தவிர்க்கப்பட்டு, இறக்குமதியாகும் ஆடல் துணுக்குகளைக் கையளிக்கும் நிலையே தொடர்கிறது... இந்த நிலையில் இந்த ஆடல் வடிவத்துக்கு எவ்வாறு நாம் மரபுரிமை கொண்டாட முடியும்...?

ஆக, ஈழத் தமிழர்க்கென்றொரு ஆடல் வடிவமும் இல்லை. அத்துடன் நம்மிடையே பல தசாப்தகாலமாக பயில்நிலையில் உள்ள ஆடல்வடிவத்தில் நம்மை அடையாளப்படுத்தும் "ஆற்றுகைமுறை" கூட ஏற்படுத்தப்படவில்லை. இன்று நம்மிடையே உள்ள ஆடல் வடிவத்தின் யதார்த்த நிலை இதுதான்.

1. 1940 களின் காலப்பகுதியில், எமது நாட்டு சைவாலயங்களின் மஹோற்சவங்களின் போதும் மற்றும் வைபவங்களின் போதும், "சதிர்" கச்சேரிகளை (நடன நிகழ்வுகளை) நடத்துவதற்காக தென்னிந்தியாவிலிருந்து, குறிப்பாக; தஞ்சாவூர் - மதுரை போன்ற இடங்களிலிருந்து ஒப்பந்த அடிப்படையில் அழைத்துவரப்பட்ட "ஆடல்மகளிர்" இன்று பரதநாட்டியம் என அழைக்கப்படும் ஆடல் வடிவத்தின் மூல வடிவமான 'சதிர்' கச்சேரிகளை நிகழ்த்தியது தொடர்பாகவும், அதாவது, அன்றைய அவர்களது ஆற்றுகைமுறை, சினிமாப் பாடல்களுக்கு ஆடப்படும் கொச்சைத்தனமான, குலுக்கல், துள்ளல்கள் போன்றல்லாது, 'சதிர்' ஆட்டமுறையின் மார்க்கப்படி முறைக் கோர்வையான அலாரிப்பு முதல் தில்லானா வரையிலான குறிப்பிட்ட காலத்து சாஸ்திரிய முறையை ஒட்டியதாகவே அமைந்திருந்தது. அதன் பிற்பட்ட காலப்போக்கில் சதிர், சின்ன மேளம் என்ற முறைகள் அவற்றின் உரிய செல்வழிகளில் தடம்மாறிச் சென்றதும் ஈற்றில் அவை அற்றுப்போய்விட்டதும், அது வேறு வரலாறாகும். அவ்விதமே 1941களில் கோபிநாத் தங்கமணி நாட்டியக் குழுவினரின் வருகையுடன் அறிமுகமான கதகளி ஆடல் நிகழ்வுகளாலும், உளக்கவிவு பெற்ற நமது உள்ளூர்வாசிகளையும் அவற்றில் ஈடுபாடுகொள்ள வைத்ததுடன் அவர்களும் அவற்றை உள்வாங்கிச் செயற்படுவதற்குத் தூண்டுகோலாகவும் அமைந்தது. அதன் பெறுபேறாக, நம்மவர்கள் சிலரும் தென்னிந்தியா சென்று இந்த இரண்டு ஆடல் வகைகளிலும் தங்கள் அளவிலான பயிற்சி பெற்று எமது மண்ணில் கலைப் பணியையும் மேற்கொண்டனர்.

விரல் மடித்துக் காட்டும் எண்ணிக்கையிலான அந்தநடன ஆசிரிய முன்னோடிகளில் "கலைச் செல்வன்" ஏரம்பு, சுப்பையா கீதாஞ்சலி, வி.கே. நல்லையா ஆகியோரால் ஆரம்பிக்கப்பட்ட ஆடல் கலைப்பணி 1950, 60களில் யாழ்ப்பாணத்து அன்றைய இளைய சமூகத்தினரையும் ஆடல்கலை அரங்கச் செயற்பாடுகளில் ஆர்வத்தோடு ஈடுபாடு கொள்ள வைத்ததுடன், இந்தியா சென்று கற்றுக் கொள்ள வேண்டும் என்ற உந்துதலையும் அவர்களில் சிலருக்கு ஏற்படவும் வைத்தது.

இது தொடர்பாக யாழ்ப்பாணத்து இசைமன்றங்களான இரசிக ரஞ்சனாசபா, நல்லூர் அண்ணாமலை இசைத் தமிழ் மன்றம் ஈறாக வடமராட்சி, தென்மராட்சி வரையான இசை விழா அரங்குகளிலும் மற்றும் கலை விழாக்களிலும் ஆடலணங்குகளின் சதங்கை ஒலிகள் வியாபித்திருந்த காலமது. ஆனாலும், ஆடல் கலையில் ஈடுபாடுடையவர்களாக இருந்தாலும், அத்தகையவர்கள் மத்தியில் அந்த ஈடுபாடுகளுக்குரிய அடிப்படையிலான உள உந்துதல் அதைநோக்கிய இலக்கு என்ன? என்ற தெளிவற்ற நிலையில் அது ஒரு வித குதூகலமான பொழுதுபோக்குக்குரிய அழ கியல் ஊடகம் என்ற மனப்பாங்குடனே ஆடல் ஆற்றுகை பற்றிய அணுகுமுறைகள் அன் றைய காலகட்டத்தில் வியாபித்திருந்தும் இதன் பின்னோக்கிய பார்வையில் அவதானிக்கப்பட வேண்டியவையே.

2. 1972களுக்குப் பின்னால் அழகியற் கல்வியின் ஓர் அலகாக "ஆடற்கல்வி" பாடசாலைகளின் பாடவிதானத்தில் உள்வாங்கப்பட்ட பின்பு, மேற்கூறிய போக்கும், அதைச் செயற்படுத்துவோரின் பணி இலக்கும் வேறொரு விதமான மாற்றத்துக்குரியதாகியது. அதாவது ஆடல் கல்வியும் பாட விதானத்தில் உள்ளடக்கிய ஒரு பாடப்பரப்பு என்ற எல்லையோடு கற்றல், கற்பித்தல், பரீட்சை என்ற முன்னெடுப்புடன் பெரும்பாலும் நின்று விடுகிறது.

அதனால் அழகியற்கல்வி அறிமுக நோக்கத்தில் அதன் ஓர் அலகான "ஆடல்கல்வியின்" வகிபாகத்துக்குரிய அகவயப் பெறுமானங்களில் நமது இனத்துவசாயல் எந்த அளவுக்குத் துல்லியப்படுத்தப்பட்டுள்ளது? என்ற தேடல்களுக்கு இன்றுவரையும் இடம் ஏற்படவில்லை... தொழில்சார் மனப்பாங்குடன் கூடிய செயல் முறை முன்னெடுப்புக்கு அப்பால், அழகியற் கல்வி ஆசிரியப் பணியாளர்கள் தாம் சார்ந்துள்ள இனக் குழுமத்தின், பண்பாட்டு விழுமியங்களது பெறுமானத்துக்குரிய "குறியீட்டு உரு வங்களாகத் தாங்களை அடையாளப்படுத்திக் கொள்ளும் நிலைமையிலுமில்லை" இவர்கள் தென்னிலங்கையின் அழகியற் கல்வி ஆசான்களது செயற்பாடுகளை எட்டிப் பார்த்தாலாவது தம்மையும் உரிய நிலைக்கு உட்படுத்தலாமல்லவா?

3. 1970களிலிருந்து இரண்டு தசாப்தகாலம் வரையிலான காலப் பகுதியில் ஆடல் ஆற்றுகைகள் நமது பிரதேசத்தில் பரவலாக அரங்குகளை ஆட்டிக்கொண்டிருந்ததும் முக்கிய வரலாறுதான். 1968 பிற்பகுதியிலிருந்து, செவ்வியல் வழி செல்நெறி முறையான ஆடவணியாக முனைப்புடன் செயற்பட்டுக் கொண்டிருந்த "வேல் ஆனந்தன் நாட்டியக் குழுவினரின்" அரங்கச் செயற்பாடுகள் - யாழ்ப்பாணத்துடன் மட்டுமன்றி வடபுலத்து மாவட்டங்களின் ஒவ்வொரு மூலையிலும் அதற்கும் அப்பால் அதிக இலங்கை ரீதியாக வாரத்துக்கு ஒரு முறையேனும் அரங்காடியபடி இருந்த காலமது... இன்று வெற்றுத் தரையாகியுள்ள அந்த நாளைய யாழ்.மாநகராட்சி மன்ற மண்டபம் உட்பட இன்றுள்ள யாழ்.வீரசிங்கம் மண்டபத்தின் முதல் மண்டபம் நிர்மாணிக்கப்பட்டிருந்த காலத்தில் அதற்கு அருகில் றீகல் படமாளிகையும் அமைந்திருந்தது. அந்தப் படமாளிகைக் காட்சி நேரங்களாக மு.ப 10.30, பி.ப.2.30 இரவு 6.30 என்ற நேரப்படி சினிமாக்காட்சி நடைபெறும். அதேநேரத்துக்கு இணையாக சனி, ஞாயிறு நாள்களில் மு.ப. 10.30, பி.ப 2.30 மாணவர் காட்சிகளாகவும், இரவு 6.30 மணிக்குப் பொதுமக்கள் காட்சியாகவும் இடம்பெற்ற "வேல் ஆனந்தன்" நாட்டியக்குழுவினரின் "நாட்டியாஞ்சலி" ஆற்றுகைகளை மண்டப வாசலில் நுழைவுச்சீட்டுப் பெற்று ரசிகர்கள் பார்த்து அனுபவித்த காலங்களும் உண்டு.

இவற்றுக்கு அப்பால் கொக்குவில் கலா வைபவம் நரசிம்மர் கோயிலடி யாழ், கலாஷேத்திரம், யாழ்.கலைமன்றம் ஆகிய தனியார் கலை நிறுவனங்களது ஆற்றுகைகளும் அத்துடன் தனிநபர் ஆடலாற்றுகையாளர்களாகத் தாங்களை அடையாளப்படுத்திக் கொண்ட செல்வி.லீலா நாராயணன், செல்வி ரங்கா விவேகானந்தன் ஆகியோரதும், இன்னும் சிலரினதும் ஆற்றுகைகளும் வியாபித்திருந்த காலம் -வேல் ஆனந்தன் நாட்டியக்குழுவின் நாட்டியாஞ்சலி அரங்கச் செயற்பாடுகளுக்கு அப்பால் அந்தக் குழுவினரது, "கீழைத்தேய ஆடற்கதைகள்" (ORIENTAL BALLET) உரிய காலத்து மக்கள் மயப்பட்ட செய்திகளை அவர்களை நோக்கியே நகர்த்தப்பட்ட ஆற்றுகைகளாகச் சமர்ப்பித்த காரணத்தினால் ஆடல்வடிவம் என்ற அழகியல் போர்வைக்கூடாக அவற்றை அகவயப்படுத்திக் கொள்ள ஆர்வத்துடன் அணுகியவர்களானாலும் பொதுவாகவே ஆடற்கலை அரங்கச் செயற்பாடுகளின் அசல், நகல் தரங்களை இனங்கண்டு உளங்கொள்ளத்தக்க ஆரோக்கியமான ஒரு சூழ்நிலை அன்று மக்களிடையே நிலவியது மட்டுமன்றி அந்த நாளைய கலைஞர்களிடையேயும் வர்த்தகத்தனம் குறைந்த கனதியான கலைத்துவ மனப்பாங்கு மேலோங்கியுமிருந்தமையும் ஏற்றுக்கொள்ளப்படவேண்டும்.

நமது பிரதேசம் "சமநிலை தளர்ந்து, இடப் பெயர்வுகள் ஆரம்பிக்கும் வரையும் மேற்கூறிய அக்கால கட்டத்தில் நமது ஆடலுலகின் நகர்வுகள் அடர்த்தியான, ஆரோக்கியமான நிலையில் இருந்ததும் குறிப்பிடத்தக்கது. நிலை தடுமாறிய காலத்திலும் சூழ்நிலை சார்ந்த அதாவது இயல்பு நிலைக்கு அப்பாற்பட்ட அழுத்தங்களைச் சமாளிக்கவேண்டிய கட்டாயத்தின் அடிப்படையிலான அரங்கச் செயற்பாடுகளும் இடம்பெற்றுக்கொண்டுதானிருந்தன.

4. நிலைமாறுகாலம்:- அமைதி வந்து விட்டதும் நிம்மதியும் வந்துவிட்டது. அபிவிருத்தீ தொடர்கிறது என்றெல்லாம் ஏடுகளில் செய்திகள் வெளிவருகின்றன. அத்தோடு அங்கே வெட்டுக் கொத்து இங்கே கொள்ளை போகிறது, பெண்களிடம் பலாத்காரம்.. என்ற திடுக்கிடும் சம்பவங்களும் நாளாந்தப் பத்திரிகைச் செய்திகளாகின்றன.

கடந்துபோன காலங்களில் நம்மவர்களுக்கு ஏற்பட்ட தாக்கங்களின் ரணங்களை ஆற்றுப்படுத்தலுக்குட்படுத்தப்பட வேண்டிய தேவைகள் அவற்றுக்குள்ளும் யாரை, எப்படி, முதலில் ஆற்றுப்படுத்துவது என்ற வினாக்களுடன் கூடிய அங்கலாய்ப்பும் - நொந்துபட்டு, நோக்காடு தீர வழியின்றி வெண் சாம்பல் பரவலுக்குக் கீழ் கனன்று கொண்டிருக்கும் எரிதணல் போன்ற உள்ளங்களை எப்படித்தணியச் செய்வது, என்ற மனிதாபிமான வினாவுக்கும் எப்படி விடை தேடுவது...? எங்ஙனம் ஆற்றுப்படுத்துவது என்ற நிலையில் தான் மேற்பந்தியில் குறிப்பிட்ட திடுக்கிடும் செய்திகளும் மக்களை நாளாந்தம் பீதியில் உறையவைக்கின்றன.

இத்தகைய சூழ்நிலையில், நம்மகத்தே உள்ள கலை, இலக்கியத்துறைகளின் மக்களை நோக்கியதான நகர்வு எத்தகை பயனுறு தாக்கத்தை ஏற்படுத்தும் - குறிப்பாக ஈழத்து தமிழ் இலக்கியத்துறையை விடுத்து - நம்மகத்தேயுள்ள ஆடல் வடிவத்தின் இது சார்ந்த நகர்வுக்குரிய வகிபாகம் எத்தகையது? அதற்குரிய ஆதாரத்தளம் தற்போது அகவயமாகவும், புறவயமாகவும் எந்த அளவுக்கு நம்மையும் நமது மண்ணுடன்கூடிய இயைபையும் வெளிப்படுத்தி நிற்கிறது....?

ஈழத்து தமிழ் இலக்கியம், நமது பிரதேசத்தைப் பற்றியும் அதனகத்தேயுள்ள மக்களைப் பற்றியும் அவர்களது நாளாந்த வாழ்வியல் பற்றியும், ஒடுக்கப்பட்டவன் பற்றியும், ஒடுக்குபவன் பற்றியும் பேசுகிறது. நிலை தடுமாறு காலத்துக்கு முன்னிருந்த சமூகநிலை பற்றியும். கூறியது. நிலைதடுமாறிய காலத்திலும் மக்கள் எதிர்கொண்ட இடர்பாடுகளைப் பற்றியும் பேசியது. அதன் பின்னால் "நிலை மாறிய" இன்றைய காலத்தையும் பற்றிப் பேசுகின்றது. ஆக, நமது இலக்கியம், நம்மைப் பற்றிப் பேசும் இலக்கியம் என்பதால் தமிழக இலக்கியங்களை புறமொதிக்கிவிட்டோமா....? இல்லையே....

இந்த நிலையில் நம்மிடையே பயில்நிலையில் உள்ள ஆடல் வடிவம் நமது மண்வாசனையுடன் கூடிய அடையாளத்தை ஓரளவுக்காவது வெளிப்படுத்துகிறதா? இயல்பாகவே அதை நாடிச் செல்லும் மக்கள் கூட்டம் நம்மிடையே உள்ளதா? சுயமாக இயங்கும் மக்களிடமிருந்தே அகலப்பட்டு நிற்கும் ஆடல்வடிவத்தினூடு நொந்துபட்டவர்களின் நோக்காடுகளை ஆற்றுப்படுத்தும் நகர்வு பற்றிச் சிந்திக்க முடியுமா? அதனால் நம்மிடையே உள்ள ஆடல் வடிவத்தை நமது மண்வாசனையுடன் கூடியதும் மக்களின் இயைபுக்குட்பட்ட வடிவமாகவும் மாற்றவேண்டிய தேவையுடன் கூடிய முயற்சி முதலில் தவிர்க்கப்பட முடியாததாகிறது.

( தொடர்ச்சி f பக்கத்தில் பார்க்கவும்... )

விரையுங்கள்!

அங்கர்

அன்புப் பரிசு



ரூ. 10,000,000/-

பெறுமதியான புலமைப்பரிசில்களையும்* பல

இலட்சக் கணக்கான உடனடிப் பரிசுகளையும்*

வெல்லுங்கள்!



அன்புப் பரிசு

கேளுங்கள்

அங்கர்™ இடம்

0777 99 55 22

மேலதிக விபரங்களுக்கு தயவுசெய்து அங்கர் 400 கிராம் அல்லது 1 கிலோ பக்கட்டின் பின்புறத்தைப் பாருங்கள்

*நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

WP/GT/4207

6. பங்குபற்றுதல் என்பது விருப்பத்துக்குரியதும் தன்னிச்சையானதுமாகும்.

7. அங்கர் 400 கி. அல்லது அங்கர் 1 Kg பக்கட் (உற்பத்திப் பொருள்) வாங்கும் போது மட்டும் இந்த கொடுப்பனவு செல்லுபடியாகும்.

**போட்டிக்கான காலம்**

8. 2014 கார்த்திகை மாதம் முதலாம் திகதி தொடக்கம் 2015 தை, 31 ஆம் திகதி வரை இந்த சலுகை செல்லுபடியுடையதாகும்.

**சுயாதீனமான கணக்காய்வாளர்கள்**

9. இப்போட்டியானது மேல் மாகாண சபை (கணக்காய்வாளர்கள்) அரசிறை திணைக்களத்தின் உத்தியோகத்தர்களின் மேற்பார்வையின் கீழ் நடாத்தப்படுகிறது.

**பரிசுகள்**

10. இப்போட்டியின் கீழ் தெரிவு செய்யப்படும் சகல வெற்றியாளர்களுக்கும் வழங்கப்படும் பரிசுகள் கீழ் குறிப்பிடப்படுகின்றன.

# குறும்படங்கள் ஒரு பார்வை

ஜி.ரி.கேதாரநாதன்

உண்மையைச் சொல்லும் கலைதான் உன்னதக் கலையாகும். குறும்படங்களும் இதற்கு விதிவிலக்கல்ல. குறும்படங்கள் மிகவும் வலிமை வாய்ந்தவை. முழுமையானதொரு அனுபவத்தை அவற்றால் தோற்றுவிக்கவும் தொற்ற வைக்கவும் முடியும். ஒரு சின்னப்புல்லும் அதன் வடிவில் முழுமை என்பது ஈழத்து மகாகவியின் அற்புதக் கவிதை வரியாகும்.

குறும்படம் என்பது நிச்சயமாக மாற்று ஊடகமாகும். சந்தையில் விற்பதற்கான சரக்கல்ல. குறும்படம் சொல்லமுடியாத அணுகமுடியாத பலவற்றை அவற்றின் வலிமை குன்றாத விதத்தில், நீர்த்துப் போகாது காட்சிரூபத்தில் இயல்புகெடாமல் சிக்கனமாக சொல்கின்றபோது அது குறும்படத்துக்கான நேர்மையை, அதற்குரிய கலைப்பெறுமானத்தை எட்டுகிறது. சிறுகதையை குறும்படத்துக்கும் நாவலை கதைப்பாங்கான திரைப்படத்துக்கும் ஒரு விதத்தில் ஒப்பிடலாம். இரண்டுக்கும் பல ஒத்ததன்மைகள் இருக்கின்றன.

குறும்படப் பயிலரங்குகள் மூலமான பயிற்சி, பிரக்ஞை பூர்வமான ஈடுபாடு, நீண்ட தொடர்ச்சியான இலக்கிய அனுபவங்கள் போன்றவை சிறந்ததொரு குறும்படத்தை உருவாக்குவதற்கு எப்போதுமே உத்வேகம் அளிப்பவை. பிரமாண்டங்கள், அதீதங்கள், நீண்ட உரையாடல்கள் குறும்படங்கள் மீது பலவீனமான பார்வையை உருவாக்கவல்லன. திரையுலக நுழைவுக்கான வாய்ப்பாகவோ அல்லது அவற்றின் பிரதியீடாகவோ குறும்பட முயற்சி ஒருபோதும் இருத்தலாகாது. கலைஞர் தொலைக்காட்சி (இதனை நம்மவர்களும் பார்ப்பதனால்) அண்மைக்காலமாக "நாளைய இயக்குநர்" மூலம் குறும்பட ஊடகத்தை உருத்தெரியாமல் சிதைத்துவிட்டது. "கார்ப்பிரேட்" தரவீழ்ச்சிக்கான மூலகாரணமாகும்.

குறும்பட அழகியல் தனித்துவமானது. உலகளாவிய ரீதியில் பெரும்பாலும் இதனை மாற்றுப் பரீட்சார்த்த முயற்சிகளுக்கான ஊடகமாகவே கருதுகிறார்கள். ஆனால் இங்கு நடப்பதோ வேறு. குறும்படங்கள் ஏற்கனவே வெளியிடப்பட்ட தமிழ்ச் சினிமாக்களின் பாணியிலான "மினி" வடிவங்களாகத் தயாரிக்கப்படுகின்றன. இதற்கான வீண்செலவினங்கள் மிக அதிகமாகும். பிரமாண்டங்களின் மினி வடிவங்களாக எல்லாத் தளங்களிலுமே அவை அவற்றுக்குரிய உள்ளார்ந்த வீறுகளை இழந்து போலிகளாக மலினமடைந்து போய்விடுகின்றன. அடுத்த கட்ட இயக்குநர்களாக அவர்கள் தம்மைக் கருதிக் கொண்டு பெரும் எடுப்பில் தயாரிப்பில் மூழ்கிறார்கள். இதன் விளைவு என்ன என்பது எல்லோரும் அறிந்ததே. சினிமாவிலிருந்து சினிமாவை உருவி எடுத்து, ஒரு மினி சினிமாவை குறைந்த நிமிடங்களில் எடுக்கிறார்கள். பெரும்பாலோருக்கு சொந்தமாகக் கதையோ வாழ்வு அனுபவங்களோ கிடையாது.

அண்மைக்காலத் தமிழ்க் குறும்படங்களின் முயற்சிகள் மற்றும் வெளியீடுகளைப் பார்க்கும்போது அவற்றின் தன்மைகள், போக்குகள் எமக்குள் ஏமாற்றங்களையும் அதிருப்திகளையும் ஏற்படுத்துகின்றன. வடமாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தினர் எனது பார்வைக்காக இருபது குறும்படங்களைத் தந்து அதையொட்டி விமர்சனபூர்வமான குறும்படங்கள் தொடர்பிலான கட்டுரை ஒன்றை எழுதுமாறு பணித்திருந்தார்கள்.

வாழ்வியல் பற்றிய ஆழ்ந்த அனுபவம், கருத்தாக்கங்கள், இலக்கிய வாசிப்புக்கள், தொழில்நுட்பம் பற்றிய அடிப்படை அறிவு, அவ்வப் பின்னணிகளுக்குரிய அரசியல் பண்பாட்டுக் கூறுகள் பற்றிய கிரகிப்பு என்பனவற்றின் பிரதிபலிப்பாக நன்கு படைக்கப்படுகின்ற, சிலாகித்துப் பேசப்படுகின்ற குறும்படங்களுடன் ஒப்பிடும் போது, இந்தக் குறும்படங்களில் பெரும்பாலானவை ஏமாற்றத்தையே அளித்தன. கருத்தாக்கத் தன்மையின் பலவீனம், பரப்புரைத் தன்மை, நாடகப்பாங்கான தாக்கங்கள் போன்றவற்றை பலவீனமான அம்சங்களெனக் குறிப்பிடமுடியும். பெரும்பாலான நெறியாளர்களின் ஆழமற்ற மலினப்பட்ட ஜனரஞ்சகத்தன்மை விரவிய வாழ்வியல் நோக்கு மிகுந்த விசனத்தையும் அதிருப்தியையுமே ஏற்படுத்தின. அத்துடன் யதார்த்தத்துக்குப் புறம்பான வாழ்க்கை அனுபவங்களுடன் ஒட்டாத, அதீத உணர்வுகளாலான சித்திரிப்புகள் தொடர்பில் நெறியாளர்களின் கலைரசனைமீது கேள்வியை எழுப்புவது தவிர்க்கமுடியாததொன்றாகி விடுகிறது.

சகமனிதர்களின் சுகதுக்கங்கள், இழப்புகள் மற்றும் அவலங்களை வெளிப்படுத்துவதோ அல்லது பகிர்ந்து கொள்வதோ குறும்படத்தின் அடிப்படை அம்சம் எனலாம். வாழ்வு மிகவும் கடுமையானது. சிலவேளைகளில் புதுமை யானதும் கூட எந்த விதத்திலுமே அது ஒரு புதிர்தான்.

வாழ்வை மிகவும் நெருக்கமாக மெய்மை உணர்வுடன் அணுகிப் பார்வையைச் செலுத்துவதற்கு திரைப்படைப்புக்கள் முயற்சிக்கின்றன. சமூகத்தளத்தில் வாழ்வியலின் நெருக்கடிகளை அவற்றின் கூறுகளை நன்கு கிரகித்துக் கொண்டாலே அர்த்தமுள்ள நல்ல படைப்புக்களைப் படைப்பாளியினால் உருவாக்க முடியும். ஆற்றல்மிக்க நெறியாளர் ஒருவரின் முயற்சி இத்தகையதொரு தடத்திலிருந்தே



ஆரம்பமாகின்றது.

இத்தகையதொரு பின்னணியில் உலகக் குறும்படப் போட்டியில் 2005 ஆம் ஆண்டில் முதல் விருதைப் பெற்ற ஹங்கேரிய குறும்படமான BEFORE DAWN ஆர்வத்துடன் நோக்கத்தக்கது. இந்தக் குறும்படம் 100 உலகக் குறும்பட விழாக்களில் தெரிவாகியதுடன் சுமார் 40 உயர் விருதுகளையும் சுவீகரித்துக் கொண்டது. அவற்றுள் குறிப்பிட வேண்டியது ஐரோப்பிய திரை நிறுவனத்தின் அதியுயர் விருதான 2005 ஆம் ஆண்டுக்குரிய முதல்தர குறும்படமான தெரிவாகும். இதன் நெறியாளர் பலின்ற் கெனியெறாஸ் தனது நேர்காணலின் போது பின்வருமாறு கூறுகிறார்.

"இதைப்போன்றதொரு குறும்படத்துக்கு முதன்மையானது என்னவெனில், சரியான படப்பிடிப்புக்கான பொருத்தம் வாய்ந்த சூழலுடன் கூடிய தளமே ஆகும். இன்னும் சரியான உணர்வுகளைத் துல்லியமாக வெளிப்படுத்தும் முகங்கள், நடிகர்கள் கதாபாத்திரங்கள், இவற்றின் பின்பே நெறியாளரின் பார்வை முக்கியத்துவம் பெறுகிறது. இதையடுத்து பல நுணுக்க விவரங்களுடன் 'கமரா' நகர்த்தப்படுகிறது. சாத்தியமான ஒவ்வொரு கோணங்களிலும் 'கமரா' நகர்கிறது. உண்மையிலேயே இவையெல்லாம் கைகூடி சித்திக்கும்போதே, படைப்பாற்றலின் பரவசம் எனக்குக் கிட்டுகிறது"

இது குறும்பட நெறியாளரொருவரின் தரிசனத்தையும் அவருக்கு இருக்கவேண்டிய முழுமையான உழைப்பையும் எமக்கு நன்கு புலப்படுத்துகிறது.

நெறியாளர் ஒருவர் திரைக்கதையை வடிவமைக்கக் கூடியவராய் இருத்தல் வேண்டும். எழுத்தின் நீட்சியாக (திரைக்கதையின்) நெறியாளுகை இருத்தல் வேண்டும். இந்த வகையில் பரஸ்பரம் எழுத்து,நெறியாளுகை ஆகிய இரண்டிலுமே படைப்பாளிக்குரிய பண்புகள், குணாம்சங்கள் கூர்மையாக வெளிப்பட ஏதுவாகும். சாதாரண மனிதர்கள் உணர்ந்து வெளிப்படுத்துவதற்குச் சாத்தியமற்ற உணர்வு நிலைகளைச் செம்மைப்படுத்தி, செதுக்கி அதற்கான திடமான உருவம் கொடுத்து இயலுலகில் பாத்திரங்களாக உலாவவிடும் ஆற்றல் வாய்ந்தவராக நெறியாளர் தம்மை வெளிக்கொணர வேண்டும். இந்த வகையில் நெறியாளர் என்ற, ரீதியில் படைப்பின் (குறும்படத்தின்) சகல கூறுகளிலுமே அசாத்தியமாக கட்டுப்பாட்டுடன் அவர் இயங்கவேண்டும். திரைப் படைப்பு ஆற்றல் வாய்ந்த குழுவினர் பங்களிப்புடன் கூட்டுமுயற்சியாக இறுதி வடிவத்தை எட்டுகின்ற போதிலும் நெறியாளரே சகல கூறுகள் தொடர்பிலும் தீர்க்கமான முடிவும் கட்டுப்பாடும் கொண்டவராயிருத்தல் வேண்டும்.

குறும்படத்தின் கட்டுப்பாடு, சிக்கனம், கலைநேர்த்தி, நேரஎல்லை போன்றவற்றில் பிசகக்கூடாது. ஒன்று அல்லது இரண்டுக்கு மேற்பட்ட கதாபாத்திரங்களின் கதையாக பெருப்பித்து விடக்கூடாது. குறும்படமென்பதால், கதைக்குள் கிளைக்கதை என்பன தவிர்க்கப்பட்டு, விடயப்பரப்பு எல்லை ஒடுங்கியதாக இருக்க வேண்டும். உரையாடல்களையும் குறைத்து உணர்வுகளைக் காட்சிப் படிமங்களின் மூலம் வெளிப்படுத்த முற்படவேண்டும். குறும்படத்துக்கான பின்னணி இசை, சம்பவங்கள் மற்றும் வியாபிக்கும் உணர்வுகளின் தன்மைகளுக்கு ஏற்ப மாறுபட்டு பொருத்தமாக ஒலிக்க வேண்டும். அதற்காக ஆரம்பித்ததிலிருந்து முடிவுவரை பின்னணி இசை பயன்படுத்தப்படக் கூடாது. இடையே மௌனங்கள் அவசியம். பாடல் முற்றாகத் தவிர்க்கப்பட வேண்டும். ஒட்டுமொத்தமாக வாழ்வை மிக நெருக்கமாக மெய்மையுணர்வுடன் அணுகி பார்வையைச் செலுத்த நெறியாளர் முயல வேண்டும். இந்த வகையில் அவரின் தனித்த கூர்மையான பார்வையின் பாற்பட்டதே சினிமா அழகியலாகும். குறும்படத்தின் ஆதாரசுருதி இங்கிருந்தே ஆரம்பிக்கின்றது.

## GUN AND A RING

யாழ்ப்பாணத்திலிருந்து புலம்பெயர்ந்து கன



டாவில் இளவயதிலேயே குடியேறிய தமிழரான லெனின் எம். சிவத்தினது கதைப்பாங்கான கனடிய தமிழ்த் திரைப்படமே (Feature Film) இதுவாகும். இது 2013 இல் வெளியாகியது. எனினும் இதுவரை இன்னமும் எங்கும் திரையிடப்படவில்லை. இதனைப் பார்க்கும் அரிய வாய்ப்பு கொழும்பில் அண்மையில் நடைபெற்ற சர்வதேச திரைப்பட விழாவுக்குச் சென்றிருந்த எனக்குக் கிட்டியது.

16 ஆவது ஷாங்காய் திரைப்பட விழாவில் (2013) ஆயிரக்கணக்கான திரைப்படங்களுக்குள் தங்கக்கோப்பை விருதுக்கு பரிந்துரை செய்யப்பட்டிருக்கும் ஒரேயொரு தமிழ்த் திரைப்படம் இதுவென்பது குறிப்பிடத்தக்கது. தமிழர் என்ற ரீதியில் நிச்சயமாக நாமும் பெருமையடையலாம்.

ரொரன்ரோவில் இருவாரங்களுக்குட்பட்ட கால எல்லைக்குள் இடம்பெறும் சம்பவங்கள், கூட்டுக்கதைகளின் இணைப்பாக இந்தத்திரைப்படம் திகழ்கிறது. இவைகளுக்கிடையே சகலவற்றையும் உள்ளிழுத்துப் பின்னப்பட்டிருக்கும் பொதுச் சரடு இழையோடுகிறது. அவை ஒன்றுடன் ஒன்று எவ்வாறு தொடர்புபடுகின்றன என்பதை தெளிவான திரைக்கதையினூடாக சாத்தியமாக்கியிருப்பது பாராட்டத்தக்கதொரு உத்தியாகும்.

மேலும் ஒவ்வொன்றுக்கும் கவித்துவமான தனித்தனித் தலைப்பிடப்பட்டிருப்பது பல குறும்படங்களின் கூட்டிணைப்பிலான அனுபவத்தையும் ஒருசேரத் தருகிறது.

இளைஞனான ஞானம், தான் எதிர்கொள்ள நேருகின்ற சகல தோல்விகளுக்கும் அதிருப்திகளுக்கும் எல்லாம் தனது இருண்ட கடந்த காலமே காரணம் என்று நம்புவதுடன் மாத்திரமன்றி அதற்கு இறுதி முடிவெடுக்க வேண்டும் என்ற தீவிர முனைப்புடன் வன்முறையை நாடி அலைகிறான்.

நேர்மையும் கடமையுணர்வுடன் கூடிய விசுவாசமும் கொண்ட கனடிய பொலிஸ்காரரான ஜோன், மனவேதனைக்கும் விரக்திக்கும் உள்ளாகியிருக்கும் இளவயது ஒருபால் உறவினனான ஆதி, தமது ஒரே மகனை போர்ச் சூழலிலிருந்து சிறுவயதிலிருந்தே விலக்கி அவனின் பாதுகாப்புக்காக மனைவியைப் பிரிந்து கனடாவில் வாழும் இரக்க சுபாவமுடைய சொர்ணம், தமது ஒரே மகனுடைய அகால மரணத்துக்குப் பிறகு வாழ்க்கையில் எதுவித பற்றுமின்றி துன்பத்தில் உழலும் அரியம், முன்னர் போராளியாக இருந்து புதுமண வாழ்வில் இணையும் பொருட்டு திருமணம் செய்ய கனடா வந்திருக்கும் இளம்பெண் அபி, சகல சொந்த பந்தங்களையும் இழந்து சூடானிலிருந்து அகதியாக வந்திருக்கும் சூடானிய இளைஞன். இவர்களைச் சுற்றிச் சுழல்வதாக திரைக்கதை அமைக்கப்பட்டிருக்கிறது. வேறு பட்ட தலைமுறையினராகிய இவர்கள் தமது கடந்த காலங்களிலிருந்து விடுபட முடியாதவர்களாக கடுமையான யதார்த்தங்களை ரொறன்ரோவில் எதிர்கொள்வதே தொடரும் கதையாகும்.

இலங்கைத் தமிழர்களைக் கதாபாத்திரங்களாகக் கொண்ட தமிழ்த்திரைப்படங்கள் பலவற்றுக்கும் நெருடலாகவும் யதார்த்தத்தைப் பாதிக்கும் வகையிலும் அமைந்து விடுகின்ற யாழ்ப்பாணப் பேச்சுத்தமிழ் மிகச் சரியான முறையில் கையாளப்பட்டிருப்பது இதனை இயல்பும் எளிமையும் கொண்ட நம்பகத் தன்மையுடன் கூடிய சாதாரணர்களின் திரைப்படமாகத் தரமுயர்த்துகிறது. ஒட்டுமொத்தமாக தமிழ் அடையாளங்களுடன் கூடிய நல்லதொரு திரைப்பட அனுபவத்தை சாத்தியமாக்கியிருக்கும் லெனின் எம்.சிவமும் அவரது குழுவினரும் பாராட்டுதற்குரியவர்கள்.

### உலக குறும்பட வரிசையில்..........

## The Bread and Alley

இது சர்வதேச புகழ் வாய்ந்த ஈரானிய நெறியாளரான அபாஸ் கியாரொஸ்மியின் முதலாவது குறும்படமாகும். 1970 ஆம் ஆண்டில் வெளிவந்த இந்தக் குறும்படத்தை அவரே எழுதி நெறியாளுகை செய்துள்ளார். சிறுவர்களுக்கான குறும்படமாக சர்வதேச அங்கீகாரத்தையும் அந்தஸ்தையும் இந்தக் குறும்படம் ஈட்டியது குறிப்பிடத்தக்கது.

கறுப்பு வெள்ளையில் 10 நிமிடங்கள் மாத்திரமே நீடிக்கும் இந்தக் குறும்படம் கையில் பாணுடன் வீடு திரும்பும் சிறுவன் வழியில், பசியால் அலைந்து திரியும் இராட்சத நாயொன்றை எதிர்கொள்ள நேரிடும் நெருக்கடி பற்றிக் கூறுவது. வீட்டில் பாண் வாங்கி வருமாறு கூறுகிறார்கள். பாணை வாங்கிக்கொண்டு வீடு திரும்பும் சிறுவனை நெருக்கடி சூழ்கிறது. அவன் வீட்டுக்குச் செல்லவேண்டிய பாதையை இராட்சத நாயொன்று நகர முடியாதபடி அடைத்துக் கொண்டு தொந்தரவு செய்கிறது.

நாயின் அசாதாரண தோற்றத்தினாலும் அதன் குரைப்பினாலும் மிரண்டு போன சிறுவன், சில வழிப்போக்கர்களின் உதவியை நாடிய போதிலும் அவர்கள் எவரும் அவனுக்கு உதவி செய்ய முன்வரவில்லை. இப்போது தனித்த நிலையில் பாதையிலும் தனித்து நிற்கிறான். பாணில் ஒரு துண்டை பிய்த்து தூரத்தே அதை நோக்கி வீசி எறிகிறான். நாயின் கவனம் எறிந்த துண்டின் மீது திரும்ப அவன் தொடர்ந்து நடக்கிறான். எல்லோருக்கும் தெரிந்த அன்றாட வாழ்க்கையில் நடக்கும் சம்பவங்களைக் கூடப் புதிதாக புரட்டிப் போட்டு மாயவித்தை காட்டும் படைப்பாற்றல் கைவரப் பெற்றவர் கியரொஸ்ரமி.

## Before Dawn

இது ஒரு ஹங்கேரிய குறும்படம். அகதிகள் பற்றியதாக, அரசியல் பின்புலத்துடன் கூடிய கூர்மையானதொரு குறும்படமாகும். இதனை 2005 ஆம் ஆண்டில் பலின்ற் கெனியிறாஸ் என்பவர் நெறியாள்கை செய்திருந்தார். "கேன்ஸ்" திரைப்பட விழாவில் முதல்தரமான உயர்விருதொன்றுக்கு இந்தக் குறும்படம் பரிந்துரைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. வீரியமான அரசியல் உள்ளடக்கத்தைக் கொண்டதாக விமர்சகர்களால் சர்வதேச அளவில் பாராட்டப்பட்டது.

( f பார்க்கவும்...)

புதன்பொய்கை



# பத்திரை

இந்திர சபையின் நடன அரங்கத்தின் இசையாசிரியராகவும் நடன ஆசிரியராகவும் இருந்து கலை நிகழ்ச்சிகளை நடத்தியவர் தும்புரு. தும்புருவின் மகள் பத்திரை கட்டழகி. நடனம் ஆடுவதிலும், இசை பாடுவதிலும், யாழ் வாசிப்பதிலும் தேர்ந்தவள். ஒரு நாள் தும்புருவும், பத்திரையும் இந்திர சபைக்குப் போய்க் கொண்டிருந்தபோது வழியிலே அவர்களைப் பஞ்சசிகன் கண்டான். அவன் பத்திரை மீது காதல் கொண்டான்.

இளைஞனான பஞ்சசிகன் இசை பாடுவதிலும், யாழ். வாசிப்பதிலும் வல்லவன். தேவேந்திரன் அவனைத் தன்னுடைய தூதனாக அமர்த்தியிருந்தான். இந்திரன் யாரிடத்திலேனும் தூது அனுப்பக் கருதினால் பஞ்சசிகனைத் தூதனாக அனுப்புவது வழக்கம். பஞ்சசிகன் தூதுபோய் யாழ் வாசித்து இசைபாடித் தனது காரியத்தை முடித்துக் கொண்டு வருவான். இதனால் இந்திரனுக்கு அவனிடத்தில் மிகுந்த அன்பிருந்தது.

பஞ்சசிகன் அடிக்கடி விண்ணுலகத்திலிருந்து மண்ணுலகத்துக்கு தூது செல்வது வழக்கம். அவன் மூலமாக மண்ணுலகத்தில் சிறப்பாக நடைபெறுகிற செய்திகளை அவ்வப்போது விண்ணுலகத்தில் இந்திரன் அறிந்து கொள்வது வழக்கம். பஞ்சசிகன் மண்ணுலகத்துக்கு வந்து நான்கு திக்குப் பாலகர்களைக் கண்டு அவர்கள் தெரிவிக்கும் மண்ணுலகச் செய்திகளை இந்திரனுடைய நண்பனான தேரோட்டியிடம் கூறுவான்.

தேரோட்டி அந்தச் செய்தியை இந்திரனுக்கு அறிவிப்பான். இவ்வாறு பஞ்சசிகன் மண்ணுலகத்துக்கும், விண்ணுலகத்துக்கும் தூதனாக இருந்தான்.

வழியில் பத்திரையைக் கண்டு அவள்மேல் காதல் கொண்ட பஞ்சசிகன் அவளைத் தனியாகச் சந்தித்துத் தன் காதலை அவளிடம் கூறினான். கலைஞனான அவன் பத்திரையிடத்தில் தனக்கிருக்கும் ஆழ்ந்த காதலை வெளிப்படுத்தி அழகான சில காதல் செய்யுள்களை எழுதினான். அந்தச் செய்யுள்களுக்குத் தானே இசை அமைத்தான். இசை அமைத்த பாடல்களைத் தன்னுடைய யாழில் அமைத்துப் பாடினான்.

அவன் தான் பாடிய அந்தச் செய்யுள்களைப் பத்திரையிடத்தில் சென்று பாடினான். செம்மையாகவும், அழகாகவும் இனிமையாகவும் இருந்த அவனுடைய காதற் பாட்டுகள் அவளுடைய மனத்தைக் கவர்ந்தன. அந்தக் காதல் பாட்டுகளில் பகவான் புத்தரின் புகழையும் பாடியிருந்தபடியால், புத்தருடைய உபதேசங்களில் ஈடுபாடுடையவளாய் இருந்த பத்திரைக்கு அந்தப் பாடல்கள் பெரிதும் மகிழ்ச்சியைத் தந்தன. அவனுடைய இசைப் பாடல்களைக் கேட்டு மகிழ்ந்த பத்திரை அவன் மேல் விருப்பங் கொண்டு அவனைத் திருமணம் செய்து கொள்ளச் சம்மதம் தெரிவித்தாள். அதனால் பஞ்சசிகன் பெரு மகிழ்ச்சியடைந்தான்.

ஒரு நாள் மண்ணுலகத்தில் உபதேசம் செய்து கொண்டிருந்த பகவான் புத்தரிடம் வந்து அவருடைய உபதேசங்களைக் கேட்க தேவேந்திரன் விரும்பினான். அதற்கு ஏற்ற தருணத்தை அறிந்து வரும்படி அவன் பஞ்சசிகனைப் பகவான் புத்தரிடம் அனுப்பினான். பஞ்சசிகன் புத்தரிடத்தில் வந்த போது அவர் மகதநாட்டு இந்திரசாலைக் குகையில் தங்கியிருந்தார். அவர் தனியே இருப்பதை அறிந்த பஞ்சசிகன் அருகில் சென்று யாழ். இசைத்து இன்னிசை பாடினான்.

அவன் பாடிய பாட்டு அவனுடைய காதற் பாட்டுத்தான். அந்தப் பாட்டில் புத்தருடைய புகழும் இருந்தது. அவன் வீணை வாசித்துப் பாடிய இசைப்பாடல் தேவகானமாக அவருடைய மனதைக் கவர்ந்தது. பகவான் புத்தர் அந்த இசையைக் கேட்டு மகிழ்ச்சியடைந்தார். அந்தப் பாடல்களை இயற்றிய பஞ்சசிகனை அவர் வாழ்த்தி யருளினார். பிறகு, தான் வந்த காரணத்தைத் தெரிவித்து பஞ்சசிகன் புத்தரின் விருப்பத்தை இந்திரனிடம் சொன்னான். இந்திரன் பகவானிடம் வந்து வணங்கி அவரிடத்தில் உபதேசங்களைக் கேட்டுக் கொண்டு தேவலோகம் சென்றான்.

தனக்கும் பகவான் புத்தருக்கும் சந்திப்பை ஏற்படுத்திக் கொடுத்ததற்காக இந்திரனுக்கு பஞ்சசிகன் மேல் மகிழ்ச்சி உண்டாயிற்று. தேவேந்திரன் பஞ்சசிகன் பத்திரையைக் காதலிப்பதை அறிந்து அவனுக்கு அவளைத் திருமணம் செய்விக்க எண்ணினான்.

தேவலோகத்தில் பஞ்சசிகனுக்கும், பத்திரைக்கும் திருமணம் மிகச் சிறப்பாக நடந்தது. இசை நாடகக் கலைகளில் வல்லவர்களும், கந்தர்வர்களும் மற்றும் தேவர்களும் திருமண விழாவுக்கு வந்து சிறப்பித்தனர். இசைக் கலை ஆசிரியரும் பத்திரையின் தந்தையுமான தும்புரு எல்லோரையும் வரவேற்று உபசரித்தார். தேவேந்திரனும் திருமண விழாவுக்கு வந்து மண மக்களை வாழ்த்தியருளினான். மண மக்களான பஞ்சசிகனும் பத்திரையும் இசை பாடி இனிதே வாழ்ந்தனர்.

## தெரிந்து கொள்வோம்...

- ஒவ்வொரு சிறுநீரகத்திலும் சுமார் பத்து லட்சம் வடிகட்டிகள் உள்ளன. இவை நிமிடத்துக்கு 13 லீற்றர் குருதியை வடிகட்டுகின்றன.
- புன்னகை புரிவதன் மூலம் குறைந்தபட்சம் 30 தசைநார்களுக்குப் பயிற்சி கிடைக்கிறது. நீங்கள் பொய்யாகச் சிரித்தாலும் அது உண்மையான விளைவை ஏற்படுத்தும்.
- 129,000 துளி நீரில் கலந்துள்ள ஒரு துளி எலுமிச்சைச் சாற்றையும் எம்முடைய நாக்கு எளிதாக உணரும்.
- யேசு கிறிஸ்துவின் முதல் சீடர்- செயிண்ட் ஆண்ட்ரு.
- ஒவ்வொரு படத்தையும் நடிக்க ஒப்புக்கொள்ளும் போது, கிடைக்கும் முன்பணத்தில் முதல் நூறு டொலருக்குப் புத்தகம் வாங்குவாராம் சார்லி சாப்ளின்.
- முதலையின் அடி வயிற்றுப் பகுதித் தோலில் புல்லட் புரூவ் உடை தயாரிக்கிறார்களாம்

# கண்ணன் மாடு

கண்ணன் மாடு கன்று மேய்த்து
வேணு கானம் பாடுவான்
வெண்ணெய் திருடி தின்பதற்கு
வீடு வீடாய் ஓடுவான்


வீட்டில் உள்ளோர் உறங்குகின்ற
வேளை நோக்கி ஒரு தினம்
வாட்ட மின்றித் துணிவு கொண்டு
வந்து சேர்ந்தான் மாயவன்



ஊர்ந்து சன்று பூனை போல
உறிை ட்டித் தொட்டனன்
சேர்ந்த னை மூடி வீழ்த்தி
சிதறி ஓ கேட்டனன்

ஆச்சி அந்த ஓசை கேட்டு
யார் அதென்று கூவினார்
கூச்சம் இன்றிக் கண்ணன் என்று
கூவி நின்றான் மாயவன்.

வீரன் கேண்மை கூரம்பாகும்



அ.விசாகன், தரம்-4
யாழ்ப்பாணக் கல்லூரி




தரத்தில் சிறந்ததும்
நம்பிக்கை மிக்கதுமான
பெறுமதி

சிறந்த தயாரிப்புகளை உங்களுக்கு அறிமுகப்படுத்தும்
என்.வைத்திலிங்கம் அன்ட் கம்பனி (ப்ரைவேற்) லிமிட்டெட்
70, கே.சிறில் சி.பெரேரா மாவத்தை, கொழும்பு 13. தொலைபேசி: 2433143-5, 2328842, 4616021-2
கிளை: 448-450, பழைய சோனகத் தெரு, கொழும்பு 12. தொலைபேசி: 2327488, 0114344114.
இல: 90,92 மில் தெரு, வவுனியா. தொலைபேசி: 024 4925809.
விற்பனை நிலையம் ரத்மலானை - தொலைபேசி: 4380859
92 வருட கால அனுபவம்

# குறும் படங்கள் ஒரு பார்வை

(D பக்கத் தொடர்ச்சி...)

இந்தக் குறும்படத்தில் உரையாடல்கள் முற்றாகத் தவிர்க்கப்பட்டுள்ளன. இயற்கையான ஒலிகளும் வாகன ஒலியெழுப்பியும் மற்றும் வாகன உறுமல் சத்தமுமே ஒரே ஒலிக்குறிப்புகளாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன. வெளிப்படையாக கதாநாயகர்களோ பிரதானமானவர்களோ எவரும் இல்லை. எல்லோருமே நெருக்கடிக்குட்பட்டு தப்பியோடும் சாமான்யமானவர்கள், ஆளரவமற்ற காற்றில் அசைந்தாடும் புதருக்குள் இருந்து வாக்ன சமிக்ஞை ஒலி கேட்டு மக்கள் திரள் வெளிக்கிளம்பும் காட்சி மெய்சிலிர்க்க வைக்கும் அபூர்வமானதொரு அனுபவமாகும்.

எல்லோரும் அந்தப் புதருக்குள் இருந்து அகற்றப்பட்டதும் இறுதிக் காட்சியில் அதனுள் மறைந்திருந்து ஆழ்ந்த துயரில் வெளிப்படும் மனித முகம் எம்மை உறைய வைக்கின்றது. காட்சிகள், படிமங்களுடன் கூடிய முதிர்ச்சியானதொரு அரசியல் திரைப்படம் இதுவாகும். அண்மைக்கால இராணுவ ஆக்கிரமிப்புக்குள்ளும் நீண்டகால போர் நெருக்கடிக்குள்ளும் அல்லற்பட்ட எம் மக்களுக்கு இத்தகையதொரு அனுபவம் புதிதானதல்ல. பலவற்றைப் பூடகமாக இந்தக் குறும்படம் உணர்த்துகிறது.

## The Lunch Date

எந்தப் படைப்பாக இருந்தாலும் முழு அளவில் அப்பழுக்கற்ற விதத்தில் செய்நேர்த்தியை எட்டிவிடுதல் என்பது சாத்தியமில்லை என்று கூறுவார்கள். பெரும்பாலும் இது உண்மையாகும். இதனை மறுதலிக்கும் வகையில் அரிதாகச் சிலர் படைப்பு முயற்சியில் சிகரத்தை எட்டியிருக்கிறார்கள். குறும்படத்தைப் பொறுத்தவரையில் முன்னுதாரணமிக்க ஆதர்ச படைப்பாக உலகளாவிய ரீதியில் இன்றும் கொண்டாடப்படும் தனித்துவமான படைப்பு The Lunch Date ஆகும். இந்தக் குறும்படத்தை கொலம்பியா பல்கலைக் கழக மாணவர் ஒருவர்தான் எழுதி நெறியாள்கை செய்தார் என்பது எவருக்கும் ஆச்சரியத்தை ஏற்படுத்தும். ஆமாம். அத்தகையான பிரமிப்புக்குரியவர் பட்டதாரி மாணவ நிலையிலிருந்த அடம்டேவிட்சன். 'கான்ஸ்' சர்வதேச திரைப்பட விழாவில் 1990 ஆம் ஆண்டு சிறந்த குறும்படத்துக்கான அதியுயர் விருதையும் மற்றும் ஓஸ்கார் விருதையும் இக் குறும்படம் ஈட்டியதென்பது குறும்பட வரலாற்றில் அதன் வளர்ச்சியில் ஈடிணையற்றதொரு சாதனையென்பது குறிப்பிடத்தக்கது.

கறுப்பு வெள்ளையில் பத்தே பத்து நிமிடங்கள் மாத்திரமே கொண்டது இந்தக் குறும்படம். கிராண்ட சென்ரல் ஸ்ரேசனிலுள்ள ஹோட்டலொன்றில் வெள்ளைக்கார சீமாட்டியொருவருக்கும் கறுப்பரான சாதாரண மனிதரொருவருக்கும் நிகழும் அபூர்வமான அதேவேளை வெள்ளைக்கார பெண்ணின் பார்வையில் அசௌகரியமான சந்திப்பொன்றே இந்தக் குறும்படத்தின் மையக்கருவாகும்.

ஹோட்டலில் உணவைப் பெற்றுக்கொண்ட வெள்ளைக்காரப்பெண், சௌகரியமாக அமர்ந்து சாப்பிடுவதற்காக காலியான ஹோட்டல் இருக்கையொன்றுக்கு எடுத்துச் செல்கிறாள். அப்போது உணவைக் குத்திச் சாப்பிடுவதற்கான முள்ளுக்கரண்டி போன்றவற்றைத் தயாராக எடுத்துச் செல்ல மறந்து விடுகிறார். எனவே, உணவை இருக்கை அருகிலுள்ள மேசையொன்றின் மேல் வைத்துவிட்டு எடுத்துவரச் செல்கிறார். திரும்பி வந்து பார்க்கும்போது அவர் வைத்துவிட்டுச் சென்ற உணவைக் கெரழுத்தவனான கறுப்பனொருவன் சாப்பிட்டுக் கொண்டிருப்பதைக் காண்கிறார். ஆரம்பத்தில் திடீரென ஏற்பட்ட அதிர்ச்சியிலிருந்து ஒருவாறு சுதாகரித்துக் கொண்ட பெண் எதிர்ப்புணர்வை வரவழைத்துக் கொண்டு அதே தட்டிலிருந்து எடுத்துத் தம் பங்குக்குச் சாப்பிடுகிறார். இருவரும் சாப்பிட்டு முடித்தபிறகு கறுப்பரான மனிதன் எழுந்து சென்று மீண்டும் அதே இடத்துக்கு இருவருக்குமான தேநீர் கோப்பைகளுடன் வருகிறார். அப் பெண் இரு மிடறுகள் தேநீரைக் குடித்துவிட்டு வெளியேறுகிறார். முற்றாக வெளியேற முன்னர், சற்று திரும்பிப் பார்க்கிறார். அப்போது அவர் விட்டுச் சென்ற அதே உணவு இன்னொரு மேசையின் மேல் அவர் வைத்தவாறு அப்படியே இருக்கிறது.

வித்தியாசமான பார்வைக் கோணத்தில் எம்மைப் புரட்டி எடுத்து விடுகிறது இந்தக் குறும்படம். மிகக் குறைந்த உரையாடல்களுடன் அதுவும் குறிப்பாக, பிரதான பாத்திரங்களுக்கிடையே முற்றாகவே உரையாடல் இல்லை. மட்டுப்படுத்தப்பட்ட செலவினங்களுடன் எத்தகைய ஆர்ப்பாட்டமோ பிரமாண்டமோ இன்றி அருமையான வித்தியாசமான அனுபவத்தைப் பத்து நிமிடங்களுக்குள் கலை நேர்த்தி குன்றாது சாத்தியமாக்கியிருப்பது குறித்து விமர்சகர்கள் ஏகோபித்த முறையில் நெறியாளரைப் பாராட்டியுள்ளனர்.

## A Chairy Tale

இந்தக் குறும்படம் மிக ஆரம்பக் காலத்தில் 1957 ஆம் ஆண்டு வெளியானது. இதன் வித்தியாசமான வகைமையினாலும் கையாளப்பட்டிருக்கும் எளிமையான உத்தியினாலும் தனித்துவமானதாகக் கருதப்படுகிறது. இதில் பிரதான பாத்திரங்கள் இரண்டே இரண்டு.



அதுவும் கதிரையும் மனிதனும் இரண்டுக்கும் இருக்கக்கூடிய பொதுப்பத்தியில் உறைந்து போயிருக்கும் பாரம்பரிய உறவை வித்தியாசமான படைப்புக் கோணத்திலிருந்து இது நோக்குகின்றது.

நோமன் மக்லாரன் என்ற கனடியரால் நெறியாள்கை செய்யப்பட்டது. வளர்ந்த பெரியவர்களிடமிருந்துகூட குழந்தைத்தனமான குதூகலிப்பை அவர் கொண்டு வருகிறார். இந்தக் குறும்படத்தில் இசை மிகவும் விசேடமான தனித்துவமான பங்கை ஏற்றுள்ளது. ஒரு விதத்தில் இசையே குறும்படத்தை நகர்த்துகிறது என்று கூடக்கூறலாம். இதற்காக மூவரின் இசை ரவிசங்கர் உட்பட சற்றூர் லால் மற்றும் மோரிஸ் பிளாக்பேர்ன் ஆகியோரது இசை மிக அருமையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. பரஸ்பரம் காட்சிக்கு இசையும் இசைக்கு காட்சியும் நல்கும் பங்களிப்பினால் அர்த்தச் செறிவுடன் கூடிய புதியதொரு அனுபவம் கிட்டுகிறது. சினிமா மொழியில் கலை நேர்த்தி குன்றாமல் இது வெளிக்கொணரப்படுகிறது.

பிரதான பாத்திரத்தை ஏற்று நடித்த குளோட் யுற்றாவின் உடல்மொழி மிகவும் அற்புதமானது. கதிரைக்கும் மனிதனுக்குமிடையே தோன்றும் ஒவ்வாமை, முரண்களையும் சமத்துவமற்ற தன்மைகளையும் சிக்கல்களையும் மற்றும் புரிதலுடன் கூடிய இணக்க நிலைகளையும் மிகத் துல்லியமாகக் காட்சி ரூபத்திலும் இசை ரூபத்திலும் கதையாக நகர வைக்கிறது இந்தக் குறும்படம்.

சமூக அடுக்கில் நிலவும் சமத்துவமற்ற போக்குகளை சர்ரியலிச பாணியில் இந்தக் குறும்படம் விமர்சிக்கின்றது.

### தேறிய ஈழக்குறும்படங்கள் நான்கு: கரும்பலகை

விறகுவெட்டி துவிச்சக்கரவண்டியில் கொண்டு சென்று விற்கும் வாய்பேசாத, காது கேளாத வயோதிபத் தந்தையுடன் பழைய வீடொன்றில் வேலையற்றிருக்கும் பட்டதாரி இளைஞன் வசிக்கிறான். தந்தைக்கும் மகனுக்குமிடையிலான உரையாடல், தொடர்பாடல் வீட்டிலுள்ள கரும்பலகை மூலம் நிகழ்கிறது. நேர்முகப் பரீட்சைக்கு சென்று வரும் அப்பட்டதாரி இளைஞனுக்கு வேலை கிடைத்தபாடில்லை. ஏமாற்றத்துடன் நாள்கள் கழிகின்றன.

தந்தை கொடுக்கும் பணத்தில் தந்தைக்குத் தெரியாமல் சிறு தொகையை சேமித்து வருகிறான். தந்தையும் அவ்வாறே சில்லறைகளை சேமித்து வருகிறார். கிழிந்த நிலையில் மகனது சப்பாத்து இருப்பதைக் கண்ட தந்தை தன் சேமிப்பாக வைத்திருந்த சில்லறைகளை தாள்களாக மாற்றி சப்பாத்தொன்றை வாங்குமாறு மகனுக்கு கரும்பலகையில் குறிப்பு எழுதுகிறார். அதற்கான பணத்தையும் நேர்முகப் பரீட்சைக்கு கொண்டு செல்லும் 'பைல்' ஒன்றுக்குள் வைத்துவிடுகிறார்.

நேர்முகப்பரீட்சை நடத்தும் அதிகாரியின் கண்களில் தட்டுப்படும் அப்பணத்தை அதிகாரி உள்ளூர சிரித்தபடி இலாவகமாக எடுத்துக்கொண்டு மறுநாள் வேலைக்கு வருமாறு கூறுகிறார்.

வேலையொன்றைப் பெற்றுக் கொள்வதற்கு பட்டப்படிப்புக்கு அப்பால் பல 'தகுதிகள்' வேண்டும் என்பதை காட்சிப்படுத்த முற்படும் நெறியாளர் அதன் பின்னணியில் நிகழ்பவற்றைக் கூட அறியமுடியாத அப்பாவித்தன முடையோரை மாறுபட்ட வகையில் இக் குறும்படத்தில் வெளிப்படுத்துகிறார். அவர் உருவகித்தவாறு சில காட்சிகள் போதிய அழுத்தத்துடன் முழுமையாக வரவில் லையெனினும் குறும்படத்தின் போக்குக்கு ஊறு செய்யவில்லை.

## A Call

இளைஞன் ஒருவனின் பிறந்ததினம் அன்று காலையில் இருந்து அவனுடைய கைத்தொலைபேசிக்கு வாழ்த்துக்கள் தெரிவிக்கப்படுகின்றன. அவ்வாறு வாழ்த்துத் தெரிவித்த நண்பியொருத்தி அவனைச் சந்திக்க வருமாறு அழைக்கிறாள். அவளுடன் உரையாடிய பின்னர் நண்பன் குறிஞ்சியின் அழைப்பு வருகிறது. அந்த அழைப்புக்கு பதிலளிக்கும் பட்சத்திலும், பதிலளிக்காமல் விடும் பட்சத்திலும் இரு தடங்களிலும் நடக்கக்கூடிய நிகழ்வுகளை உள்ளடக்கமாக இக்குறும்படம் கொண்டுள்ளது.

நவீன கோட்பாடொன்றை அடியொற்றியதாக இக்குறும்படத்தின் பின்னணி அமைந்துள்ளது. எனினும் பிறந்த நாளுக்காக நண்பி கொண்டுவந்த பரிசுப்பொதி இறுதியில் அவனது இறந்து கிடக்கும் உடலருகே கொண்டு செல்லப்படுவது இயல்பற்றதாக வலிந்து திணித்த ஒன்றாக கோட்பாட்டின் மீது மலினமானதொரு பார்வையையே எமக்கு ஏற்படுத்துகின்றது. வெட்டிச் சாய்க்கப்பட்ட இளைஞனின் பரிதாபகரமான மரணத்துக்குக் காரணமாய் இருந்த குழுவில் ஒருவன் கழிவிரக்கப்பட்டு வேதனைப்படுவது போன்ற காட்சி விமர்சனபூர்வமானது. வன்முறைக் காட்சியை வெறும் 'கிக்குக்காக' காட்டாது தவிர்த்திருப்பதன் மூலம் படைப்பின் காத்திரத்தை நெறியாளர் பேண முற்பட்டுள்ளது ஓரளவு வெளிப்படுகிறது.

இடிபாடுகளுடன் கூடிய மாடி வீடொன்றில் போரில் தாயையும் வீட்டையும் இழந்து தந்தையுடன் வசிக்கிறாள். இளம்பெண் மல்லிகா. அயலிலுள்ள சிறுவர்களுக்கு அவள் பாடம் சொல்லிக்கொடுக்கிறாள். மிதிவெடி அகற்றும் நிறுவனமொன்று வீட்டின் கீழ்ப்பகுதியை தமது தேவைகளுக்குப் பயன்படுத்துகிறது. நிறுவனத்தின் வாகனச் சாரதியாகத் தொழில்புரியும் இளைஞன் ஒருவன் மேலே மல்லிகாவைக் கண்டு காதல் வயப்படுகிறான். அவர்களுக் கிடையே தமது எண்ணங்களைப் பகிர்ந்து கொள்வதற்குரிய ஊடகமாக அவளது வகுப்பறையிலுள்ள கரும்பலகையும் கீழே நிறுவனத்திலுள்ள கரும்பலகையும் பயன்படுத்தப்படுகின்றன.

பார்வையாளருக்கு மல்லிகா மாற்றுத்திறனாளியொருத்தி என்பதை முன்கூட்டியே உணரக்கூடியதான காட்சிச் சித்திரிப்புகள் குறும்படத்துக்கு இருக்கவேண்டிய வீறார்ந்த தன்மையில் பலவீனத்தை ஏற்படுத்தி விடுகிறது. மல்லிகாவின் நடிப்பு இயல்பானதாகவும் நம்பகத்தன்மை கூடியதாகவும் இருக்கும் அதேவேளை பெரும்பாலான காட்சிகளின் ஒளிப்பதிவும் இயல்புநிலைக்கு ஊறுசெய்யவில்லை. பரபரப்புடன் மல்லிகாவின் தந்தை அவளது நாள்குறிப்பை வாசிக்கும் காட்சி நாடகத்தன்மை மிக்கதாகவும் மிதிவெடி அகற்றுவதும் அதன் தொழில்நுட்பங்களும் தேவையற்ற விதத்தில் நீண்டு காட்சித் திணிப்புக்களுமாக மாறிவிடுகின்றன.

குறும்படம் மீதான புரிதல்களுடன் எழுத்தோட்டக் காட்சியிலேயே பிரதான பாத்திரத்தின் ஆளுமை இயல்புகளை காட்சிப்படுத்துகின்ற நெறியாளரின் நுணுக்கமான பார்வை சிலாகிக்கத்தக்கது.

பாரம்பரியமான காதலின் குறியீடுகளாக காட்டப்படும் வழமையான பூக்களை விடுத்து போர் வடுக்களைச் சுமந்து நிற்கும் அந்தப் பிரதேசத்தின் வறண்ட தன்மையை எருக்கலம்பூவின் அழகில் வாகனச் சாரதியான இளைஞன் லயிப்பது போன்ற காட்சி கூர்மையானதொரு குறியீட்டுப் படிமமாகும்.

### ஹர்த்தால்

அன்றாடம் செருப்புத் தைத்துப் பிழைக்கும் ஒரு தொழிலாளி பற்றியது. இந்தக் குறும்படம் அதிகரித்த வாழ்க்கைச் செலவை ஈடுகட்டத் திண்டாடும் அவன்மீது சடுதியாகப் புறக்காரணிகள் ஏற்படுத்தும் இழப்பை இந்தக் குறும்படம் பரிவுடன் நோக்குகிறது.

செருப்புத் தைக்கும் தொழிலாளியின் இயல்பான நடிப்பும் உடல் மொழியும் நம்பகத் தன்மையை உருவாக்கி பாத்திரத்துக்கு வலுச் சேர்க்கிறது. யாழ்.நகர் வீதிகள் செருப்புத் தொழிலாளியின் தொழில் புரியும் இடம் அவனுடைய சேரிப்புறவசிப்பிடம் என்பவற்றுடன் அன்றாடக்காய்ச்சிகளின் வீட்டில் உழைப்பு நடந்தால்தான் அடுப்பு எரியும் என்ற நொய்மையான நிச்சயமற்ற தன்மை காட்சி ரூபத்தில் அழகாகக் கொண்டு வரப்படுகிறது.

சொகுசுப் பேருந்து போகும் யாழ். வீதி செருப்புத் தொழிலாளி தொழில்புரியும் சாலையோரத்து மதிற்சுவரில் ஒட்டப்பட்டிருக்கும் புதிய அரசியல் சுவரொட்டிகள் அண்மைக்கால யாழ்.நகரை பிரதிபலிக்கும் அதேவேளை குறும்படத்தின் இறுதியில் வரும் சுவரொட்டியில் இருக்கும் வாசகம் 'விலைவாசி ஏற்றத்தைக் கண்டித்து நாடு தழுவிய ஹர்த்தால்' என்றிருக்கிறது.

அத்தியாவசியப் பொருள்கள் மீதான விலையேற்றம் என்பதும் அதற்கு எதிரான நாடளாவிய போராட்டங்களும் முற்றாக ஆதரிக்கப்பட வேண்டியவை. ஆனால் குறும்படத்தில் வருவதாகக் காட்டப்படும் ஹர்த்தால் அண்மைக் காலத்தில் நடக்கவில்லை என்ற யதார்த்த பூர்வமான உண்மையின் வெளிச்சத்தில் சித்தாந்த ரீதியாக ஹர்த்தால் என்பது முற்றிலும் மலினப்படுத்தப்பட்டு விடுகிறது. உண்மையை யதார்த்தத்தை பிரதிபலிப்பதே நேர்மையான கலைப்படைப்பாகும்.

அன்றாடக்காய்ச்சிகள் துயரத்தையும் வாழ்க்கைச் செலவு உயர்ச்சியினால் அவர்களுக்கு நேரும் அவலத்தையும் அக்கறையுடன் பதிவு செய்ய நினைத்த நெறியாளர் துரதிர்ஷ்டமாக பாதகமான செல்வாக்குச் செலுத்தும் காரணியாக ஹர்த்தாலைக் கையாண்டவிதம் முற்றிலும் முரண்நிலையானதாகும். வாழ்க்கைச் செலவு அதிகரிப்புக்கு எதிரான போராட்டம் தொழிலாளர்களின் நலன்களையே முன்னிலைப்படுத்துகிறது. தாக்கத்தை ஏற்படுத்தும் புறக்காரணிகளில் ஒன்றான ஹர்த்தாலை பிரக்ஞைபூர்வமாக நெறியாளர் தவிர்த்திருப்பாரேயானால் இந்தக் குறும்படம் மிகுந்த கவனிப்புக்குரிய நல்லதொரு குறும்படமாக பரிணமித்திருக்கும்.

*(வடமாகாண பண்பாட்டு விழாவில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரை இது)*

# இலங்கைத் தமிழ் கலை...

(B பக்கத் தொடர்ச்சி...)

எங்கோ ஒரு சூனிய வலயத்திலிருந்து வெளியுலகுக்கு வந்து கண் திறந்தவன் போன்ற பிரமையுடன் எந்தத் திக்கை நோக்கிப் பயணிப்பது? அதற்குத் துணையாக எதைப்பற்றிப்பிடிப்பது? என்று நிலைகொள்ளாது தவிப் பவர்களை நோக்கி சாஸ்திரோக்தம், சம்பிரதாயம் என்று கூறியவாறு இறக்குமதியான தெலுங்குப்பாடலுக்குரிய நடனத்தையும் சமஸ்கிருத சுலோகத்தையும் கொண்ட ஆடல் துணுக்குகளின் நகர்வுகளால் எதைச்சாத்தியப்பட வைக்க முடியும்? ஆனாலும் நம்மிடையே பயில்நிலையிலுள்ள ஆடல்வடிவம் நமது மயப்படுத்தப்படவில்லை என்பதனால், இருப்பதைப் புறந்தள்ளாமல் அதையே அடிப்படையான ஊடகமாகப் பயன்படுத்தி ஆற்றுகை செய்யப்படும் ஆடல்துணுக்குகள் ஊடா கவும் "ஆடல்கதை" அரங்கச் செயற்பாடுகளுக்கூடாகவும் இத்தகைய ஆற்றுகைப்படுத்தல் நகர்வும் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டு தானிருக்கின்றது. ஆனால் அந்த முயற்சிகளாலும் வெகுஜனப்பரப்பைச் சென்றடையக்கூடிய சாத்தியப்பாடுகள் குறைவாகவே உள்ளதுடன், குறிப்பிட்ட ஆற்றுகை நிகழும் மண்டபத்துடனே அவையும் நின்றுவிடுகின்றன என்பதுதான் அதன்நிலை (மாதிரி நிகழ்வு ஒளித்தகடுக்காட்சி)

இத்தகைய நகர்வை முன்னெடுப்பதற்கு ஒருவர் அல்லது ஒரு குழுவினர் மட்டும் செயற்பட்டால் அது சாத்தியமாகாது- எமது வடபுலத்து ஆடலாசிரியப் பணியாற்றுபவர்கள் - மற்றும் ஆடல் ஆற்றுகைத் திறனுடையவர்களின் ஒட்டுமொத்தமான முன்னெடுப்பும் முனைப்புப் பெறும்போதுதான் இந்த நகர்வு சாத்தியமாகலாம். பயனுறு வகையில் வெகுஜன மையத்தையும் சென்றடையும்.

*(வடமாகாண பண்பாட்டு விழாவில் சமர்ப் பிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரை இது)*

# “நிழற்படத்தின் நகர்வு...”

சிவபாதசேகரம் கோபாலன்
ஒளிப்பதிவாளர்,
ஆவணப்படத் தயாரிப்பாளர்

ஆன்மிக ஒளி மனதை ஒருநிலைப் படுத்தி அமைதியைத் தருகின்றது. இயற்கையான சூரிய ஒளி நாம் காண்பதற்கு ஏதுவாக பொருள்களுக்கு தோற்றத்தை ஏற் படுத்துகிறது. இவ்வாறு காணும் தோற்றத்தை நிறைநிறுத்தி வைப்பதற்கு நிழற்படங்கள் உதவுகின்றன.

இந்த நிழற்படக்கலையானது இன்று இலங் கைத் தமிழ் கலை இலக்கியத்துறையில் குறிப்பாக கலைத்துறையில் எவ்வாறு நகர்ந்து வியாபித்து நிகழ்கின்றது என்பதே கட்டுரை யில் ஆராயப்படுகின்றது.

இன்று நிழற்படக்கலை வெகுவாக முன்னேறி விட்டது. இதுவரை இக்கலையானது இரசா யன மாற்றத்தைத் தழுவியே வருகின்றது. ஆனால் புதியமுறையாக நுண்மின் இயக்க உருவம் (Electronic Imaging) மிகவும் எளிதாகவும் துரிதமாகவும் செய்ய வழி உண் டாகியுள்ளது. இதற்கு உதாரணம் தொலைக் காட்சியில் வரும் வண்ணப்படங்களே. இத னால் நிழற்படக்கலை என்ற சொற்கள் மாறி உருவமுறை (Imaginge System) என்ற பொது வான சொற்கள் வந்துள்ளன. இதையே மேலும் எளிதாக்க எண்முறை வந்துவிட்டது. இந்த முறையினால் பொதுமக்கள் பரவலாக வும் சிக்கன செலவிலும் உபயோகிக்கும் வசதி கிடைத்துள்ளது. இந்த எண்மிய (Digital) முறைதான் இன்று குறிப்பாக இலங்கையின் வடமாகாணத்தில் அதிகம் பாவனையில் உள்ளது. ஏன் முற்றிலும் என்றே சொல்ல வேண்டும். அந்தளவுக்கு நிழற்படத்துறையில் மாற்றங்கள் ஏற்படுத்தியிருக்கின்றன.

**நிழற்படக்கலை - சிறு வரலாறு**

நிலைத்து நிற்கக்கூடிய முதல் நிழற்படம் 1825 - 26 ஆம் ஆண்டின் யோசெப் நிசிபோர் நியெப் சால் என்பவரால் உருவாக்கப்பட்டது. 1724 ஆம் ஆண்டில் வெள்ளித்தூளும், சுண்ணத் தூளும் கலந்த கலவை ஒளிபடும்போது கரு நிறமாக மாறுகின்றது என்ற யோகான் ஜன்றிச் சூல்ட்சு (Johann Heinrich Suhultz) என்பரின் கண்டுபிடிப்பை அடிப்படையாகக் கொண்டு இந்த ஒளிப்படம் உருவாக்கப்பட்டது. நியெப் சும் லூயிசு டாகுவேரே என்பவரும் இதனை மேலும் மேம்படுத்தினர். 1848 ஆம் ஆண்டில் கொலோடியன் முறை எனப்படும் முறை அறிமுகமானது. இது கொலோடியன் எனப் படும் கரைசல் பூசிய கண்ணாடித் தகட்டை ஒளியுணர் மேற்பரப்பாகக் கொண் டது. இதில் உருவாக்கப்பட்ட எதிர்மறைத் தெறியுருவி லிருந்து வேறு தாள்களில் பல படிகளை எடுக்க முடிந்தது. 1871 இல் இதிலும் மேம்பட்ட ஊன்பசை முறை அறிமுகமானது. எனினும் கொலேடியன் முறையும் தொடர்ந்து பயன்பாட் டில் இருந்து வந்தது. இன்று வரை பயன்பாட் டில் உள்ள கறுப்பு வெள்ளை ஒளிப்படங்கள் முன் குறிப்பிட்ட ஊன்பசை முறையை அடிப் படையாகக் கொண்டனவே. 1861 இல் நிலைத்து நிற்கக் கூடிய வண்ணப்படம் தொமஸ் சட்டன் என்பவரால் உருவாக்கும் முயற்சிகளும் கறுப்பு வெள்ளைப் படங்களை உருவாக்கு வதற்கான முயற்சிகளைப் போலவே மிகவும் பழையன. எனினும் 1903 ஆம் ஆண்டுக்குப் பின்னரே நிற ஒளிப்படங்கள் ஓரளவுக்கு நடைமுறைக்கு வந்தன.

இந்த நிழற்படக்கலை பல துறைகளில் ஆதிக் கம் செலுத்தி வந்துள்ளது. இன்று எதற்கும் நிழற் பட உசாத்துணை, அல்லது சாட்சி இல்லாமல் மக்கள் நம்புவதற்கு தயாரில்லாத நிலையை நிழற்படத்துறை மாற்றியுள்ளது. இத்துறை யானது கலைத்துறையாக மட்டும் இல்லாமல் விஞ்ஞானத்துறையிலும் அதிக ஆதிக்கம் செலுத்தியுள்ளது.

தற்காலத்தில் நிழற்படமுறை இரண்டு பெரும் பிரிவுக்களாகப் பிரிக்கப்படுகின்றன. ஒன்று வேதிப்பொருள்களை அடிப்படையாகக் கொண் டது பொது ஒளிப்பட முறை, மற்றையது எண் மிய (Digital) நிழற்படமுறை.

எண்மிய நிழற்படவியல் (Digital Photography) என்பது நிழற்படவியலின் புது வடிவமாகும். இத்தொழில் நுட்பம் அறிமுகம் ஆகும் வரை படச்சுருள்களைப் பயன்படுத்தி வந்தனர். படச்சுருளில் வீழ்த்தப்படும் தெளியுரு படம் கழுவும் முறைகள் மூலம் தெரியக்கூடிய பட மாக மாற்றப்படும். மாறாக எண்மிய நிழற் படங்கள் வேதியியல் வழிமுறைகளைப் பயன் படுத்தாமல் எண்மிய கணினித் தொழில்நுட் பத்தை பயன்படுத்தி காட்சிப்படுத்தவும் அச்சிட வும் சேமித்து வைக்கவும் வேண்டிய மாற்றங் களை இலகுவாக செய்யவும் இணைவழியாக இலகுவில் முடியும். இந்த நிழற்படக்கலையை இரண்டு பிரிவுகளாகப் பார்க்கலாம்.

முதல் பிரிவு - பொழுதுபோக்கு

1. திருமணம், பிறந்தாள், இதர பல நினைவு கூரத்தக்க குடும்ப நிகழ்ச்சிகளைப் படமாக எடுத்து வைப்பார்கள்.
2. பொழுது போக்குக்காக (Hobby) தென்படும் காட்சிகளில் நல்லதென நினைத்தவற்றைப் படமாக எடுத்து வைப்பார்கள்.
3. தங்களின் ஆராய்ச்சிகளுக்கு உறுதுணை யாக உடனுக்குடன் விளக்க ஆதாரத்துக் காக படம் எடுப்பவர்கள்.

இரண்டாம் பிரிவு - தொழில்முறை

1. நிழற்படக்கலையகம் நடத்துபவர்கள் (Studio)
2. விளம்பரங்களுக்கு ஏற்ப படம் எடுப்பவர்கள்.
3. பத்திரிகைகள் - தினசரி, வாராந்தரி, மாத சஞ்சிகைகளில் வெளியிடுவதற்காக படம் எடுப்பவர்கள் (Photo Journalist)

விஞ்ஞான முன்னேற்றத்துக்கு உறுதுணை யாக வேண்டிய படம் எடுப்பவர்கள்.

5. திரைப்படங்களுக்கு வேண்டிய ஸ்டில் (Still Photo) எடுப்பவர்கள்.
6. பெரும் தொழிற்சாலைகளில் இயந்திர நுணுக்கங்கள் மற்றும் இயந்திர விளம்பரத்துக் காக நிழற்படம் எடுப்பவர்கள்.

உலகில் நிழற்படத்துறை பல பரிமாணங்க ளில் வியாபித்திருக்கின்றது. இதனை வெறும் தொழில் முறைகள் மற்றும் பொழுது போக்குக் காக மட்டுமன்றி இத்துறையை ஓர் அழகியல் கலைத்துறையாகவும் பல விற்பன்னர்கள் சாதித்திருக்கிறார்கள், சாதித்துக்கொண்டு உள் ளார்கள். ஓர் ஓவியக்கலையில் எவ்வாறு அதன் ஒளி, நிழல் அதன் தன்மை எவ்வாறு இருக் கிறதோ அதனை நிழற்படத்தில் தொழில்நுட்பத் தால் வரைந்துள்ளார்கள்.

நிழற்படத்துறை பற்றி பார்க்கும்போது அதற் கான கருவிகள் பற்றி தெரிந்து கொள்ள வேண்டும்.

பொக்ஸ் கமரா (Box Camera)
ரேஞ்பைண்டர் (Rangefinder Camera)
இரட்டை வில்லைத்தெறிப்பு கமரா (TLR)
ஒற்றை வில்லைத்தெறிப்பு கமரா (SLR)
ஸ்ரூடியோ கமரா
கொம்பக்ட் கமரா
இ ஒ எஸ் EOS (Electro Optical System)

எண்மிய ஒற்றை வில்லைத் தெறிப்பு கமரா (DSLR) Digital Single Lense Translucent Mirror Camera Mirrorless Camera தெறிப்பு வில்லை யற்ற (DSLT) Smart Phone செல்லிடப்பேசிகள் என இன்று வரை அதியுயர் எண்மிய தொழி நுட்பத்தால் உருவாகியுள்ளது. இந்த வகை யில் யாழ்ப்பாணத்தில் எண்மிய ஒற்றை வில்லைத் தெறிப்பு கமரா (Digital Single Lense Reflect - DSLR) வகைகையாளப்பட்டுவருகின்றது.

**யாழ்ப்பாணத்தில் நிழற்படத்துறை....**

இலங்கைத் தமிழ் கலை இலக்கியத்துறை களில் நிழற்படக்கலை எனும் போது வடபகு தியை அதிலும் யாழ்ப்பாணத்தை நோக்கித் தான் பார்வை செல்லும். யாழ்ப்பாணத்தின் நிழற்படப்பின்னணி பற்றிப்பார்ப்போம். இதனை 2002 க்கு முன்னரும் அதன் பின்னரும் எனப் பார்க்கலாம். யாழ்ப்பாணத்தின் முதல் கலையகம் (Photo Studio) எஸ்.கே.லோட்டன் கனகரட்ணம் என்பவரால் “லில்லி ஸ்ரூடியோ” என்ற பெயரில் 1930 களில் ஆரம்பிக்கப்பட்டது. அதைத்தொடர்ந்து பாரத் ஸ்ரூடியோ, வாசன் ஸ்ரூடியோ, செல்லம் ஸ்ரூடியோ போன்ற ஸ்ரூடியோக்கள் ஆரம்பிக்கப்பட்டன. ஆள் உருவப்படம் (Portrait Photo)குடும்பமாக குழு உருவப்படம் (Family Group Portraits) என்ப வையே இந்த ஸ்ரூடியோக்களில் எடுக்கப்படும். இது தவிர திருமணப்படப்பிடிப்பும் ஸ்ரூடியோ விலும் வெளியேயும் சென்று எடுத்துள்ளார்கள். இந்த முறையிலேயே தான் தொடர்ந்தும் நிழற்படக்கலை நகர்ந்துகொண்டிருந்தது. தொழில்நுட்பம் வளர வளர படக்கருவிகள் சாத னங்களின் வளர்ச்சி, மாற்றம் என்பன மாறுபட் டுக்கொண்டே வந்துள்ளன. எக்காலத்தில் எவ் வாறான கருவி புதிதாக அறிமுகமாகின்றதோ சில காலங்களில் அந்த கருவி இங்கு வந்து விடும் அளவுக்கு இருந்துள்ளது. பத்திரிகைத்துறை யிலும் செல்வாக்குப்பெற்றிருந்துள்ளது.

1985 - 1995 காலப்பகுதியில் தனிநபர் சுதந்திர நிழற்படத்துறை (Freelanced Photography) மேம்படுத்துவதில் இடைவெளி நிலவியது. காரணம் அரசியல் விடுதலைப் போராட்டம் அக்காலப்பகுதியில் ஏற்கனவே இயங்கிவந்த ஸ்ரூடியோக்கள் தான் தொடர்ந்தும் இயங்கி வந்தன. சில மூடப்பட்டன, காரணம் திறமை மிக்க இளைஞர்கள் தேர்ச்சிபெற்ற நிழற்படக் கலைஞர்கள் புலம்பெயர்ந்தமை.

பின்னர் 1990 - 1995 களில் மின்சாரம் தடைப்பட்டது. இலத்திரனியல் சாதனங்கள் குறிப்பாக நிழற்படக்கருவிகள் வடபகுதிக்குள் எடுத்துவருதல் தடைசெய்யப்பட்டது. அதற் கான மூலப்பொருள்களும் தடை செய்யப் பட்டன. குறிப்பிட்ட தொகை படச்சுருள்கள் மட்டும் அனுமதிக்கப்பட்டன. இக்காலத்தில் கறுப்பு வெள்ளைப்படங்கள் மட்டுமே இங்கு அதிகம் பிரதியிடப்பட்டன. துவிச்சக்கர வண்டி யின் டைனமோவில் இருந்து மின்சாரம் பிறப்பித்து படங்கள் பிரதியிட்டவர்களும் உண்டு. ஏனைய வண்ணப்படங்கள் தென்பகுதிக்கு எடுத்துச் சென்றுதான் பிரதியிட்டார்கள். அப் போது அதிக பாவனையில் இருந்த நிழற்பட வகைகளாக Yashica Electro 35, Yashica FX 3/ FX7, Pentax, Canon A1, AE1, Nikon FM போன்ற (SLR) ஒற்றைவில்லைத் தெறிப்பு கமராக்களே பாவனையில் இருந்தன. இவ் வகை கமராக்களை பழுதுபார்க்கக் கூடிய தொழில்நுட்பவியலாளர்களும் இருந்தார்கள். இவை இலகுவாக பராமரிக்கக் கூடியவை. அக்காலத்தில் வெளிநாடுகளில் EOS(Electro - Optical System) கமராக்கள் அறிமுகமாகியிருந் தன. இந்தவகைக் கமராக்கள் நிழற்படத்துறை யில் புதிய பரிமாணத்தை வேகத்தை இலகு வாக்கியது. ஆனால் இவ்வகை கமராக்கள் இங்கு காலம் கடந்தே கொண்டுவரப்பட்டன. காரணம் அதன்விலை அதிகமாக இருந்தமை. மற்றும் அதற்கான மின்கலங்கள் கிடைக் காமை. இதனால் அவை அதிகம் பாவனை யில் இருக்கவில்லை. இதன் பின்னர் எண் மிய (Digital Single Lense Reflex DSLR) நிழற் படக்கருவிகள் அறிமுகமாகின. இவை முற்றி லும் மாறுபட்ட கணினி தொழில்நுட்பமாக இருந்தன. தற்போது Digital SLR வகைகமராக் கள் முழுமையான பாவனையில் இருக்கின்றன.

யாழ்ப்பாணத்தில் புகைப்படக்கலை தொழில் நுட்பத்தை மட்டுமே உள்வாங்கிச் சென்றுள் ளது. அன்றி கலைத்துறையியல், அழகியல், நுண்கலை வெளிப்பாடுகள் இதில் காணப் படவில்லை. ஆரம்ப காலங்களில் கறுப்பு வெள்ளை படப்பிடிப்பில் ஒவ்வொரு கலை ஞரும் தமக்கென்று தனியான பாணியை பின்பற்றியிருக்கிறார்கள். இதனை மூத்த நாடகக்கலைஞரும் நிழற்படக்கலைஞருமான எஸ்.ரி.திருநாவுக்கரசு (எஸ்.ரி.அரசு) ஐயாவிடமிருந்து அறிந்துகொள்ளக்கூடிய தாகவுள்ளது. உதாரணமாக லில்லி ஸ்ரூடி யோவில் இருந்த மாணிக்கத்தம்பி என்பவர் வண்ணக் கண்ணாடிகளிலான ஒட்டுவேலை யில் விற்பன்னராக இருந்துள்ளார்.

1990 களில் கல்வித்திணைக்கள முறைசாராக் கல்விப் பிரிவு ஊடகவியலாளர் பயிற்சிநெறி யினை நடத்தியது. இதில் ஊடகப் புகைப் படக்கலை இடம்பெற்றிருந்தது. இதே காலத் தில் 1993 இல் யாழ்ப்பாணப்பல்கலைக்கழக கலைப்பீட முறைசாராக் கல்விப் பிரிவு Foundation in Photography நிழற்படக் கலைக்கு ஓர் அடித்தளம் அமைக்கும் நோக்கில் 36 மணித் தியாலங்கள் கொண்ட கற்கை நெறியை நடத் தியிருந்தார்கள். இதில் அடிப்படை மற்றும் தொழில்நுட்ப அறிவே வழங்கப்பட்டது. இந்தப் பயிற்சியானது நிழற்படக்கலையின் தேவை உணர்ந்து நடத்தப்பட்டிருக்கலாம். இந்தப் பயிற்சி நெறிகள் அனைத்தும் அடிப்படைப் பயிற் சிகளே, நிழற்படக் கருவியைப் இயக்கும் முறை களே. பின்னர் 2004 - 2005 காலப்பகுதியில் யாழ். பல்கலைக்கழக ஊடக வளங்கள் பயிற்சி நிலையம் ஊடகவியலாளர் பயிற்சி நெறியில் ஊடக நிழற்படக்கலை (Photo Journalism) என் கின்ற ஓர் அலகை தமது பாடத்திட்டத்தில் இணைத் துள்ளது. இது மட்டும் இல்லாது ஏனைய வளங் களிலும் தமது தேவைகளுக்கேற்ப இந்தப் பயிற்சி நெறியை விரிவுரையாளர்கள், உத்தி யோகத்தர்களுக்கு வழங்குகின்றது. 2009 இல் யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடம் தமது மருத்துவத்துறை ஆவணப்படுத்தல் களுக்காக Micro, Macro Photography மற்றும் டிஜிற்றல் கமராவை கையாளும் முறைகளை யும் பயிற்சிப் பட்டறை மூலம் விரிவுரையாளர் களுக்கு நடத்தியிருந்தது. அதன் பின்னர் இதே காலத்தில் இராமநாதன் நுண்கலைப்பிரிவும் கேட்பொலிக்காட்சி (Audio Visual) பட்டறையை தமது விரிவுரையாளர்களுக்கு வழங்கியிருந் தது. ஆனால் இவை அனைத்தும் பயிற்சிப் பட்டறையின் பின் மந்தகதியில் தான் செல்கின்றன.

இன்றும் யாழ்ப்பாணத்தில் தொழில்முறை நிழற்படக் கலைஞர்களே அதிகம் உள்ளனர். அதிலும் திருமண நிகழ்வு, பிறந்தநாள் விழா போன்றவற்றைப் படப்பிடிப்பு செய்பவர்களே அதிகம். நிகழ்வுகள் (Event) விளையாட்டு (Sports& Games) நுண்கலை(Fine Art Photo graphy) உடையலங்கார விளம்பரம்(Fashin) முப்பரிமாணம்(3D Photography) போன்ற துறைகளிலும் இலங்கையின் தென்பகுதி நிழற்படப் பிடிப்பாளர்கள் ஈடுபடுகின்றனர். ஆனால் தமிழ் நிழற்படக் கலைஞர்களிடம் குறிப்பாக யாழ்.மாவட்டத்தில் தனிப்பட்ட துறைசார் நிழற்பட கலைஞர்கள் இல்லை என்றே சொல்லவேண்டும். ஏன் அவ்வாறான அழகியல் ஈடுபாடுடைய கலைஞர்கள் உருவாக வில்லை? இதற்கு பல்வேறு காரணங்களைப் பார்க்கலாம். எமது சமூகத்தில் ஓவியக்கலை ஈடுபாடு மிகமிக குறைவு சமூகத்தின் ரசிப்புத் தன்மையும் குறைவாகவே காணப்படுகின் றது. ஓவியக்கலையை தமது தொழிலாக கொண்டவர்கள் ஒரு சிலரே. அதுதவிர ஓவியர் களென சித்திர பாட ஆசிரியர்களாக வேலை பார்த்தவர்கள் மட்டுமே இருக்கின்றார்கள். நிழற்படக்கலைக்கும் ஓவியக்கலைக்கும் தொடர்பு உள்ளது. ஓவியங்கள் தூரிகையால் வரையப்படுகின்றன. நிழற்படங்கள் தொழில் நுட்பத்தினூடாக ஒளியால் வரையப்படுகின் றன. மேலும் தென்பகுதியில் நடனத்துறையை எடுத்துப் பார்த்தால் நடனத்தை தனது தொழி லாகக் கொண்ட இளைஞர்கள் பலர் உள் ளார்கள். எம்மிடம் அவ்வாறில்லை. ஆசிரி யர்கள் தான் உள்ளார்கள்.

இவை தவிர புகைப்படத்துறை சார்பாக தனி யான ஒரு கல்வி நிறுவனமோ கற்கை நெறியோ இல்லை. துறைசார் பயிற்சிப் பட்டறைகள் நடைபெறுவதில்லை. இந்தப் பயிற்சிகள் ஒரு புகைப்படச் சங்கம் அல்லது கழகங்கள் ஊடா கத்தான் நடைமுறைப்படுத்த வேண்டும். தென்னிலங்கையில் (PSSL) Photography Socity of Srilanka, (NEGPO) Negombo Photography Organisation போன்று பல அமைப்புக்கள் இயங்குகின்றன. இந்த மாதிரி யான அமைப்புக்கள் எமது மாவட்டத்திலும் உருவாக்க முயற்சிக்க வேண்டும். மேலும் நிழற்படக்கலை மேலைத்தேய மற்றும் சில ஆசிய நாடுகளில் பட்டப்படிப்பாக பல்கலைக் கழகங்களில் கற்பிக்கப்படுகின்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கலைப் பீடத்தின் ஓர் அலகாகக் குறிப்பிட்ட மணித்தி யாலங்களே கற்பிக்கப்படுகின்றது.


இவை அனைத்தையும் வைத்துப் பார்க்கும் போது 2009 இன் பின் போரின் பின்னரான காலத்தில் யாழ்ப்பாணத்தில் நிழற்படத்துறை நவீன கருவிகளை (New Devices) பெற்று இலகு தொழில்நுட்பத்தை (Technology) கொண்டு கடுக்தியில் செல்ல முற்பட்டாலும் கலைத்துறையில் முன்னேற முடியாமல் தவழ்ந்தே நகர்கின்றது.

*(வடமாகாண பண்பாட்டு விழாவில் சமர்ப் பிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரை இது)*

# கேஸ்ட்ரைட்டீஸ்

[இரைப்பை சவ்வு அழற்சி]

நோயை பூரணமாக குணப்படுத்துவதற்காக.




ராஜபுர ஆயுர்வேத சாலையில் இருந்து
தயாரிக்கப்பட்ட தேசிய ஔடதம்

## பஞ்சபல அமிர்த பானம்



- வயிறு மற்றும் நெஞ்சு பகுதிகளில் எரிவு.
- கடுமையான தலை வலி.
- இரைப்பையில் புண்.
- பித்த வெடிப்பு
- வயிறு உப்புதல்.
- உடல் மெலிதல்.

தற்போது அனைத்து ஆயுர்வேத
கடைகளிலும், பார்மசிகளிலும்
பெற்றுக்கொள்ளலாம்.


தொடர்புகளுக்கு
0773131070

ஆயுர்வேத யோக
சங்கராஹ சபையில்
அனுமதி பெற்ற
ஔடதமாகும்

(சி. 17467)

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 03.09.1961 | 16.11.2011 |



## திருமதி தேவகுஞ்சரி பரம்சோதி

(இடைப்பிட்டி, காரைநகர்)

திதி: சஷ்டி(12.11.2014)

ஈரவிழிகளுள் உங்களின் உருவம்
மூறாண்டுகளாக உயிர்த்தே உள்ளது
பேரருட் சக்திப் பேற்றினைப் பெற்ற
ஆருயிர் அன்னை பதம் பணிகின்றோம்
காரிருள் கலைக்கும் குஞ்சரதீபம்
காலா காலமும் வழிகாட்டட்டும்
நேரிலே வாழ்ந்தும் நினைவிலே நின்றும்
பரஞ்சோதியுடன் பண்புறக் கலந்தும்
பாரினில் உயர்ந்திடப் பாதை காட்டிய
தேவகுஞ்சரி திருவடி தொழுவோம்.
ஆரினி உள்ளார் அம்மா உன்போல்
அரனடி நிழலில் அமைதி கொள் தாயே!

**- குடும்பத்தினர்.**

354/7, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (C/17616) (12.3.6)

வெங்கடேஸ்வரா.